# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத்தரமதிப்பீட்டில்A+(CGPA: 3.64)தகுதியும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல்தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது

காரைக்குடி -630 003

# ONLINE PROGRAMMES

## எம்.ஏ - தமிழ்

### இரண்டாமாண்டு - மூன்றாம் பருவம்

### 205133 – சிற்றிலக்கியங்கள்

Copy Right Reserved

For Private use only

**Author :**
**Dr.V.SATHYANARAYANAN**
Assitant Professor in Tamil
Rajah Serfoji Govt College
Thanjavur – 613005

**"The Copyright shall be vested with Alagappa University"**

**All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.**

**Reviewer:**

**Dr. V. THIRUVENI**
Assistant Professor of Tamil,
Directorate of Distance Education,
Alagappa University,
Karaikudi -630003.

**தாள் - 31933 சிற்றிலக்கியங்கள்**

**வ.எண். பாடத்திட்டம் - பொருளடக்கம்**

**பிரிவு 1.:.கலிங்கத்துப் பரணி -சோழன் உலா**


| | | |
|---|---|---|
| கூறு 1 | கலிங்கத்துப்பரணி – பரணி இலக்கணம் | **1** |
| கூறு 2 | கடவுள் வாழ்த்து – கடைத்திறப்பு | **9** |
| கூறு 3 | கலிங்கத்துப்பரணி - காடுபாடியது – கோயில் பாடியது | **24** |
| கூறு 4 | குலோத்துங்கச் சோழன் உலா | **33** |
| | **பிரிவு : 2 நந்திக் கலம்பகம் - தமிழ் விடுதூது** | |
| கூறு 5 | நந்திக் கலம்பகம் - சொல் விளக்கம் - பாட்டுடைத் தலைவன் - முதல் 20 பாடல்கள் | **72** |
| கூறு 6 | நந்திக் கலம்பகம்- சொல் விளக்கம்- பாட்டுடைத் தலைவன்- 21 முதல் 45 பாடல்கள் | **87** |
| கூறு 7 | தமிழ்விடு தூது– தூது இலக்கணம் - தூது வரலாறு | **99** |
| கூறு 8 | தமிழ்விடு தூது– தமிழின் தனிச்சிறப்பு–தமிழின் தெய்வீக ஆற்றல | **108** |
| | **பிரிவு : 3 குற்றாலக் குறவஞ்சி - பிள்ளைத் தமிழ்** | |
| கூறு 9 | குற்றாலக் குறவஞ்சி – வசந்தவல்லி | **124** |
| கூறு 10 | குற்றாலக் குறவஞ்சி – குறத்தியிடம் மலைவளம் கேட்டல் முதல் குறிகேட்டல் வரை (66 – 111) | **149** |
| கூறு 11 | மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ் - பிள்ளைத் தமிழ் இலக்கணம் | **167** |
| கூறு 12 | மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ் - அம்புலிப் பருவம் | **186** |
| | **பிரிவு : 4- தஞ்சை வாணன் கோவை - முத்தொள்ளாயிரம்** | |
| கூறு 13 | தஞ்சைவாணன் கோவை – பாங்கி. மதியுடன்பாடு மட்டும். | **199** |
| கூறு 14 | முத்தொள்ளாயிரம் (சோழன்) | **213** |

**கூறு 1 கலிங்கத்துப்பரணி - பரணி இலக்கணம்**

1.1 முன்னுரை

1.2 நோக்கம்

1.3 பரணி - பெயர்க்காரணம்

1.4 பரணி இலக்கணம்

1.5 தமிழில் தோன்றிய பரணி நூல்கள்

1.6 பரணி அமைப்பு

1.7 கலிங்கத்துப்பரணி - அறிமுகம்

1.8 செயங்கொண்டார்

1.9 பாட்டுடைத்தலைவர்

1.10 தொகுத்துக் காண்போம்

1.11 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

1.12 மேலும் அறிந்துகொள்ள

**கூறு 2 கலிங்கத்துப்பரணி-கடவுள் வாழ்த்து - கடை திறப்பு**

2.1 முன்னுரை

2.2 நோக்கம்

2.3. கடவுள் வாழ்த்து

2.3.11 வாழி

2.4 கடை திறப்பு

2.4.1 பெண்களின் எழில்

2.4.2 ஊடலும் கூடலும்

2.4.3 படைக்கும் கண்களுக்கும் ஒப்புமை

2.4.4 கூடலில் தோன்றும் நிகழ்ச்சிகள்

2.4.5நனவும் கனவும்

2.4.6 சிறைப்பட்ட மகளிர் நிலை

2.4.7 மகளிர் முகமலர்ச்சி

2.4.8 திருகிச் செருகும் குழல் மாதர்

2.4.9 கொழுநரை நினைந்தழும் பெண்கள்

2.4.10 நோயும் மருந்தும்

2.4.11 இடையின் நிலை

2.4.13 ஏனைய வருணனைகள்

2.5 தொகுத்துக் காண்போம்

2.6 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

2.7 மேலும் அறிந்துகொள்ள

**கூறு - 3 கலிங்கத்துப்பரணி - காடு பாடியது –**

**கோயில் பாடியது**

3.1 முன்னுரை

3.2 நோக்கம்

3.3. காடு பாடியது
3.3.1 மரம் செடி கொடிகள்
3.3.2 நிழலின்மை
3.3.3 வெப்பத்தின் கொடுமை
3.3.4 கதிரவனும் ஏனைத் தேவர்களும் அஞ்சுதல்
3.3.5 பேய்களும் காடும்
3.3.6 வெப்பச் சூறாவளி
3.3.7 மூங்கிலும் முத்தும்
3.3.8 வெந்தவனமே இந்தவனம்
3.4. கோயில் பாடியது
3.4.1 கோயில் இயல்பு
3.4.2 மேற்கூரையும் பிறவும்
3.4.3 வீர வழிபாடு
3.4.3.1 பேய்களும் யோகினிகளும்
3.5 தொகுத்துக் காண்போம்
3.6 தன் மதிப்பீட்டு வினா விடைகள்
3.7 மேலும் அறிந்துகொள்ள

**கூறு- 4 குலோத்துங்க சோழன் உலா**

4.1 முன்னுரை
4.2 நோக்கம்
4. 3. உலாவின் பொருண்மையும் இலக்கணமும்
4.4. தமிழில் தோன்றிய உலா நூல்கள்
4.5 ஒட்டக்கூத்தர்
4.6 பாட்டுடைத் தலைவன் இரண்டாம் குலோத்துங்க சோழன்
4.7 குலோத்துங்க சோழன் உலா
4.7.1 சோழர் குடிப்பெருமை
4.7.2 இரண்டாம் குலோத்துங்கன்
4.7.3 குலோத்துங்கனின் தில்லை திருப்பணிகள்
4.7.4. குலோத்துங்க சோழன் வீதியுலா வருதல் (61 - 100)
4.7.5 வீதி உலாக் காணும் மக்கள்
4.8 எழுபருவ மகளிர் தம்காதலுணர்வு
4.8.1 பேதை
4.8.2 பெதும்பை
4.8.3 மங்கை
4.8.4 மடந்தை
4.8.5 அரிவை

4.8.6 தெரிவை

4.8.7 பேரிளம்பெண்

4.9 தொகுத்துக் காண்போம்

4.10 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

4.11 மேலும் அறிந்துகொள்ள

**கூறு - 5 நந்திக் கலம்பகம் - சொல் விளக்கம் -**
**பாட்டுடைத் தலைவன் - முதல் 20 பாடல்கள்**

5.1 முன்னுரை

5.2. நோக்கம்

5.3 கலம்பகம் - பெயர்க்காரணம்

5.4 கலம்பக உறுப்புக்கள்

5.5 இலக்கணம்

5.6 தமிழில் கலம்பகம்

5.7 நந்திக் கலம்பகம்

5.8 நந்திவர்மன்

5.9 .நூல் அமைப்பு

5.10. நந்திக்கலம்பகம் முதல் 20 பாடல்கள்

5.11 தொகுத்துக் காண்போம்

5.12 தன் மதிப்பீட்டு வினா விடைகள்

5.13 மேலும் அறிந்துகொள்ள

**கூறு : 6 நந்திக்கலம்பகம் - சொல் விளக்கம் -**
**பாட்டுடைத் தலைவன் - (21 முதல் 45 பாடல்கள்)**

6.1 முன்னுரை

6.2. நோக்கம்

6.3. நந்திக் கலம்பகம் (21 முதல் 45 வரையிலான பாடல்கள்)

6.4 தொகுத்துக் காண்போம்

6.5 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

6.6 மேலும் பயிலவேண்டிய நூல்கள்

**கூறு - 7 தமிழ் விடு தூது - தூது இலக்கணம் - தூதுவரலாறு**

7.1 முன்னுரை

7.2 நோக்கம்

7.3 தூதுக் கூறுகள்

7.4 தூது விடு பொருள்கள்

7.5 பாவகை

7.6 தூது நூல்களின் அமைப்பு
7.7 தமிழ்விடு தூது - அறிமுகம்
7.8 தொகுத்துக் காண்போம்
7.9 தன் மதிப்பீட்டு வினாவிடைகள்
7.10. மேலும் பயிலவேண்டிய நூல்கள்

**கூறு 8. தமிழ்விடு தூது– தமிழின் தனிச்சிறப்பு – தமிழின் தெய்வீக ஆற்றல தமிழின் சிறப்பு**

8.1 முன்னுரை
8.2 குறிக்கோள்
8.3 தமிழ்விடு தூது - தமிழின் தனிச்சிறப்பு
8.3.1 எல்லாமுமாய் நின்ற தமிழ்
8.3.2 தமிழ்க் குழவி
8.3.3 தமிழ் மாப்பிள்ளை
8.3.4 தமிழ்ச் சக்கரவர்த்தி
8.3.5 தமிழைக் காப்
8.3.6 தமிழாகிய விளைச்சல்
8.3.7 தமிழின் பெருமை கூறித் தலைவி வேண்டுதல்
8.3.8 தளை அவிழ்க்கும் சுடரான தமிழ்
8.3.9 தெய்வத்தமிழ்
8.3.10 தெய்வீக ஆற்றல் தமிழ்
8.3.11 தமிழே தூதுசெல்லச் சிறந்தது
8.3.12 சொக்கநாதரின் திருவிளையாடல்
8.3.13 பிற்பகுதியின் சுருக்கம்
8.4 தொகுத்துக் காண்போம்
8.6 மேலும் பயிலவேண்டிய நூல்கள்

---

**கூறு: 9. திருக்குற்றாலக் குறவஞ்சி - வசந்த வல்லி**

---

9.1 முன்னுரை
9.2 நோக்கம்:
9.3 குறவஞ்சி பாடுபொருள் - இலக்கணம்
9.4. திருக்குற்றாலக் குறவஞ்சி
9.5 திரிகூட ராசப்ப கவிராயர்
9.6 குறவஞ்சி

9.6.1. கடவுள் வணக்கம்
9.6.2. இறைவனின் திருவுலா
9.6.3. உலாக்காணும் மகளிர்
9.6.4. வசந்த வல்லியின் காதல்
9.6.4.1 வசந்தவல்லி வந்தாள்
9.6.4.2. வசந்தவல்லியின் அழகு
9.6.4.3. வசந்தவல்லி பந்தாடுதல்
9.6.5. சிவபெருமானைக்காணுதல்
9.6.6 மயல் கொண்டாள்
9.6.6.1 தோழியர் புலம்பல்
9.6.6.2 .விரகத் தீ
9.6.6.3 நிலவைப் பழித்தல்
9.6.6.4 மன்மதனைப் பழித்தல்
9.6.6.5 பாங்கியிடம் உரைத்தல்
9.6.6.6 பாங்கியைத் தூது சொல்லப் போக்குதல்
9.6.6.7 கூடல் இழைத்தாள்
9.7 தொகுத்துக் காண்போம்.
9.8 தன்மதிப்பீட்டு வினாக்கள்
9.9. மேலும் படித்தறிய

**கூறு 10. குற்றாலக் குறவஞ்சி - மலைவளம் கேட்டல் முதல் குறி கேட்டல் வரை**

10.1 முன்னுரை:
10.2 நோக்கம்:
10.3 குறவஞ்சி நாடகம்
10.3.1 குறவஞ்சியின் அழகு
10.3.2 மலை வளம் கேட்டல்
10.3.3 நாட்டு வளம் கூறுதல்
10.3.4 நகர்வளம் கூறுதல்
10.3.5 கிளை விசேடம் கேட்டல்
10.3..6 குறியின் தன்மை
10.3.7 குறி ஏற்பாடுகள்
10.3.8 குறி கூறத் தொடங்குதல்
10.3.9 தெய்வ வணக்கம்
10.3.10 குறத்தி கூறுதல்
10.3.11 அணிகலன்கள் அருளுதல்

10.4 தொகுத்துக் காண்போம்

10.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

10.6 மேலும் படித்தறிய



**கூறு 11 - மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - பிள்ளைத்தமிழ் இலக்கணம்**

11.1 அறிமுகம்

11.2 நோக்கம்

11.3 இலக்கணம்

11.3.1 பிள்ளைத்தமிழ் - பெயர்க்காரணம் - வேறுபெயர்

11.3.2 அமைப்பு

11.3.3 இலக்கணக் கருத்துக்கள்

11.4 தமிழில் பிள்ளைத்தமிழ் இலக்கிய வளர்ச்சி

11.5 மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

11.5.1 ஆசிரியர் வரலாறு

11.5.2 மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

அமைப்பும் சிறப்பும்

11.5.2.1 காப்புப் பருவம்

11.5.2.2 செங்கீரைப்பருவம்

11.5.2.3 தாலப் பருவம்

11.5.2.4 சப்பாணிப் பருவம்

11.5.2.5. முத்தப்பருவம்

11.5.2.6. வருகைப் பருவம்

11.5.2.7. அம்புலிப் பருவம்;

11.5.2.8. அம்மானைப் பருவம்

11.5.2.9. நீராடல் பருவம்

11.5.2.10. ஊசல் பருவம்

11.6 தொகுத்துக் காண்போம்

11.7 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

11.8 மேலும் அறிந்துகொள்ள

---

**கூறு 12 : மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் -**
**அம்புலிப்பருவம்**

---

12.1 முன்னுரை

12.2 நோக்கம்

12.3 மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - அம்புலிப்பருவம்
12.3.1 சாமம்
12.3.2 பேதம்
12.3.3 தானம்
12.3.4 தண்டம்
12.4 தொகுத்துக் காண்போம்.
12.5 தன் மதிப்பீட்டு வினா விடைகள்
12.6. மேலும் அறிந்துகொள்ள

---

**கூறு : 13 தஞ்சை வாணன் கோவை**
**(பாங்கி மதியுடன்பாடு மட்டும்)**

---

13.1 முன்னுரை
13.2 நோக்கம்
13.3 கோவை இலக்கியம்
13.4 தமிழில் கோவை நூல்கள்
13.5 தஞ்சைவாணன் கோவை
13.5.1 ஆசிரியர்
13.5.2 தஞ்சைவாணன்
13.5.3 அமைப்பு
13.6 பாங்கிமதியுடன்பாடு
13.6.1 முன்னுறவுணர்தல்:
13.6.2. குறையுற உணர்தல்
13.6.3 இருவருமுள்வழி அவன் வரவு உணர்தல்
13.7 தொகுத்துக் காண்போம்
13.8 தன்மதிப்பீட்டு வினா விடைகள்
13.9 மேலும் அறிந்து கொள்ள

**கூறு : 14 முத்தொள்ளாயிரம்**

14.1 முன்னுரை
14.2 நோக்கம்
14.3 முத்தொள்ளாயிரச் சிறப்புக்கள்
14.3.1 பெயர்க்காரணம்
14.4 நூலாசிரியர்
14.5 முத்தொள்ளாயிரம் - சோழன்
14.6. தொகுத்துக் காண்போம்

14.7 தன்மதிப்பீட்டு வினாவிடைகள்
14.8 மேலும் அறிந்து கொள்ள

**தாள் - 31933 சிற்றிலக்கியங்கள்**

மாணவர்களே!

தமிழின் பரந்த இலக்கியப் பரப்பில் சிற்றிலக்கியத்தின் இடம் பெரிது. சிற்றிலக்கியம் பிரபந்தம் என்றும் கூறப்பெறும். படிக்காசுப் புலவர் சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவில் தொண்ணூற்றாறு கோலங்கொண்ட பிரான் என்னும் தொட ர்காணப்படுகின்றது. எனவே, பிரபந்த வகையாகிய சிற்றிலக்கியங்கள் 96 என்பர். சதுரகராதி 96 வகைச் சிற்றிலக்கியங்களைக் கூறும். பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல் ஆகியன சிற்றிலக்கியத்திற்கு இலக்கணம் கூறுவன. பாட்டியல் நூல்கள் கூறாத பாவை போன்ற சிற்றிலக்கியங்களும் உண்டு.

சிற்றிலக்கியங்கள் என்பன பேரிலக்கியங்களைப் போல விரிவுகொள்ளாது யாப்பாலோ, பொருளாலோ, எண்ணிக்கையாலோ வரம்பு கட்டி அமைவதால் சிற்றிலக்கியங்கள் எனப்படுகின்றன. யாப்பால் பெயர் பெறுவன அகவல், கலிவெண்பா போன்றன. எண்ணால் பெயர் பெறுவன, பதிகம், பத்து, அட்டகம், நாற்பது போன்றன. யாப்பாலும் எண்ணாலும் பெயர் பெறுவன இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை போன்றன. பொருளால் பெயர் பெறுவன தூது, உலா குறவஞ்சி, மடல், பள்ளியெழுச்சி போன்றன.

சிற்றிலக்கியங்கள் சங்க இலக்கியக் காலம் முதலாகவே கிளைக்கத் தொடங்கின. ஐங்குறு நூற்றின் தொண்டிப்பத்து, பதிற்றுப்பத்தின் நான்காம் பத்து அந்தாதி நடையின. அகப்பொருள் துறைகளின் ஒழுங்குபட அமைந்த தொகுப்பு கோவை. மடற்கூற்றின் விரிவே மடல். தொடர்ந்து எண் செய்யுளாக நாற்பது என்ற எண்ணிக்கையில் அமைந்த கார் நாற்பது, களவழி நாற்பது ஆகியவற்றைச் சுட்டலாம். தொடர்ந்து பக்தி இலக்கியத்தில் இரட்டைமணிமாலை, பதிற்றுப்பத்து அந்தாதி, மும்மணிக்கோவை, நான்மணி மாலை, பதிகம், மடல் எனச் சிற்றிலக்கிய வகைகள் பெருகின. மேலும் பெரியாழ்வார் பாடிய பாடிய கண்ணனின் இளமை குறித்த பாடல்கள் பிள்ளைத்தமிழ் தோன்றக் காரணம் ஆயிற்று.

இவ்வாறு காலந்தோறும் பெருகிய சிற்றிலக்கிய வகைகளும் அவற்றின் எண்ணிக்கையும் பலவாகும். சிற்றிலக்கியங்கள் கற்பனைக்கும் யாப்பியல் விரிவுக்கும் பெருக இடமளித்தன. அவற்றின் சுவையை மாணவர் உணரவே சிற்றிலக்கியம் பாடமாக அமைகின்றது.

# கூறு-1கலிங்கத்துப்பரணி - பரணி இலக்கணம்

## 1.1 முன்னுரை

சிற்றிலக்கியங்களில் பரணி வீரச்சுவை பெருகவும் அகச்சுவை ஒரு கூறாக அமைந்தும் தோன்றிய இலக்கியம் ஆகும். தமிழரின் கற்பனை வளமும் நயமும் செறிந்து விளங்கும் இலக்கிய வகை பரணியாகும். பரணி ஒருவகையில் வரலாற்றுத் தரவாகவும் அமைகின்றது. இந்தப் பரணி இலக்கியத்தின் அருஞ்சிறப்புக்களை இனிக் காணலாம்.

## 1.2 நோக்கம்

பரணி என்னும் இலக்கிய வகை குறித்து இப்பாடத்தின் வழி அறிந்துகொள்வீர். தமிழில் தோன்றிய பரணி நூல்கள் பற்றிய அறிமுகம் கிட்டும். கலிங்கத்துப் பரணியின் அமைப்பையும் உணர்ந்து கொள்ளலாம்.

## 1.3 பரணி - பெயர்க்காரணம்

பரணி என்னும் சொல்லின் பொருளைத் திவாகர நிகண்டு

காடு கிழவோன் பூதமடுப்பே,<br>
தாழி பெருஞ்சோறு தருமனாள் போதமெனப்<br>
பாகு பட்டது பரணி நாட்பெயரே ”

என்று கூறும். இவற்றின் அடிப்படையில் பரணிக்கு அறிஞர் விளக்கம் தருவர்.

1. பரணி என்பது வெற்றிக்குரிய நாள்மீன். பரணியில் பிறந்தான் தரணி ஆள்வான் என்பர். பரணி நாளில் போருக்கு எழுந்து காளியை வணங்கிப் பாடுவதால் பரணி என்னும் பெயர்பெற்றது.
2. பரணி காளிக்குரிய நாள்மீன். அவளுக்குரிய நாளில் அவளை வழிபட்டுப் பாடுவது. எனவே பரணியாயிற்று.
3. அருங்கலங்களை வைக்கும் செப்பிற்குப் பெயர் பரணி. அதுபோல அரிய நயங்கள் அமைந்த இலக்கியச் செல்வம். எனவே பரணி எனும் பெயர் இடப்பட்டது.
4. போர்க்களத்தில் வில் வாள் ஆகியவற்றால் மேலே பரணி அமைத்து இருப்பர். அதிலிருந்து பாடுவதுபோல் போர் நடைபெறும் காலத்தில் போர்க்களப் பரண் மீதிருந்து பாடப்பெறுவதால் இப்பெயர் பெற்றது. பரணி நட்சத்திர நாளில் வெற்றி பெற்ற தலைவன் போரில் இறந்த யானை, குதிரை வீரர்களின் உறுப்புகளைக் கொண்டு கூழ் சமைத்துக் காளிக்குப் படைப்பது, அதனை பேய்கள் உண்டு அரசனை வாழ்த்தும். இதன் காரணமாக இப்பெயர் பெற்றிருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. “பண்டு மிகுமோர் பரணிக்கூழ் பாரதத்தில் அறியாமோ” என்னும் கலிங்கத்துப்பரணி தொடரும், “காடுகெழு

செல்விக்குப் பரணிநாள் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதொரு வழக்கு" என்னும் பேராசிரியர் உரை விளக்கமும் இதற்குத் துணை செய்கின்றன.

எவ்வாறாயினும் பரணி என்பது தொடக்கத்தில் புறப் போர்க்கள நிகழ்ச்சிகளைப் பாடும் இலக்கியமாக அமைந்திருந்தது. ஆனால் காலப்போக்கில் புறப்போரே அன்றி அகப்போராகிய உணர்ச்சிகளை வெல்வதும் பொருளாகக் கொண்டு சமயத் தத்துவ நோக்கிலும் பரணி நூல்கள் தோன்றின.

## 1.4 பரணி இலக்கணம்

பாட்டியல் நூல்கள் ஆயிரம் யானைகளைப் போர்க்களத்தில் கொன்றவனுக்குப் பாடப்படுவது பரணி என்று கூறும். இதனை,

"ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மான வனுக்கு வகுப்பது பரணி"

என்று இலக்கண விளக்கம் (832) கூறுகின்றது.

"யானை சாய்த்த அடுகளத்து அல்லது
யாவரும் பெறாஅர் பரணிப் பாட்டே"

என்ற பன்னிருபாட்டியல் நூற்பா, யானை அல்லாத பிறபடை வென்றோரின் வீரம் சிறப்பாகப் போற்றப்படுவதில்லை என்று கூறுகின்றது.

பரணி நூல்கள் சந்த மிகுந்த ஈரடிக் கலித்தாழிசையால் பாடப்படும். பரணியின் பாடுபொருளைப் பன்னிரு பாட்டியல்

வஞ்சி மலைந்த உழிஞை முற்றி
தும்பையிற் சென்ற தொடுகழல் மன்னனை
வெம்புசின மாற்றான் தானை வெங்களத்தில்
குருதிப் பேராறு பெருகும் செங்களத்து
ஒருதனி ஏத்தும் பரணியது பண்பே

என்று பேசும்.

## 1.5 தமிழில் தோன்றிய பரணி நூல்கள்

வென்றோர் பெயரைப் போற்றும் நூலாயினும் பரணிகள் யாவும் தோற்றாரையோ தோற்றோர் நாட்டையோ சார்ந்தே பெயர் கொள்ளும் இலக்கியம் ஆகும். வென்ற நாட்டில் நிகழும் வெற்றிக் களிப்புடைய கூத்தாகையால் இவ்வாறு பெயர்தரும் மரபு தோன்றியிருக்கும். கலிங்கம், பாசம், மோகம், அஞ்ஞானம், தக்கன், இரணியன் யாவுமே இதற்குச் சான்று. செயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப் பரணி மட்டுமன்றி வேறுபல நூல்களும் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்றுள்ளன. அவையாவன,

1. கொப்பத்துப் பரணி - நூல் கிடைக்கவில்லை 1054
2. கூடல் சங்கமத்துப் பரணி - நூல் கிடைக்கவில்லை 1064

3. கலிங்கத்துப்பரணி - சயங்கொண்டார் 1112
4. கலிங்கத்துப் பரணி - ஒட்டக்கூத்தர் 1094
5. தக்கயாகப் பரணி - ஒட்டக்கூத்தர் 1155
6. இரணியவதைப் பரணி - 1210
7. அஞ்ஞானவதைப் பரணி - தத்துவராயர் 1450
8. மோகவதைப் பரணி - தத்துவராயர் 1450
9. பாசவதைப் பரணி - வைத்தியநாத தேசிகர் 1640
10. திருச்செந்தூர்ப் பரணி - சீனிப்புலவர் 18ஆம் நூற்றாண்டு
11. கஞ்சவதைப் பரணி - -
12. கலைசைச் சிதம்பரேசர் பரணி சுப்பிரமணிய முனிவர் 1800
13. இலங்கைப் பரணி - கனகராஜா ஐயர்
14. சீனத்துப் பரணி - பா.சு.மணியன்
15. வங்கத்துப் பரணி - அரங்க.சீனிவாசன்

முதலாம் இராசேந்திரனின் மகன் இரண்டாம் இராசேந்திரன்) கி.பி.1054-இல் மேலைச் சாளுக்கிய மன்னன் ஆகவமல்லனுடன் கொப்பத்தில் போர்புரிந்து வென்றான். இதனைப் பொருளாகக் கொண்டு பாடியது "கொப்பத்துப்பரணி" என்ற இலக்கியமாகும். இவன் தம்பி வீரராசேந்திரன் (கி.பி.1063-70) கிருஷ்ணை துங்கபத்திரை ஆறுகள் கூடும் கூடல் என்னுமிடத்தில் மேலைச் சாளுக்கியரை வெற்றிகொண்டான் இதனைப் பொருளாக உடையது கூடல் சங்கமத்துப் பரணி. இந்நூல்களைக் குறித்து ஒட்டக்கூத்தர் இராசராச சோழன் உலாவில்

"..............கொலையானை
பப்பத்து ஒருபசிப்பேய் பற்ற ஒருபரணி
கொப்பத்து ஒருகளிற்றால் கொண்டகோன் ஒப்பொருவர்
பாட அரிய பரணி பகடொன்றின்
கூடல சங்கமத்துக் கொண்டகோன்" (24- 28)

எனக் குறித்துள்ளார். இவ்விரு பரணிகளையும் பாடியவர் யார் என அறிய முடியவில்லை இப்பரணி நூல்களும் இன்று கிடைக்கவில்லை. முதற் குலோத்துங்கனின் மகனான விக்கிரம சோழன் (கி.பி. 1118- 36) தென்கலிங்க வேந்தனாகிய தெலுங்க வீமனைப் போரில் வென்று வெற்றி வாகை சூடினான். இதனைப் பொருளாகக் கொண்டது கலிங்கத்துப்பரணி என்ற இலக்கியம் ஆகும். இதனை எழுதியவர் ஒட்டக்கூத்தர் என்ற செய்தி தக்கயாகப்பரணி அளிக்கும் குறிப்பு மூலம் வெளிப்படுகிறது. இந்நூலும் இன்றும் கிட்டவில்லை.

## 1.6 பரணி அமைப்பு

பரணி என்பது புறத்திணைகளாகிய ஆகிய வஞ்சி, உழிஞை, வாகை, பாடாண்திணை போன்றவற்றின் சில துறைகளின் வளர்ச்சி என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். பாட்டுடைத் தலைவனை அடிப்படையாகக் கொண்டு,

| | |
|---|---|
| 1. கடவுள் வாழ்த்து | 8. இராச பாரம்பரியம் |
| 2. கடைதிறப்பு | 9. பேய் முறைப்பாடு |
| 3. காடு பாடியது | 10. அவதாரம் |
| 4. கோயில் பாடியது | 11. காளிக்குக் கூளி கூறியது |
| 5. தேவியைப் பாடியது | 12. போர்பாடியது |
| 6. பேய்களைப் பாடியது | 13. களம் பாடியது |
| 7. இந்திரசாலம் | 14. கூழடுதல் |

என 14 உறுப்புகளைக் கொண்டது பரணி இலக்கியமாகும். எனினும் பிற்காலத்தில் இவற்றின் எண்ணிக்கை மாறுபட வந்தன.

## 1.7 கலிங்கத்துப்பரணி - அறிமுகம்

கி.பி. 11ஆம் நூற்றாண்டில் செயங்கொண்டார் பாடியநூல் கலிங்கத்துப் பரணி ஆகும். இந்நூல் கிடைக்கும் பரணி நூல்களில் காலத்தால் முந்தியது. சோழஅரசன் குலோத்துங்கன் கலிங்க மன்னன் அனந்தவர்மன் சோடகங்கன் மீது படையெடுத்தான். சோழர் படைகளுக்குக் கருணாகரத் தொண்டைமான் தலைமை தாங்கிச் சென்றான். தோற்ற அரசனுடைய நாட்டில் பாசறை அமைத்துப் போர் செய்து வென்றதால், பரணி அங்கே பாடப்படுவதாகக் கொண்டு, தோற்ற நாட்டின் பெயரால் நூலை வழங்குவது மரபாயிற்று. இதனால் இந்நூல் கலிங்கத்துப்பரணி என்றும் பெயர் பெற்றது. இந்நூலில் குலோத்துங்க சோழனும் அவன் படைத்தலைவனாகிய கருணாகரத் தொண்டமானும் சிறப்பித்துப் போற்றப்படுகின்றனர். இதனுள் இராச பாரம்பரியம் என்ற பகுதி சோழர் வரலாற்றினைக் கூறும் சிறிய நூலாகக் கொள்ளத்தக்கது.

### 1.7.1 உறுப்புகள் விளக்கம்

கலிங்கத்துப் பரணியில் காணப்படும் பதினான்கு உறுப்புகள் குறித்து இனிக் காணலாம்.

1. கடவுள் வாழ்த்து - பாட்டுடைத் தலைவனாகிய முதற்குலோத்துங்கன் நீண்ட நாள் வாழவேண்டிக் கடவுளரைத் துதித்துப் பாடுகின்றார். அவ்வாறு பாடும்போது அரசனையும் தெய்வங்களையும் ஒப்பிட்டுப் பாடுவார்.
2. .கடை திறப்பு - படையெடுத்துச் சென்ற வீரர் ̇ நாடு திரும்பும்போது மக்கள் வீரரை வாழ்த்துவர். ஆனால் அவ்வீரர்களின் தலைவியர்

மட்டும் ஊடி நிற்பர். ஊடலால் கதவடைத்த அவர்களை நோக்கிக் ‘கடை திறமின், கபாடம் திறமின்’ என்று கூறி ஊடல் நீங்குமாறு வேண்டுவதாகப் பொருளாக உடையது.

3. காடு பாடியது - காளி உறையும் பாலை நிலத்தையும் அதன் வெம்மையையும் பாடுவதைப் பொருளாக உடையது.
4. கோயில் பாடியது - காளியை மறவர் வழிபாடு செய்யும் கோயிலின் அமைப்பும் வழிபாடும் பொருளாக உடைய பகுதி
5. தேவியைப் பாடியது - அடியவர்க்கு அருளும் காளியின் சிறப்புகள் பற்றிப் பாடும்பகுதி
6. பேய்களைப் பாடியது - காளியைச் சூழ்ந்திருக்கும் பேய்களின் உருவம் செயல்களைப் பாடுவது
7. இந்திர சாலம் - பேய் ஒன்று தேவியின் முன் கண்டோரை மருட்டும் மாயசாலம் செய்வதைப் பொருளாக உடையது.
8. இராச பாரம்பரியம் - புராண, இதிகாச மரபு முதலாகச் சோழர் குலமுறையைப் பாடும் பகுதி
9. பேய் முறைப்பாடு - பேய்கள் காளிகளிடம் தங்கள் குறைகளைக் கூறி முறையிட்டது
10. அவதாரம் - முதற் குலோத்துங்கன் பிறந்து வளர்ந்து சிறந்தமையைப் பேசுதல்
11. காளிக்குக் கூளி கூறியது - கலிங்க நாட்டிலிருந்து வந்த பேய் காளிக்குக் கூறிய போரின் தன்மைகளைப் பொருளாக உடையது
12. போர் பாடியது - கலிங்கத்தில் சோழப்படைக்கும் கலிங்கப் படைக்கும் நிகழ்ந்த போரின் கொடுமையைக் காளிக்குக் கலிங்கப் பேய் கூறியது.
13. களம்பாடியது - போரில் வென்றபின்பு போர்க்களத்தின் அவல நிலையைப் பொருளாக உடையது. கருணாகரத் தொண்டமானின் வீரச்சிறப்பு பேசப்படும்
14. கூழடுதல் - போரில் மிகுந்த பிணங்கள் பெற்று மகிழ்ந்த பேய்கள் கூழ் சமைத்துக் காளிக்குப் படைத்துத் தாமும் உண்டு மகிழ்தல்

## 1.8 செயங்கொண்டார்

சோழர் காலத்துக் கவிச் சக்கரவர்த்தி மூவர்களுள் ஒருவர் செயங்கொண்டார். ஏனையோர் கம்பரும் ஒட்டக்கூத்தரும். செயங்கொண்டார் முதலாம் குலோத்துங்கனின் காலத்தில் வாழ்ந்தவர். செயங்கொண்டாரின் ஊர்ப்பெயர் தீபங்குடி என்ற கருத்து இலக்கிய உலகில் நிலவும். தீபங்குடி என்ற பெயரிலமைந்த ஊர்கள் சோழ நாட்டிலும் தொண்டை நாட்டிலும்

உண்டு. ஆனால் சோழ நாட்டுக் கொரடாச்சேரிக்கு அருகில் உள்ள தீபங்குடியே இவர் ஊராக இருக்கலாம்.

இவர் புகார் நகர வணிகர்களைச் சிறப்பிக்கும் இசையாயிரம் என்பதைப் பாடியுள்ளார் என்பதைத் தமிழ்நாவலர் சரிதை என்ற நூலால் அறியலாம். விழுப்பரையர் என்னும் தலைவர் மீது உலாமடல் என்னும் பிரபந்தமும் பாடியுள்ளார்.

இவர் "பரணிக்கோர் செயங்கொண்டான்" என்று கூறும் அளவிற்கு ஓசைநயம், யாப்பு முதலியன அந்தந்த உணர்வுகளுக்கு ஏற்ப அமைத்துப் பாடுவதில் வல்லவர். இதனைப் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடிய

" வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்
சயங்கொண்டான் விருத்தமென்னும்
ஒண்பாவிற் குயர்கம்பன் கோவையுலா
அந்தாதிக் கொட்டக் கூத்தன்
கண்பாய கலம்பத்திற் கிரட்டையர்கள்
வசைபாடக் காள மேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காம
லாலொருவர் பகரொ ணாதே"

என்ற பாடலால் அறிந்துணரலாம்.

பரணியின் பெருஞ்சிறப்பை நாஞ்சில் நாடன் கூறுகையில்

> போர்க்கள அதிபதிகள் யமனும் காளியும் என்பதால் இவ்வாறு கருதக் காரணம் இருக்கும். பொதுவாக மாவீரரைப் புகழ்ந்து பாடுவதைப் பரணி பாடுவது என்றார்கள். பெரும்போரை சாமானிய மன்னர்கள் வெல்ல முடியாது. பரணியைச் சாமனிய புலவர்கள் பாடவும் இயலாது.

என்று கூறுகின்றார்.

## 1.9 பாட்டுடைத்தலைவர்

கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவன் முதற் குலோத்துங்கன் ஆவான். முதற்குலோத்துங்கன் சோழர் பரம்பரையிலும் சாளுக்கியர் பரம்பரையிலும் உரிமைகொண்ட ஒருபேரரசன். தந்தை சாளுக்கிய நாட்டு இராசராசன். தாய் இராசேந்திரன் மகளாகிய அம்மங்கை. இவன் கலைகளிலும் போராற்றலிலும் வல்லவன். இவன் இராசேந்திரன், உபய குலோத்தமன், அபயன், சுங்கம் தவிர்த்த சோழன் என்று பாராட்டப்படுகின்றான். இராசேந்திரனுக்குப் பிறகு வலிமையான சோழர் குல இளவரசன் இல்லாததாலும் போரிலும் நோயிலும் இறந்ததாலும் இவன் சோழ அரசனாகப் பொறுப்பேற்றான். இராசேந்திரன் என்னும் இயற்பெயருடைய இவன் சோழ நாட்டுக்கு முடி சூட்டிக்கொண்டபின்பே

குலோத்துங்கன் எனும் பெயர் பெற்றான். 1070முதல் 1120 வரை ஆண்டவன். நுளம்பர், சாளுக்கியர், வட கலிங்கர் மீது படையெடுத்து வென்றவன்.

மதுராந்தகி இவனுடைய மனைவியும் பட்டத்தரசியுமாவாள். இவளுக்குத் தீன சிந்தாமணி என்னும் பெயருண்டு. இவள் இரண்டாம் இராசேந்திர சோழனின் மகளாவாள். இவள் தவிர தியாகவல்லி, ஏழிசை வல்லபி ஆகிய மனைவியரும் இவனுக்கு உண்டு. மதுராந்தகியின் முதல் மகனே விக்கிரமசோழன்.

### 1.9.1 கருணாகரத் தொண்டைமான்

கருணாகரத் தொண்டைமான் பல்லவர் குலத்தில் தோன்றிய சிற்றரசர்களில் ஒருவன். 1112 இல் இவனே கலிங்கம் சென்ற சோழப்படைக்குத் தலைமை தாங்கினான். வண்டை என்னும் ஊரைச் சேர்ந்தவன். இவனுக்கு வேள் தொண்டை மான் என்னும் விருதுகளைச் சோழன் அளித்தான்.

## 1.10 தொகுத்துக் காண்போம்

பரணி என்பது வெற்றி பெற்ற போரில் ஆயிரம் யானைகளை வீழ்த்திய மன்னனைப் பாடுவதாகும். காளிக்குரிய வழிபாட்டையும் குறிப்பது. பரணி இலக்கியம் தோற்ற மன்னன்பெயரில் அமைவது. சந்தக் கலித்தாழிசையில் 14 உறுப்புகளுடன் அமையும். இவற்றுள் கடைத்திறப்பு காதற்சுவை ததும்பும் பகுதியாகும். புறப்போர் காலப் போக்கில் உருவகப் போராகவும் மாறி அஞ்ஞ வதைப் பரணி ஆகியன தோன்ற வழி வகுத்தன. கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் செயங்கொண்டார். இதுவே சிறந்த பரணி எனலாம். குலோத்துங்கன் கலிங்க நாட்டிற்குக் கருணாகரத் தொண்டைமானை அனுப்பிப் பெற்ற வெற்றியைப் பொருளாக உடையது.

## 1.11 தன்மதிப்பீட்டு வினா விடைகள இரு மதிப்பெண் வினா விடைகள்

1. ஆயிரம் யானைகளைப் போரில் வென்றவனுக்குப் பாடப்பெறும் இலக்கியம் எது?

   பரணி

2. காளிக்குரிய நாள் எது?

   பரணி

3. கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் யார்?

   செயங்கொண்டார்

4. கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவன் யார்?

   இரண்டாம் குலோத்துங்கன்

5. கலிங்கத்துப் பரணி கூறும் கலிங்க மன்னன் யார்?

அனந்தவர்மன் சோடகங்கன்

6. குலோத்துங்கனின் படைத்தலைவன் யார்?

கருணாகரத் தொண்டைமான்

7. கலிங்கத்துப் பரணியின் உறுப்புகளைச் சுட்டுக.

கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம், இராச பாரம்பரியம், பேய்முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம் பாடியது, கூழடுதல்

**குறுவினா**

8. பரணியின் இலக்கணம் குறித்தெழுதுக.

1.3. பெயர்க்காரணம் 1.4 இலக்கணம் என்ற தலைப்பிலான பகுதிகள்

9. செயங்கொண்டார் குறித்தெழுதுக.

செயங்கொண்டார் என்ற தலைப்பிலான பகுதி

**பெருவினா**

10. தமிழில் பரணி நூல்கள் குறித்துக் கட்டுரைக்க.

1.3 முதல் 1.6 வரையிலான எண்ணிட்ட பகுதிகள்

11. கலிங்கத்துப் பரணியின் அமைப்பை விவரிக்க.

1.7 முதல் 1.9 வரையிலான எண்ணிட்ட பகுதிகள்

1.12 மேலும் அறிந்துகொள்ள

நாஞ்சில் நாடன் - சிற்றிலக்கியங்கள்

மு.அருணாசலம் - தமிழ் இலக்கிய வரலாறு பன்னிரண்டாம் நூற்றாண்டு

# கூறு 2 கலிங்கத்துப்பரணி - கடவுள் வாழ்த்து - கடை திறப்பு

## 2.1 முன்னுரை

பரணியின் தொடக்கமாக அமையும் பகுதிகள் கடவுள் வாழ்த்தும் கடைத் திறப்பும். ஒன்று புறம் சார்ந்தது. மற்றொன்று அகம் சார்ந்தது. சிலேடை நயமும் கற்பனைச் செறிவும் உடைய பகுதிகள் இவையிரண்டும். இவற்றை நிரலே இப்பகுதி விளக்குகின்றது.

## 2.2 நோக்கம்

கலிங்கத்துப்பரணி தமிழில் எழுந்த ஒப்பற்ற இலக்கியம். கற்பனைச் செறிவும் போர் வருணனையும் நிரம்பியது. இந்நூலில் செயங்கொண்டார் பாட்டுடைத் தலைவனை கடவுளுடன் ஒப்பிடக் காணலாம். கடைத்திறப்பு பெண்களின் உருவ நலனுடன் காதலின் சுவையைப் பேசும் திறத்தை அறியலாம்.

## 2.3. கடவுள் வாழ்த்து

பாட்டுடைத் தலைவன் குலோத்துங்கன் இனிதாக நீண்டநாள் வாழத் தெய்வங்களை வேண்டும் பகுதி கடவுள் வாழ்த்து ஆகும். இங்குப் பொதுப்பட வேண்டாமல் குலோத்துங்கனுடன் கடவுளரை இணைத்துச் சுட்டிப் பாடும் செயங்கொண்டாரின் நயம் எண்ணத்தக்கது. இப்பகுதியில் குலோத்துங்கனைச் சிவபெருமான், திருமால், நான்முகன், சூரியன், கணபதி முருகவேள், நாமகள், உமையவள், சத்தமாதர் ஆகிய தெய்வங்களுடன் பாட்டுடைத்தலைவரைப் பாடித் துதிக்கும் மரபைக் காணலாம். இறுதியாக வாழ்த்துப் பா ஒன்றும் அமைந்துள்ளது

### 2.3.1 உமாபதி துதி

புயல்வண்ணன் புனல்வார்க்கப் பூமிசையோன்
தொழில்காட்டப் புவன வாழ்க்கைச்
செயல்வண்ண நிலைநிறுத்த மலைமகளைப்
புணர்ந்தவனைச் சிந்தை செய்வாம். 1
அருமறையி னெறிகாட்ட வயன்பயந்த
நிலமகளை யண்டங் காக்கும்
உரிமையினிற் கைப்பிடித்த வுபயகுலோத்
தமனபயன் வாழ்க வென்றே. 2

திருமால் நீர் வார்த்துத் தரவும் பிரமன் வைதிகச் சடங்குகளைச் செய்யவும் உலகியல் முறையை யாவரும் உணருமாறு உமையம்மையை சிவபெருமான் மணந்தார். அந்தச் சிவபெருமானை வேதநெறிப்படி பிரமன்

தந்த புவி மகளை அரசுரிமையால் மணந்துகொண்ட உபயகுல உத்தமன் குலோத்துங்கன் நீடுழி வாழ்ந்திட வேண்டித் தொழுவோம்.

### 2.3.2 திருமால் துதி

ஒருவயிற்றிற் பிறவாது பிறந்தருளி யுலகொடுக்குந்
திருவயிற்றிற் றொருகுழவி திருநாமம் பரவுதுமே. 3
அந்நெடுமா லுதரம்போ லருளபயன் றனிக்கவிகை
இந்நெடுமா நிலமனைத்தும் பொதிந்தினிது வாழ்கவென்றே. 4

ஒரு வயிற்றில் பிறவாமல் உலகம் படைக்கப் பிரமனத் தந்து உலகங்களை வயிற்றில் அடக்கிய குழவியுருவாய்த் தோன்றியவர் திருமால். அந்த நெடுமால் திருவயிற்றில் அடக்கிய உலகங்களை அருள் நிறைந்த அபயன் தனி வெற்றிக்கொடைக்கீழ் வைத்து இனிது வாழவேண்டி அந்தத் திருமாலின் திருநாமத்தைத் தொழுவோம்

### 2.3.4 நான்முகன் துதி

உகநான்கும் பொருணான்கு முபநிடத மொருநான்கு
முகநான்கும் படைத்துடைய முதல்வனையாம் பரவுதுமே. 5
நிலநான்குந் திசைநான்கு நெடுங்கடல்க ளொருநான்குங்
குலநான்குங் காத்தளிக்குங் குலதீபன் வாழ்கவென்றே. 6

நான்கு யுகமும் அறம் முதலாகிய பொருள் நான்கும் உபநிடதம் முகங்கள் நான்கும் உடைய பிரமனை நானிலமும் நாற்றிசையும் கடல் நான்கும் மலைநான்கும் காக்கின்ற குலதீபனாகிய சோழன் நீடுழி வாழ வேண்டி நிற்போம்.

### 2.3.5 சூரியன் துதி

பேராழி யுலகனைத்தும் பிறங்கவள ரிருணீங்க
ஓராழி தனைநடத்து மொண்சுடரைப் பரவுதுமே. 7
பனியாழி யுலகனைத்தும் பரந்தகலி யிருணீங்கத்
தனியாழி தனைநடத்துஞ் சயதுங்கன் வாழ்கவென்றே. 8

பெருங்கடல் சூழ்ந்த உலகம் செழிக்க இருள் நீங்க ஓர் ஆழித் தேரில் வரும் கதிரவனை நீர் நிறைந்த உலகனைத்தும் பரந்த துன்பம் நீங்குமாறு ஆணைச்சக்கரத்தால் காக்கும் சயதுங்கனாகிய சோழன் நீடுழி வாழ வணங்கி நிற்போம்

### 2.3.6 கணபதி துதி

காரணகா ரியங்களின்கட் டறுப்போர் யோகக்
கருத்தென்னுந் தனித்தறியிற் கட்டக் கட்டுண்
டாரணமா நாற்கூடத் தணைந்து நிற்கும்

ஐங்கரத்த தொருகளிற்றுக் கன்பு செய்வாம். 9
தனித்தனியே திசையானைத் தறிக ளாகச்
சயத்தம்பம் பலநாட்டி யொருகூ டத்தே
அனைத்துலகுங் கவித்ததெனக் கவித்து நிற்கும்
அருட்கவிகைக் கலிப்பகைஞன் வாழ்க வென்றே. 10

காரண காரியங்களின் தளைகளை நீக்கி யோகியர் உள்ளத்தில் பக்தியெனும் கட்டுத்தறியில் கட்டுண்டு வேதமாகிய நாற்கூடத்தில் சேர்ந்திருக்கும் ஐங்கரனாகிய கணபதிக் களிற்றை, எட்டுத் திசை யானைகளும் கட்டுவதற்குரிய தூண்களாக வெற்றித்தூண் பலவற்றை நாட்டும் ஒரு கூடத்திலேயே அனைத்துலகும் ஒடுங்கிற்று எனும்படியான தன் கொடைக் கையால் கவித்துத் துன்பம் போக்கும் குலோத்துங்கன் நீடுழி வாழ வேண்டுவோம்

**2.3.7 முருகவேள் துதி**

பொன்னிரண்டு வரைதோற்கும் பொருவரிய நிறம்படைத்த
புயமுங் கண்ணும்
பன்னிரண்டு மாறிரண்டும் படைத்துடையான் அடித்தலங்கள்
பணிதல் செய்வாம். 11
ஓரிரண்டு திருக்குலமும் நிலைபெறவந் தொருகுடைக்கீழ்க்
கடலுந் திக்கும்
ஈரிரண்டு படைத்துடைய விரவிகுலோத் தமனபயன்
வாழ்க வென்றே. 12

மேருவும் இமயமும் தோற்கும்படி ஒப்பற்ற நிறமுடைய தோள் பன்னிரண்டும் திருக்கண் பன்னிரண்டும் கொண்ட முருகவேளின் திருவடியை, சாளுக்கிய, சோழர் இரு குலமும் நிலைபெற உதித்து ஒரே குடைக்கீழ் நாற்கடலும் நாற்றிசையும் கொண்டு காக்கும் குலோத்துங்கன் நீடுழி வாழ வேண்டுவோம்

**2.3.8 நாமகள் துதி**

பூமாதுஞ் சயமாதும் பொலிந்து வாழும் புயத்திருப்ப
மிகவுயரத் திருப்ப ளென்று
நாமாதுங் கலைமாது மென்னச் சென்னி நாவகத்து
ளிருப்பாளை நவிலு வாமே. 13
எண்மடங்கு புகழ்மடந்தை நல்ல னெங்கோன் யானவன்பா
லிருப்பதுநன் றென்பாள் போல
மண்மடந்தை தன்சீர்த்தி வெள்ளை சாத்தி மகிழ்ந்தபிரான்
வளவர்பிரான் வாழ்க வென்றே. 14

நிலமகளும் வெற்றி மகளும் பொலிவுடன் வாழும் திருத்தோள்கள் மிக உயர்ச்சியானவை என்று நாமகள், கலைமகள் என்ற பெயர்தாங்கிச் சோழன் நாவில் வீற்றிருக்கும் கலைமகளை, எண்ணற்ற புகழ்க்குரிய திருமாது எம் சோழ அரசன் நல்லன், யாம் அவனிடத்தில் இருப்பது நன்று என்பாள் போலப் புவியின் புகழனைத்தும் வெள்ளாடையாகத் தரித்த வளவர்பிரான் நீடுழி வாழவேண்டுவோம்.

### 2.3.9 உமையவள் துதி

செய்யதிரு மேனியொரு பாதிகரி தாகத்
தெய்வமுத னாயகனை யெய்தசிலை மாரன்
கையின்மலர் பாதமலர் மீதுமணு காநங்
கன்னிதன் மலர்க்கழல்கள் சென்னிமிசை வைப்பாம். 15

கறுத்தசெழி யன்கழல்சி வப்பவரை யேறக்
கார்முகம்வ ளைத்துதியர் கோமகன்மு டிக்கட்
பொறுத்தமலர் பாதமலர் மீதணிய நல்கும்
பூழியர்பி ரானபயன் வாழ்கவினி தென்றே. 16

பகை கொண்டுவந்த பாண்டியனின் கழல் சிவக்கவும் சேரன் மலையேறி ஓடத் தோற்கடித்து அவர்கள் முடிக்கணிந்த மலர்களைச் சோழன் தன் பாதத்தில் தாங்கினான். அவன் நீடுழி வாழவேண்டி சிவபெருமானின் சரிபாதிமேனி கரிதாகத் தோன்றுமாறு அவருடலில் ஒரு பங்காக விளங்குபவளும் தெய்வங்களுள் சிறந்த சிவனார் மீது எய்திய மன்மதனின் மலரம்புகளைத் தன் திருவடியிலும் அணுகமுடியாத கன்னியானவளுமான பார்வதியின் திருவடிகளைத் தொழுவோம்.

### 2.3.10 சத்த மாதர்கள் துதி

மேதி புள்ளலகை தோகை யேறுவணம் வேழ மென்றகொடி யேழுடைச்
சோதி மென்கொடிக ளேழி னேழிருதுணைப்ப தந்தொழநினைத்துமே. 17
கேழன் மேழிகலை யாளி வீணைசிலை கெண்டை யென்றினைய பல்கொடி
தாழ மேருவிலு யர்த்த செம்பியர்த னிப்பு லிக்கொடித ழைக்கவே. 18

பன்றி, ஏர், மான், சிங்கம், வீணை, வில், மீன் என்னும் பகையரசர் கொடிகள் தாழ்ந்திருக்க மேருவில் பொறித்த சோழனின் புலிக்கொடி உயர்ந்து தோன்றவேண்டும் அதன்பொருட்டு எருமை (சாமுண்டி) அன்னம் (அபிராமி) பேய் (வராகி) மயில் (கௌமாரி), காளை (மகேசுவரி) கருடன் (நாராயணி) யானை (இந்திராணி) ஆகிய கொடியேழும் உடைய ஒளிபொருந்திய பெண்கொடிகளாகிய சத்த மாதர் திருப்பதங்களைத் தொழுவோம்.

### 2.3.11 வாழி

விதிமறை யவர்தொழில் விளைகவே விளைதலின் முகில்மழை பொழிகவே
நிதிதரு பயிர்வளம் நிறைகவே நிறைதலி னுயிர்நிலை பெறுகவே. 19
தலமுத லுளமனு வளர்கவே சயதர னுயர்புலி வளர்கவே
நிலவுமிழ் கவிகையும் வளர்கவே நிதிபொழி கவிகையும் வளர்கவே. 20

பூமியில் தோன்றிய மனு முதலாகிய சோழர் குலம் தழைக்கவும் குலோத்துங்கன் உயர்த்திய புலிக்கொடி ஓங்கவும் நிலவு போன்ற வெண்கொற்றக் குடைநிழல் வளரவும் கொடை வழங்கும் சோழனின் திருக்கரங்கள் சிறக்கவும் வேண்டும். அதன்பொருட்டு அந்தணர் செயலாகிய வேள்வி சிறக்கட்டும். விளைச்சல் பெருகும்படி மேகம் மழையைப் பொழியட்டும். நிதியைப் பெருக்கும் பயிர்வளம் செழிக்கட்டும். இவற்றால் உயிர்கள் நிலைத்து வாழட்டும்

## 2.4 கடை திறப்பு

கடைத்திறப்பு எனும் பகுதியில் ஊடிக் கதவடைத்த பெண்களிடம் ஊடல் நீங்கிக் கதவைத் திறக்குமாறு பாடுவதாகும். இப்பகுதியில் காதல் கொண்ட பெண்டிர் நிலை, தனிமைத்துயர், கூடலை நினைத்தல் கனவு நிலையுரைத்தல் ஆகிய நிலைகளுடன் குலோத்துங்கனின் வெற்றிச் சிறப்பும் உணர்த்தும் தாழிசைகள் அமைந்துள்ளன. பெண்களைக் காவிரியுடனும் குலைந்த கலிங்கத்துடனும் சிலேடை நயம்கொண்டு செயங்கொண்டார் பாடியுள்ளார்.

### 2.4.1 பெண்களின் எழில்

கடைத் திறப்பின் தொடக்கமாகப்பெண்களின் அழகு பேசப்படுகின்றது.

சூதுக்காய் அளவான இளமார்பும் துடிபோலும் நுண்ணிய இடையும் காதளவு நீளும் மதர்த்த விழியும்கொண்டு கடலமுதம் போன்று திகழும் பெண்டிரே கதவைத் திறப்பீராக. பக்கத்திலே இளமுலை வளர்வதால் ஆசையை அடக்கியாளும் முனிவரும் நிலை தளருமாறும் இடை துயர்படுமாறும் அறிந்து அருள்வீர். தாழிட்ட நெடிய கதவைத் திறப்பீராக. இனியமொழி பேசுபவர்களே! சுருண்ட கூந்தல் அசையவும் துயில் நீங்கியெழும் மயிலைப் போல் சதங்கைகள் ஒலிக்கும்படி கதவைத் திறப்பீராக.

சூதள வளவெனு மிளமுலைத் துடியள வளவெனு நுண்ணிடைக்
காதள வளவெனு மதர்விழிக் கடலமு தனையவர் திறமினோ. 1
புடைபட விளமுலை வளர்தொறும் பொறையறி வுடையரு நிலைதளர்ந்
திடைபடு வதுபட வருளுவீர் இடுகத வுயர்கடை திறமினோ. 2

குறிப்புகள்

சுரிகுழ லசைவுற வசைவுறத் துயிலெழு மயிலென மயிலெனப்
பரிபுர வொலியெழ வொலியெழப் பனிமொழி யவர்கடை திறமினோ. 3

### 2.4.2 ஊடலும் கூடலும்

கொடையில் சிறந்த குலோத்துங்கனோடு கூட்டம் போல் உணர்ந்த இனிய கனவில் சேராது ஊடியிருந்தமைக்காக நனவில் நெஞ்சத்டன் ஊடியிருப்பீர். கதவைத் திறப்பீராக. எங்கள் ஆடையை விடுங்கள் என்று கோபித்து மழலை மொழி பேசி ஆடையைப் பிடியுங்கள் என்று பொருள் விளைய நிற்பீர். பெண் அன்னம் போன்றவரே! கதவைத் திறப்பீராக. குலோத்துங்கன் அருள் முழுதும் இனி எனது என்று மகிழ்ந்த இரவில் கனவில் முலைகளில் அழுந்திய நகக்குறியை நனவில் தேடித் தடவுகின்றவர்களே! கதவைத் திறப்பீராக. ஊடல் கொண்டு பின் அது நீங்கியவராய்ச் சிரித்தவுடன் புன்சிரிப்புத் தோன்றிற்று என மகிழும் காதலர் பவளம் போன்ற வாயருகே நெருங்கவும் கயல் போலும் கண்களில் ஆனந்தக் கண்ணீர் முத்துச் சொரியும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

பொய்த்துயில் கொண்டு இருக்கும்போது காதலர் புலவிக்கு மருந்து எனக்கருதி பாதங்களைப் பற்றுவர். பற்றியவுடனே தொடர்ந்து பொய்த்துயில்கொள்ளும் கூரிய விழியுடைய பெண்டிரே! கதவைத் திறப்பீராக. வலிமையற்ற அரசர்கள் தொழுமாறு பகலில் பவனி வந்த குலோத்துங்கனிடம் இழந்த நிறையை இரவில் மகிழ்ந்து பெறும் கனவில் பெறவிரும்பிப் பிதற்றும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக. முத்துவடம் பொருந்திய முலைகளின்மீது தழுவிய காதலரின் சிவந்த வாயினால் ஏற்பட்ட பகற்குறியால் பவளவடம் புனைந்த பெண்டிரே! மணிகள் பொருந்திய பொற் கதவைத் திறப்பீராக. தண்கொடையுடைய குலோத்துங்கன் மார்பில் பொருந்திய ஆத்தி மாலைக்கு ஆசைப்பட்ட கண்களால் அதனை அடையும் வழியைத் தேடும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

கூடிய வின்கன வதனிலே கொடைநர துங்கனொ டணைவுறா
தூடிய நெஞ்சினொ டுடுவீர் உமது நெடுங்கடை திறமினோ. 4
விடுமினெங்கள்துகில்விடுமி னென்றுமுனி வெகுளி மென்குதலை துகிலினைப்
பிடிமினென்றபொருள்விளையநின்றருள்செய்பெடைநலீர்கடைகள்திறமினோ.5
எனத டங்கவினி வளவர் துங்கனருள் எனம கிழ்ந்திரவு கனவிடைத்
தனத டங்கண்மிசை நகந டந்தகுறி தடவு வீர்கடைகள் திறமினோ. 6
முனிபவ ரொத்திலராய் முறுவல்கி ளைத்தலுமே
முகிழ்நகை பெற்றமெனா மகிழ்நர் மணித்துவர்வாய்

*Self- Instructional Material*

கனிபவ ளத்தருகே வருதலு முத்துதிருங்
கயல்க ளிரண்டுடையீர் கடைதிற மின்றிறமின். 7
இத்துயின் மெய்த்துயிலே என்றுகு றித்திளைஞோர்
இதுபுல விக்குமருந் தெனமனம் வைத்தடியிற்
கைத்தலம் வைத்தலுமே பொய்த்துயில் கூர்நயனக்
கடைதிற வாமடவீர் கடைதிற மின்றிறமின். 8
இகலி ழுந்தரசர் தொழவ ரும்பவனி இரவுகந் தருளு கனவினிற்
பகலிழந்தநிறை பெறமு யன்றுமொழி பதறு வீர்கடைகள் திறமினோ. 9
முத்து வடஞ்சேர் முகிழ்முலைமேன் முயங்குங் கொழுநர் மணிச்செவ்வாய்
வைத்த பவள வடம்புனைவீர் மணிப்பொற் கபாடந் திறமினோ. 10
தண்கொடை மானதன் மார்புதோய் தாதகி மாலையின் மேல்விழுங்
கண்கொடு போம்வழி தேடுவீர் கனகநெ டுங்கடை திறமினோ. 11

### 2.4.3 படைக்கும் கண்களுக்கும் ஒப்புமை

அஞ்சியே கழல்கெடக் கூடலிற் பொருதுசென்
றணிகடைக் குழையிலே விழவடர்த் தெறிதலால்
வஞ்சிமா னதன்விடும் படையினிற் கொடியகண்
மடநலீ ரிடுமணிக் கடைதிறந் திடுமினோ. 12

இப்பாடல் சிலேடையாகக் குலோத்துங்கனின் வீரத்தையும் தலைவனுடனான கூட்டத்தையும் குறித்தமையும் பாடலாகும். பகைநாட்டு வீரர்கள் அஞ்சிட அவர்களின் வீரக் கழல்கள் நீங்குமாறு மதுரையில் போரிட்டுக் கடைசியில் காட்டிற்குச் சென்று விழுமாறு குலோத்துங்கன் போரிடுவான். வஞ்சி சூடிய குலோத்துங்கன் வேலினும் கொடிய கண்கொண்ட இளமையான நற் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

தலைவனுடனான கூடலில் அமளியில் தழுவிக் கூடுதலால் அஞ்சிய கழல்கள் கழன்றுவிழவும் கண்கள் விழிக்கடையில் செருகுமாறு நெருங்கி மோதவும் மன்மதன் விடும் படையினும் கொடிய கண்களுடைய பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

### 2.4.4 கூடலில் தோன்றும் நிகழ்ச்சிகள்

பரவசமுற்று உள்ளம் உருகத் தூக்கம் நீங்கப் பவளவாய்ச் சிவப்பு நீங்கவும் கடைவிழிச் சிவப்பு ஏறவும் நிறையெனும் கவசத்தை நீக்கி இளமுருவல் தோன்றிக் களிப்படையக் கணவரைச் சேரும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

கலவி மயக்கத்தால் இடையிலுள்ள ஆடை நீங்கும்போது நிறைந்த முழுநிலவின் ஒளியை ஆடையாகக் கருதி உடுத்திக் கொள்ளும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

அவசமுற் றுளநெகத் துயினெகப் பவளவாய்
அணிசிவப் பறவிழிக் கடைசிவப் புறநிறைக்
கவசமற் றிளநகை களிவரக் களிவருங்
கணவரைப் புணருவீர் கடைதிறந் திடுமினோ. 13
கலவிக் களியின் மயக்கத்தாற் கலைபோ யகலக் கலைமதியின்
நிலவைத் துகிலென் றெடுத்துடுப்பீர் நீள்பொற் கபாடந் திறமினோ. 14

**2.4.5 .நனவும் கனவும்**

நனவில் குலோத்துங்கனைப் புணர்ந்தாலும் நிசமெனத் தேறாமல் அதனையும் கனவெனவே கொள்ளும் பெண்டிரே! தோழியரின் முகச்சிரிப்பைக் கண்டதும் மனம் தேறும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

காதலர் பிழை செய்ததால் ஊடல் கொண்டிருந்தாலும் கூடும் ஆசையால் விடியும்வரை பொய்யாக உறங்கும் நற்பெண்டிரே! பொன்னாலாகிய கதவைத் திறப்பீராக.

அனுபவித்த கூடலின் களிப்பு மயக்கத்தில் விடிந்தது அறியாமல் காதலரின் மார்பில் துயில் கொள்ளும் பெண்டிரே! அழகிய பொற் கதவைத் திறப்பீராக.

நனவினிற் சயதரன் புணரவே பெறினுநீர்
நனவெனத் தெளிவுறா ததனையும் பழையவக்
கனவெனக் கூறுவீர் தோழிமார் நகைமுகங்
கண்டபின் தேறுவீர் கடைதிறந் திடுமினோ. 15

மகளிர் உறங்காமை

மெய்யே கொழுநர் பிழைநலிய வேட்கை நலிய விடியளவும்
பொய்யே யுறங்கு மடநல்லீர் புனைபொற் கபாடந் திறமினோ.16

கொழுநர் மார்பில் துயில்

போக வமளிக் களிமயக்கிற் புலர்ந்த தறியா தேகொழுநர்
ஆக வமளி மிசைத்துயில்வீர் அம்பொற் கபாடந் திறமினோ. 17

உங்கள் மனதை ஆளும் கணவர் வரவை எதிர்நோக்கி அவர் வராததால் வெளியே சென்று நோக்க விரும்பும் பாதத்தையும் மனத்தையும் வெளியே வைத்துச் சாத்திய கதவைத் திறப்பீராக.

உந்திச் சுழியில் முளைத்த உரோமப் பசுந்தாளில் முலைகளாகிய இரு குவிந்த தாமரைகளைக் கொண்டு திரியும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

ஆளுங் கொழுநர் வரவுபார்த் தவர்தம் வரவு காணாமல்
தாளு மனமும் புறம்பாகச் சாத்துங் கபாடந் திறமினோ. 18
உந்திச் சுழியின் முளைத்தெழுந்த உரோமப் பசுந்தா ளொன்றில் இரண்டு

அந்திக் கமலங் கொடுவருவீர் அம்பொற் கபாடந் திறமினோ. 19



### 2.4.6 சிறைப்பட்ட மகளிர் நிலை

மீனக்கொடியுடைய பாண்டியர் கண்ணீர் விட்டு ஓடிக்காட்டில் புகுந்தனர். அதனால் சோழப் படைகளிடம் சிறைப்பட்டு வேளமாகிய தனியிடத்தில் புகும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

அலை மோதும் நீர் வளமுடைய சோழ நாட்டை உடைய அபயனுக்குத் திறையாக சேரநாட்டிலிருந்தும் துளுநாட்டிலிருந்தும் வந்த பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

விலை மதிப்பற்ற வடம் முலையில் ஆடவும் விழிகள் காதணியைச் சேரவும் விரும்பும் கணவரின் தோளின்மேல் மலையிலாடிவரும் மயில்போலும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

மழலை மொழியில் வடுக மொழியும் தமிழ் மொழியும் கலந்து குழறிப்பேசும் கன்னடப் பெண்டிரே! விரைந்து வந்து கதவைத் திறப்பீராக.

தழுவிய கணவர் பிழைசெய்தீர் தழுவாதீர் என்று ஊடல் கொள்வீர். அக்கரங்கள் நீங்கும்போது உடனே மயங்கிக் கூடலை விரும்பும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

மீனம்புகு கொடிமீனவர் விழியம்புக வோடிக்
கானம்புக வேளம்புகு மடவீர்கடை திறமின். 20

மகளிரை கப்பப்பொருளாக அளித்தல்

அலைநாடிய புனனாடுடை யபயர்க்கிடு திறையா
மலைநாடியர் துளுநாடியர் மனையிற் கடைதிறமின். 21

விலையி லாதவடம் முலையி லாடவிழி குழையி லாடவிழை கணவர்தோள்
மலையி லாடிவரு மயில்கள் போலவரு மடநலீர்கடைகள்திறமினோ. 22

மழலைத்திரு மொழியிற்சில வடுகுஞ் சிலதமிழுங்
குழறித்தரு கருநாடியர் குறுகிக்கடை திறமின். 23

தழுவுங் கொழுநர் பிழைநலியத் தழுவே லென்னத் தழுவியகை
வழுவ வுடனே மயங்கிடுவீர் மணிப்பொற் கபாடந் திறமினோ. 24

### 2.4.7 மகளிர் முகமலர்ச்சி

விரைந்துவரும் கணவரின் மேனியைச் சிவந்த கண்களால் சிவக்கும்படி நோக்கி கூடலை விரும்பி முறுவல் செய்யும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

முடித்துச் செருகிய கூந்தல் மீது ஒரு கை பரவியும் ஒருகை அலைபோல் மடிந்து தோன்றும் துகில்மீது ஒரு கை வைத்தும் உறங்குகின்ற நிலையில்லும் முக மலர்ச்சியுடன் திகழும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

மார்பில் உம் கணவர் கைந்நகத்தால் ஏற்பட்ட வடுவை செல்வமில்லாதவர் தாம்பெற்ற பொருள்கண்டு மகிழ்தல் போல் ஆடையை நீக்கிப் பிறர் இல்லா இடத்தில் கண்டு மகிழ்ந்து மனங்களிக்கும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

கடலில் பெருகிய அமுதம்போலவும் விடம்போலவும் மன்மதன் விடும் மலரும்புகளைப் போல உடலின் உயிரையும் உணர்வையும் கடந்து உள்ளே சென்று உருவிப் பாயும் மதர்த்த விழியுடைய பெண்டிரே! கதவைத் திறப்பீராக. முறுவலாகிய முத்து மாலையுடன் முகத்தின்மீதும் மார்பின்மீதும் பொருந்தித் தோன்றும், இவ்வாறு பிறை நிலவும் முழுநிலவும் போல வரும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

வேகம் விளைய வருங்கொழுநர் மேனி சிவந்த படிநோக்கிப்
போகம் விளைய நகைசெய்வீர் புனைபொற் கபாடந் திறமினோ. 25

சொருகு கொந்தளக மொருகை மேலலைய
ஒருகை கீழலைசெய் துகிலொடே
திருவ னந்தலினு முகம லர்ந்துவரு
தெரிவை மீர்கடைகள் திறமினோ. 26

முலைமீது கொழுநர்கைந் நகமேவு குறியை
முன்செல்வ மில்லாத வவர்பெற்ற பொருள்போல்
கலைநீவி யாரேனு மில்லாவி டத்தே
கண்ணுற்று நெஞ்சங்க ளிப்பீர்கள் திறமின். 27

கடலில் விடமென வமுதென மதனவேள்
கருதி வழிபடு படையொடு கருதுவார்
உடலி னுயிரையு முணர்வையும் நடுவுபோய்
உருவு மதர்விழி யுடையவர் திறமினோ. 28

முறுவன் மாலையொடு தரள மாலைமுக மலரின் மீதுமுலை முகிழினுஞ்
சிறுநி லாவுமதின் மிகுநி லாவுமென வருந லீர்கடைகள் திறமினோ. 29

### 2.4.8 திருகிச் செருகும் குழல் மாதர்

முருகிற் சிவந்த கழுநீரும் முதிரா இளைஞர் ஆருயிருந்
திருகிச் செருகுங் குழன்மடவீர் செம்பொற் கபாடந் திறமினோ. 30

அழகுடன் சிவந்த செங்கழுநீருடன் இளைஞர் உயிரையும் திருகிச் செருகும் குழலையுடைய பெண்டிரே! கதவைத் திறப்பீராக

### .2.4.9 கொழுநரை நினைந்தழும் பெண்கள்

மேனியைத் தழுவிப் பிரிந்த காதலர் மீண்டுவருவாரோ என்பதை அறிந்துகொள்ள கடற்கரை மணலில் கூடலிழைத்துக் கண்டு அது

கூடாமையால் கண்ணீர் மணலில் விழுமாறு அழும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

கூடலுக்குச் செருக்கிய தனங்கள் தன் நிறம்கெட்டுப் பசலை பாயவும் சிவந்த வரி படர்ந்த கண்கள் கருமை கெடவும் ஊடும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

கூந்தல் பாரம் தலையில் அசைய இடை மேகலைகள் அவிழ்ந்து வீழ்கின்றன. அணிந்துள்ள அணிகள் நெகிழ முலைகள் வளரும் இயல்புடைய நற் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

மெய்யில ணைத்துருகிப் பையவ கன்றவர்தா
மீள்வரெ னக்கருதிக் கூடல்வி ளைத்தறவே
கையில ணைத்தமணற் கண்பனி சோர்புனலிற்
கரையவி ழுந்தழுவீர் கடைதிற மின்றிறமின். 31
செருவிள நீர்பட வெம்முலைச் செவ்விள நீர்படு சேயரிக்
கருவிள நீர்பட வூடுவீர் கனகநெ டுங்கடை திறமினோ.32
அளக பாரமிசை யசைய மேகலைகள் அவிழ வாபரண மிவையெலாம்
இளக மாமுலைக ளிணைய றாமல்வரும் இயன லீர்கடைகள் திறமினோ.33

### 2.4.10 நோயும் மருந்தும்

இனியமொழி பதறவும் ஒளிபொருந்திய விழிகள் சிவக்கவும் வாயிதழ் வெளுக்கவும் பருகும் வாயமுதத்தை மதுபானமாகக் கருதி அறிவழியும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

காதலரை நோக்கித் தங்கிய தங்கள் கண்கள் விளைத்த புண்களை முலையெனும் வேதுகொண்டு ஆற்றியும் கனிவாய் அமுதமான மருந்தூட்டியும் காக்கும் பெண்டிரே! செம்பொன் நெடுங் கதவைத் திறப்பீராக.

போரிடும் தங்கள் வேல் போன்ற கண்கள் மார்பில் ஊடுருவுதலால் ஏற்பட்ட புண்கள் தீர கொங்கைக் கண்களால் வேதுபட ஒற்றியும் கைகளால் கட்டித் தழுவியும் காக்கும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

மதுர மானமொழி பதற வாள்விழிசி வப்ப வாயிதழ்வெ ளுப்பவே
அதர பானமது பான மாகவறி வழியு மாதர்கடை திறமினோ. 34
தங்குகண் வேல்செய்த புண்களைத் தடமுலை வேதுகொண் டொற்றியுஞ்
செங்கனி வாய்மருந் தூட்டுவீர் செம்பொ னெடுங்கடை திறமினோ. 35
பொருங்கண் வேலிளைஞர் மார்பி னூடுருவு புண்கள் தீரவிரு கொங்கையின்
கருங்கண் வேதுபடவொற்றிமென்கைகொடுகட்டுமாதர்கடை திறமினோ.36

**2.4.11 இடையின் நிலை**

**இடையினிலையரி திறுமிறு மெனவெழா எமது புகலிட மினியிலை யெனவிழா**
**அடைய மதுகர மெழுவது விழுவதாம் அளக வனிதைய ரணிகடை திறமினோ. 37**
**உபய தனமசையி லொடியு மிடைநடையை ஒழியு மொழியுமென வொண்சிலம்**
**பபய மபயமென வலற நடைபயிலும் அரிவை மீர்கடைகள் திறமினோ. 38**

கூந்தலில் அமர்ந்த வண்டுகள் தாம் அமர்ந்தால் பாரம் பொறாது இடை இருப்பது அரிது. அழிதல் உறுதி என எழுகின்றன. வேறு இடம் இல்லை என மீண்டும் கூந்தலில் விழுகின்றன. அத்தகைய கூந்தலையுடைய பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

இரு முலைகள் அசைந்தால் இடை ஒடியும். எனவே நடையைத் தவிர்ப்பீர் தவிர்ப்பீர் என்று சிலம்பு அபயம் அபயம் என்று கேட்பதுபோல் நடைபயிலும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

**2.4.12 பெண்ணுக்கும் பொன்னிக்கும் ஒப்புமை**

பூவிரி மதுகரம் நுகரவும் பொருகய லிருகரை புரளவுங்
காவிரி யெனவரு மடநலீர் கனகநெ டுங்கடை திறமினோ. 39

அழகிய கரங்களில் தேனெடுத்து உண்ணவும் போரிடும் கயல் போன்ற மீன்கள் விழிக்கடையோரம்வரை நீளவும் விளங்கும் பெண்டிரே!

பூக்கள் விரிய வண்டுகள் தேனுண்ணவும் திரியும்கயல் மீன்கள் கரையில் புரளவும் விளங்கும் காவிரி போன்ற பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

களப வண்டலிடு கலச கொங்கைகளின் மதியெ ழுந்துகனல் சொரியுமென்
றளக பந்திமிசையளிகள்பந்தரிடும் அரிவை மீர்கடைகள் திறமினோ. 40

வண்டல் போல் சந்தனம் பூசிய தனங்களின் மீது நிலவு நெருப்புப் போல் ஒளியைச் சிந்தும் என்று கூந்தலில் வரிசையாக வண்டுகள் பந்தரிடுவது போன்று மொய்க்க விளங்கும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

**2.4.13 ஏனைய வருணனைகள்**

வாயின் சிவப்பை கண்கள் பெறவும் மலர்க்கண் சிவப்பை வாய் பெறவும் கடற்போன்ற காமக் கலவியில் அமுதம் அளிக்கும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

இளம்பிறை போன்ற நெற்றியில் குறுவெயர்ப்பு முத்துப் போல் தோன்றவும் மார்பில் முத்துமாலை அசையவும் செங்கழுநீர் பூச்சூடிய

கூந்தற் காடு குலையவும் கைவளைகள் ஆரவாரிக்கவும் கலவி கொள்ளும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

இடையில் அணிந்த காஞ்சியாகிய அணிகலன் தங்கியிருக்க அணியாகிய கலிங்கம் கலையுமாறு கூடும் பெண்டிரே. குலோத்துங்கன் காஞ்சியில் இருக்கவே கலிங்கம் நிலை குலைந்த தன்மையைப் பாடுமாறு கதவைத் திறப்பீராக.

இலங்கையை அழித்த கருணைக் கடலாகிய இராமனின் வலிய வில்லாற்றலைக் கேட்கும் பெண்டிரே! கலிங்கத்தை வீழ்த்திய கருணாகரனின் களப்போரைப் பாடக் கதவைத் திறப்பீராக.

அன்பு செய்யும் காதலரின் பிழைகளைப் பிரிந்தபோது நினைந்து அவரை நேரில் கண்டபோது மறந்துவிடும் பெண்டிரே! பொற்கதவைத் திறப்பீராக.

மணங்கொண்ட மார்புகள் அசையவும் தேன்மாலை அணிந்த தாழ்ந்த குழலில் வண்டுகள் எழுந்தாடவும் விழிகள் இரு புறமும் சென்று போரிடுவது போலத் திரியவும் உறவு கொள்ளும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

விரும்பிக் கூடிய கலவியின் மயக்கத்தில் பேசிய வார்த்தைகளை கிளியுரைக்கக் கேட்டு அதன் வாயைப் பொத்தும் இளைய பெண்டிரே! மணிக்கதவைத் திறப்பீராக.

ஒளி பொங்கும் நிலவின் ஒளிக்கு அஞ்சி அறைக்குள் புகுந்து ஒளியும் பெண்டிரே. அவ்வறையை நிலவறை என்று கருதி அஞ்சுவீர் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

பெண்டிரே! உங்கள் காதலர் வருவார் எனத் திறந்தும் வாராமையால் இனி வாரார் போலும் என்று மூடியும் விடியுமளவும் திறந்து மூடித் சுழல்கின்ற குடுமிப் பகுதி தேய்கின்ற கதவைத் திறப்பீராக.

காதலனுடன் ஊடுவீர்! அவர்பால் ஊடல் நீங்கிக் கூடும்போது உங்களையே மறந்து தேடுவீர். ஓவியப் பாவைகள் போன்றீர் கதவைத் திறப்பீராக.

பண்போலும் வாய்மொழியை அமுதம் எனப் பாராட்டிய காதலரைப் பரத்தையர்பால் செல்லாமல் தடுக்கக் கண்ணால் கொல்வதுபோல் நோக்கியருளும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

மனைவியைப் பிரியக் கருதும் பிழையை எண்ணித் தழுவாது நிற்கும் காதலர் பிரிவதற்கு அஞ்சி கண்களில் நீர் ததும்ப கால்விரல் தரையிலே கீற வருந்தும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

சிறந்த காஞ்சிக்கும் வடமலையாகிய இமயத்திற்கும் இடையில் உள்ள வெற்றிடத்தில் வேடன்போல் கருணாகரனாகிய வேடனை அனுப்பி

உயிர் பறித்தான் குலோத்துங்கன். அவனைப்போல இடையணியாகிய காஞ்சிக்கும் வடங்கள் தாங்கிய முலைக்கும் இடையே அமைந்த இடையழகால் மன்மதனாகிய வேடனை விடுத்து உயிர் பறிக்கும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக. சிவந்த கழுநீரும் இளைஞர் உயிரும் ஒன்றாகக் கலந்து கூந்தலில் செருகும் பெண்டிரே! கதவைத் திறப்பீராக.

கூடு மிளம்பிறையிற் குறுவெயர் முத்துருளக்
கொங்கை வடம்புரளச் செங்கழு நீரளகக்
காடு குலைந்தலையக் கைவளை பூசலிடக்
கலவி விடாமடவீர் கடைதிற மின்றிறமின். 42
காஞ்சி யிருக்கக் கலிங்கங் குலைந்த கலவி மடவீர் கழற்சென்னி
காஞ்சி யிருக்கக் கலிங்கங் குலைந்த களப்போர் பாடத் திறமினோ. 43
இலங்கை யெறிந்த கருணா கரன்றன் இகல்வெஞ் சிலையின் வலிகேட்பீர்
கலிங்க மெறிந்த கருணா கரன்றன் களப்போர் பாடத் திறமினோ.44
பேணுங் கொழுநர் பிழைகளெலாம் பிரிந்த பொழுது நினைந்தவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர் கனப்பொற் கபாடந் திறமினோ. 45
வாச மார்முலைகண் மார்பி லாடமது மாலை தாழ்குழலின் வண்டெழுந்
தூச லாடவிழி பூச லாடவுற வாடு வீர்கடைகள் திறமினோ. 46
நேயக் கலவி மயக்கத்தே நிகழ்ந்த மொழியைக் கிளியுரைப்ப
வாயைப் புதைக்கு மடநல்லீர் மணிப்பொற் கபாடந் திறமினோ. 47
பொங்கு மதிக்கே தினநடுங்கிப் புகுந்த வறையை நிலவறையென்
றங்கு மிருக்கப் பயப்படுவீர் அம்பொற் கபாடந் திறமினோ. 48
வருவார் கொழுந ரெனத்திறந்தும் வாரார் கொழுந ரெனவடைத்துந்
திருகுங் குடுமி விடியளவுந் தேயுங் கபாடந் திறமினோ. 49
ஊடு வீர்கொழுநர் தங்கள் பான்முனிவொ ழிந்து கூடுதலி னுங்களைததேடு
வீர்கடைகள் திறமி னோவினிய தெரிவை மீர்கடைகள் திறமினோ. 50
பண்படு கிளவியை யமுதெனப் பரவிய கொழுநனை நெறிசெயக்
கண்கொடு கொலைசெய வருளுவீர் கனக நெடுங்கடை திறமினோ. 51
பிழைநி னைந்துருகி யணைவு றாமகிழ்நர் பிரித லஞ்சிவிடு கண்கணீர்
மழை ததும்பவிரல் தரையி லேயெழுதும்மடநலீர்கடைகள்திறமினோ. 52
நக்காஞ் சிக்கும் வடமலைக்கும் நடுவில் வெளிக்கே வேடனைவிட்
டக்கா னகத்தே யுயிர்பறிப்பீர் அம்பொற் கபாடந் திறமினோ. 53
செக்கச் சிவந்த கழுநீருஞ் செகத்தி லிளைஞ ராருயிரும்
ஒக்கச் செருகுங் குழன்மடவீர் உம்பொற் கபாடந் திறமினோ.54

## 2.5 தொகுத்துக் காண்போம

செயங்கொண்டாரின் சிலேடை, கற்பனை, வருணனை ஆகிய புலமை நலன்கள் கடவுள் வாழ்த்து, கடைத்திறப்பு ஆகிய பகுதிகளில் நிரம்பியுள்ளன. தெய்வங்களுடன் இணைவைக்கத்தக்க அளவு குலோத்துங்கனின் பன்முகச் சிறப்பு கடவுள் வாழ்த்து வழி புலனாகும். காதலில் ஊடிய மகளிர் இயல்பைக் காஞ்சி - கலிங்கம் போன்ற ஒப்பீட்டில் நயமுறச் செயங்கொண்டார் பாடியுள்ளார். ஊடலும் கூடலுமெனக் காதலுணர்வின் மனவோட்டங்கள் கடைத்திறப்பில் பரவலாக இடம்பெற்றுள்ளது. மேலும் தோற்ற நாட்டு மகளிர் நிலையும் இப்பகுதி உணர்த்தியுள்ளது.

சிற்றிலக்கியங்கள்

குறிப்புகள்

## 2.6 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

1. சோழன் அணியும் மாலை எது?

   ஆத்தி மாலை

2. பூவுடன் மகளிர் எதனைச் செருகுகின்றனர்?

   ஆடவர் மனம்

3. திறைப் பொருட்களாக வந்த மகளிர் எந்த எந்த நாட்டவர்?

   கன்னடர், துளுவினர், மலை நாட்டினர்

4. ஆடையென்று பெண்டிர் எதனை எடுத்தனர்?

   நிலவின் ஒளி

குறுவினா

5. கடவுள் வாழ்த்தாகச் செயங்கொண்டார் கூறுவனவற்றை எழுதுக.

   கடவுள் வாழ்த்து முழுவதும்

பெருவினா

6. கடை திறப்புப் பகுதியில் செயங்கொண்டாரின் கவித்திறன் புலப்படுமாற்றை விளக்குக.

   கடை திறப்பு முழுவதும்

## 2.7 மேலும் அறிந்துகொள்ள

நாஞ்சில் நாடன் - சிற்றிலக்கியங்கள்

மு.அருணாசலம் - தமிழ் இலக்கிய வரலாறு பன்னிரண்டாம் நூற்றாண்டு

குறிப்புகள்

# கூறு - 3 கலிங்கத்துப்பரணி - காடு பாடியது - கோயில் பாடியது

## 3.1 முன்னுரை

கலிங்கத்துப் பரணியில் பாலை நிலத்துத் தெய்வமாகிய கொற்றவை வாழும் காட்டின் இயல்பு பேசப்படுகின்றது. வெம்மையும் வறட்சியும் நீரின்றி வருந்தும் உயிர்களும் எனக் கற்போர் நடுக்குற வருணனைகளைக் கூட்டிப் பாடியுள்ளார் செயங்கொண்டார். இவ்வாறே பேய்களின் செயலால் எழுந்த காளியின் புதிய கோயில் பற்றிய வருணனையும் செயங்கொண்டாரால் பாடப்பெறும்.

## 3.2 நோக்கம்

சங்க காலப் பாலை நில வருணனையின் விரிவாகப் பாலையின் கடுமையைச் செயங்கொண்டாரின் பாடல்கள்வழி அறிந்துகொள்ளலாம். நீரின்மை, வெப்பக் காற்று, நிழலின்மை ஆகியவற்றைப் பேசுவதன் மூலம் பாலையின் கொடுமையி விளக்கக் காணலாம். பாலைக் காட்டில் கோயிலின் அமைப்பிற்கு வேண்டிய பொருட்கள் மீதான புலவரின் கற்பனையையும் அறிந்துகொள்ளலாம். அக்கால வீர வழிபாட்டுமுறை குறித்தும் அறிந்து கொள்ளும்வகையில் இப்பாடப் பகுதி அமைகின்றது

## 3.3. காடு பாடியது

காளிவாழும் தலம்காடு. அக்காட்டில் தேவரும் இயங்காதவரானார். காட்டின் வருணனை வெயில் வருத்தும் காட்சி சிறப்பான வருணனைப் பகுதிகளாகும்.

களத்திலே போர் நிகழ்ந்த கலிங்க நாட்டில் கலிங்கர்களின் பிணங்களால் நிணக்கூழ் சமைத்து வயிற்றை இருபங்காக நிறையச் செய்த காளியின் காட்டினைப் பாடுவோம்

களப்போர் விளைந்த கலிங்கத்துக் கலிங்கர் நிணக்கூழ் களப்பேயின்
உளப்போ ரிரண்டு நிறைவித்தாள் உறையுங் காடு பாடுவாம்.1

### 3.3.1 மரம் செடி கொடிகள்

வெப்பத்தால் பொரிந்த காரைச்செடிகள், கருகிய சூரை மரங்கள் புகைந்து எரிந்த வீரை மரங்கள் எரிந்த மூங்கில் பட்டை உஇர்ந்து கிடக்கும் பாரை மரங்கள் முறிந்துவிட்ட பாலை மரங்கள் காய்ந்து கிடக்கும் ஓமை மரங்கள் ஆகியன அந்தப் பாலை நிலத்தில் எங்கும் பரவிக் கலந்திருந்தன.

இலை, காய், கனி என யாவும் உதிர்ந்து காய்ந்த விளவ மரங்கள், வாடிய நெல்லி மரங்கள், காய்ந்த தும்பைச் செடிகள், காய்ந்த வேல

மரங்கள், முற்றி வெடித்த முள்ளிச்செடிகள், கொடிய வறண்ட காற்றால் சிதைந்த வள்ளிக்கொடிகள், பிளவுபட்ட கள்ளிச்செடிகள் ஆகியன பரவியிருந்தன.

வற்றிப்போன வாகை மரங்கள், கூகைக்கொடிகள், அழிந்துபோன தேற்றா மரங்கள், பொடியுதிருமாறு சிதைந்த வேலம், முதிர்ந்த இண்டைக்கொடிகள், உலந்த மூங்கில், முறிந்துவிட்ட புன்க மரங்கள் என யாவும் வறண்டு அக்காட்டில் கிடந்தன.

பொரிந்த காரைக ரிந்த சூரைபு கைந்த வீரையெ ரிந்தவேய்
உரிந்த பாரையெ றிந்த பாலையு லர்ந்த வோமைக லந்தவே. 2
உதிர்ந்த வெள்ளிலு ணங்கு நெல்லியொ டுங்கு துள்ளியு லர்ந்தவேல்
பிதிர்ந்த முள்ளிசி தைந்த வள்ளிபி ளந்த கள்ளிப பரந்தவே. 3
வற்றல் வாகைவ றந்த கூகைம டிந்த தேறுபொ டிந்தவேல்
முற்ற லீகைமு ளிந்த விண்டுமு ரிந்த புன்குநி ரைந்தவே. 4

### 3.3.2 நிழலின்மை

கொடியதான அக்கானத்தின் தரையின் பிளந்த வெடிப்புகளில் எல்லாம் கதிரவன் நுழைந்து தன் மனைவியான சாயை (நிழல்) சென்ற இடம் யாதோ எனத் தன் கரங்களால் தேடுவதுபோல் கதிர்வருத்தும்.

வானில் வட்டமிடும் கழுகின் நிழல் வெம்மை தாங்காமல் அக்கானத்தை விட்டு ஏகும். அத்தகைய நிழலேயன்றி வேறு நிழல் ஓரிடத்திலும் இல்லை.

மரத்தின் அடியில் நின்ற நிழல் வெளியே தலை காட்டினால் வெயில் உண்டுவிடும் என்று அஞ்சியும் நீரில்லாது வாடிய மரங்கள் தங்கள் நிழலைத் தாமே உண்ணும் என்று அஞ்சியும் அம்மரங்களின் கீழிருந்து யாரும் அறியாதபடி ஓடியது

தீய வக்கொடிய கான கத்தரைதி றந்த வாய்தொறுநு ழைந்துதன்
சாயை புக்கவழி யாதெ னப்பரிதி தன்க ரங்கொடுதி ளைக்குமே. 5
ஆடு கின்றசிறை வெம்ப ருந்தினிழல் அஞ்சி யக்கடுவ னத்தைவிட்
டோடு கின்றநிழ லொக்கும் நிற்கும்நிழல் ஓரி டத்துமுள வல்லவே. 6
ஆத வம்பருகு மென்று நின்றநிழல் அங்கு நின்றுகுடி போனதப்
பாதவம்புனல்பெ றாது ணங்குவன பருகும் நம்மையென வெருவியே. 7

### 3.3.3 வெப்பத்தின் கொடுமை

மான் நீரில்லா வறட்சியால் தீயின் வாயில் நீர் கிடைத்தாலும் உண்ணலாம் என்னும் எண்ணத்தில் நீர் தேடி வாய்வெந்து கிடக்கும். செந்நாயின் வாயிலிருந்து வடியும் நீரை குடிப்பதற்குரியது என்று எண்ணி மான் அதனை நக்கி விக்கித் தவிக்கும்

செக்கசிவந்த நெருப்பினைக் கொட்டித் தகட்டைப் பழுக்கச் செய்து தரையாக்கியது போல நிலம் இருக்கும். அத்தரைமீது பறக்கும் புறாக்கள் நெருப்பில் பறக்கும் புறாவை ஒத்திருக்கும்.

இப்புவியில் பிறந்த மானிடர் செல்வதற்குரிய எளிய இடமன்று அந்தக் காடு. அந்நிலத்தின் மேல் பரந்த வெம்மைக்கு அஞ்சியே தேவர்கள் தங்கள் பாதங்கள் தரையில் படாதபடி விளங்குகின்றனர். இவ்வாறு தேவர்களின் பாதங்கள் தரையில் படாமைக்குப் புதிய காரணத்தைச் செயங்கொண்டார் குறிக்கின்றார்.

செந்நெ ருப்பினைத் தகடு செய்துபார் செய்த தொக்குமச் செந்த ரைப்பரப்
பந்நெ ருப்பினிற் புகைதி ரண்டதொப் பல்ல தொப்புறா வதனிபுறா. 8
தீயின் வாயினீர் பெறினு முண்பதோர் சிந்தை கூரவாய் வெந்து வந்துசெந்
நாயின் வாயினீர் தன்னை நீரெனா நவ்வி நாவினால் நக்கிவிக்குமே. 9
இந்நி லத்துளோ ரேக லாவதற் கெளிய தானமோ வரிய வானுளோர்
அந்நிலத்தின்மேல் வெம்மை யைக்குறித் தலவோநிலத்தடியடாததே. 10

### 3.3.4 கதிரவனும் ஏனைத் தேவர்களும் அஞ்சுதல

காளி தங்கும் அக்காடின் ஊடே கதிரோனின் குதிரைகள் இரவு பகல் என இயங்காமல் ஒரு பொழுது மட்டும் திரிவதன் காரணம் யாதெனில் பகற்பொழுது திரிந்து காட்டின் வெம்மையால் வருந்தித் தளர்ந்துவிட்டமையால்தான்

காட்டைக் கடப்போம் என கரிய மேகங்களும் நிலவும் செல்கையில் வெம்மை தாங்காது அவை விரைகின்றன. அப்பால் அவை ஓடியிளைத்த உடல் வியர்வைதான் முறையே மழையாகவும் பனிநீராகவும் பொழிகின்றன.

தேவர்கள் வானத்திலே குளிர்ந்த மேகத்தைத் திரைச்சீலையாகக்கொண்டு அமுதம்பொழி நிலவை விசிறியாகக் கொண்டு விசிறுகின்றனர். இதற்குக் காரணம் பொறுக்கவியலாத பாலைக் காட்டின் வெம்மையைச் சற்றேனும் தணித்துக் கொள்வதற்கே ஆம்

### 3.3.5 பேய்களும் காடும்

நிலங்கள் பேர்ந்து செல்லாதபடி காவலாகக் காளியால் நிறுத்திய பேய்கள் தனிமையில் நின்று பெருமூச்சு விட்டனபோல் மரங்கள் புகைந்து கரிந்துவிட்டன.

வெப்பத்தால் உடல் வற்றிய பேய் ஒன்று வாய் உலர்ந்து நாக்கை வெளியே நீட்டுவதுபோல் நீளமான மரப் பொந்துகளிலிர்ந்து முதிய பாம்புகள் வெளியே வரும்.

### 3.3.6 வெப்பச் சூறாவளி

காண்பவர் விழி தடுமாறப் பாலைநிலத்தில் கானல் நீர் தோன்றும். அதனிடையே வீசும் சூறாவளியால் நீர்ச்சுழல் ஏற்பட்டது போல் தோன்றும். இறந்த உடலை எரிக்கும் சுடலைத் தீயிலிருந்து எழும் சாம்பர் சூறைக்காற்றால் மாணிக்கத்தின் செம்மை நிறம் மறையத் தோன்றும் அது புகை மூடிய தழல் போலும் சாம்பல் மூடிய தீக்கங்கு போலவும் தோன்றும்.

சிதைந்தவுடற் சுடுசுடலைப் பொடியைச் சூறை
சீத்தடிப்பச் சிதறியவப் பொடியாற் செம்மை
புதைந்தமணி புகைபோர்த்த தழலே போலும்
போலாவேற் பொடிமூடு தணலே போலும். 17

மண்ணோடி யறவறந்து துறந்தங் காந்த
வாய்வழியே வேய்பொழியு முத்த மவ்வேய்
கண்ணோடிச் சொரிகின்ற கண்ணீ ரன்றேற்
கண்டிரங்கிச் சொரிகின்ற கண்ணீர் போலும். 18

### 3.3.7 மூங்கிலும் முத்தும்

மண்ணிலே ஊடி வளர்ந்து நீரிலாமையால் வெடித்துத்திறந்த மூங்கில் கணுக்களில் முத்துக்கள் சொரியும். அது இரக்கத்தால் சொரியும் கண்ணீர் போலவும் வெம்மை கண்டிரங்கி வருந்திப் பொழியும் கண்ணீர் போலவும் தோன்றும்

மூங்கில்கள் வேகமாக வெடித்தமையால் தரையில் முத்துக்கல் வீழ்ந்தன. அவை தரைப் புழுங்கி வெம்பித் மேற்பரப்பில் தோன்றைய வியர்வைத்துளிகள் போலவும் தரையின் கொப்புளங்கள் போலவும் தோன்றும்

### 3.3.8 வெந்தவனமே இந்தவனம்

நீர்பரந்த கடலலைகள் பாய்மரக் கலங்களை அசைத்தபடி பலமுறை கரைகளில் மோதுவதும் திசையானைகள் செவியை அசைத்துக் கொண்டிருப்பதும் பாலைக் காட்டின் வெம்மை வந்து வருத்தாமல் தடுக்கவே ஆகும்.

முள்ளும் கல்லும் கலந்த வழிகளில் குலோத்துங்கனுக்குத் தோற்றுப் பாண்டியர் ஓடுமாறு போர் நிகழ்ந்தது. அப்போது வெள்ளாறும்கோட்டாறும் புகையால் மூடுமாறு வெந்த வனத்தை இந்தப் பாலைவனத்துடன் ஒப்பிடலாம்.

கூட்டமாகத் திரண்ட குரங்குகள் கடலுக்கு அப்பால் மணற்பாங்கான நிலம் இன்மையால் வெப்பமான பாறைகளை எடுத்து மயங்கின.

## 3.4. கோயில் பாடியது

காளி இந்தப் பூமியையே கோயிலாக உடையவள். எனினும் அப்பேய்கள் பாலைக்காட்டில் புதிதாகக் கோயில் எடுத்ததாகப் புலவர் பாடுகின்றார்

ஓதி வந்தவக் கொடிய கானகத் துறைய ணங்கினுக் கயன்வ குத்தவிப்
பூத லம்பழங் கோயி லென்னினும் புதிய கோயிலுண் டதுவி ளம்புவாம். 1

இதுவரையிற் சொன்ன அந்தக் கொடிய காட்டில் உறைகின்ற காளிக்குப் பிரமன் வகுத்த பூதலமாகிய கோயில் உண்டு. எனினும் பேய்கள் சமைத்த புதிய கோயிலும் உண்டு. அதனை இனிக்காணலாம்.

### 3.4.1 கோயில் இயல்பு

வட்டமான வெண்கொற்றக் குடையுடைய சோழனின் வாளால் மாய்ந்து எமனிடம் சேர்ந்த மன்னர்தம் மனைவியரின் அணிகலன்களில் இருந்த பெரிய மணிகளைப் புதிய கோயிலுக்குக் கடைக்காலாகப் பேய்கள் இட்டன

செந்நிறப் புள்ளிகளையுடைய களிறுகளை உடையவர்கள் சேரர். அவர்கள் ஏவலால் போருக்கு வாளொடு வந்த சேர வீரர்களை எதிர்த்து அவர்களுடைய கொழுப்போடு குருதியைக் குழம்பாக்கிக் கருந்தலைகளைச் சுவராக்கின

அறிஞர் தலைவனாகிய குலோத்துங்கனின் யானைகள் பகை அரசர்களின் காவற்காட்டை முற்றிலும் அழித்து பறித்து எறிந்தன. அவ்வாறு எறிந்த பெரிய கணைய மரங்களைத் தூணும் உத்தரமாகச் அமைத்தன.

மிதிலை என்ற நகரில் குலோத்துங்கன் யானைகளை விரைந்து கொன்றான். அந்த யானைகளின் கொம்புகளைக் கோயிலுக்குக் கைமரமாக இட்டனர். விலாமரங்களைப் பரப்பு மரங்களாக இட்டன.

வட்ட வெண்குடைச் சென்னி மானதன் வாளின் வாயினான் மறலி வாயிடைப்
பட்டமன்னர்தம் பட்ட மங்கையர் பரும ணிக்கருத் திருவி ருத்தியே. 2
துவர்நி றக்களிற் றுதிய ரேவலிற் சுரிகை போர்முகத் துருவி நேரெதிர்த்
தவர்நிணத்தொடக்குருதி நீர்குழைத் தவர்க ருந்தலைச்சுவரடுக்கியே. 3
அறிஞர் தம்பிரா னபயன் வாரணம் அரசர் மண்டலத் தரண றப்பறித்
தெறிதரும்பெருங்கணைமரங்கள்கொண்டெழுதுதூணொடுத்திரமியற்றியே.4
கடித ழிந்துபோர் மிதிலை யிற்படுங் கரிம ருப்பினைத் திரள் துலாமெனும்
படிப ரப்பியப் பரும யானையின் பழுவெ லும்பினிற் பாவ டுக்கியே. 5

### 3.4.2 மேற்கூரையும் பிறவும்

முன்பு யானைப்படையைச் செலுத்தி வெற்றிச் சின்னங்கள் உடைய அரசர்களுடன் பொருது அழித்தான். அப்போது பெற்ற சிங்கம், யானை பன்றி சிங்கம் ஆகிய தனித்தனிக் கொடிகளை வரிசையாக அமைத்து மேல்முகடாக்கின

துங்க பத்திரையில் நடந்த போர்க்களத்தில் சோழன் வாளினால் வெற்றிகொண்ட போரில் வென்ற யானைகளின் முகபடாத்தால் மேற்கூரையமைத்து மூடின.

கொள்ளிவாய்ப்பேய்கள் காக்கும் நெடிய கோபுரமும் நீண்ட மதிலும் வெள்ளியால் செய்யப்பட்டதோ எனும்படி வெள்ளெலும்பினால் பேய்கள் அமைத்தன.

**3.4.2.1தோரணங்கள்**

கரிய இரும்பு துண்டங்கள் இரண்டனை மகரதோரணத்தின் தூண்களாக நாட்டியபேய்கள் இரும்பையே வளைத்துத் தோரணங்களாக அமைத்தன.

அழகு செய்வதற்கு மயில் கழுத்தும் வீரர்கள் பலியிட அரிந்த முகத்தாமரையும் கொழுப்பாலான கொடிச் சீலைகளையும் இளங்குழந்தைகளின் தலையையும் கொண்டு அழகு செய்தன பேய்கள்.

வணங்காத பாண்டியரின் பாயும் யானைகளின் செவியாகிய முறங்களைக் காளிகோயில் மாலையாகத் தொங்கவிட்டன. மதுரையில் இருந்த சுறாமீன் வடிவ மகரத் தோரணத்தை பறித்து அழகிய ஊசல் போல அமைத்தனர்.

காளி மீதுபெருகிய பக்தியால் கோயிலில் பச்சைக் குருதியால் நீர் தெளித்துக் கொழுப்பைப் பூவாகச் சிந்திச் சுற்றிலும் பிணங்களாகிய ஈம விளக்கு எரித்திடும் இயல்புடையதாகக் காளிகோயில் அமைந்திருந்தது.

காரிரும்பின் மகரதோ ரணமாகக் கரும்பேய்கள்
ஓரிரண்டு கால்நாட்டி யோரிரும்பே மிசைவளைத்தே. 9
மயிற்கழுத்துங் கழுத்தரிய மலர்ந்தமுகத் தாமரையு மருங்கு சூழ்ந்த
எயிற்கழுத்து நிணக்கொடியுமிளங்குழவிப்பசுந்தலையுமெங்குந்தூக்கி. 10
பணியாத வழுதியர்தம் பாய்களிற்றின் செவிச்சுளகு பலவுந் தூக்கி
மணியூச லெனமதுரை மகரதோ ரணம்பறித்து மறித்து நாட்டி. 11
பரிவிருத்தி யலகிட்டுப் பசுங்குருதி நீர்தெளித்து நிணப்பூச் சிந்தி
எரிவிரித்த ஈமவிளக் கெம்மருங்கும் ஏற்றியதோ ரியல்பிற் றாலோ. 12

**3.4.3 வீர வழிபாடு**

சற்றும் சலியாத வீரச்செருக்கை உடைய வீரர்கள் வரம் தருக எனக் காளியை வேண்டினர்; அவ்வாறு தரும் வரத்திற்குத்தக்கதாக பலியாகத் தங்கள் உறுப்பை அரிந்து காணிக்கையிடுவதாகப் பரவுமொலி கடலொலி போல் ஒலிக்கும். வீரர்கள் வழிபாட்டின் பொருட்டுச் செய்யும் வேள்வியில் தங்கள் தொடையெலும்பைத் தீயிலிட்டு வழிபடுவர். குருதியை நெய்யாக வார்ப்பர்

கழுத்தின் அடியில் தலையை அரிவர். அரிந்த தங்கள் சிரத்தைக் காளியின் கைகளில் தருவர். காளையின் கைகளில் சேர்ந்த தலை காளியை வழிபட்டுத் துதிக்கும். குறையுடல் கும்பிட்டு நிற்கும்.

பலிபீடத்தில் அரிந்து வைத்த மயிர்கொண்ட தலையைத் தன் இனம் என்று கருதி ஆண்டலைப்புள் அருகில் நெருங்கிப் பார்க்கும். அவ்வாறு நெருங்கும் பறவையை அத்தலைகள் அச்சுறுத்தும். கருந்தலையை அரிந்து கொடுத்த பின்னே தம் கடமை முடிந்தது இனிச் செய்ய ஒன்றுமில்லை என்று குறையுடல் கூத்தாடும், உடல் விழுந்தபின் உண்ண நெருங்க ஆசைப்பட்டுக் கூத்தாடும் உடல்பின்னே பேய்கள் திரியும்

எருமைக் கடாவைக் கொன்று கொண்டபசிய குருதி ஈது பலியாக ஏற்றருள். என்னும் குரல் எட்டுத்திசைகளிலும் பிளந்து வானின் இடிபோல முழங்கின. அவற்றோடு பேய்கள் பல் இசைக்கருவிகளையும் முழக்கின.

சலியாததனியாண்மைத் தறுகண் வீரர் தருகவரம் வரத்தினுக்குத் தக்க தாகப்

பலியாகவுறுப்பரிந்தருதுமென்றுபரவுமொலிகடலொலிபோற்பரக்குமாலோ.13

சொல்லரிய ஓமத்தீ வளர்ப்ப ராலோ
தொழுதிருந்து பழுவெலும்பு தொடர வாங்கி
வல்லெரியின் மிசையெரிய விடுவ ராலோ
வழிகுருதி நெய்யாக வார்ப்ப ராலோ. 14
அடிக்கழுத்தி னெடுஞ்சிரத்தை யரிவ ராலோ
அரிந்தசிர மணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்தசிரங் கொற்றவையைப் பரவு மாலோ
குறையுடலங் கும்பிட்டு நிற்கு மாலோ.15
நீண்டபலி பீடத்தி லரிந்து வைத்த
நெடுங்குஞ்சிச் சிரத்தைத்தன் னினமென் றெண்ணி
ஆண்டலைப்புள் ளருகணைந்து பார்க்கு மாலோ
அணைதலுமச் சிரமச்ச முறுத்து மாலோ. 16
கடன மைந்ததுக ருந்தலைய ரிந்த பொழுதே கடவ
தொன்றுமிலை யென்றுவிளை யாடு முடலே
உடல்வி ழுந்திடினு கர்ந்திடவு வந்த சிலபேய்
உறுபெ ரும்பசியு டன்றிடவு டன்றி ரியுமே. 17
பகடி டந்துகொள்ப சுங்குருதி யின்று தலைவீ
பலிகொ ளென்றகுர லெண்டிசைபி ளந்து மிசைவான்
முகடி டந்துருமெ றிந்தெனமு ழங்க வுடனே
மொகுமொ கென்றொலிமி குந்தமரு கங்கள் பலவே. 18

### 3.4.3.1 பேய்களும் யோகினிகளும்

உடுக்கைகளின் முழக்கம் கேட்டு அவளின் மெய்க்காப்பாளரும் பழங்காலம்தொட்டு இருப்பவருமான சாதகர்கள் காளியை நெருங்கி வணங்க வருவர்.

வாளை வலக்கையிலும் வீரர் தலைகளை இடக்கையிலும் ஏந்திய யோகினிப் பெண்கள் உடன்வருவர்.

பெரிய மூங்கிலின் முளைகள் தோறும் தொங்கிய தலைகள் எல்லாத் திசைகளிலும் சிரித்தன. அதனைக் கண்ட பேய்கள் உறக்கத்தை மறந்தன.

அரிந்து பலியிட்ட தலைகள் குருதியாற்றில் அடித்துச் செல்லப்பட்ட் மூங்கிலில் சிக்கி அசைந்தன. அது குருதிப்புனலில் மிதக்கும் உடல்களைக் கைப்பற்ற எமன் தூண்டிலிட்டது போல் தோன்றும்

கொல்லும் இயல்புடைய நரி பறையோசைபோல் முழங்கின. பேய்கள் தம் குட்டிகளின் வாய்க்குச் சிவந்த இறைச்சியைத் தேடி அலைந்தன. அப்போது நரிகளின் வாயில் நல்ல இறைச்சியக் கண்டு அவற்றைப் பறித்தோடின.

கொழுப்பையும் தசையையும் பருந்துகள் இழுக்கும். தீ, செம்பருத்தி, பிணம் பேய், சுடுகாடு நரிகள் சூழ்ந்ததாய் அக்கோவில் விளங்கிற்று.

நிணமுந் தசையும் பருந்திசிப்ப நெருப்பும் பருத்தி யும்பொன்று
பிணமும் பேயுஞ் சுடுகாடும் பிணங்கு நரியு முடைத்தரோ. 24

## 3.5 தொகுத்துக் காண்போம்

காடுபாடியது என்னும் பகுதியில் செயங்கொண்டார் வறண்டு உலர்ந்த மரங்கள், கானல் நீர், நீர் இன்றி நாயின் வாய்நீர் பருகும் நாய், நிழலும் அஞ்சி ஓடும் வெப்பம் என்று கற்பனையின் உச்சத்தை இப்பகுதியில் உரைத்துள்ளார். கோயில் பாடியது என்னும் பகுதியில் காட்டில் காணும் விலங்குகள், போரில் இறந்துபட்ட யானை எலும்புகள் போர்க்களத்தில் தோற்றோடிய மன்னரின் கொடிகள் தலைகள் ஆகியவற்றால் அமைக்கப்பட்ட கோயில் பற்றிய வருணனைச் சிறப்பு கற்போர் நடுக்குற அமைதிருக்கின்றது.

## 3.6 தன் மதிப்பீட்டு வினா விடைகள்

இரு மதிப்பெண் வினா விடைகள்

1. பூமி வெடிப்பில் கதிரவன் எதனைத் தேடுகின்றான்?

   தன் மனைவியான சாயை என்னும் நிழலை

2. கடவுளரின் கால் நிலம் தோயாதது ஏன்?

   காட்டின் வெம்மையால்

3. காட்டில் பனியும் புகையும் - எது?

வியர்வைநீர்

4. கோயிற் கடைக்காலில் இட்ட மணிகள் எவை?

தோற்ற பகையரசர் மனைவியரின் அணிகலன்

5. கோயிற் சுவர் எதனால் ஆனது?

மடிந்த வீரர்களின் தலைகளால்

குறுவினா

6. காட்டின் வெம்மையையும் கொடுமையையும் விவரிக்க.

காடு பாடியது முழுவதும்

7. கோயிலில் நிகழ்ந்த வழிபாட்டை விளக்குக.

வீர வழிபாடு என்ற தலைப்பில் உள்ளவை

பெருவினா

கோயிலின் அமைப்பைக் கலிங்கத்துப் பரணி எவ்வாறு கூறும்?

கோயில் அமைப்பு, மேற்கூரையும் பிறவும் என்னும் தலைப்பில் அமைந்த செய்திகள்

## 3.7 மேலும் அறிந்துகொள்ள

நாஞ்சில் நாடன் - சிற்றிலக்கியங்கள்

மு.அருணாசலம் - தமிழ் இலக்கிய வரலாறு பன்னிரண்டாம் நூற்றாண்டு

# கூறு- 4 குலோத்துங்க சோழன் உலா

## 4.1 முன்னுரை

உலா என்பது பாட்டுடைத் தலைவர் வீதியுலாக் காணும் சிறப்பை பவனி வரும் அழகைப்பேசுவதாகும். இம்மரபு குறவஞ்சி, மடல் ஆகிய சிற்றிலக்கிய வகைகளிலும் காணலாம். எனினும் அவை உலாப்புறத்தை மட்டுமே பொருளாக உடையன அல்ல. பாட்டுடைத் தலைவர் பவனி வரும் சிறப்பை மட்டுமே பொருளாகக் கொண்டது உலா இலக்கியம். அவ்வாறு தோன்றிய இலக்கிய வகையில் குலோத்துங்க சோழன் உலாவை இப்பகுதி விளக்குகின்றது.

## 4.2 நோக்கம்

உலா என்னும் இலக்கியத்தில் பாட்டுடைத் தலைவர்களின் குலமரபு, பாரம்பரியமான புகழின் சிறப்பு, அவர்களின் தலைமைப் பண்பு, எழுவகை பருவ மகளிர் செயல்கள் ஆகியன பேசப்படும் இவ்வகையில் குலோத்துங்கனின் சோழ மரபின் பெருமையை அறிந்துகொள்ளலாம். சிற்றிலக்கியத்துள் உலாவின் தனிச்சிறப்பான அமைப்பை அறிந்துணரலாம்.

## 4.3. உலாவின் பொருண்மையும் இலக்கணமும்

பாட்டுடைத் தலைவராக அமைந்த வள்ளலோ, மன்னரோ, தெய்வமோ வீதியுலா வருகையில் அத்தலைவரைக் கண்டு பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு பருவ மகளிரும் ஒருதலையாகக் காதல் கொள்வதாகப் பாடப்படுவது இதன் பொருண்மையாகும்.

பொதுவாக உலாவின் பொருண்மையை இருவகையாகப் பகுக்கலாம். உலா அக நூலாயினும் அதனை புறப்பகுதி அகப்பகுதி என இரண்டாகப் பகுத்துக் காணலாம். பாட்டுடைத் தலைவர்களின் குலத்தொன்மை, தலைவர் பெருமை, பள்ளி எழுதல், நீராடி அலங்காரம் செய்து கொள்ளல், பட்டத்து யானையின் மீது வருதல் உடன் வருவோர், குழாங்கள், ஆகியன புறப்பகுதியாக அமையும்.

வீதியுலாப் புறப்பட்டபின் வீதியில் அத்தலைவரைக் காணும் ஏழு பருவ மகளிருடைய உணர்ச்சிகளும் செயல்களும் விளையாட்டுகளும் தலைவர்களைக் கண்டு காமுறுதலும் அப்பெண்களிடம் தலைவர் அருளைச் செய்தலும் அகப்பகுதியாக அமையும்.

உலா பற்றிய கூறுகள் தொல்காப்பியத்தினும் பழந்தமிழ் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தின் பாடாண் திணை நூற்பா

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப

வழக்கொடு சிவணிய வகைமை யான" (தொல்.பொருள் - 82)

என்பது உலா பற்றிய குறிப்பைத் தருகின்றது.

பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்

என்னோடு நின்றார் இருவர் அவருள்ளும்

பொன்னோடை நன்றென்றாள் நல்லளே பொன்னோடைக்

கியானைநன் றென்றாளும் அந்நிலையள் யானை

எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்

திருத்தார்நன் றென்றேன் தியேன்

என்னும் முத்தொள்ளாயிரச் செய்யுள் வீதியுலா வந்த பாண்டியனைக் கண்டு காதலுற்ற பெண்களைப் பேசுகின்றது.

தழைகளும் தொங்கலும் ததும்பி எங்கும் தண்ணுமை எக்கம் மத்தளி தாழ்பீலி

குழல்களும் கீதமுமாகி எங்கும் கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு

மழைகொலோ வருகின்றதென்று சொல்லி மங்கைமார் சாலகவாசல் பற்றி

நுழைவனர் நிற்பனராகி எங்கும் உள்ளம்விட்டு ஊண்மறந்தொழிந்தனரே

என்னும் பெரியாழ்வாரின் பாசுரம் கண்ணன் ஆநிரைகளை மேய்க்கப் புறப்பட்டுநின்ற காட்சியால் பெண்டிர் தம் நிலை மறந்தமையைக் கூறுகின்றது.

எண் அரும் நலத்தினாள் இனையள் நின்றுழி,

கண் ஒடு கண் இணை கவ்வி, ஒன்றை ஒன்று

உண்ணவும், நிலை பெறாது உணர்வும் ஒன்றிட,

அண்ணலும் நோக்கினான்! அவளும் நோக்கினாள்

என்னும் கம்ப ராமாயணச்செய்யுள் இராமன் வீதியுலா வந்தபோது சீதை கண்டு மகிழ்ந்ததை விளக்கும்.

இவ்வகையான உலாக்கூறுகள் பல இருப்பினும் தனித்த இலக்கியமாகத் தமிழில் தோன்றிய முதல் உலா திருக்கைலாய ஞான உலா. இதனை ஆதி உலா என்றும் கூறுவர். இதன் ஆசிரியர் சேரமான் பெருமாள் நாயனார் ஆவார்.

உலாவின் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல் இரு கூறாக்கி விளக்கும்.

1. முன் எழுநிலை: 1. பாட்டுடைத் தலைவனின் குடிச்சிறப்பு, 2.நீதிமுறை 3.கொடைப்பண்பு 4.உலாச் செல்ல நீராடுதல் 5.நல்ல அணிகளை அணிதல் 6.நகர் முழுவதும் மக்கள் வரவேற்றல் 7.

நகர வீதிகளில் களிறு முதலியவற்றின் மீது ஏறி வருதல் என்பனவாம்

2. பின் எழுநிலை: எழுவகைப் பருவ மகளிரின் தோற்றத்தையும் இயல்புகளையும் காதலால் வருந்தும் செயல்களை விளக்குதல்

எழுவகைப் பருவ மகளிருக்கான ஆண்டு வரையறை பின்வருமாறு சுட்டப்பெறும்.

1. பேதை - வயது ஐந்து முதல் ஏழு வரை
2. பெதும்பை -வயது எட்டு முதல் பதினொன்று வரை
3. மங்கை - வயது பன்னிரண்டு முதல் பதின்மூன்று வரை
4. மடந்தை - வயது பதினான்கு முதல் பத்தொன்பது வரை
5. அரிவை - வயது இருபது முதல் இருபத்தைந்து வரை
6. தெரிவை - வயது இருபத்தாறு முதல் முப்பத்தொன்று வரை
7. பேரிளம் பெண் - வயது முப்பத்திரண்டு முதல் நாற்பது வரை

இத்தகு பொருண்மையில் கலிவெண்பாவில் உலா இலக்கியம் பாடப்பெறும். பன்னிருபாட்டியல்

"பாட்டுடைத் தலைவ னுலாப்புற வியற்கையும்

ஒத்த பாமத் தினையாள் வேட்கையும்
கலியொலி தழுவிய வெள்ளடி யியலால்
திரிபின்றி நடப்பது கலிவெண்பாட்டே"(241)

எனவும், வெண்பா பாட்டியல்

"திறந்தெரிந்த பேதை முத லெழுவர் செய்கை

மறந்தயர வந்தான் மறுகென்று-அறைந்தகலி
வெண்பா வுலாவாம்."

எனவும் இலக்கணம் கூறும்.

## 4.4. தமிழில் தோன்றிய உலா நூல்கள்

ஆதியுலாவாகிய திருக்கைலாய ஞான உலாவை அடுத்து ஒட்டக்கூத்தர் பாடிய மூவருலாக்கள், நம்பியாண்டார் நம்பியின் திருவுலா மாலை இரட்டைப் புலவர் பாடிய ஏகாம்பர நாதருலா, காளமேகத்தின் திருவானைக்கா உலா, சிவப்பிரகாசரின் திருவெங்கையுலா அருணாச்சலக்கவிராயர் பாடிய அவிநாசி உலா சிவக்கொழுந்து தேசிகரின் கோடீச்சுர உலா என எழுபதுக்கும் மேற்பட்ட உலாக்கள் தமிழில் தோன்றியுள்ளன.

இவர்களுள் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தருக்குத் தனிப்பெரும் சிறப்புண்டு. பிற்காலச் சோழர்களில் தந்தை, மகன், பேரன் என விக்கிரம

சிற்றிலக்கியங்கள்

குறிப்புகள்

சோழன், அவன் புதல்வன் இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி-1133 - 50), அவன் மைந்தன் இரண்டாம் இராசராசன் (கி.பி- 1146 - 63) ஆகிய சோழவேந்தர் மூவர் ஆட்சியிலும் அவைக்களப் புலவராகவும் ஆசானாகவும் விளங்கி அவர்கள் மீது உலா பாடியவர் ஒட்டக்கூத்தர் ஆவார்

## 4.5 ஒட்டக்கூத்தர்

ஒட்டக்கூத்தர் தமிழிலும் வடமொழியிலும் புலமைமிக்கவர். சோழநாட்டின் மலரி என்னும் ஊரில் பிறந்தவர். இராசராசன் மீது இவர் உலா பாடி ஒவ்வொரு கண்ணிக்கும் ஆயிரம் பொற்காசுகள் வீதம் பரிசில் பெற்றார் என்பதைத் தமிழ்விடு தூது

......... ........ ............ கூடல்
நராதிபன் கூத்தன் எதிர் நண்ணி ஓர் கண்ணிக்கு
ஓராயிரம் பொன் ஈந்த உலாவும் (தமிழ்விடு தூது 58- 59)

என்று கூறும். இரண்டாம் குலோத்துங்கன் இவருக்கு அரிசிலாற்றின் தென்கரையில் தானமாக வழங்கிய ஊர் இவர் பெயரால் கூத்தனூர் என வழங்கப்படுகின்றது. அங்கு ஒட்டக்கூத்தர் கலைமகளுக்குக் கோயில்கட்டி வழிபாடு செய்தமையை தக்கயாகப்பரணி கூறும். ஒட்டக்கூத்தர் 1.விக்கிரம சோழன் உலா, 2.குலோத்துங்க சோழன் உலா , 3.இராசராச சோழன் உலா, 4. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், 5.இராமாயணம் உத்தரகாண்டம், 6.அரும்பைத் தொள்ளாயிரம் 7.ஈட்டி எழுபது 8.எழுப்பு எழுபது, 9.களிப்பு எழுபது 10.தக்கயாகப் பரணி 11.கங்கேயன் நாலாயிரக் கோவை ஆகிய நூல்களைப் பாடியுள்ளார். இவர் புலமைச்சிறப்பால் கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சசர், கவுடகவி, சர்வஞ்ஞகவி எனப் பாராட்டப்பெற்றுள்ளார்,

## 4.6 பாட்டுடைத் தலைவன் இரண்டாம் குலோத்துங்க சோழன்

ஒட்டக்கூத்தரிடம் தமிழ் பயின்ற இரண்டாம் குலோத்துங்கன் புலமை மிக்கவனாக, புலவரைப் போற்றுபவனாகத் திகழ்ந்தான். அநபாயசோழன் எனப்படும் பெயருக்கு உரியவன் இவன் காலத்தில்தான் சேக்கிழார் பெரியபுராணம் பாடினார். அவருக்கு இவன் தொண்டர் சீர் பரவுவார் என்ற பட்டமளித்துப் போற்றினான். ஒட்டக்கூத்தர் இவன்மேல் குலோத்துங்க சோழனுலா குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் என்ற இரு சிற்றிலக்கியங்களைப் பாடியுள்ளார். குலோத்துங்கன் தில்லைநடராசர் மீது கொண்ட பக்தியால் கோவில் திருப்பணிகள் பலவற்றைச் செய்துள்ளான்.

## 4.7 குலோத்துங்க சோழன் உலா

*Self- Instructional Material*

ஒட்டக்கூத்தர் தாம் பாடிய மூன்று உலாக்களிலும் சோழர் குடிப்பெருமையைக் கூறியே நூலைத் தொடங்குகின்றார். மூன்று நூல்களிலும் சோழர்களின் பொதுவான சிறப்பியல்புகள் பேசப்படுகின்றன.

அவ்வகையில் இரண்டாம் குலோத்துங்கனின் முன்னோர்கள் பற்றி முதலில் ஒட்டக்கூத்தர் குறிப்பிடுகின்றார்.

### 4.7.1 சோழர் குடிப்பெருமை

தமிழகத்தின் மூன்று வேந்தர்களில் சோழர்குலம் சூரியகுலத்தவராகக் கொள்ளப்படுவர். புலிக்கொடியும் ஆத்திமாலையும் கொண்டவர்கள், குலோத்துங்க சோழனுக்கு முன்னோர்களாக இருபத்து ஏழுபேர், இவ்வுலா நூலில் குறிக்கப்பட்டுள்ளனர். தொன்மச் செய்திகள், புராணச் செய்திகளில் கூறப்படும் சோழர்குல முன்னோர்கள் இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளனர்.

தேர்மேவு பாய்புரவிப் பாசடைச் செங்கமலம்
போர்மேவு பாற்கடற் பூத்தனையோன் - பார்மேல் 1
மருளப் பசுவொன் றின் மம்மர்நோய் தீர
உருளுந் திருத்தே ருரவோன் - அருளினாற் 2
பேராப் பெரும்பகை தீரப் பிறவேந்தர்
ஊராக் குலிர விடையூர்ந்தோன் - சோராத் 3
துயில்காத் தரமகளிர் சோர்குழைகாத் தும்பர்
எயில்காத்த நேமி யிறையோன் - வெயில்காட்டும் 4
அவ்வா னவர்கோ னொருமணி யாசனத்தில்
ஒவ்வாம லேத்த வுடனிருந்தோன் - கல்வை 5
எழக்குரைக்கும் பேழ்வா யிருங்கூற்றுக் கேற்ப
வழக்குரைக்குஞ் செங்கோல் வளவன் - பழக்கத்தாற் 6
போந்த புலியுடனே புல்வா யொருதுறைநீர்
மாந்த வுலகாண்ட மன்னர்பிரான் - காந்தெரியில் 7
வெந்தா ருயிர்பெற் றுடல்பெற்று விண்ணாள
மந்தா கினிகொணர்ந்த மன்னர்கோன் - முந்திப் 8

ஆரவாரமான திருப்பாற்கடலில் பசிய இலைகளுக்கு நடுவில் செந்தாமரை மலர் பூத்தது போல் கடலிடமிருந்து பாய்கின்ற ஏழு பச்சைக் குதிரைகள் பூட்டப்பட்ட ஒற்றைச்சக்கரம் உள்ளதேரில் உலாவரும் கதிரவனாகிய ஆதித்தனும் தாய்ப் பசுவின் துக்கத்தைப் போக்கத் நீதிக்காகத் தன்மகனையே தேரைச் செலுத்திக்கொன்ற நடுநிலை மாறா மன உறுதியுடைய மனுநீதிச் சோழனும் தேவரைக் காக்க இந்திரனைக் காளை வாகனமாக்கி எதிரிகளை அழித்த ககுந்த சக்கரவர்த்தியும் தேவர்களின் பணிந்து வேண்ட அரக்கரிடமிருந்து தேவருலகைக் காத்த முசுகுந்த சக்கரவர்த்தியும் தேவர்களுக்கு உதவி செய்து இந்திரலோகத்தில் இந்திரன் வருந்த அவன் இருக்கையில் அமர்ந்த சிறப்புடைய திலீபச் கூற்றுவனுக்காக வழக்குரைத்துத் தீர்ப்புச் சொன்ன பெருநற்கிள்ளியும் புலியோடு மானும் ஒரே

குறிப்புகள்

துறையில் நீர் அருந்தும் வகையில் அமைதியாக உலகை ஆளும் மாந்தாதாவும் தம் குல முன்னோர்கள் சாபம் நீங்கி நற்கதி அடையத் தவமிருந்து ஆகாய கங்கையைக் கொணர்ந்த பகீரதனும் . சோழர் குலத்தின் முன்னவர்களாகப் போற்றப்படுவர்.

மலைபத்தும் வெட்டு முருமின் உறவோன்
தலைபத்தும் வெட்டுஞ் சரத்தோன் - நிலைதப்பா 10
... ... ... ... .புவிராச ராசர் மனுமுதலோர் நாளில்
தவிராத சுங்கத் தவிர்த்தோன் 26

என அடுத்து வரும் கண்ணிகளும் சோழர் மரபின் பெருமையைப் பேசுவன. பத்துத் தேர்களில் வந்த சம்பாசுரனைத் தேவர்கள் வேண்ட கைகேயியைச் சாரதியாகக் கொண்ட ஒரு தேரில் வந்து அழித்த தசரதனும் இராவணனை பிரம்மாத்திரத்தால் வீழ்த்திய இராமனும் தன்னை எதிர்த்த வடபுலத்து வேந்தர்களைக் காளியின் அருளால் பேய்க் கூட்டத்திற்கு விருந்தளித்த கரிகாற் பெரு வளத்தானும் நான்முகன் படைத்த உயிர்களைக் காத்து இறுதிக்காலத்தில் முதுமக்கள் தாழியில் வைத்துக் காத்த நாபாகச் சோழனும் ஆகாயத்தில் திரிந்த மூன்று கோட்டைகளையும் அழித்து வானுலகம் காத்து நாடாண்ட தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியனும் மேலைக் கடலை ஒட்டிய நிலப்பகுதி நீருள் மூழ்க சூரிய கிரணங்களைத் தன்னுடலில் தரித்து மேலைக்கடல்நீரை உறிஞ்சி கீழைக்கடலை நிரப்பிய சங்கரண சக்கரவர்த்தியும் அலைகள் பரவும் காவிரி ஆற்றில் குறுக்கிடும் மலைகளைத் திருத்தி சோழநாட்டிற்கும் பாசன வசதி செய்த சிவுகனும் கடல் சூழ்ந்த உலகைத் தன் வேலால் தாக்கிப் பூமியில் எல்லாம் உருவாக வழி வகுத்த பிருது சக்கரவர்த்தியும் புறாவின் உயிரைக் காப்பதற்காகத் தன் உடம்பின் தசைகளையும் உயிரையும் கொடுக்க அரியாசனத்தில் அமர்வது போல் தராசுத் தட்டில் ஏறிய சிபிச் சக்கரவர்த்தியும் கரைகட்ட வாராத ஈழத்துப் பிடாரி பிரதாபத்தினியின் கண்ணைத் தோண்டிச் செருக்கடக்கிய கரிகாற் பெருவளத்தானும் சோழர்களின் குல முதல்வர்களாக குலோத்துங்கனுக்கு முன்னவர்களாகப் பாராட்டப்பெறுவர்.

நாகராசனின் செல்வமகளை மணந்து கொண்ட கிள்ளி வளவனும் சேரமான் கணைக்கால் இரும்பொறையை வென்று சிறைப்பிடித்து பொய்கையார் களவழி நாற்பது என்னும் நூலைப் பாடி வேண்டிட அவனை விடுவித்த கோச்செங்கணானும் போர்களால் தன் மார்பில் தொண்ணூற்று ஆறு விழுப்புண்களைப் பெற்ற இராசராச தேவனும் (முதலாம் இராசராசன்) தில்லை நடராசப் பெருமானின் திருநடனத்தைக் காணத் தடையாக இருந்த

காவலனான பிரம்மராட்சசனை இறைவன் ஆணையால் அழித்து ஈசன் திருநடனத்தைக் கண்டுகளித்த திருமுடிச் சோழனும் (மும்முடிச் சோழன்) தமிழ்ச்சங்கம் கொண்ட மதுரையையும் ஈழநாட்டையும் ஒருங்கே வெற்றிகொண்ட முதலாம் பராந்தகனும் ஒரு பகற்பொழுதுக்குள் சேரநாட்டின் உதகை என்னும் நகரை அழித்து, சேரனுடைய தூதனின் மேலாடையை நீக்கும் குறிப்புடன் நோக்கிய முடிகொண்ட சோழனும் வடநாட்டிலுள்ள கங்கை பகுதியையும் மலேயா தீபகற்பத்தில் உள்ள கடாரத்தையும் வென்ற கங்கைகொண்ட சோழனும் (இராசேந்திரன்) காலங்காலமாக விதிக்கப்பட்டு வந்த சுங்கவரியைத் தவிர்த்த முதலாம் குலோத்துங்கனும் பின்வந்த அகளங்கன் எனப்படும் விக்கிரம சோழனும் எனக் இரண்டாம் குலோத்துங்கனின் தந்தை சோழர் மரபை ஒட்டக்கூத்தர் பாடியுள்ளார்.

### 4.7.2 இரண்டாம் குலோத்துங்கன்

விக்கிரம சோழனின் மகனாகிய இரண்டாம் குலோத்துங்க சோழன் (1133 - 1150) காலத்தில் நாடு மிகவும் அமைதியாகப் போரின்றி இருந்தமையால் இவன் அநபாயன் எனபட்டான். இரண்டாம் குலோத்துங்கன் அனைத்துலகங்களையும் காக்கும் ஆற்றல் மிக்கவன். உலக உயிர்களை காக்கின்ற கரிய மேக வண்ணனாகிய திருமாலுக்கு ஒப்பானவன்.

துவரை என்னும் பகுதியை ஆண்ட சந்திரகுலத்தில் வந்த விதுகுலநாயகி சோழர் குல மருமகளாக வந்து விக்கிரமச் சோழன் மனைவியாகினாள். அவள் பெற்றெடுத்த இளங்களிறாகிய இரண்டாம் குலோத்துங்கன் கனகளபன் என அழைக்கப்படுவான்.

எழுத முடியாத அழகின் உருவான தியாகவல்லியைப் பட்டத்தரசியாகக் கொண்டவன். இரண்டாம் குலோத்துங்கன். தன்னோடு போரிட்டுச் சிறைப்பட்ட பகை மன்னர்களை விடுவித்தான். அவர்கள் சோழநாட்டுக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தையும் நீக்கி அருள் செய்தான் இதனைப் பின்வரும் கண்ணிகள் விளக்கும்.

இந்து மரபி லிருக்குந் திருக்குலத்தில்
வந்து மனுகுலத்தை வாழ்வித்த - பைந்தளிர்க்கை 30
மாதர்ப் பிடிபெற்ற வாரணமவ் வாரணத்தின்
காதற் பெயரன் கனகளபன் - யாதினும் 31
தீட்டக் கரிய திருவே திருமாலை
சூட்டத் திருமகுடஞ் சூடியபின் - நாட்டு 32
முறைவிட்ட வேற்று முடிமன்னர் தத்தம்
சிறைவிட் டரசருளிச் செய்து - கறைவிட்டு 33



இந்த நிலவுலகைத் தாங்கும் எட்டு மலைகள், எட்டு திக்கு யானைகள், படங்களை உடைய ஆதிசேடன் முதலான எட்டு நாகங்கள்

ஆகியவற்றின் பாரத்தை நீக்கும் பொருட்டு இரண்டாம் குலோத்துங்கன் இந்த உலகைச் சுமக்கத் தலைப்பட்டான். தந்தை விக்கிரம சோழனுக்குப் பிறகு சூரிய குலமாகிய சோழர்குலம் தோல்வி அடையாதிருக்க ஞானத்தைப் பெற்று அஞ்ஞானத்தை மனதிலிருந்து நீக்கும் ஆற்றல் பெற்றான். தனக்குரிய பட்டத்தரசி தியாகவல்லியுடன் வேத விற்பன்னர்கள் ஆசியோடு கொடையளித்து ஆட்சி புரிந்தான்.

### 4.7.3 குலோத்துங்கனின் தில்லை திருப்பணிகள்

இரண்டாம் குலோத்துங்க சோழன் தில்லை நடராச பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயத்திற்கு செய்த திருப்பணி இப்பகுதியில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

முடிசூட்டிக் கொண்ட பின்னர் குலோத்துங்கன் சிதம்பர நடராசரை வணங்கி மகிழ்ந்தான். தில்லை அந்தணர்களின் வேண்டுகோளின்படி பெருந்தெய்வங்களைச் சிறுதெய்வம் எனக்கருதி அவற்றைக் கடலில் தூக்கி எறிந்தான். நாவலந் தீவிலிருந்து பொன்னை அள்ளிவந்து தில்லை அம்பலத்திற்குப் பூரணகும்பம் செய்து வைத்து மகிழ்ச்சியோடு வணங்கினான். பொன்தகடுகளால் தரை அமைத்து வைரங்களால் இருக்கை அமைத்தான். குடையாக முத்துக்களைப் பதித்து புனிதகங்கைநீர் அருவியாக விழுவதைப்போல் அமைத்தான். உலகைத் தாங்கும் ஆதிசேடனின் தலையிலுள்ள சூடாமணி கொண்டு திருத்தீப விளக்கை அமைத்தான். வைரக் கற்களால் குளத்தை அமைத்து அங்கு மரகதக் கற்களால் பசிய இலைகளை உருவாக்கி திரண்டிருக்கும் பனித்துளிகள் போல் முத்துக்களைக் கொண்டு ஆக்கினான். பற்பராகம் எனும் சிவந்த மணிகளால் தாமரையைச் செய்து. நீலமணிகளை வண்டுகளாய் ஆக்கினான். இவ்வாறு கோயிலின் மகுடம் பீடத்தை அமைத்து இரண்டாம் குலோத்துங்கன் திருப்பணி செய்தான். (47 - 52 ) இதனை,

”தொடுக்கும் சிரச்சேடன் சூடாமணி கொண்டு
எடுக்கும் திருத்தீபம் ஏற்றி - அடுக்கிய
தூய வயிரத்தால் வாவியாய்ச் சூழ்கடந்த
பாய மரகதத்தால் பாசடையாய்த் - தூய
பருமுத்தால் ஆவியாய் பற்பராகத்தால்
திருமிக்க செந்தாமரையாய் (கண்ணி - 43, 44, 45)

என்னும் கண்ணிகள் விளக்கும்.

பொன்மலையான மேரு மலையைப் போன்றும் பரந்த சக்கரவாள மலை போன்றும் தில்லைக்கூத்தன் ஆடும் திருப்பேரம்பலத்தை விரிவுபடுத்தினான். கூடகோபுரம் மாடங்களோடு ஈசனுக்குத் திரு மாளிகை அமைத்தான்.

ஏழு மலைகளை அடுக்கியது போல தில்லை அம்பலத்திலுள்ள உள்ள ஏழு கோபுரங்களையும் திருத்தினான். கோபுர உச்சியில் வானுலகின் ஒளி திகழ்ந்து விளங்குவது போல உயர்ந்த சிகரங்களை அமைத்தான். கடாரம் எனப்படும் பெரும் பாத்திரங்களில் பனிநீர் பளிச்சிடுவது போலப் பொன்னால் ஆகிய தடாகங்களை அமைத்தன. (53 - 60) திருக்கோயிலுக்குத் தேவமகளிர் நாளும் வருவர்.

தெய்வ மலையான இமய மலை அரசன் இமவானின் மகளாகிய சிவகாமி அம்மைக்குப் பிறந்தமலையினும் புகழ் சேருமாறு தில்லையில் எழுந்தருளி இருக்கின்றாள். நான்கு வேதங்களையும் அளித்த அன்னை சிவகாமிக்குத் தனிச் சந்நிதியாகிய திருக்காமக் கோட்டம் அமைத்தான்.

கோயில் திருப்பணியோடு கதிரொளியை மிஞ்சும் பொன்னும் மணியும் கொண்டு இல்லங்களையும் பெருவீதிகள் நான்கையும் அமைத்துத் தேவர்களின் தலைவனாகிய இந்திரனின் அமராவதி நகரும் தோற்கும் வண்ணம் தில்லையை அழகு செய்தான்.

தில்லை நடராசப் பெருமானுக்குத் திருத்தொண்டுகள் செய்தபின் கடல் சூழ்ந்த ஈரேழ் உலகிற்கும் தாயகமாக விளங்கும் கங்கை கொண்ட சோழபுரம் என்னும் படைவீட்டுக்கு எழுந்தருளினான். குலோத்துங்கன் இழந்த தேசங்களை இறைஞ்சிப் பெற வந்த மன்னர்களிடம் தான் வீதி உலா செல்லப் போவதைக் காண ஆணையிடுகின்றான்

### 4.7.4. குலோத்துங்க சோழன் வீதியுலா வருதல் (61 - 100)

குலோத்துங்க சோழன் வெள்ளாடை உடுத்திக் கொண்டு நறுமணம் கமழ அலங்காரம் செய்து கொண்டு பட்டத்துயானையில் வீதி உலா வருகிறான்.

மயிலின் சாயல் பொருந்திய தன் பட்டத்தரசியுடன் குலோத்துங்கன் துயின்று பள்ளி எழுந்தான். மலை நீராடுதல் போல நீராடிமுடித்தான். செஞ்சடை உடைய சிவபெருமானை வணங்கினான். அந்தணர்களுக்கு வேண்டிய தானங்களை வழங்கினான். வெண்மை பளிச்சிடும் தூய ஆடையைக் குலோத்துங்கன் அணிந்து கொண்டான்.

மேலும் தோல் உறையுடன் கூடிய வாளையும் ஒன்பது வகை மணிகள் பதிக்கப்பட்ட கச்சையும் இடையில் அணிந்து கொண்டான். கதிரொளியை தோற்கடிக்கும் ஒளியுடைய திருவுதர பந்தத்தையும் அணிந்து கொண்டான்.

தன் கருங்கடல் அனைய மார்பில் பாற்கடல் போன்றொளிரும் வெள்ளிய வீசும் முத்துமாலையை அணிந்தான். திருப்பாற்கடலைக் கடையும்போது தோன்றிய தெய்வமணியாகிய கௌத்துவ மணியையும் மார்பில் தரித்தான். நாக பாம்பின் மணி ஒளி வீசுவதைப் போல விளங்கும் தோள் வளையம் என்னும் அணிகலனைத் தோளில் அணிந்தான்.

மேருமலையை ஒத்த தோளுக்கு மேல் சுறாமீன் வடிவிலான குழைகளைச் செவியில் அணிந்தான்.

திருமுடியில் பதித்த இரத்தினக் கற்களும் வெண் கொற்றக்குடைக்குச் சரமாகத் தொங்கும் முத்து மாலையையும் நிலவைப் போல் ஒளிவிடக் குலோத்துங்க சோழனின் திருவுலா காண்போரை மயங்கச் செய்தது.

முன்கையில் அணிந்த கடகமும், தலையில் சூடிய மகுடமும் ஒளியை வீசிட ஒளிரும் அரச மாலையும் அணிந்தான். நெற்றியில் திருநீற்றால் திரிபுண்டரத்தை இட்டுக் கொண்டான் அது உலாக் காணவந்த மகளிரின் மனத்தைத் தடுமாறச் செய்கிறது.

புழுகு (புனுகு) மன்மதச் சாந்து எனப்படும் கத்திரி குழம்பு ஆகியவற்றின் மணமும் அகிற்புகை மணமும் எங்கும் பரவுகின்றன. அரசத்தளிர் மாலையும் மணம்கமழும் செங்கழுநீர் மாலையும் பேரண்டத்தில் இருந்து பரவும் ஒளியை காண வைக்கும் வகையில் தன்மையுடன் விளங்கிடுகின்றன. பிற நாட்டு அரசர்கள் திருஉலா வரும் குலோத்துங்கனை வணங்கி நின்றனர். மறையவர் வேதம் ஓதி வாழ்த்துகின்றனர்.

இறைக் கோயில் வாசலில் பட்டத்து யானை நிற்கின்றது. உருக்குமணியை மணக்கையில் பலர் சூழ எதிர்த்து நின்ற கண்ணனைப் போலவும் இந்திரனின் இந்திரனின் வச்சிராயுதமும் சிதைக்க மலை போலவும் ஊழித் தீயைப் போலவும் கடல்நீர் பருகிய பன்னிரு ஆதித்தருக்குப் பொதுவாக நின்று அபயம் செய்த ஐராவத யானைபோலவும் செருக்குடன் குலோத்துங்கனின் யானை. நின்றது.

பகைவருக்கு எமனைப் போல விளங்கி விரசொர்க்கத்தைத் தரவல்ல குலோத்துங்கன் அச்சந்தரும் பிடரியை உடைய மேருமலை போன்ற களிற்றியானையின் மேல் திருவுலாப் புறப்பாட்டிற்காக ஏறி அமர்ந்தான். இதனை,

வேந்தர் தொழுதிறைஞ்ச வேதிய ரேத்தெடுப்பப்
போந்து புறநின்ற போர்க்களிற்றை - வேந்தரில் 77
மாக்காதல் யாதவனும் மாறழிந்த மீனவனும்
வீக்காம லெங்குள்ள மெய்ம்முகிற்கும் - கோக்கடவுட் 78
கெட்டாத வச்சிரமு மெலலா வுருமேறும்
வெட்டாம லெங்குள்ள வெற்பினுக்கும் - முட்டா 79
முதுவாய் வடவையு முந்நான்கு கோளும்
கதுவாம லெல்லாக் கடற்கும் - பொதுவாய் 80
அபயங் கொடுக்கு மயிரா பதத்தை

உபய வயக்கோட் டுருமை - விபவ 81
நிருத்தத் தருமோர் நிதிப்பொருப்பைக் கண்ணுற்
றெருத்தந் திருக்கவின வேறித் -
என்னும் கண்ணிகள் உணர்த்தும்.

பகலின் ஒளியையும் வெல்லும் திருப்பள்ளித் தொங்கல் திரளின் ஒளியும் வெண்கொற்றக் குடையின் ஒளியும் யானையின் மேல் உயர்ந்து ஒளிர்கின்றன. சோழர் பரம்பரைக்கு உரிய வலம்புரிச் சங்கு ஊதப்படுகின்றது. வெண்சாமரங்கள் வீசப்படுகின்றன. முரசங்கள் முழங்கும் ஒலி, கடல் அலைகள் ஆர்ப்பரித்தமை போல எங்கும் அதிர்கின்றது.

குலோத்துங்கனின் ஐம்படைகளாகிய வாள், சங்கு, சக்கரம், சார்ங்கம் எனும் வில், தண்டம் ஆகியன என்பவை இருளைப் போக்கி ஒளி வீசின. சேரனின் விற்கொடியும் பாண்டியனின் மீன் கொடியும் அருகே வர நடு நாயகாமக் சோழரின் புலிக்கொடி திகழக் கொடிகள் பறந்து அசைகின்றன.

இவ்வாறு உலாப் புறப்படுகையில் தென்றல் வீசியதால் உலாக் காட்சியைக் காணத் தென்றலைத் தேராகவும் கரும்பை வில்லாகவும் மலர்களை அம்பாகவும் கொண்ட மன்மதன் வந்தது போலிருந்தது. உலா செல்லும் நேரத்தில் வானம் பொழிகின்றது. இது உலாக்காட்சியைக் காண மேகத்தை வாகனமாகக் கொண்ட வானவர் தலைவன் இந்திரன் வந்தது போலிருந்தது. ஆகவே திருமாலின் வடிவாக விளங்கும் உலாத் தலைவனாகிய குலோத்துங்கனைக் காண விண்ணவர் மண்ணவர் என யாவரும் வருவர். வாராதோர் எவருமில்லை.

தன்னை ஒத்த பாண்டியர் சேரர் யானையின் மீது ஏறி வந்து வணங்க குலோத்துங்கன் அவர் சேவித்ததை ஏற்றுக்கொண்டு உலா சென்றான். சூரிய குலச் சோழர்களின் புகழைப் பிற மண்டலங்களை ஆளக்கூடிய மன்னர்கள் குதிரைகளில் அமர்ந்து போற்றிச் சொல்லிப் பின்னால் சென்றனர்.

குலோத்துங்கன் உலா செல்லும்போது எண் திசை யானைகளைத் தவிர ஏனைய யானைகள் அனைத்தும் பின்னால் சென்றன. சூரியனின் தேரை இழுக்கும் ஏழு குதிரைகள் தவிர ஏனைய குதிரைகள் பின் சென்றன. குபேரனின் வாகனமாகிய நரன் என்னும் இயக்கன் தவிர ஏனையவர் யாவரும் திருஉலாவின் பின் சென்றனர்.

யானைகளும் குதிரைகளும் மக்களும் ஒருசேரத் திருஉலாவின் பின் சென்றதால் பூமியிலிருந்து கிளம்பிய தூசியும் துகளும் விண்ணுலகத்தில் பரவி மண்ணுலகம் போல ஆக்கிற்று. திருஉலாவில் சென்றோரும்

விண்ணிலிருந்து கண்டுகளித்த வானோரும் வீசிய பொன் நிறச் சுண்ணப் பொடியால் மண்ணுலகம் விண்ணுலகம் போல் ஒளி வீசியது. வித்தியாதரர் எனப்படும் கந்தருவர்களும் மங்கலம் பாடும் பாணர்களும் ஒன்றாகப் பூலோகத்தில் இருந்தாற் போலப் போற்றிப் புகழ்ந்தனர். கற்பகத்தரு போல மன்னர்கள் திறையைப் பொழிய அச்செல்வங்களை மேகம் போன்ற கரத்தால் பொன் மழை பொழிவது போல வீசி குலோத்துங்க சோழன் திரு வீதியை அடைகின்றான். இதனை

எழுந்த துகளுருவ வேறியுஞ் சுண்ணம்
விழுந்த துகளுருவ வீழ்ந்தும் - தொழுந்தகைய 96
விண்ணுலகு மண்ணுல காகி விளங்கவிம்
மண்ணுலகு பொன்னுலகாய் மாறாட - எண்ணரிய 97
மாகதரும் மங்கலப் பாடகரும் விஞ்சையர்
பூகத ராயினார் போற்பரவ - நாகர் 98
கொழுந்தெழு கற்பக சாதி குவித்துத்
தொழுந்தொறும் மன்னர் சொரிய - எழுந்துள 99
கைம்மழை யென்னக் கனகப் பெயறூர்த்து
மைம்மழை மாட மறுகணைந்தான்

என்னும் கண்ணிகள் உணர்த்தும்.

### 4.7.5 வீதி உலாக் காணும் மக்கள்

குலோத்துங்கன் வீதியுலா வருவதைக் காண மக்கள் வீதிகளில் நிறைந்தனர். சாளரங்கள் வழியே காண முயல்கின்றார்கள். நிலா முற்றத்தில் கூடி நின்று பார்க்க வந்தனர். வீதியின் அணுக்கமாக உள்ள திண்ணைகளில் கூடி நெருங்கி நின்றனர். உலாத் தலைவன் பார்வையில் படுகிறானா என நெற்றியைச் சுருக்கிப் பார்க்கின்றார்கள்.

பொற்றொடி மகளிர் குலோத்துங்கனின் வீதி உலாவைக் காண மாளிகைகளில் உள்ள மாடங்களில் ஏறியும் மண்டபத்தில் குவிந்தும் மாடங்களின் சூளிகை எனப்படும் உச்சிவிமானப் பகுதியில் ஏறி நெருக்கிக் கொண்டும் நிற்கிறார்கள்.

வீதியின் இரண்டு பக்கமும் மகளிர் மொய்த்துக் கொண்டு நிற்கும்போது அம்மகளிரின் கரிய புருவமாகிய வில்லும் கண்ணாகிய மலரம்பும் இந்தப் பெரிய உலகத்தின் எல்லையைப் பிடிப்பது போலத் துடித்தன.

மங்கையர் கூந்தல் மலர்களில் தேனுண்ணும் வண்டுகளின் ஒலி குதிரைகளுக்கு மொகுமொகு என இரைப்பது போலுள்ளது. மலர்களில் வண்டுகள் வாய் வைத்து ஊதுவது காகாளம் (காகளம்) என்னும் இசைக்கருவியை வாசிப்பது போலுள்ளது.

அவர்களின் தோளில் தவழும் கூந்தல் மகரக்கொடி அசைவது போலுள்ளது. மன்மதனின் சேனையாகிய மகளிர் கூட்டம் படைக் கூட்டம் செல்லும் வழியில் தூவும் வண்ண சுண்ணத்தூள் எங்கும் பரவுகின்றது. இவ்வாறு காமன் சேனையாகிய மகளிர் கூட்டம் தூவிய சுண்ணப் பொடியால் மூவேந்தரையும் இச்சேனை வென்றது போலாயின. மகளிரின் கைவளையல்களும் கழன்றன. நிறத்தையும் இழந்ததோடு மனத்தையும் இழந்தார்கள்.

மக்களின் துன்பங்களுக்குக் குலோத்துங்கன் பகைவன் என்பர். இராசாதிராசனாக விளங்கிய விக்கிரம சோழனின் மகன் என்பர். முதுகுல மன்னர்கள் யாவரும் வணங்கக் கூடிய தாயாகிய விதுகுல நாயகியின் சேய் என்பர். கண்ணிற்கு அழகான குலோத்துங்கனை உலகைக் காக்கும் எட்டுதிசைப் பாலகர்களும் காண்பர். மண்ணுலக மக்களுக்கும் விண்ணுலகத் தேவர்களுக்கும் கீழுலக நரகர்களுக்கும் முனிவர்களுக்கும் இவனே தலைவன் என்பர்.

குலோத்துங்க சோழன் அணிந்த மாதவி, செங்கழுநீர் நந்தியாவட்டம், கொன்றை போன்ற மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகளைத் தாமும் அணிவதாகக் கூறுவர். மிதிலையில் சீதா தேவிக்குத் துயராகி வளைக்க முடியாதிருந்த வில்லை முறித்து அவளை மணந்த இராமன் இவ்வரசனே என்பர். சீதையை இராவணன் சிறைஎடுத்துச் சென்ற பழியைத் தீர்க்கக் கடலைத் தூர்த்துப் பாலம் கட்டிச் சென்ற இராமன் எனப் புகழ்வர்.

கண்ண மெதிர்தூ யுடனே தொடியுந்தூஉய்
வண்ண மிழப்பார் மனமிழப்பார் - மண்ணுலகில் 110
இன்னற் பகைவ னிவன்கா ணகளங்கன்
மன்னர்க்கு மன்னன் மகனென்பார் - முன்னர் 111
முதுகுல மன்னர் முடிவணங்க வந்த
விதுகுல நாயகிசே யென்பார் - குதுகலத்தாற் 112
கண்மருஞ் செவ்விக் கடவுட் டிசாதேவர்
எண்மருங் காணு மிவனென்பார் - மண்ணவர்க்கும் 113
தேவர்க்கு நாகர்க்குந் தெய்வ முனிவர்க்கும்
யாவர்க்குங் காவ லிவனென்பார் - தீவிய 114
மாதவியுஞ் செங்கழு நீரும் வலம்புரியும்
தாதகியுந் கொள்ளத் தரினென்பார் - மாதை 115
ஒறுக்கும் மிதிலை யொருவில்லைத் தொல்லை
இறுக்கு மவனிவ னென்பார் - மறுக்காமற் 116
சென்று கனைகட றூர்த்துத் திருக்குலத்து

குறிப்புகள்

நின்ற பழிதுடைப்பாய் நீயென்பார் - இன்றளவும் 117
துஞ்சுந் துயிலிழந்த தண்டர் சூழற்றுளையில்
நஞ்சுங் குமிழியெழு நாளென்பார் - பஞ்சவனே 118
வாடையினுந் தண்ணென்னும் மந்தா நிலமெமக்குக்
கோடையினுந் தீது கொடிதென்பார் - கூடி 119
முருகுவார் கூந்தலார் மொய்த்தலர்ந்த கண்ணாற்
பருகுவார் போல்வீழ்ந்து பார்ப்பார்

என்னும் கண்ணிகள் உணர்த்தும்.

குலோத்துங்கனைக் கண்ட மாதர் ‘ உலா நாயகனே! உன்னைப் பார்த்தது முதல் எம் கண்கள் உறக்கம் தொலைத்தன. இனி ஆயர்களின் இனிய குழலிசை நஞ்சாகும் என்பர். குறிஞ்சி முதலான ஐந்நிலம் ஆள்பவனே, இனி எமக்குத் தென்றல் கோடையைப் போல் வருத்தும்’ என்பர்.

மகளிர் மலர்ந்தகண்ணால் உலா நாயகனின் அழகைப் பருகுவர். மகளிர் நிலைகண்ட மன்மதன் மேலும் அவர்கள் இச்சை மேலும் பெருக மலரம்புகளை எய்வான்.

## 4.8 எழுபருவ மகளிர் தம்காதலுணர்வு

உலாவின் பிற்பகுதியான அகப்பொருட் பகுதியில் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய எழுவகைப் பருவ மகளிரின் தோற்றம், குணம், செயல்கள், காதலுணர்வு ஆகியன பேசப்படுகின்றன.

### 4.8.1.பேதை

4.8.1.1 இவ்வாறு மகளிர் பலரும் நின்றேத்தும் திருவீதியில் உலாவைக் காணப் பேதை வருகின்றாள். முத்து வளையல் அணிந்தவளாய், மேகம் கண்டு ஆட அறியாத மயில் போலவும் கதிரவனைக் கண்டு மலர்தலில்லாத தாமரை போலவும் பாட அறியாத குயில் போலவும் சொல்வதைச் சொல்லும் கிளியைப் போலவும் சூடுதற்கு இயலாத மாவின் இளந்தளிர் போலவும் தழைக்காத வஞ்சிக்கொடி போலவும் வண்டுகள் மொய்க்காத சோலை போலவும் விளையாத இளந்தேன் போலவும் விளங்கும் இளைய கற்பகக் கொடியினாள். வளர்ந்த குழலை முடிக்கவும் அறியாத இளம் பருவத்தாள் இந்தப் பேதையாள்.

இனையர் பலர்நிகழ வீங்கொருத்தி முத்திற்
புனையுஞ் சிறுதொடிக்கைப் பூவை - கனைமுகினோர் 123
ஆடாத தோகை யலராத புண்டரிகம்
பாடாத பிள்ளைப் பசுங்கிள்ளை -சூடத் 124
தளிராத சூதந் தழையாத வஞ்சி

குளிராத திங்கட் குழவி - அளிகள் 125
இயங்காத தண்கா விறக்காத தேறல்
வயங்காத கற்பக வல்லி- தயங்கிணர்க் 126
கூழைச் சுருண்முடிக்கக் கூடுவதுங் கூடாதாம்
ஏழைப் பருவத் திளம்பேதை - சூழும் 127

பெரிய மக்கள் திரளுடன் உலா நெருங்குகையில் முலைத்தாயரும் கைத்தாயரும் நெருங்கி நிற்கத் தானும் நின்றாள். தலை மாலை அசையக் கொடையில் சிறந்த குலோத்துங்கனாகிய பராந்தகனை, பாண்டியனை அருகில் உள்ளார் வணங்கத் தானும் வணங்கினாள். வாழ்த்தத் தானும் வாழ்த்தினாள், அவ்விடத்தை விட்டு நீங்காதவளாய் நின்றாள். சோழனின் முத்து மாலையைத் தன் அன்னம் படியும் வெள்ளாறு என்றும் அவன் அணிந்த கோவைப் பள்ளித் தொங்கல் மாலையைத் தன் கிளிக்கான சோலை என்றும் மைனாவிற்கான பொழில் என்றும் கூறுவாள். உலா வரும் ஐராவத யானையை மயில் தங்கும் மலையென்றும் வெண் கொற்றக் குடையைத் தன் மான் தங்கும் நிலவு என்றும் குயில் போல் மொழியால் உரைக்கின்றாள்.

4.8.1.2 சோழனின் குவளை மாலையத் தன்னுடையது என்றும் அதனை வாங்கி அணிவிக்கும்படியும் வேண்டுவாள். காஞ்சிக்கு உரிய சாம்புநாதம் எனும்பொன்னால் ஆன மாலைக்கு ஏங்குவாள். அவன் அணிந்த ஆத்தி மலர் மாலைக்கு ஏங்குவாள். நேரி மலைக்குரிய சோழன் அணிந்த துளசிமாலை நிலமடந்தை, பூமடந்தை, புகழ் மடந்தை, போர் மடந்தை, கடவுள் மடந்தையர் என அனைவருக்கும் பொதுவானது. ஆனால் அதனைத் தன்னுடையது என்பாள் இவ்வாறு கேட்டல் அல்லாது வேறு அறியாதவளாக இப்பேதையாள் இருந்தாள்.

பொலம்புரி காஞ்சிப் புகழ்மகட்கே தக்க
வலம்புரி மாலைக்கு மாழ்கும் - பொலன்றொடி 137
போரார வாரப் பொலன்கொடி பெற்றுடைய
பேரார மாலைக்குப் பேதுறும் - நேரியன் 138
ஏந்திழை மாத ரெவர்க்கும் பொதுவாய
பூந்துழாய் மாலை புனைகென்னும் - வேந்தன்முன் 139
இவ்வகை யல்ல திலங்கிழையார் மால்கூரும்

## 4.8.2 பெதும்பை

உலா இலக்கியத்தில் இந்தப் பெதும்பைப் பருவம் குறித்துப் பாடுவது அரிய செயல் ஆதலால் "பேசும் உலாவில் பெதும்பைப் புலி' என்றுரைப்பர்.

4.8.2.1 பேதைப் பருவத்தாள் நிலை இவ்வாறிருக்க, எவ்வுலகும் தன்னாணைக்கீழ் வைக்கும் மன்மதன் சூட்டும் மணிமுடி போன்ற

கொண்டையுடன் பெதும்பைப் பருவத்தாள் வந்தனள், அபிடேகத் தாரை போல் பெரிய முத்துச் சரங்களுடையவள். எட்டுத்திக்கு நாகங்களும் யானைகளும் போல இப்பெண்ணும் நஞ்சையும் மதத்தையும் பெற்ற இவளும் கண்டார் உயிருண்ணும் கொலைத் தொழில் புரியும் கண்ணாள். பிறரைப் பற்ற வரும் எமன் குலோத்துங்கனுக்கு அஞ்சி இப்பெதும்பைப் பெண் வடிவில் வந்தானோ என ஐயுறும் வண்ணம் அழகினைப் பெற்றவள். திரிகூட மலையிலுள்ள துணைமணி தன் உருவழகாலும் கொல்லிப்பாவை தன் உடல் அழகாலும் பிறர் உயிரை உண்ணும் என்பர். ஆனால் அவற்றை யாரும் கண்டாரில்லை. நேரே காணும்படி இவள் தோன்றி உயிரும் நடையும் வாய்ந்த வல்லிக்கொடி போன்றவள் மதர்ப்புடைய இப்பெதும்பை பெண்.

முற்ற முடிக்க முடிக்காம வேள்சூட்டும்
கொற்ற முடியனைய கொண்டையாள் - அற்றைநான் 141
சாத்து மபிடேகத் தாரைபோற் றாழ்கின்ற
கோத்த பருமுத்தக் கோவையாள் - தேத்து 142
விடம்போற் பணிகட்டு வேழங்கட் கெல்லாம்
கடம்போற் கொலையூறுங் கண்ணாள் - அடங்கா 143
வயிர்ப்பான் மறலி மகளுருக்கொ லீதென்
றயிர்ப்பா ரயிர்க்கு மழகாள் - உயிர்ப்பாவை 144
கொல்லிக்கு முண்டுயி ருண்மைத்ரி கூடத்துச்
சொல்லிக் கிடங்குந் துணைமணிக்கும் - வல்லி 145
இதற்கு நடைவாய்த் துயிர்வாய்த்த தென்ன
மதர்க்கு மொருதிரு மாது

அப்பெதும்பை, தனக்குப் பணிவிடை செய்யும் ஆயமகளிரை அகன்று போகச் சொல்கிறாள். தன் கிளியை எடுத்து அதற்கு முத்தமிடுகிறாள். உன் பவளவாயால் என்னை உன் அன்னை என்று சொல்வாயோ? எனக் கேட்கிறாள். அஞ்சும் அக்கிளியிடம் நீ அறிந்து கூறாதபடி சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை. பிறவற்றை அறிந்து உன்னால் சொல்வதற்கு இயலுமோ? என்கிறாள்.

4.8.2.2 உறையூரைத் தலைநகராகக் கொண்ட அபய சோழனாகிய குலோத்துங்கன் திரு மஞ்சனம் ஆடுவதற்கு உரிய பெரும் பாத்திரம் ஏழு கடல்களோ? சோழனின் மார்பிற்கு அழகிய ஆரமாக அமைந்தவை ஏழு நதிகளோ? அவன் செவியில் பூட்டிய அணிகள் ஏழு பண்களா? அவன் அணிந்த வாகுவலயம் திருமால் அளந்த தீவுகள் ஏழுமோ? குளிர்ந்த மாலையை ஏழுலகம் தந்தனவோ? விளையாடும் பந்துகள் ஏழும்

மலைகளோ? சோழனின் கட்டளைப்படி நடக்கும் கோள் ஏழும் தீப ஒளிகளோ? பருவம் தவறாமல் பொழியும் பெய்யும் மேகங்கள் ஏழும் இசைக் கருவிகளோ? இதற்கு இவ்வுலகினரால் விடை கூறுதற்கு இயலுமோ என அப்பெதும்பைப் பெண் தனக்குத் தானே வினவிக் கொண்டாள்.

தன்னுடைய ஒப்பற்ற திருவடிகளால் மருத மரங்களாக நின்ற நலகூபரர், மணிக்கிரீவர் ஆகியோருக்கு முத்தியளித்த கண்ண பெருமான், பாற்கடலில் தோன்றிய திருமகளைப் பொருந்திய திருமால் சக்கரவாள கிரியை மதிலாக உடைய பூமாதேவியின் நாயகனாகிய அழகர் என்றெல்லாம் திருமாலுடன் பெதும்பையாள் ஒப்பிட்டுகின்றாள். பின்னர் ஈசன், சூரியன், இந்திரன், கூற்றுவன், வருணன், குபேரன், கேசவன் ஆகிய கடவுளர் இவனே என்பாள்.

பூமியை தோள்வளையாக அணிந்து தரும சக்கரத்தை ஏந்தி அபயன் அநபாயன் எனப் பலர் போற்றத் திகழ்பவன் குலோத்துங்க சோழன். அவன் மதநீர் பெருகும் யானையின் மேல்வீதி உலா வர அப்பெதும்பைப் பெண் கண்டாள். அமைதியாக நின்றாள். அவனுக்குச் செந்தளிர் போன்ற இருகரங்களால் கைகூப்பி நின்றாள்.

அவ்வாறு பெதும்பைப் பருவப் பெண் நிற்பதால் ஆசையைத் தூண்டாதிருக்க வாடைக் காற்றால் மலரும் தாழையும் முல்லையும் கொன்றைக் கொத்தும் மலரராதிருந்தன. தென்றலைத் தழுவும் மாங்கன்றும் மணங்கமழவில்லை. ஆயினும் அவளுடைய இரு கொங்கைகளும் எதையும் அறியாமல் பெருகின. கண்கள் காதின் எல்லையைக் கடந்தும் நீள்கின்றன. இவ்வாறு பெதும்பைப் பருவப் பெண்ணுக்கு உருவமும் வளர்ச்சியும் ஒளியும் இயைவது இயல்பாகும். மனச்சிதைவைப் பிறர் அறியாமல் மறைத்துக் குலோத்துங்கனின் தடந்தோளைக் காவலையும் மீறித் தழுவ மனம் துணிந்து நிற்கின்றாள்.

பெதும்பைப் பெண்ணாகிய அவளிடம் ஒருவனைக் காணும்போது தோன்றும் காதல் மெய்ப்பாடுகள் காணப்பட்டாலும் அவளுடைய தனத்தையோ, இடையையோ கூந்தலையோ காணாத மன்மதன் முழுமை அடையாத ஒரு பெதும்பைப் பருவப் பெண் மிகவும் இளையவள் என அம்பெய்யாமல் இருந்தான். ஆயினும் இப்பெதும்பையிடத்தில் இவ்வாறு தோன்றக் காரணம் குலோத்துங்கனின் நெடிய வில் போன்ற புருவம் அவன் செந்தாமரைக் கண்ணுமே என உலாவைக் காண்போர் வருந்தியுரைப்பர்.

பெதும்பையைச் சேர்த்தெடுத்துத் தளிரால் செய்த படுக்கையில் கிடத்திய முதுபெண்டிர் குழலோசையை எழுப்பிடின் மன்னன்

குலோத்துங்கன் ஊதும் வேய்ங்குழலோசை என்று கூறுகிறாள். கதிரவன் வெயிலொளி அன்று சோழனின் புகழ்நிலா என்கிறாள். வாத்திய இசையை சோழனின் வரிப்புலி முழக்கம் என்கிறாள். செங்கழுநீர் மாலையைச் சூரிய குலத்தின் ஆத்திமாலை என்கிறாள். இவ்வாறு இவள் எதிர்மறையாகக் கூறினாலும் அவை குலோத்துங்கனின் சோழ குலத்திற்கு உரியவை எனப் பலவற்றையும் உணர்ந்த முதுபெரும் பெண்டிர் கூறுவர். இதனைப் பின்வரும் கண்ணிகளால் அறியலாம்.

வளைத்தளிர்ச் செங்கை மடுத்தெடுத்து வாசக்
கிளைத்தளிர்ப் பாயற் கிடத்தி - துளைத்தொகை 172
ஆய்க்குழ லென்றா லதுவு மவனூதும்
வேய்க்குழ லென்று விளம்பியும் -தீக்கோள் 173
நிகழ்நிலா வன்று நிருபகுல துங்கன்
புகழ்நிலா வென்று புகழ்ந்தும் - இகலிய 174
பல்லிய மன்று பரராச கேசரி
வல்லிய மென்று மருட்டியும் - மெல்லிய 175
கல்லார மன்று கதிரோன் றிருமருமான்
மெல்லார மென்று விளம்பியும் - நல்லார் 176
அருத்தி யறிவா ரவையிவை யென்று
திருத்தி விடவிடாய் தீர்ந்தாள் - ஒருத்தி 177

**4.8.3 மங்கை**

4.8.3.1 இருளோடு வென்றழிக்கும் கதிரோன் அழகைத் தாமரை தனக்கே உரியது என்பது தகுமா? செவ்வந்தி, செண்பகம் எனக் காலையில் மலரும் மலர்களுக்கும் கதிரோன் உரியதன்றோ. மாலையில் மலரும் அல்லி மொட்டு சந்திரனைத் தனக்குரியது எனலாமோ? மாலை மலரும் ஏனைய மலர்களுக்கும் (மௌவல், பித்தி) சந்திரன் உரியதன்றோ? மழைதரும் கார்மேகத்தை மயில் மட்டும் உரிமை கொள்ள முடியுமா? சாதகப்பறவை போன்று குளிர்ச்சியை விரும்பும் அனைத்திற்கும் கார்மேகம் உரியதன்றோ? இளவேனிற் காலத்தைக் குயில் தனது எனலாமோ? தளிர்க்கும் மரம், செடி, கொடிகளுக்கும் அப்பருவம் உரியதன்றோ? இவ்வாறே குலோத்துங்கனிடம் ஏனைய பெண்களுக்கு உரிய உரிமை தனக்கும் உண்டென்று மங்கையாள் கருதினாள்.

தேமிரைக்குங் காலையின் ஞாயிற் றிளஞ்செல்வி
தாமரைக்கே சாலுந் தரத்ததோ - காமர் 182
அமுத மதியத் தலர்நிலா முற்றும்
குமுத நறுமுகைக்கே கூறோ - நமதுகார் 183
கானின் மடமயிற்கே காணியோ தண்ணிள

வேனில் குயிற்கே விதித்ததோர் - தேனிமிர் 184
தண்டா மரையா டலைவனை யாமும்போய்
கண்டாலென் னென்னுங் கடைப்பிடியாள்

திருமகளும் விரும்பும் குலோத்துங்கனை நாமும் சென்று வணங்கினால் என்ன செய்வான் என்னும் மன உறுதியுடன் அந்த மங்கைப்பருவப் பெண் நின்றாள். ஆதிமுதல் சோழர்களோடு கொண்டுள்ள உறவை நீங்காத வெற்றித் திருமகள் மங்கை இருக்கின்றாள்.

4.8.3.2 அன்னம் மங்கைப் பருவத்தாளைக் குளக்கரையில் கண்டால் தெளியாத மயக்கத்தால் நீர்த்துறைத் தெய்வ மகள் என்று எண்ணி வணங்கி ஆடி மகிழும். இவள் சோலைக்குப் பூக்கொய்யச் சென்றால் வனதுர்க்கை என வனதேவதைகள் எண்ணித் தோழியராக உடன் செல்வர். வண்டுகள் ஆரவாரிக்கும் செய்குன்றில் நின்றால் இவளை மலியுறை தெய்வ மகள் என்று போற்றுவர். உலாக்கண்டு நிற்கும் மங்கை முத்து மாலையை அணிந்தால் வெண்தாமரையில் வீற்றிருக்கும் கலைமகள் போன்றும் பச்சை மரகதக்கல் மாலை அணிந்தால் நிலமகளைப் போன்றும் மாணிக்கக் கல் சரத்தை அணிந்தால் மேன்மைமிக்க திருமகளைப் போன்றும் விளங்குவாள். இவ்வாறு தன் தோற்றத்தாலும் அணிகலனாலும் மங்கைப் பருவத்தள் வேறுவேறு தெய்வமகளிராகக் கண்ணுக்குத் தெரிவாள். ஒட்டக் கூத்தரின் இந்தக் கற்பனையை

- களியன்னம் 186
வாவிக் கரையில் வரநீ ரரமகளிர்
சேவிக்க நின்றாடுஞ் செவ்வியாள் - காவிற் 187
புகுதில் வனதெய்வப் பூங்குழை யாயத்
தொகுதி புடைபரந்து சூழ்வாள் - மிகுதே 188
னிரையர வந்தரு செய்குன்ற நீங்கா
வரையர மாதரின் வாய்ப்பாள் - பெருவிலைய 189
முத்தில் விளங்கின் முளரித் தவளப்பூங்
கொத்தி னணங்கனைய கோலத்தாள் - பத்திய 190
பச்சை மரகதம் பூணிற் பணைமுலைசூழ்
கச்சை நிலமகள்போற் காட்சியாள் -நிச்சம்
உரக பணமணிகொண் டொப்பிக்கி லொப்பில்
வரகமலை யன்ன வனப்பாள் 191

என்ற கண்ணிகளில் உணரலாம்.

*Self- Instructional Material*

மேக வண்ணனாக சேரனும் பாண்டியனுமாக இருந்து ஆளும் சோழன் துதிக்கையுடைய மேகம் போன்ற யானை மீது வரக்கண்டாள்.

அதனால் தானும் நீலநிறப் பட்டாடை புனைந்து நீல மலர்களைச் சூடி நீலவண்ண அணிகலன்களை அணிந்து வேறொன்றையும் நினையாமல் இருந்தாள்.அவ்வாறி அணிந்ததால் அவளுடைய சிவந்தநிறத்தை மாமை நிறமாக்கியது. அவள் கருங்குவளை செறிந்த தடாகம் போல விளங்கினாள். கையிலும் தோளிலும் வாகுபுரி அளவாக அணிந்தவையும் நிறம்மாறின, சிவந்த வானுலகக் கற்பகக் கொடியும் கொடியில் தூங்கும் தும்பி நிறத்திற்கு ஒப்பானது. ஒளியெனத் தளிர்த்து அசையும் மாங்கொம்பும் கருவிளை போல மாறும் இல்பொருள் உவமையாக விளங்குகின்றாள்.

4.8.3.3 உலாவரும் சோழனிடம் மங்கை அவன் சோழர்குல ஆத்திமாலையை வாங்கி வரவும் அன்பைப் பெற்று வரவும் தன் வளர்ப்புப் பறவை விலங்குகளைத் தூது செல்ல வேண்டுகிறாள்.

கிளியே! உலக மன்னாதி மன்னன் குலோத்துங்கனுடைய கார் நிறத்திற்கு ஏற்பக் காசு, கலாபம், மேகலை, காஞ்சி, தூசு, துகில், கொடி என அணிகலன், உடை, மலர் அனைத்தையும் நீல வண்ணத்திலேயே அணிந்துள்ளேன். சோழன் புனைந்த மணம்நிறை ஆத்தி மாலையை நீ வாங்கி வந்தால் இவற்றை எல்லாம் நான் உனக்குத் தருவேன். ஆனால் நீயோ மன்னனிடம் மாலையைக் கேளாய். சொன்னதைச் சொல்லத்தான் தெரியும். தானாகக் கேட்கத் தெரியாது.

வண்டே! குலோத்துங்கன் மாலையை வாங்கி வர உன்னை அனுப்பினால் நீ அம்மாலையின் மகரந்தத்தைக் கோதித் தேனும் மணமும் இருக்கும்வரை அங்கிருந்து எளிதில் நீங்காய்.

அன்னமே! எம் தலைவனாகிய குலோத்துங்க சோழனை இங்குக் கொணரப் பறவைகளாகிய உங்களுக்கு அரசனாக விளங்கும் கருடன் மீது ஏறி செல்வாய்.

மயிலே வீரக்கழல் அணிந்த முருகவேளின் ஊர்தியாகிய உன்னை அனுப்பினால் சோழன் அந்த முருகவேளின் தோழன் ஆதலால் விரைந்து வரமாட்டாய். மானே! மடப்பம் உள்ள நீ மதம் பொழியும் யானை போன்ற குலோத்துங்கன் முன் நீ சென்றால் என்னைக் காப்பாற்ற விரைந்து வருவான்.

மன்மதன் தரும் காமத்திற்கு அஞ்சிய மங்கையாள் தன் நாணம் விட்டு நேரடியாகவே குலோத்துங்கனுடன் இணைந்துவிடத் தான் வளர்க்கும் கிளி, வண்டு, அன்னம், மயில், மான் போன்றவற்றோடு தூது விடுக்கும் பான்மையில் பேசுகின்றாள்.

4.8.3.4 உலா செல்லும் வழியில் மங்கை அணிந்துள்ள நீலவண்ண அணிகலன்களின் ஒளி சூரியனின் வெயிலையே தடுத்தன. இம்மங்கை அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவற்றை இழந்து நிற்கிறாள்.

உலா நாயகன் முன்னர் சென்ற மங்கைப் பருவத்தாள் சரிந்து விழக்கண்ட தோழியர் உடனே தலைவியிடம் ஓடினர். மன்னனைப் பார்த்தும் களிற்று யானையைக் கண்டும் அஞ்சாமல் நுடங்கிக் கிடந்த மங்கையைத் தூக்கி தோள் மீது அணைத்துக் கொண்டனர். மன்னன் முன் அழைத்துச் சென்றனர். மதநீரைப் பொழியும் பட்டத்து யானை விரும்பும் வனம் பெருங்கொடிகள் எங்கும் வளர்ந்து பரவிக்கிடப்பவை போல நாம் இருப்போம் என்பது போல வண்டுகள் ஒலிக்கவும் திகழும் கூந்தலோடு தம்மை வனமாகப் பாவனை செய்து நிற்கின்றனர்.

மனம் மிகுந்த தங்கள் கொங்கைகளைச் சிகரங்கள் உள்ள மாலையாகப் பாவித்து நிற்கின்றனர். ஒளிமிக்க முத்துமாலையை அருவியாகப் பாவித்தனர். தங்கள் அடியை கொடியாக பாவித்து பட்டத்து யானையை நெருங்கினர். வண்ணத்துகள்களை மன்னன் மேல் வீசுவர். யாழாய்ப் பாவித்து மிடற்றால் பாடி வணங்குதும் யாம் என்று துணிந்தனர்.

ஆணைச் சக்கரத்தை ஏந்தியவனும் யாவும் வழங்குபவனுமாகிய தியாகனை மற்றவர்களுக்கு மதிப்பளிக்கும் மானதனை, எட்டுத்திக்கையும் காக்கும் பாகனை மங்கை பருவப் பெண்ணின் தோழியர் சுற்றி நின்று பற்றிக் கொண்டனர்.

ஆய்ச்சியர்களின் ஆடைகளைக் கவரும் துளசி மாலையை அணிந்தவனே! நின் பொன்னாலாகிய பீதாம்பரத்தைக் கொடுத்துச் செல்வாயாக! என்பர். இவளின் சங்கு வளை கழலுமாறு செய்த தாமரைக் கண்ணனே! உன் பாஞ்சசன்யம் என்னும் சங்கினைத் தருவாயாக என்பர். பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமாளே உறங்காது தவிக்கும் இம்மங்கைக்கு உன் தூக்கத்தைக் கொடுப்பாய் என வேண்டினர்.

மான் போன்ற மருண்ட பார்வையையும் மயில் போன்ற சாயலையும் உடைய மங்கையின் தோழியர் உலாவைத் தடுத்தபோதும் உலாத்தலைவன் நூறு மடங்கு வேட்கையையும் அருளையும் தன் பார்வையால் அம் மங்கைக்கு வழங்கினான். அவன் புன் முறுவலுக்கு அம்மங்கையும் புன்முறுவல் பூத்தாள்.

மன்மதனும் இக்காட்சிகளைக் கண்டு தன் பணி முடிந்ததாக எண்ணிப் புன்முறுவல் பூத்தான். மங்கையாகிய தலைவியின் ஆயத்தாரும் மனவருத்தம் நீங்கி அவளுடன் சென்றார்கள். இதனை,

'திருநகை முரல் திகழ்ந்தான் அணங்கும்

ஒரு நகை கூர்ந்து ஒருவாறு உய்ந்தாள் பெருநகை
எய்தி அனங்கன் எழப்போனான் மாதரும்
உய்து சிறந்தா ளுழைச் சென்றார்' (கண்ணி - 223, 224)

என்னும் கண்ணிகள் உணர்த்தும். மற்றவர்கள் புறம்கூறும் அலர் மொழி இல்லாமல் பசலை படராமல் ஆடை நெகிழ்ந்து விழாமல் சுற்றத்தார் புகும் இல்லத்துள் புகாமல் என எவையும் நிகழாதே, அகில் மணக்கும் பள்ளியறையில் தங்காமல் மங்கைப் பருவத்தாளும் அவள் தோழியரும் உலாவரும் சோழன் அருளைப் பெற்றனர். எப்போதும் முருகப்பெருமானின் தோளில் தோய்ந்திருக்கும் வள்ளியினும் சிறந்த வாய்ப்பை இந்த மங்கை பெற்றுள்ளாள்.

## 4.8.4 மடந்தை

4.8.4.1 மடந்தைப்பருவத்தாள் உலா வரும் தலைவனைக் காண அணிகளால் அழகு செய்தாள். அவள் தலையில் புழுகு நெய் பூசப்பட்ட கூந்தலுக்குத் தோற்று மேகம் திறையாகச் சொரிந்த முத்துக்களால் செய்த தலைக்கோலம் என்னும் அணியை அணிந்த கொண்டையினாள். தன் தோளுக்குத் தோற்ற மூங்கில் திறையாகச் சொரிந்த முத்துக்களால் செய்த தோள்வளையை அணிந்தாள். மங்கல நாண் அணிந்த கழுத்துக்குத் தோற்று வலம்புரிச் சங்கு திறையாகக் கொடுத்த முத்தால் செய்த கட்டுவடம் என்னும் மணிமாலை அணிந்தாள். பொன்பரந்த பசலை படர்ந்த கொங்கைகளுக்குத் தோற்று எண்திசை யானைகள் திறையாக அளித்த முத்துக்களால் செய்த மார்புக்கச்சு அணிந்தாள். ஆரவாரிக்கும் கலாப்த்தை அணிந்த அல்குலுக்குத் தோற்றுக் கடல் திறையாக அளித்த முத்தால் செய்த மேகலையை அணிந்தாள். இவ்வாறு மடந்தைப் பருவத்தாள் அணிந்த அணிகலன்கள் யாவும் தம்முடைய இயல்பில் இருந்து மாறுபட்டுத் தளிர் போன்ற உடம்பில் விளங்கின. இத்தகைய மடந்தை பருவத்தாள் சிவந்த வானில் இளைய நிலா ஒளிர்வது போலப் புறப்பட்டு மன்னன் உலாவரும் வீதிக்கு வருகிறாள்.

வண்ட லிடுநாவி வார்குழற்கு மாறுடைந்து
கொண்டல் சொரிமுத்தின் கொண்டையும் -பண்டுவந் 229
தேற்றுப் பணைபணைக்கு மென்றோ ளிரண்டுக்கும்
தோற்றுச் சொரிமுத்தின் சூழ்தொடியும் - ஆற்றற் 230
கலம்புரி செல்வக் கழுத்திற்குத் தோற்ற
வலம்புரி முத்தின் வடமும் - பொலம்பூண் 231
எதிர்க்கு முலைக்கிரிந்த திக்கயக்கோ டிட்ட
கதிர்க்கு நகைமுத்தின் கச்சும் - அதிர்க்கும் 232
'அடல்விடும் அல்குல் பரவைக் குடைந்து

கடல்விடு முத்தின் கலையும் - உடலி மேல்
ஏந்தும் இனைய இளநிலா விட்டு எறிப்பப்
போந்து மறுகு புகுந்து ஒழிந்தாள்

சோழன் புனைந்த சமந்தக மாணிக்கம் பதிக்கப்பட்ட தோளணியும் கடலில் பிறந்த கவுத்துவமணி விளங்கும் மார்பணியும் ஆதிசேடனின் நாகமணியினும் ஒளிவீசும் மாணிக்கமுடைய மணிமுடியும் தலையிலுள்ள மாணிக்கம் செய்கின்ற ஒளியால் பன்னிரண்டு கதிர்களின் முகமும் மாறுபட்டன.

4.8.4.2 மென்னடைத் தோழியர் கூட்டமும் சந்திரனைப் போன்ற குடையை உடைய அரசர் கூட்டமும் கூடுகின்றன. மடந்தையைக் கண்டோர் சந்திரன் என்று வணங்கினர். உலாத் தலைவனாகிய குலோத்துங்கனைத் தாமரையின் நாயகனான சூரியன் என்றெண்ணித் துதித்தனர். வானில் திரியும் சூரியன் சந்திரன் என்னும் இருவரும் உலா வரும் தலைவனுக்கும் மடந்தைப் பருவத்தாளுக்கும் ஒப்பாகார்.

உலாக் காண வரும் மடந்தையும் அவளுடைய தோழியரும் நெருக்கி முண்டி விரைந்தனர். உலாத் தலைவனை வணங்கியபடி வரும் மன்மதன் தன் தொழிலைச் செய்யத் தலைப்பட்டான்.

மடந்தைப் பருவத்தாள் வளர்ந்த அழகுடையாள். மன்மதன் இடை இல்லாதபோதும் அஞ்சாமல் வளரும் கொங்கையின் மதர்ப்பையும் தோளின் பெருமையையும் அறிகிறான். கொலைத்தன்மையால் மகரத்தை வெல்லும் சாய்ந்த கடைக்கண் பார்வையை மன்மதன் நோக்கினான். வல்லிக்கொடி போன்ற மடந்தையாளின் தாமரை முகத்தில் புருவக்கொடி ஒருகாலும் கண்ணின் கடைப்பார்வையை விட்டு நீங்காது ஒரே தன்மையாய் உள்ளது.

களிப்போடிருக்கும் பல கோடி மக்களைக் காக்கும் குலோத்துங்கனைக் கண்டு மன்மதன் அஞ்சுகிறான். அருவமாகிய தென்றல் தேரில் வாடையாக விரைந்து கண்காணக் கிடந்து நின்று வில்லை நாணேற்றினான். ஆனாலும் மன்மதனுக்கு அச்சம் தோன்றியது. உலா வருபவன் அரசன் அல்லன். பாம்பணையில் பள்ளிகொள்ளும் திருமால். வீதியில் நிற்பவள் மானிட மகளல்லள். திருமகளே ஆவாள். முன்பு தவமிருந்த சிவபெருமான் உமாதேவியை மணக்கும் பொருட்டு அவர் மேல் மலரம்புகளைச் செலுத்திச் சாம்பலானதை எண்ணித் தன் இடத்திற்குச் சென்றான்.

4.8.4.3 மடந்தைப் பருவத் தலைவி ஒருதலைக் காமத்தால் வருந்தினாள். உலாத் தலைவன் அபயனாகிய குலோத்துங்கன் நகைத்தான் எனக் கருதி அவன் அணிந்த நகைகளையும் தோளையும் வணங்கினாள். காமன் வினை

புரியாது இருக்கக் கண்டு அழுதாள். கலையும் நிலையும் சரிந்தாள் சிவந்த பொன்னாடை சரியத் தன் தோழியர் தோள் மேல் சாய்ந்தாள். தோழியர்கள் குலோத்துங்கனைத் திருமாலாகக் கருதி முறையிடுவர்.

பால் வாடை வீசும் ஆயர்குல மகளிரோடு முன்பு குரவைக் கூத்தாடினாய். எப்போதும் யாழ் பயிலும் ஒழுக்கத்தினைப் பெற்றிருந்தாய். ஆயர் குல மகளிர்பால் உன் வீரத்தைக் காட்டி ஏழு காளைகளைத் தழுவி நப்பின்னைப் பிராட்டியை ஏற்றுக் கொண்டாய். இவை நகைப்பதற்கு இடமான செயல் அல்லவே. அதுபோல் நீ இவளை ஏற்றுக் கொண்டு இவளின் கொங்கைகளைத் தழுவி மகிழ்வதில் என்ன தவறு?

ஆய்ச்சியரின் பால் வாடை வீசும் ஆடைகளை விரும்பிக் கவர்ந்தாய். இம்மடந்தை பருவப்பெண் விரும்பி ஏற்க வேண்டும் ஆடையைக் கொள்வதில் தவறில்லையே. துளசிமாலை அணிந்த கார்மேகக் கண்ணனாக நீ உவந்தவற்றை சோழர் குல மன்னனானபோது இந்த மடந்தையரிடம் ஏன் உவப்பாக இல்லை? இவளிடம் உன் வஞ்சம் செய்கின்றாய். நாங்கள் இதைப் பொறுத்திரோம் என மடந்தைக்கு இரக்கப்பட்டு பேசுகின்றனர். இவ்வாறு தோழியர் பேசுதலை

பரிந்தார் 251

முடைக்கை யெதிர்க்குரவை கோத்தாய் முரல்யாழ்
கடைக்கை தொடுக்கை நகையோ - விடைப்பே 252
ரினந்தழுவிப் பின்னையைக் கொள்வா யிவளைத்
தனந்தழுவிக் கொள்கை தவறோ - அனந்தம் 253
கருந்துகிலக் கோவியரைக் கொள்வாய் கமலை
தருந்துகி னோக்கத் தகாதோ - விருந்து 254
துளவ முகிற்கிது வந்தது தூய
வளவர் திருக்குலத்து வந்தோ - அளவிறந்த 255
வன்கண் ணிவளளவுங் கண்டே மடவரல்
புன்க ணடியேம் பொறேமென்று -

என்னும் கண்ணிகளால் அறியலாம்.

காதலால் வருந்திய மடந்தை பருவப் பெண்ணுக்கு உலாக் காண வந்தோர் இரங்கினர். அவளைப் படுக்கையில் அமர்த்தினர். முருக்கம் பூவிதழ் போல சிவந்த வாயினளாகிய அவள் மேலும் கலக்கம் அடைந்தாள்.

இவளுடைய வாய்மலர் செம்மையால் பவளமொத்திருந்தது. தோளும் கொங்கையும் மலையும் முகடும் போல விளங்கும். கண்ணின் கடைப் பகுதிக்கு நீண்ட புருவக்கொடியும் மன்மதனின் தொழிலைச் செய்யவிடாமல்

தடுக்கும். சந்திரன் தோன்றாமையால் மட்டுமே தலைவி உயிர் சுமந்து வாழும். என்றாலும் தென்றலுடனும் நிலவுடனும் தலைவியின் உறவு ஏழு பிறப்பினால் ஆனது என உலாக் காண்போர் உரைத்தனர். மன்னனைக் கண்டு மடந்தை மயக்கம் கொள்கிறாள்.

### 4.8.5 அரிவை

மடந்தைப் பருவத்தாளை அடுத்து அரிவையின் செயலை ஒட்டக்கூத்தர் எடுத்துரைக்கின்றார். நாளை சோழன் உலா வருகின்றான் என்பதைக் கேட்ட அரிவை இரவை எண்ணிக் கலக்கமடைகிறாள் இந்த இரவு பிரமதேவனுடைய இரவு போல மிக நீண்டதோ என்று வெறுப்புற்றாள். விடியுமளவும் நிலவு சுடுமே என்று வருந்தினாள்.

4.8.5.1 அவளின் மன வேதனை கண்ட குலோத்துங்கனின் முதல்வனாகிய சூரியன் இவளின் மெலிவைப் போக்க மாலையாம் பகைவனைப் போக்கி காலையாம் தோழனை அனுப்பினான். காலையைக் கண்டு அரிவை மகிழ்ந்தாள். விரைந்தெழுந்து அணிகலன்களில் தனக்குப் பிடித்தவற்றை அணிந்து சென்றாள்.

மாலையில் குவிந்த தாமரையாகிய பூங்கோயில் யாவையும் வெளிப்படுத்த விரும்பிய கதிரவன் தாமரை மலரின் இதழாகிய வாசலைத் திறக்கிறான். இரவில் தன் பெடையோடு கூடாத சக்கரவாளப் பறவையும் இணையுடன் வந்தது. இரவில் கூடிப் பகலில் கூப்பிடும் அன்றில் பறவை அலகால் இரைதேடும் காலையில் அரிவையாள் சோலைக்குள் சென்றாள்.

4.8.5.2 எண்ணற்ற கதிரவனின் கிரணங்கள் கூடி மலை அரணை அழிக்கப் பற்றிக்கொண்டு ஏறுவது போலக் கிரணங்கள் விடாது ஒளிரும் மாணிக்கப் பாறையால் செய்யப்பட்ட செங்குன்றில் அருகிலுள்ள சந்திர காந்தக் கற்களால் கட்டப்பட்ட நிலா முற்றத்தில் ஏறுகின்றாள். தோழியரும் அரிவைப் பருவத்துத் தலைவியும் மருண்டு குதித்துக் கடக்கும் மானினத்தைக் கண்டும் அன்னமும், சேவலும் இன்புற்று நடப்பதைக் கண்டும் மயில்களின் ஆடலையும் அதற்கேற்பக் கிளிகள் பாடுவதையும் நுகர்ந்தபடி செல்வர்.

பளிங்குச் சுவர்களில் உள்ள பாவைகளுக்குத் திருமணப் பொருத்தம் பார்ப்பர். இந்தப் பெண்டிரின் பேச்சால் பூவைகள் பேச்சை விரும்பாத சேவல்கள் வேறு பக்கம் முகத்தைச் சாய்த்துக் கொள்ளும்.

வண்டுகள் தம்முள் மயங்கிக் களியாட்டம் செய்வதையும் புறாக் கூட்டத்தைச் சேர்ந்த பேடும் சேவலும் ஒன்றை ஒன்று அழைப்பதையும் மடந்தையும் தோழியரும் வியக்கின்றனர். இவ்வாறு மான், அன்னம், மயில், கிளி, பூவை, வண்டு, புறா என அனைத்தும் தம் இணையுடன் மகிழ்ந்திருப்பதைக் கண்டு அரிவை வாழ்த்துகின்றாள். அரிவை தான் மட்டும்

சோழனின் துணையின்றித் தளர்ந்திருந்த நேரத்தில் குலோத்துங்கன் உலா வந்ததற்கு அடையாளமாக முரசு முழங்குகிறது.

இதனை

மணக்கத் துணையன்றில் வாயலகு வாங்கித்
தணக்கக் கடிகாவிற் சார்ந்தாள் - கணக்கதிர் 270
வந்து பொருவதொரு மாணிக்கச் செய்குன்றில்
இந்து சிலாதலத்தி லேறினான் - குந்திக் 271
கடப்பன கன்னிமா னேக்கியு மன்னம்
நடப்பன பார்த்து நயந்தும் - தொடக்கிக் 272
களிக்கு மயிற்குலங் கூத்தாடக் கண்டும்
கிளக்குலம் பாட்டெடுப்பக் கேட்டும் - பளிக்குருவப் 273
பாவை மணக்கோலம் பார்த்தும் பலநகை
பூவை பகரப் புறஞ்சாய்ந்தும் - கோவை 274
அளிக்களி யாட்ட மயர்ந்துங் கபோத
விளிக்களி கூர்ந்து வியந்தும் - களிக்கப் 275
பழிச்சி வணங்கிப் பெருமாள் பவனி
எழுச்சி முரசோர்ந் திருந்தாள் -

என்னும் கண்ணிகளால் அறியலாம்.

4.8.5.3 வீரக்கழல் அணிந்த பாண்டியரின் மதுரையைக் கைப்பற்றிச் சங்கத்தமிழையும் கொண்ட குலோத்துங்கன் வரவு கூறும் சங்கின் முழக்கம், கேட்ட அரிவை தம்மினம் புடை சூழ மன்னனின் உலாகாணத் தெருவை அடைந்தாள்.

ஆதிசேடன் உலகைத் தலையால் தாங்கக் குலோத்துங்கன் தோளால் தாங்குகிறான் ஆதிசேடன் அஞ்சிக் கக்கிய சிகாமணிகள் குண்டலங்களாய் மன்னனின் காதுகளில் அசைகின்றன. அவற்றின் ஒளிக்கிரணங்கள் மயில் விரும்பும் சாயலுடைய அரிவையின் முகத்தாமரை பொலிவுடன் விளங்கும் வகையில் வெயிலை மிகாமலும் குறையாமலும் கொடுத்தன. அவள் தோளணியின் ஒளி கூந்தல் நிறத்தை மாற்றி அழிப்பது போல் வீசுகின்றது. மார்புக் கச்சின் ஒளியும் முகத்தொளிரும் மணியின் ஒளியும் சூரிய ஒளியை மிஞ்சின. மேகலையுடன் அணிந்த கடிதடம், சக்கரவாளகிரி சூழ்ந்த பூமி போல உள்ளது.

சோலையில் உள்ள மான், மயில், கிளி, பூவை, வண்டு, புறா போன்றவை அரிவையுடன் தம்மினம் என கருதிக் உடன்வர விரும்புகின்றன. பகை கொள்ளாது அன்னமும் அவள் சிலம்பொலிக்கேற்ப மறுமொழி பயின்று நடக்கின்றன.

சேர நாட்டையும் ஆள்வதால் வில்லவன் என்றும் பாண்டிய நாட்டை ஆள்வதால் மீனவன் என்றும் சிறப்புகளைப் பெற்றுள்ள குலோத்துங்கன் உலா வரும் வீதிக்கு அரிவை நடந்தே வந்து வெளிப்பட்டாள்.

4.8.5.4 மலர்ந்த முகமும் குவிந்த கைகளும் உடைய மான் போன்ற அரிவை பலர் காண இனிய சொற்களைப் பேசினாள். குலோத்துங்கனும் காவலரை விட்டுத் தடுக்காமல் இவளுக்குத் தன் கடைக்கண்ணால் அருளை வழங்கினான். தொடர்ந்து யானையை விரைந்து செலுத்தினான். தான் நினைத்தபடி அருளாமல் அகன்றதை எண்ணி அரிவைக்கு அச்சத்தால் வியர்த்து வழிந்தது.

அரிவையாள் வியர்வை முத்தை ஈனும் சங்காகிய கழுத்துடையவள். மருட்கையால் மாணிக்கத் தொடி கைகளில் இருந்து கழன்று மாணிக்கச் செம்பொன் தொடி வழங்கும் பதுமநிதிக்கு நிகரானவள் அரிவையின் ஆடை நெகிழும்போது தோன்றிய அல்குல் பாம்பின் படத்தைப் போன்று இருந்தது. தளிருடைய மாங்கொம்பு போலிருந்த இவள் இப்போது முதுவேனிற்காலப் பூங்கொம்பு எனப் பிறர் சொல்லுமாறு தளர்ந்தாள். அப்போது அரிவையின் தோழியர் அவளின் நிலைக்கு இரங்கிக் கூறுகின்றனர்.

உலாவரும் குலோத்துங்கன் தன்னுடைய உடைவாளின் பக்கத்தில் வெற்றித் திருமகளாகிய கொற்றவையைக் குடி வைத்தாலும் மற்றொரு பக்கத்தை அரிவைக்குத் தரலாமே; அதை மன்னன் செய்யவில்லை. மணமாலையை பெற்ற நிலமகள் மன்னனின் ஒரு தோளில் வாழும்போது ஆத்தி மாலையை அணிந்த இன்னொரு தோளையேனும் இவளுக்குக் கொடுக்கலாமே; இம்மன்னன் அதனையும் செய்யவில்லை. என்று மொழிந்தனர்.

இவ்வாறு அரிவைக்கு இரங்கிய தோழியர் அவர்களோடு வந்த அ∴றிணை உயிர்களிடம் அன்னப்பறவைகளே! உலாவரும் குலோத்துங்கனிடம் அரிவையின் நிலை கூறி ஓலம் இடுங்கள். புறாக்களே இச் சோழர் குலம் முன்பே உங்களை அறியும். இந்த அரிவைக்கும் அபயம் தர வேண்டுங்கள்; நறிய நெற்றிப் பாவைகளே இவள் எம்மைப் போல உயிர் அற்றவளாய் உள்ளாள் என்றும் குறிப்பை மன்னனின் முன்னர் சென்று கூறுங்கள். நாகணவாய்ப் பறவைகளே! உலாவரும் குலோத்துங்க சோழனின் செங்கோன்மை புகழ்ந்து போற்றுங்கள். விரைந்து தாவும் மருட்சியை உடைய மான்களே! உனக்கும் பேதமை உளதாமே என்று மிகவும் வருந்தி உரையுங்கள். வண்டினங்களே! குலோத்துங்கனிடம் இந்த அரிவைக்காக மாலையைத் தா எனக் குரல் கொடுங்கள் என வேண்டுகோள் வைக்கின்றனர். கைக்கிளைக்காதல் கொண்ட அரிவைப் பருவத்தாள் தன்

துன்பத்தின் எல்லை எதுவரை என்று கேட்கும்போது திருவுலா கண்ட தோழியர் தங்களால் இயன்ற ஆறுதலைக் கூறினர்.

ஒற்றை யுடைவா ளொருபுடையாள் கொற்றவையேல்
மற்றை யருகிவளை வைத்திலனே - பெற்றுடைய 294
வாரத் தரணியாள் வாழ்தோ ளெதிர்மற்றை
ஆரத் திருத்தோ ளளித்திலனே - நேரொத்த 295
பூந்தா மரையா ளெதிரேயிப் பொற்றொடிக்கும்
ஏந்தார மார்ப மிசைந்திலனே -வேந்தர்கோன் 296
அன்னங்கா ணீர்சென் றரற்றீர் கபோதங்காள்
இன்ன மபயம்புக் கெய்திடீர் - நன்னுதற் 297
பாவைகாள் கொல்யானைப் பாவடிக் கீழ்ப்பணியீர்
பூவைகாள் செங்கோன்மை போற்றிசெய்யீர் - தாவிப்போய்ப் 298
பேதை மடமான் பிணைகாள் வளைத்துளையீர்
கோதை மதுசுரங்காள் கூப்பிடீர் - யாதெல்லை 299
என்னா விதற்கென் றிரங்கி யிலங்கிழை
தன்னார்வ மாற்றெதிர் சாற்றினார்

### 4.8.6 தெரிவை

4.8.6.1 குலோத்துங்கனின் திருவுலாக் காணத் தெரிவை பருவத்தாள் வருகின்றாள். அவளிடம் தோழியர் பெருமானாகிய குலோத்துங்கன் தங்கள் இடத்தின் எல்லைக்கு வரும்வரை பொழுதுபோக்க விளையாட வேண்டுகின்றனர். தெரிவைத் தலைவி சூதாடவேண்டாம் பந்தாடுவோம் என்றாள். 'பந்தை எடுத்து வருக' எனத் தெரிவை குறிப்பாலுணர்த்தினாள். தலைவி பந்தாட போகிறாள் என்பதை அறிந்து பாடவந்த பாணரும் ஆட வந்த கூத்தரும் வியந்தனர். சந்தனம் பூசிய கொங்கைகளையும் தோளையும் பாரம் என்று கருதாமலும் இடை முறியும் என்று கவலைப்படாமலும் தலைவி பந்தாடப் போவதை நினைத்தனர்.

முத்துப் பந்துகளையும் அம்மானைப் பந்துகளையும் கலந்து எடுத்தார்கள். எடுத்ததை எல்லோர்க்கும் கலந்து கொடுத்து ஆடினார்கள். தெரிவை முத்துப் பந்து, அம்மானைப்பந்து என இரண்டையும் சிறப்பாக ஆடினாள். பாவைக்கூத்தின் முறையை யாவரும் அறிய ஆடினாள். பந்தைப் பந்து அடைவு எனும் முறையிலும் அம்மானையை அம்மானை அடைவிலும் மூன்று நான்கு மடங்காக அதிகமாக்கி எறிந்து ஆட வாருங்கள் எனத் தெரிவை தோழியரிடம் கூறினாள். உயரம் அதிகமுள்ள தாமரை உயரமற்ற தாமரை இரண்டிலும் படியும் அன்னப்பறவை போல் கைகளும் காலும் உயர்ந்தும் தாழ்ந்தும் இருந்தன.தலையில் சூடிய செங்கழுநீர் மலர் ஆடும் போது கூந்தல் மேல் பந்தல் விரித்தது போலுள்ளது. பரவி உயரும் கூந்தல்

குறிப்புகள்

எல்லையும் பந்தின் எல்லையும் பந்தலிடையே முத்துக்கால் அமைத்தது போலிருந்தது.

தளிர்க் கரங்களால் அம்மானைப் பந்துகளை விண்ணளவு வீசி ஆடுங்கள். மண் கொள்ளாத அளவு பறந்து ஆடுங்கள். இவ்வகை ஆட்டத்தை தேவருலகிலும் காண முடியாதென எனப் பாணர்கள் போற்றினர். ஆட்டத்தில் விரைவது கைகளா? கால்களா? கண்களா? என்று வல்லுநராலும் அறிய முடியாதபடி பெண்கள் பந்தாடினர். தெரிவை பந்தாடிய சிறப்பை ஒட்டக்கூத்தர்

எடுத்தா ரெடுத்தன யாவு மெலரும்
கொடுத்தா ரொருதானே கொண்டாள் - அடுத்தடுத்து 306
முன்ன மெறிபந்தின் மும்மடங்கு நான்மடங்
கின்ன மெறிய வருகென்றாள் - அன்னம் 307
அடியு மிருகையு மம்புய மென்று
படியு மொழுங்கிற் பயில -முடியும் 308
தொடையிடை போய சுழல்கூந்தற் பந்தர்க்
கிடையிடை நின்றகா லேய்ப்ப - அடைய 309
விழுந்தன பார்கடவா வாறுபோன் மேற்போய்
எழுந்தன கைகடவா வென்னக் - கொழுந்தளிரால் 310
ஏற்றுதி விண்கொளா வம்மனை யெம்மனை
ஆற்றுதி யீதிங் கரிதென்னப் - போற்றரும் 311
கையோ பதயுகமோ கண்ணோ கடுகினவை
ஐயோ வறித லரிதென்னப் - பொய்யோ 312
திலக நுதலிற் றிருவேயென் றோதி
உலகு வியப்பவென் றோத -

என்று பாடுகின்றார்.

4.8.6.2 பின்னர் தெரிவையும் தோழியரும் நீராடும் மண்டபத்தை அடைகின்றார்கள் அப்போது அநாபயன் உலாவரும் முழக்கம் கேட்கிறது ஆடை, அணி, மாலை முதலியவற்றைத் தோழியர் ஏந்தி நிற்க ஆடையை வாங்கிய தெரிவை அணிந்தாளோ இல்லயோ எனும்படி விரைந்து உடுத்திக் கொண்டு வீதிக்கு வருகிறாள்.

மாந்தளிர் தமனியம் (பொன்) கழுநீர்மலர் ஆகியவற்றால் ஆன மாலைகள் சூடாமலும் வலம்புரி சூடாரத்தினம், தொய்யகம், புல்லகம் போன்ற அணிகலன்கள் அணியாமலும் தெரிவை இயற்கை அழகோடு விளங்குகிறாள். அவளுடைய கூந்தலுக்கு யமுனை நதியின் அலையும் காவிரி ஆற்றின் கருமணலும் தோற்கும்.

மைதீட்டாத செவ்வரி படர்ந்த கண்களில் அழகு நிறைந்துள்ளது சலஞ்சலம் என்ற சங்கு முத்தீனாமல் மாணிக்கம் நின்றதுபோல் கழுத்து விளங்கிற்று. இயற்கையான தோள் அழகிற்கு மூங்கில் தோற்றது. கச்சு அணியா கொங்கைகள் அழகுடன் உள்ளன. உதரபந்தனம் அணியாத வயிற்றுப்பகுதி மென்மையாக உள்ளது. தேவலோகம் விட்டுத் தேவர்களை வரச்செய்வதுபோல் சிறு உரோமமும் உந்திச்சுழியும் தோன்றின.

மேகலை அணியா அல்குலும் குறங்கு செறி அணியாத தொடைகளும் மரகதம் போலிருந்தன. சிலம்பு அணியாத பாதம் செந்தாமரை போலிருந்தன. அணிகலன்கள் அணிந்து உலகைக் காப்பாற்று எனத் தெரிவையைத் தோழியர் வேண்ட அவளோ தன் ஒப்பனை இல்லாத உருவழகு வெளிப்பட உலா காணச் செல்கிறாள்.

4.8.6.3 உலா வரும் குலோத்துங்கனின் குடைகீழ் மலை போன்ற யானை மேல் வருகிறான் அப்போது கைக்கிளைக் காதல் இல்லாமல் இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கி வேட்கையில் ஒன்றானார்கள். மனுகுலத்தார் மறந்த திருப்பாற்கடலைக் கடைந்தபோது வந்தவள் இவள் எனக் கருதிய குலோத்துங்கனின் உள்ளம் இத்தெரிவை மேல் சென்றது. இயற்கை நலமிக்கவளைத் தன் உள்ளத் தாமரையில் இடமளித்தான்.

மூன்றடியால் உலகளந்த திருமாலையொத்த குலோத்துங்கனை தெரிவையாள் மான் போன்ற மருண்ட பார்வையால் பருகுதலைத் தாயர் கண்டனர். தெரிவை கண்ணால் மன்னன் அழகைப் பருகும் தன்மையும் அவன் அருளும் தன்மையும் நோக்கித் தலைவன் தழுவினால் அன்றி இவள் வேட்கை தீராது என்று கருதினர். அவர்கள் அத்தெரிவையை மலர்ப்படுக்கையில் கிடத்தினார்.

தொடுக்கப்பெறாமல் இயல்பான மாலையாகப் பூக்கும் கற்பக மாலையைக் கொண்டைக்கும் நெய்யப்படாமல் பொன்னால் செய்த ஆடையைத் தொடைக்கும் பாம்பு வடிவ சுருளைக் கூந்தலுக்கும் அகில் சந்தனக்குழம்பைக் கொங்கைகளுக்கும் வல்லத்தின் பொன் பனைக் ருத்தில் செய்த தோட்டைக் காதிற்கும் என உனக்காகக் குலோத்துங்கன் கொடுத்த அணிகலனை நாங்கள் கொண்டுவந்தோம் எனப் பாணரும் கூத்தரும் கூறத் தெரிவை பெருமயக்கம் நீங்கித் தெளிந்தாள். ஒருவாறு தெரிவை மனம் தேறியமையைப் பின்வரும் கண்ணிகளால் அறியலாம்

நொய்யாத கற்பகப் பூமாலை கொண்டைக்கும்
நெய்யாத பொற்றுகி னீவிக்கும் - செய்யாத 337
தொங்கற் றுளைக்கோவை யல்குற்குஞ் சூழ்கனகத்
துங்கப் பணிவலையந் தோளுக்கும் - கொங்கைக்குப் 338

பொன்னிப் புகாரிற் பொலன்குழம்பும் வல்லத்திற்
கன்னிப் பனந்தோடு காதிற்கும் - சென்னி 339
அளிப்பக் கொணர்ந்தனம்யா மன்னமே யென்று
தெளிப்பச் சிறிதே தெளிந்தாள்-

### 4.8.7 பேரிளம்பெண்

தெரிவைப் பருவத்தாளை அடுத்துச் சோழனின் உலாக் காணப் பேரிளம் பெண் வந்தாள். திருமகள் தன் வாழ்வு கொண்டாள் எனச் சினப்பாள். கலயங்களில் இறக்கிய கள்ளை விரும்பும் தெய்வத்திற்குப் படைத்த இன்மொழியாள் ஒருத்தி அதனைப் பேரிளம் பெண்ணிற்குத் தர அவளும் அதனைப் பருகினாள். பின்னர் வாய் குழறி மழலை மொழி பேசுகின்றாள். இம்மொழியைக் கற்கக் குயிலும், கிளியும் எண்ணுகின்றன. வியர்வை அவளின் நெற்றியை அழகு செய்யும். கனவில் அரற்றும் பேரிளம் பெண்ணுக்குக் குலோத்துங்கன் கொடுமை செய்ததாகத் தோழியர் கூற அவர்களைக் கடிந்து கொண்டாள். பாணன் வழி குலோத்துங்கன் வீதி உலா வருவதை அறிந்தாள்.

4.8.7.1 சோழன் வரவறிந்த பேரிளம்பெண் சிலம்பு, மேகலை, தொடி ஆரம், மார்புக்கு மதானி என்னும் அணிகலன்கள் அனைத்தையும் அணிந்தாள். அந்த அணிகளிலிருந்து வீசும் ஒளியும் மரகதமணி ஒளியும் சூரியனின் ஏழு குதிரைகளையும் மறைத்தன.

புருவத்தின் இடையில் குமிழ மலர்போல் நாசியும் இருபுறம் கருவிளை மலர்கள் போல் கண்களும் முருக்கமலர் போல் சிவந்த அதரங்களும் பாளை போன்ற கழுத்து ம் தேங்காய் ஒத்த மார்பும் மூங்கில் ஒத்த தோள்களும் கொண்டவளாய்த் திகழ்ந்தாள். அவளிடத்து மாந்தளிர் மேனி, காந்தள் போன்ற கைகள் வஞ்சிக் கொடி போன்ற இடை, வாழை போன்ற தொடைகள் அழகாகத் தோன்றும். அவளுடன் சகோரப்பறவை, அன்னம் மானும் மயிற் கூட்டம் புறாக்கள் போன்ற பறவை இனங்கள் யாவும் தம்மினம் எனக் கருதிச் சுற்றிவரும். இவ்வாறு மன்மதன் புகவிரும்பும் சோலை போன்று தலைவி தோன்றினாள். இதனை,

நறுந்துணர் மாந்தளிர் வார்ந்து நளியக்
குறுந்தொடிக் காந்தள் குலைப்பச் - செறிந்து 353
சலித்துத் தனியிள வஞ்சி தளரக்
கலித்துக் கதலி கவின - ஒலித்தே 354
அளிக்குஞ் சகோரமு மன்னமு மானும்
களிக்கு மயூர கணமும் - விளிக்கும் 355
புறவுந் தொடர்ந்துடனே போத வவையே
பிறவு மினமென்று பெட்பர் - சுறவுயர்த்தோன் 356

காலை புகுந்து காப்ப தொருபசும்பொற்
சோலை யெனவந்து தோன்றினாள்

என்னும் கண்ணிகள் விளக்கும்.

தெய்வத்தன்மை பொருந்திய குலோத்துங்கனும் கை தொழுது நின்ற பேரிளம் பெண்ணைக் கண்டான். சூரனை அழித்த முருகனே விரும்பும் பருவத்தினள் இந்தப்பெண் என உணர்ந்தானாய் அவளுடைய மார்பும் செந்தாமரைக் கண்களும் தோள்களும் ஒளி உமிழ் காதுகளும், திருவடித் தாமரையும் ஆகியவற்றைச் சோழன் கண்டான். குலோத்துங்கன் நோக்கப் பேரிளம் பெண்ணும் நோக்கினாள். கள்ளுண்ட களிப்பால் கண்களும் மனமும் களிப்படைகின்றன.

பேரிளம்பெண் தன்மனத்தில் ஏழு மலைகள் ஏறித் துர்க்கைப் போலத் தவம் செய்யேன். திருமகள் போல் ஏழு கடலிலும் நீராடேன். உன் குல முதல்வன் சூரியன்போல் ஏழு உலகங்களையும் வலம் வர விரும்பேன். ஆனாலும் வேந்தனே! உன் குடையின் கீழ் தங்க இடமும் உன் குலத்திற்குரிய ஆத்தி மாலையை அணிய வாய்ப்பும் கொடுத்தால் மேற்கூறிய மூன்றையும் என்னால் செய்ய முடியும் என்று கருதினாள். இதனை

சுருநெடுங் கண்களிப்ப வுள்ளங் களிப்பப்
பருநெடுந் தோளும் பணைப்ப - ஒருநின் 363
சிலம்புகளோ ரேழுஞ் சென்றடைந்து நோலேன்
அலம்பு சுடலேழு மாடேன் - வலம்புவனம் 364
ஏழுஞ் செலவயரே னெங்கோவே நின்குடைக்கீழ்
வாழுந் திருவெனக்கு வாய்க்குமே

என்னும் கண்ணிகள் உணர்த்தும். தொடர்ந்து திருமாலோடு ஒப்பிட்டுத் தன் நிலையைக் கருதிப் பேசினாள்.

4.8.7.2 பால் வாடை வீசும் தோளுடைய ஆய்ச்சியரைத் தழுவிடக் காளையைத் தழுவிய செந்தாமரைக் கையனே! உன் பட்டத்து யானையின் துதிக்கையைத் தழுவி, கோரம் என்னும் குதிரையின் காலைத் தழுவி உன் பகைவரின் மனவலிமை அழியத் தாவும் உடல் வலிமை மிக்க புலியைத் தழுவி உன் குடையின் கீழ் வாழும் வாழ்க்கை எனக்கு வேண்டும். இவற்றை வழங்க ஆணையிடுவாயோ?

உலா நாயகனே கடல் சூழ்ந்த உலகை வெள்ளம் சூழ்ந்த போது மச்சாவதாரம் எடுத்துக் காத்தாய். உன் புகலிடமான திருப்பாற்கடலை மேருமலையை மத்தாகவும் வாசுகியைக் கயிறாகவும் கொண்டு கடைந்தபோது உன் தேவியர் இருவரையும் உன் தோள்களில் வைத்தாய்.

அழிக்க வந்த குருந்த மரத்தை சாய்த்துக் கிளைகளை முறித்ததும் ஏழு காளைகளைத் தழுவி மாய்த்ததும் ஆயர் ;குல மகளிர்க்காகத்தானே! எல்லாப் பிறப்பிலும் உன்னை நினைத்து வாழும் என் உள்ளத்தில் குறையை உண்டாக்கினாய். நீ அருள்வாயோ இல்லையோ என உள்ளம் அஞ்சுகின்றது.

முடைதழுவு தோளும் முலையுந் தழுவ
விடைதழுவு தாமரைக்கை வீரா - கடகரியைக் 366
கைதழுவிக் கோரத்தைக் காறழுவி நின்புலியை
மெய்தழுவிக் கொள்ள விடுவாயோ - மொய்திரைசூழ்367
ஞால மறிக்கவும் நாயக நின்புகல்விற்
கால வுததி கலக்கவும் - சால 368
வருந்தா வகைவருந்த வாழி பெயரும்
பெருந்தேவி யார்க்குப் பெறலாம் - திருந்திய 369
குந்த மொசித்ததுவுங் கொற்றத் திருத்தோளால்
வந்த விடையேழு மாய்த்ததுவும் - முந்துறக் 370
கோவிய மாதர்க்கே யுள்ளங் குறைகிடந்த
ஆவியே மாதாக வஞ்சுமே

குலோத்துங்கனே, உன் ஆற்றலால் பதினெட்டு மலை அரணை உடைய சேரன் கொடியில் உள்ள வில்லை முறித்த நீ உன் நிழலில் வாழும் என் போன்றோரை வதைக்கும் மன்மதனின் கரும்பு வில்லை முறிக்க மாட்டாயா? சேரமன்னரோடு போரிட்டு அவர்களின் காவல் மரமான பனை மரத்தை வெட்டிச் சாய்த்த நீ உன்மீது அன்பு வைத்து வருந்தும் எங்களை மேலும் வருத்தும் அன்றில் பறவை தங்கும் பனை மரத்தை வெட்டாததேனோ?

மாறுபட்ட பாண்டியரின் படைக்கடல் அழித்தவனே! எம்மை வாட்டும் காமக் கடலை மாய்த்து அருள ட்டாயா? உன் பகைவரின் புகழ்நிலவை மாய்த்தாய். உன் சூரிய குலத்திற்கு மாறான நிலவை மாய்க்காத காரணம் என்ன? சிங்கள நாட்டாருடன் போரிட்டு யாழ்க் கொடியை அறுத்தவனே! உன் நினைவால் வாடும் எம் காதுகளில் ஓசையிடும் யாழினைத் தண்டிக்காதது ஏன்? போர்க்களத்தில் காடவர்களின் கொடியிலுள்ள காளையை மாறுபட்டு அழித்தாய். எம்மை வருத்தும் மணி ஓசை செய்யும் காளையைத் தண்டிக்காதது ஏன்? பல்லவ நாட்டினை அழித்த உலா நாயகனே, எம்மை வருத்தும் மன்மதனின் கரும்பு வில்லில் இருந்து புறப்படும் பல்லவமாகிய இளந்தளிர் அம்புகளை அழிக்காதது ஏன்?

மன்மதன் தன் கரும்பு வில்லால் எம் உயிர் அழியப் போரிடுகின்றான் சுரும்பாகிய வண்டு, நாணினை அழுந்தக்கட்டி மேலே தூக்கிடுகின்றான். அம்பாகிய கழுவை மார்பில் வீசுகின்றான். எம்போன்ற மகளிரின் மனத்திடத்தை உருக்குகின்றான். மன்மதன் தன் தென்றல் தேரைச் செலுத்தி அவன் கொடியிலுள்ள மீனுக்கு எங்கள் உயிரை உணவாக்குகின்றான்.

கார்மேகக் கண்ணனே! எமனின் தண்டத்தை அகற்றி முன்பு இந்த உலகத்தைக் காத்தருளினாய். பள்ளிகொண்ட மகராலயம் எனப்படும் திருப்பாற்கடலை மறந்து சோழநாட்டில் வாழ்பவனே. மன்மதன் நடத்தும் காமப்போரிலிருந்து எம்மை நீ காக்காவிட்டால் இளம் பெண்கள் எவ்வாறு உயிர் காத்திருப்பர்?

இவ்வாறு ஒருதலைக் காமத்தால் வாடிய பேரிளம் பெண்ணாள் மன்மதனால் படும்பாட்டைச் சோழனைக் கண்ணனாக உருவகப்படுத்திக் கூறிப் புலம்புகின்றாள்.

இவ்வாறு பருவந்தோறும் அழகான பொன் மயில் போன்ற சாயலை உடைய மகளிர் பிறர் அலர் கூற ஒருதலையாகக் காதல் கொண்டு காமம் நீங்காது கலவி இன்றி வருந்தி மன்றம் ஏறுவர். ஏழு கடல்களையும் ஏழு உலகங்களையும் ஒரு குடையின் கீழ் ஆளும் குலோத்துங்க சோழன் உலாப் போந்த திறம் மகளிர்க்குக் காதலை ஊட்டுவதாக இருந்தது.

இப்படியே 385

தையலார் பெற்றோகைச் சாயலார் கையகலா
மையலார் போலராய் மன்றேற - வையம் 386
பெருகுடையா நீரேழும் பாரேழும் பேணும்
ஒருகுடையான் போந்த னுலா. 387

## 4.9 தொகுத்துக் காண்போம்

உலா என்னும் இலக்கியத்தில் பாட்டுடைத் தலைவர்களின் குலமரபும் பாரம்பரியமான புகழின் சிறப்பும் அறிந்துரைக்கப்பட்டது. அவற்றுடன் எழுவகை பருவ மகளிர் செயல்கள் ஆகியனவும் கூறப்பட்டது. இவ்வகையில் குலோத்துங்கனின் சோழ மரபின் பெருமையை அறிந்துகொண்டீர்கள். சிற்றிலக்கியத்துள் உலாவின் தனிச்சிறப்பான அமைப்பை அறிந்து கொண்டீர்கள்

## 4.10 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

### இரு மதிப்பெண் வினா விடைகள்

1. குலோத்துங்க சோழன் உலாவின் ஆசிரியர் யார்?

ஒட்டக்கூத்தர்

2. ஒட்டக்கூத்தர் பாடியவற்றுள் ஏனைய நூல்கள் இரண்டனைக் கூறுக.

உத்தர ராமாயணம், குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ், ஈட்டி எழுபது, அரும்பைத் தொள்ளாயிரம்

3. மூவருலாவின் பாட்டுடைத் தலைவர்கள் யாவர்?

விக்கிரமசோழன், குலோத்துங்க சோழன், இராசராசசோழன்

4. சோழர் எக்குல மரபினர்?

சூரிய குலம்

5. இரண்டாம் குலோத்துங்கனின் பெற்றோர் யாவர்?

விக்கிரமசோழன், விதுகுல நாயகி

6. உலாவில் இடம்பெறும் எழுபருவ மகளிர் யாவர்?

பேதை, பெதும்பை, மங்கை,மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்

7. பசுவின் மம்மர் நோய் தீர்த்தவன் யார்?

மனுநீதிச் சோழன்

8. ஆகாய கங்கையைப் பூமிக்குக்கொணர்ந்தவன் யார்?

பகீரதன்

9. ஆகாயக் கோட்டைகள் மூன்றனை அழித்தவன் யார்?

தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்

10. காவிரியைக் கிழக்கிற்குத் திருப்பியவன் யார்?

சிவுகன்

11. துலையேறிய தோன்றல் யார்?

சிபிசக்ரவர்த்தி

12. சேரனை விடுவித்துக் களவழி நாற்பது பாடல் பெற்றவன் யார்?

கோச்செங்கணான்

13. சுங்கம் தவிர்த்த சோழன் யார்

குலோத்துங்க சோழன்

14. கடாரம் கொண்டவன் யார்?

இராசேந்திர சோழன்

15. கனகளபன் எனப்பெற்றவன் யார்?

இரண்டாம்குலோத்துங்கன்

16. இரண்டாம்குலோத்துங்கனின் பட்டத்தரசி யார்?

தியாகவல்லி

17. உலா காண்போர் குலோத்துங்கனை இராம பிரானுடன் எங்ஙனம் ஒப்பிட்டனர்?

வில்லொடித்துச் சீதையை மணந்தவன்; கடலுக்குப் பாலமிட்டுச் சீதையை மீட்டவன்

18. சோழன் முத்து மாலையைப் பேதை என்னவாகக் கருதினாள்?

அன்னம்படியும் ஆறு

19. மான் வாழும் மாசில் மதி எது?

வெண் கொற்றக் குடை

20. காமவேள் சூட்டும் கொற்றமுடியனைய கொண்டையாள் யார்?

பெதும்பையாள்

21. குலோத்துங்கனுக்கு அஞ்சிய எமன் எவ்வுருவில் வந்தான்?

பெதும்பை வடிவில்

22. நிருபகுலதுங்கன் யார்?

இரண்டாம் குலோத்துங்கன்

23. மங்கை குலோத்துங்கனிடம் எவற்றைத் தூது விடுத்தாள்?

மான், கிளி, வண்டு, அன்னம், மயில்

24. முருகன் தோய் வள்ளி போன்றவள் யார்?

மங்கை

25. மங்கைப் பருவத்தாள் எந்த நிறத்தில் ஆடை, அணிகள் புனைந்தாள்?

நீலமணி வண்ணம்

26. உலாக் கண்ட மக்கள் கதிரவனாகவும் நிலவாகவும் எவரைக் குறித்தனர்?

சோழன் - சூரியன் மடந்தை- நிலவு

27. மடந்தை மீது அம்பு தொடுத்தபின் மன்மதன் அஞ்சியது ஏன்?

சோழனைத் திருமாலாகவும் மடந்தையைத் திருமகளாகவும் கருதி

28. குலோத்துங்கன் தெரிவைக்கு அளித்த பரிசுகள் எவை?

கற்பகமாலை, பொன்னாடை, பாம்பு வடிவ சுருள்

29. யாழ்க்கொடி யாருக்குரியது?

சிங்களருக்கு

30. பேரிளம்பெண்ணைத் தம் இனமெனக் கருதியவை எவை?

சகோரபட்சி, அன்னம், மயில்

குறுவினா

31. குலோத்துங்கன் தில்லையில் செய்த திருப்பணிகளை விளக்குக.

4.7.3 தில்லையில் செய்த திருப்பணிகள் என்னும்தலைப்பில் அமைந்தவை.

32. வீதி உலாக்காணும் மக்கள் நிலையை எழுதுக

வீதி உலாக் காணும் மக்கள் என்ற தலைப்பில் அமைந்தவை

33. பேதைப் பெண்ணின் தோற்றத்தை எழுதுக.

4.8.1.1 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

34. மன்னனைக் கண்ட பேதையின் செயல்கள் யாவை?

4.8.1.2 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

35. பெதும்பையின் தோற்றப் பொலிவை எழுதுக.

4.8.2.1 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

36. சோழனைக்கண்ட பெதும்பையின் மன நிலையை விளக்குக

4.8.2.2 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

37. மங்கைப் பருவத்தாள் மன்னனிடம் தன் உரிமையை எவ்வாறு உரைக்கின்றாள்?

4.8.3.1 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

38. மங்கை தன்னை எவ்வாறு ஒப்பனை செய்துகொண்டாள்?

4.8.3.2 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

39. மங்கை சோழனிடன் தூது விட்டமையை எழுதுக.

4.8.3.3 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

40. மங்கைப் பருவத்தாள் நிலை கண்ட தோழியர் உரைத்தவை யாவை?

4.8.3.4 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

41. மடந்தை அணிந்த முத்தணிகளை விளக்குக.

4.8.4.1 என்னும் எண்ணிட்ட பகுதியில் அமைந்தவை

42. மடந்தைக்கு இரங்கிய மகளிரின் கூற்றை எழுதுக.

4.8.4.3 என்னும் எண்ணிட்ட பகுதியில் அமைந்தவை

43. அரிவை சோழனைக் காணப் புறப்பட்டமையை எழுதுக.

4.8.5.3 என்னும் எண்ணிட்ட பகுதியில் அமைந்தவை

44. தெரிவை பந்தாடிய தன்மையை எழுதுக

4.8.6.1 என்னும் எண்ணிட்ட பகுதியில் அமைந்தவை

45. தெரிவையின் அழகு நலனை விவரிக்க.

4.8.6.2 என்னும் எண்ணிட்ட பகுதியில் அமைந்தவை

46. பேரிளம்பெண்ணின் எழில் நலனை விவரிக்க.

4.8.7.1என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

பெருவினா

47. சோழர் மரபினை உலா எவ்வாறு கூறும்?

முன்னோர் பெருமை எனும் தலைப்பில் உள்ள செய்திகள்

48. சோழன் வீதி உலாப் புறப்பட்ட சிறப்பை எழுதுக.

குலோத்துங்க சோழன் வீதியுலா வருதல் என்னும் தலைப்பில் அமைந்தவை

49. பேதைப் பருவத்தாளின் செயல்களையும் உணர்வுகளையும் குறித்துக் கட்டுரைக்க.

பேதைப் பருவத்தாள் பற்றிய செய்திகளின் தொகுப்பு

50. பெதும்பையின் எழிலையும் உலாக் கண்ட அவள் நிலையையும் விரித்துரைக்க.

பெதும்பைப் பருவத்தாள் பற்றிய செய்திகளின் தொகுப்பு

51. மங்கையின் அழகையும் தூதுவிடுத்தமையையும் அவள் துயரையும் விளக்குக

மங்கைப் பருவத்தாள் பற்றிய செய்திகளின் தொகுப்பு

52. மடந்தையின் திருநலனையும் காதலுணர்வையும் விளக்குக.

மடந்தைப் பருவத்தாள் பற்றிய செய்திகளின் தொகுப்பு

53. உலாக் காண அரிவை விரைந்து வந்து காதல் கொண்டமையை விளக்குக.

அரிவைப் பருவத்தாள் பற்றிய செய்திகளின் தொகுப்பு

54. பந்தாடும் தெரிவை காதலால் வருந்திய துயரை எழுதுக.

தெரிவைப் பருவத்தாள் பற்றிய செய்திகளின் தொகுப்பு

55. பேரிளம்பெண்ணின் அழகையும் அவளின் செயலையும் எழுதுக.

பேரிளம்பெண் பருவத்தாள் பற்றிய செய்திகளின் தொகுப்பு

## 4.11 மேலும் அறிந்துகொள்ள

தி.வே.கோபாலையர் (ப.ஆ) - இலக்கண விளக்கம் - பொருளதிகாரம் (பாட்டியல்)

பொன். பூலோக சிங்கம் - உலாப் பிரபந்த வளர்ச்சி

நாஞ்சில் நாடன் - சிற்றிலக்கியங்கள்

# கூறு - 5 நந்திக் கலம்பகம் - சொல் விளக்கம் - பாட்டுடைத் தலைவன் - முதல் 20 பாடல்கள்

## 5.1 முன்னுரை

தமிழில் கலம்பகம் புகழ் படைத்த சிற்றிலக்கியம் ஆகும், தொண்ணூற்றாறாகச் சுட்டப்பெறும் பிரபந்தங்களில் கலம்பகமும் ஒன்று. கலம்பகத்தில் அகம் புறம் சார்ந்த பலவகைப் பொருட் கூறுகளும் பலவகை யாப்பும் பல உறுப்புகளும் கலந்து அமைகின்றன. அவ்விலக்கிய வகைகளில் காலத்தால் பழமையானது நந்திக் கலம்பகம் ஆகும்.

## 5.2. நோக்கம்

கலம்பகத்தில் பலவகை உறுப்பும் யாப்பும் கலந்து அந்தாதியில் அமையும் தன்மையைக் கற்பார் உணரலாம். அகப்பொருளும் புறப்பொருளும் கலந்து அமையும் இவ்விலக்கிய வகையுள் சிறந்தது நந்திக்கலம்பகம் ஆகும். இப்பகுதியில் அகப்பொருள் உறுப்பும் புறப்பொருள் உறுப்பும் பாட்டுடைத் தலைவன் பெருமைகளைப் பேசும் கருவியாதலையும் உணரலாம்.

## 5.3 கலம்பகம் - பெயர்க்காரணம்

கலம்பகம் என்பது பலவகையான மலர்களை வரிசைப்பட அமைத்துத் திரட்டி அமைந்த மாலையின் பெயராகும். இதனைத் திருப்பள்ளியெழுச்சியுள் ‘கலம்பகம் புனைந்த அலங்கலந் தொடையல்’ என்வரும் தொடராலும் பெரும் பாணாற்றுப்படையின் உரையில் பல பூக்கள் கலந்து நெருங்கிய கலம்பகமாகிய மாலை’ என்ற நச்சினார்ர்கினியரின் உரைப்பகுதியும் கொண்டு உணரலாம்.

விருந்தெனும் வனப்பிற்குப் ‘புதிதாகத் தொடக்கப்படும் தொடர்நிலை மேற்று’ என்றுரை கூறும் பேராசிரியர் ‘கலம்பகம் முதலாயினவும் சொல்லுப’ என்று கலம்பகத்தைத் தமிழின் புதுவரவாகச் சான்று தருகின்றார். ‘கலப்பு ¸ அகம்’ மெலித்தல் விகாரமாய்க் கலம்பகம் எனப்பெற்றது.

## 5.4 கலம்பக உறுப்புக்கள்

வெண்பாப்பாட்டியல், புயம், தவம், வண்டு, அம்மானை, பாண், மதங்கு, கைக்கிளை, சித்து, ஊசல், களி, மடக்கு, ஊர்;, மறம், காலம் தழை, இரங்கல், சம்பிரதம், தூது ஆகிய பதினெட்டு உறுப்புகளைக் கலம்பகத்திற்குரியன என்று கூறும். நவநீதப் பாட்டியல் 17 உறுப்புக்களையும் பன்னிரு பாட்டியல் 14 உறுப்புக்களையும் கலம்பகத்திற்கு உரியன என்கின்றன. பின்னைய இலக்கணங்கள் குறம், அலர் முதலியவற்றையும்; பின்னைய கலம்பகங்கள் பள்ளு, மடல்,

கொற்றியார், வலைச்சியார், பிச்சியார் யோகினியா, கீரையார், ஆற்றுப்படை, குரவை, பள்ளு, மடல், குறம், திருவடி வகுப்பு போன்றவற்றையும் கலம்பகத்திற்குரிய புதிய உறுப்புகளாகக் காட்டும். திருப்பேரைக் கலம்பகத்தில் 23 உறுப்புகள் உள்ளன.

## 5.5 இலக்கணம்

இறைவனைப் போற்றிப் பாடப்படும் கலம்பகங்களின் செய்யுள் தொகை 100 எனினும் அதற்கும் மேற்பட்ட பாடல் எண்ணிக்கையை உடைய கலம்பகங்கள் தமிழில் உள்ளன. பொதுவாகக் கலம்பகத்தில் முதற்பாடல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாகவும் அடுத்த இரண்டும் முறையே வெண்பாவாகவும் கட்டளைக் கலித்துறையாகவும் அமைந்து ஏனைய பாக்களும் பாவினங்களும் விரவிவரும். கலம்பக நூல் அந்தாதித் தொடையுடன் அமையும்.

## 5.6 தமிழில் கலம்பகம்

கலம்பக நூல்களுள் நந்திக்கலம்பகம் காலத்தால் முந்தையது. காலம் 9ஆம் நூற்றாண்டு. இதனைத் தொடர்ந்து நம்பியாண்டார் நம்பியின் ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம், பிள்ளைபெருமாள் ஐயங்காரின் திருவரங்கக் கலம்பகம், இரட்டைப் புலவர்களின் கச்சிக்கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம், குமரகுருபரின் காசிக்கலம்பகம், மதுரைக்கலம்பகம், கயிலைக்கலம்பகம், சைவ எல்லப்பரின் திருவருணைக் கலம்பகம், சிவப்பிரகாசரின் வெங்கைக்கலம்பகம், வீரமாமுனிவரின் திருக்காவலூர்க் கலம்பகம், வண்ணசரபம் தண்டபாணி சுவாமிகளின் குன்றக்குடிக் கலம்பகம், நெல்லைக் கலம்பகம், வீர கேரளம்புதூர் நவநீத கிருட்டினன் கலம்பகம் சென்னைக் கலம்பகம், பழனிக் கலம்பகம் மயிலாசலக கலம்பகம் கந்தசுவாமி சுவாமிகளின் திருப்பேரூர்க்கலம்பகம் எனக் கலம்பக நூல்கள் 70க்கும் மேற்பட்டுத் தமிழில் தோன்றியுள்ளன

## 5.7 நந்திக் கலம்பகம்

.தெள்ளாறெறிந்த நந்திவர்மன் எனப் போற்றப்படும் நந்திவர்மன் எனும் மன்னனின் சிறப்புகளைப் பாடுவதாக நந்திக் கலம்பகம் அமைந்துள்ளது. இலக்கியச் செறிவும் அணி நயங்களும் அமைந்த இவ்விலக்கியத்தைப் படைத்த ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பிற்காலக் கலம்பக நூல்களுக்கு இதுவே இலக்கியம் படைத்த இலக்கணமாகத் தோன்றிற்று. ஏனைய பாட்டியல் நூல்கள் இலக்கணம் துணை செய்தது.

நந்திக் கலம்பகத்தில் 17 உறுப்புகள் காணப்படுகின்றன. பாடல்கள் பல்வேறு யாப்புகளால் நிறைந்து விளங்குகின்றன. மேலும் ஐந்திணை அகப்பொருள், அதன் துறைகள் அதன் துறைகள் மற்றும் வெட்சி, கரந்தை,

வாகை, நொச்சி, பொதுவியல், கைக்கிளை முதலிய புறத்திணைகளும் துறைகளும் கொண்டதாகக் காணப்படுகின்றது..

தந்திவர்மன் எனும் பல்லவமன்னனின் மகனான நந்திவர்மன் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவ நாட்டை ஆண்டு வந்தவன். தந்திவர்மனுக்குப் பல்வேறு மனைவியர்க்குப் பிறந்த புதல்வர்கள் நால்வர் இருந்ததாகவும் அவனை வெல்ல முடியாத பங்காளிகள் சூழ்ச்சியால் வெல்ல எண்ணி நஞ்சு எழுத்துக்களால் மன்னனைப் பாடிய இலக்கியம் இது என்பர். இக்கருத்தைச் சோமேசர் முதுமொழி வெண்பா

'நந்திக் கலம்பத்தால் மாண்டகதை நாடறியும்' என்றும்,

பொன்னா நுழைவழி போயத்தலை நீட்டும் புலவர் முன்சொல்
கள்ளாரும் செம்சொல் கலம்பகமே கொண்டு காணம் விட்ட
தெள்ளாறை நந்தியெனுந் தொண்டை மானால் தீர்ப்பதற்கு
வள்வார் முரசம் அதித்தாண்ட துந்தொண்டை மண்டலமே

என்று தொண்டை மண்டல சதகமும் சான்று தருகின்றன.

## 5.8 நந்திவர்மன்

நந்திவர்மன் சிறந்த சிவ பக்தனாக விளங்கினான். அவனி நாராயணன், மல்லையர் கோன், கச்சி வளநாடன், தமிழாகரன், உறந்தையர் கோன், உக்ரமகோபன், அரசர் கோமான் கங்கை நாடன், கச்சி நாட்டோன், கங்கை மணாளன், சந்திரகுலப் பிரகாசன், குவலய மார்த்தாண்டன் எனும் சிறப்புப் பெயர்கள் அமைந்திருந்தமையை நந்திக் கலம்பகம் குறிக்கும்

குருக்கோட்டை, தெள்ளாறு, கடம்பூர், பழையாறு, வெள்ளாறு, வெறியலூர் ஆகிய இடங்களில் போரிட்டு வென்றவன். இவனுடைய ஆட்சியில் காஞ்சிபுரம், மாமல்லபுரம், வேங்கடம் உறையூர் ஆகிய நகரங்களும் தொண்டை நாடு தென்னாடு, சோழநாடு ஆகிய நாடுகளும் சிறந்திருந்தன. அகப்பொருளும் புறப்பொருளும் சிறந்த இனிய இலக்கியமாக நந்திக்கலம்பகம் திகழ்கிறது

## 5.9 .நூல் அமைப்பு

நூலின் தொடக்கத்தில் விநாயகர், திருமால் கலைமகள் ஆகிய தெய்வங்களைப் போற்றும் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் உள்ளன. தொடர்ந்து 113 பாடல்கள் அமைந்துள்ளன. இந்நூல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவில் தொடங்கி அடுத்து இரண்டாம் பாடலாக நேரிசைவெண்பா அமைந்து மூன்றாவதாக கட்டளைக் கலித்துறை அமையுமாறு விளங்கும். தொடர்ந்து ஏனைய செய்யுள் வடிவங்களில் பல பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது - இம்மரபு பிற்கால கலம்பகங்களிலிலும் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. அகம், புறம் ஆகியன

விரவி ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் தாழிசை நேரிசை வெண்பா வஞ்சித்துறை போன்ற பல்வேறு பா, பாவினங்களை கொண்டது. முதல் பாடல் தொடங்கி 90 ஆம் பாடல் வரை அந்தாதி நடையில் அமைந்துள்ளது. நந்திவர்மன் வீரம், கொடை, சிறப்பான வெற்றிகளையும் இக்கலம்பகம் தெளிவாக எடுத்தியம்புகிறது.

கடவுள் வாழ்த்தில் முதன்மையாக விநாயகர் கடவுள் போற்றப்படுகிறார். ஆசிரியர் மூவுலகையும் பெற்ற உமையன்னையிடம் சிவபெருமான் முத்தம் தருக எனக் கேட்க அவ்விடத்தில் இருந்து சிறிது அகன்று நின்று சிவன் - உமையம்மை முத்தமிட்டுக் கொள்வதைப் பார்த்து புன்னகை புரிகின்ற விநாயகரின் சிவந்த பாதங்களைத் தலைமேல் அணிவோம் என வணங்குகிறார் .

தொடர்ந்து ஆதிமூலமே என்று அழைத்த கசேந்திரனுக்கு அருள் புரிந்த திருமாலின் பாதங்களை வணங்குபவர்கள் எல்லா நன்மைகளையும் அடைவர் என வணங்குகிறார் ஆசிரியர்.

பின்னர் கலைமகளையும், தென்திசைக் கடவுள் தட்சிணாமூர்த்தியையும், பொதியமலையில் அருளும் அகத்தியரையும், ஐந்து கரத்தோனான கணபதியையும், முப்புரமெரித்த சிவனையும், சூரனை வதம் செய்த முருகப் பெருமானையும், உமையம்மையையும் மனதில் துதிப்பவர் பிறவிப் பிணி நீங்குவார் என்று துதிக்கின்றார்.

## 5.10. நந்திக்கலம்பகம் முதல் 20 பாடல்கள்

### 5.10.1 சிவபெருமானை வேண்டுதல்.

சிவபெருமானைப் போற்றுவதாக அமைந்த மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா நூலின் தொடக்கத்தில் அமைந்துள்ளது.

சிவபெருமானை நோக்கி 'உன் திருவுருவம் நிலமாக, நீராக, காற்றாக, வானாக, தீயாக விளங்கும் என்பர். அவ்வுருவங்கள் மை போலக் கருமையோ? சங்கினை போல் வெண்மையோ? மரகதத்தை போல் பச்சை நிறமானதோ? பொன்னின் செந்நிற வடிவமோ? சொல்ல வேண்டும்' என இறைவன் திருவடிவைச் சுட்டித் தொழுகின்றார் ஆசிரியர். இதனை

மண்டலமாய் அம்பரமாய் மாருதமாய் வார்புனலாய்
ஒண்சுடராய் ஒளிஎன்னும் ஓருருவ மென்றுருவம்
மைவடிவோ வளைவடிவோ மரகதத்தின் திகழ்வடிவோ
செவ்வடிவோ பொன்வடிவோ சிவனே நின் திருமேனி
அருவரையி னகங்குழைய வனலம்பு தெரிந்தவுணர்
பொருமதில்க ளவைமூன்றும் பொன்வித்த புனிதர்க்கும்
குருமணிசே ரணிமுறுவற் குலக்கங்கை நதிபாயத்
திருமுடியைக் கொடுத்தார்க்குஞ் செம்பாகந் திறம்பிற்றே

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

மேலும் மேருமலையை வில்லாகக் கொண்டு தீயுமிழும் அம்பினால் அசுரர்களின் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று கோட்டைகளை அழித்த தூயவன். கங்கை ஆற்றினைச் சடையில் தாங்கியவன். இத்தகைய சிவபெருமானின் மேனியில் உமையம்மை ஒரு பாகமாகக் கொண்டதால் மேனியின் சமபாகம் பெண்ணுரு கொண்டது.

ஒளியுடைய சூலாயுதம் கொண்ட சிவபெருமான் கயிலைமலை, வேதங்கள், குளிர்நிலவு, ஆகாயம் இவற்றை வெற்றிடமாக்கிவிட்டு, பூ உலகை ஆளும் திருமால் போன்ற நந்திவர்மனின் திருமுறையையும், மனத்தையும் உன் இருப்பிடமாகக் கொண்டார் என்று குறிக்கின்றார்

மலைமகளான உமையம்மை பொருந்தித் தோன்ற உடலின் செந்நிறம் மறைந்து தோன்றியது. அந்த மலை போன்ற மார்பில் திருநீற்றை அணிந்தவனே, மதயானைகளை உடைய பல்லவர்களின் அரசனான நந்திவர்மன் உன் சிவந்த அடிகளை வணங்குவதால் அவனுக்குச் செல்வம் பெருகும்படி அருள வேண்டும் என்று வேண்டுகிறார்

மணம் பொருந்திய மலர் அம்புகளை ஏவிய மன்மதனை எரித்த நெற்றிக் கண் பெற்றவனே! செருக்கினால் கயிலைமலையை எடுத்த இராவணனின் பத்து தலைகளையும் நொறுங்கும்படியாகக் கால் விரல் ஒன்றால் ஊன்றினை என்று போற்றுகின்றார்.

‘செழுமலர் துதைதரு தெரிகணை மதனன
தெழிலுடல் பொடிபட வெரிதரு நுதலினை
அருவரை அடிஎழு முடுகிய அவுணனது
ஒருவது முடியிற ஒருவிரல் நிறுவினை’

என்னும் பாடலடிகளில் காணலாம்

மேலும் சிவனின் தோற்றம் பற்றிக் கூறும்போது சிவபெருமானே! சடை முடியில் கொன்றை மலர்களையும், வெள்ள்ளெருக்குகு மலர்களையும் கலந்து மாலையாகச் சூடி இடையே இளமதியையும் வைத்தாய். புலியைக் கொன்று புள்ளிகள் உடைய தோலை ஆடையாக உடுத்திக் கொண்டாய். தீயொத்த விஷம் கக்கும் கரிய பாம்பை இடையில் அணிந்ததாய். நீர்ப்பெருக்கு ஒத்த குருதி பெருக யானையைக் கொன்று அதன் தோலை ஆடையாக அணிந்தாய் .

சிவபெருமானே! பாற்கடல் கடைந்தபோது தோன்றிய ஆலகால நஞ்சினை உண்டாய். அவ்விஷமானது எண்திசைகளும் அதிர்ந்து நடுங்கத் தோன்றியது. அன்று மார்க்கண்டேயனுக்காக நீ ஒரு உதைத்த கூற்றுவன்

உயிர்கள் எல்லாம் அஞ்சத் தோன்றினான் என்கிறார். எல்லாமாக சிவபெருமான் இருத்தலை

அனைத்துலகிற் பிறப்புநீ, அனைத்துலகி லிறப்புநீ,
யனைத்துலகிற் றுன்பமுநீ, அனைத்துலகி லின்பமுநீ,
வானோர்க்குத் தாதையுநீ, வந்தோர்க்குத் தந்தையுநீ,
யேனோர்குத் தலைவனுநீ, யெவ்வுயிர்க்கு மிறைவனுநீ.

என்னும் அடிகளில் உலக உயிர் தோன்றக் காரணனாக இருப்பவனும் நீ, ஊழிக்காலத்தில் அவற்றின் நன்மை தீமைக்கேற்ப அழிவைத் தருபவனும் நீ, உலக உயிர்களுக்குத் துன்பங்களையும் இன்பங்களையும் கொடுப்பவன் நீ, தேவர்களைப் படைத்தவனும், தன்னை அடைக்கலமாக வந்தவர்களைக் கைவிடாது தந்தைபோல் காப்பவன் நீ உலகோர்க்குத் தலைவன் நீ, உயிர்களுக்கு இறைவன் நீ என விளக்குவார்.

உலகின் இறுதிக்காலமான ஊழிக்காலமாகவும், அனைத்து உலகங்களாகவும், உருவமுள்ள பொருட்கள் எல்லாமாகவும் உருவமற்ற தன்மையனாகவும், அமுதமாகவும், அறமாகவும், வீரமாகவும் விளங்கும் தன்மை பெற்றவன் சிவபெருமான்.

ஒப்புயர்வற்ற தனிப்பெருங்கடவுள் ஆகிய சிவபெருமான் எங்கள் அரசன், மாமல்லபுர அரசன் மயிலையைக் காப்பவன், பல்லவா குலத்தோன்றல், பசுமையான மாலை அணிந்தவன் என்றெல்லாம் போற்றப்படும் நந்தி வர்மன் வடக்கே இமயமும் தெற்கே பொதியமலையும் ஒரே வெண் கொற்றக் குடையின் கீழ் இருந்து ஆள்வதற்கு இடபக்கொடியோடு பல வெற்றிகளைப் பெற அருள் செய்ய வேண்டுமெனச் சிவனை வணங்குவோம் என ஆசிரியர் இறைவனைப் பராவுகின்றார். இதனை

ஒருபெருங் கடவுணிற் பரவுது மெங்கோன்
மல்லை வேந்தன் மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி
வடவரை யளவுந் தென்பொதி யளவும்
விடையுடன் மங்கல விசயமு நடப்ப
வொருபெருந் தனிக்குடை நீழல்
அரசு வீற்றிருக்க வருளுக வெனவே.

என்னும் அடிகளால் உணரலாம்

### 5.10.2. தன் மெலிவு கண்டு தலைவி இரங்குதல்:

நேரிசை வெண்பாவில் அமைந்த இப்பாடலில் தலைவி தன்னுடைய மெலிவைக் கண்டு இரங்கிக் கூறுகின்றாள். தன் வளைகள் முன்பு செறிந்திருந்தமையைக் கூறித் தன்னிலைக்கு இரங்கிப் பேசுகின்றாள்.

எனதே கைவளையும் என்னதே மன்னர்

சினவேறு செந்தனிக்கோ னந்தி - யினவேழங்
கோமறுகிற் சீறிக் குருக்கோட்டை வென்றாடும்
பூமருகிற் போகாப் பொழுது.

சிறந்த செங்கோல் கொண்ட நந்திவர்;மன் மன்னர்களுள் ஆண்சிங்கம் ஒத்தவன். அவனுடைய களிறுகள் பகைமன்னர்களின் தெருக்களில் சினத்தோடு திரிந்து குருக்கோட்டையை வென்றன. அவ்வெற்றியைக் கொண்டாடும் தெருக்களில் நான் செல்லாதவரை என் உடைகளும் வளையல்களும் எனக்கு உடைமைகளாக இருந்தன. ஆனால் அவனைக் கண்ட பின்பு அவை என்னிடமிருந்து நீங்கின.

### 5.10.3.குருகினைத் தூதனுப்பல்

தூது என்னும் கலம்பக உறுப்பில் கட்டளைக் கலித்துறையில் அமைந்த பாடலாகிய இது நாரையைத் தலைவனாகிய நந்திவர்மனிடம் தூது அனுப்பவதைப் பொருளாக உடையது.

நாரையைக் கண்டு தலைவி, "நாரையே மாலைப் பொழுதின் வரவைக் கண்டு அன்னை தூற்றுகின்றாள். நூலறிவு மிக்க நந்திவர்மனாகிய மாமல்லைக் கடற்கரைத் தலைவனுக்கு உண்டான குற்றத்தை நீ அறிந்தாய். அதனால் அவனிடம் சென்று நான் அவனையே நினைத்து வணங்குகின்றேன் என்று சொல்வாயாக. இவ்வாறு இருத்தல் தலைவனின் தகுதிக்கு இழுக்கு என்றும் சொல்" என்கிறாள்.

பொழுதுகண் டாயதிர் கின்றது போகநம் பொய்யற்கென்றுந்
தொழுதுகொண் டேனென்று சொல்லுகண் டாய்தொல்லை நூல்வரம்பு
முழுதுகண் டானந்தி மல்லையங் கானல் முதல்வனுக்குப்
பழுதுகண் டாயிதைப் போய்ப்பகர் வாய்சிறைப் பைங்குருகே.

### 5.10.4. தோழி கூறுதல்

தோழி தலைவிக்கு அருளுமாறு தலைவனிடம் வேண்டுவதைப் பொருளாக உடையது.

மதங்கொண்ட யானைகளையும் செங்கோலையும் உடைய நந்திவர்மனே! பாண்டிய நாடு சென்று வாளால் பகைவரைச் சிதைத்து, கண்களால் சினந்து நோக்கிய வீரமுடைய தொண்டைநாட்டு மன்னனே! பனிக்காலத்தில் நாரைகள் அஞ்சும் இரவில் பனித்துளிகளைத் தழுவி வரும் வாடைக்காற்றுக்கு அஞ்சும் தலைவியைப் பார்த்து அஞ்சாதே என்று நீ கூறினால், அதனால் பழிச்சொல் உண்டாகுமோ என்று சொல்வாயாக.

### 5.10.5 கடுவாய்ப்பறை நந்திபுகழ் சாற்றுதல்

நந்திவர்மனின் பறையின் பெயர் கடுவாய்ப்பறை ஆகும். அது மன்னன் புகழைப் பேசுகின்றது. தொண்டை நாடும்சோழநாடும் ஆளும் நந்திவர்மன் வற்றாத கடலை உடையவன். அவனிடம் தோற்ற மன்னர்களே! இழந்த

நாட்டையும் செல்வங்களையும் இரவலாராகிப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று நிலைபெற்ற புகழை உடைய கடுவாய்ப்பறை கூறும். இதனை

'தொண்டை வேந்தன் சோணாடன்
தொல்நீர் அலங்கல் முந்நீரும்
கொண்ட வேந்தர் கோனந்தி
கொற்ற வாயில் முற்றத்தே
விண்ட வேந்தர் தம்நாடும்
வீரத் திருவும் எம்கோனைக்
கண்ட வேந்தர்கொண்மின்கள்
என்னும் கன்னிக் கடுவாயே'

என்ற பாடலடிகள் உணர்த்தி நிற்கின்றன

## 5.10.6 செவிலி கூற்று

தலைவன் உலாக்கண்ட செவிலி அதனைக் கண்டால் தலைவி காதலுற்று வருந்துவாள் என்றஞ்சி ஊசலாடாதே என்று கூறியது

செவிலி நந்திவர்மன் உலா வரும் நேரமாதலால் தன் மகளை இல்லத்தின் உள்ளே அழைக்கின்றாள். அவள், 'மகளே! கடுவாய் என்றும் பறை ஒலிக்க, சங்குகள் முழங்க, மன்னர்கள் வணங்கி நிற்க நந்திவர்மன் அயிராவதம் போன்ற யானை மீதில் உலா வருவான். எனவே உன்னை ஐயுறும் பெண்கள் இருக்கும் இவ்விடத்தில் ஊசலில் அமர்ந்து விளையாடாதே' என்கிறாள்.

கடுவா யிரட்ட வளைவிம்ம மன்னர் கழல்சூட வங்கண் மறுகே
அடுவார் மருப்பி னயிரா வதத்தின் அடுபோர் செய் நந்தி வருமே
கொடுவார் புனத்து நகுவார் படைக்கண் மடவா ரிடைக்குண் மனமே
வடுவா யிருக்க மகளேயிம் முன்றின் மணியூச லாடன் மறவே.

## 5.10.7 புய வகுப்பு

பாட்டுடைத் தலைவனின் தோளைப் புகழ்ந்து பாடுதல் புயவகுப்பு எனும் கலம்பக உறுப்பாகும்.

அழகியவனே! மணம் மிக்க மலர்களை மணிமுடியணிந்த தன்மை உடையன உன் இரு தோள்கள். அவை வீரத்தையும் மதத்தையும் கொண்ட யானைகளைத் திசைதோறும் நிறுத்தியது போன்றன. முத்துப் பற்கள் கொண்ட மகளிரது மனத்தை மகிழச் செய்வன, மயங்க செய்வன வலிமை உடைய மன்னர்களை அச்சுறுத்துவன. மணம் நிறை மலர்களுடைய மகளிரைத் தழுவக் கூடியன. வலிமை நிறைந்தன மிக்க ஒளியையும் பாக்களால் புகழப்பெறும் நிறைந்த புகழையும் உடையன.

மறமத கரிதிசை நிறுவின மணிநகை யவர்மன நகுவன

விறலர சர்கண்மன நெகிழ்வன விரைமலர் களிமுலை பொருவன
திறலுடை யன்தொடை புகழ்வன திகழொளி யனபுகழ் ததைவன
நறுமல ரணியணி முடியன நயபர நினதிரு புயமதே.

குறிப்புகள்

### 5.10.8 இரங்கல்

தலைவன் பிரிவால் வருந்தும் தலைவி வாடை க்காற்றினால் நேரும் துயரஞ்சி இரங்கிக் கூறுவது இப்பாடலின் பொருளாகும்.

மென்கொங்கைகளின் இன்பம் பெறும் தோளுடையவன் நந்திவர்மன். அவனுடைய நகரான காஞ்சிபுரத்தைச் சூழ்ந்துள்ள குளங்களில் மலர்ந்திருக்கும் மலர்களின் மகரந்தத் துகள்களைக் கவர்ந்து கொண்ட வாடைக்காற்று காதலர்கள் அஞ்சும் வண்ணம் ஊருக்குள் புகுந்தது.

புயங்களிற் பூவைமார் பொங்கு கொங்கையின்
நயங்கொளத் தகுபுகழ் நந்தி கச்சிசூழ்
கயங்களிற் கடிமலர் துழாவிக் காமுகர்
பயங்கொளப் புகுந்தது பருவ வாடையே.

### 5.10.9 அலர்

இப்பாடல் பெண்பாற் கைக்கிளையாகும். தலைவன் மேல் கொண்ட காதலால் எழுந்த அலரையும் அலர் தூற்றிய ஊரையும் தலைவி பழித்துரைக்கின்றாள்.

‘வாடை நோக வீச மால்அம் மாரன் வாளி தூவுமால்
ஆடல் ஓதம் ஆர்க்கு மால்என் ஆவிகாக்க வல்லனோ
ஏடு லாவு மாலை சேரிராசன் மல்லை நந்திதோள்
கூடினால் அலர் வராது கொங்கு விம்மு கோதையே’

என்ற பாடல் வாயிலாகத் தலைவி, “தோழியே வாடைக் காற்று வீசித் துன்பத்தை அதிகரிக்கின்றது. மன்மதன் மலரம்புகளை எம்மேல் வீசுகிறான். கடலும் தண்ணிய அலையை வீசி ஆசையலைகளை எழுப்புகிறது. மணமிகுந்த மலரணிந்த நந்திர்மனின் தோள்களை நான் தழுவினால் பழிச்சொல் உண்டாகாது. அவன் மேல் கொண்ட காதலால் துயர்ப்படும் என் உயிரைக் காப்பானா?” என்கிறாள். தலைவன் வந்து கூடினால் அலர் நேராது என்பதால் அவன் கூடாமையால் நேர்ந்த அலரை மொழிகின்றாள்.

### 5.10.10 நெஞ்சொடு கிளத்தல்

பொருள் தேடிச் செல்லும் தலைவன் தன் நெஞ்சினைக் கண்டு, ‘அறியாமை உடைய என் நெஞ்சே! பகைவரைக் கொல்லும் சிறந்த வேல்படையை உடைய நந்திவர்மனின் காஞ்சிபுரம் என்னும் வளம் நிறைந்த நாட்டில் உள்ள மங்கையோடு சேர்கின்றாய். அதனால் அவளது மாலை வாடினால்

நீயும் வாடுகின்றாய். அவளின் கொங்கைகள் மகிழ்ச்சியில் பூரித்தால் நீயும் பூரிக்கின்றாய். அவள் புன்னகை ஒளிகுன்றி வெறுத்தால் நீயும் வெறுத்துத் தோன்றுகின்றாய். அவளின் இடை மெலிந்தால் நீயும் மெலிவாயாக' என்கிறான். இதனால் மனத்தின் நிலையுரைத்துச் செலவழுங்கக் கருதினான் எனலாம்

கோதை சோரிற் சோர் கொங்கை விம்மில் விம்மு குறுமுறுவற்
சோதி வெளுக்கில் வெளுமருங்குல் துவளி னீயுங் துவள்கண்டாய்
காது நெடுவேற் படைநந்தி கண்டன் கச்சி வளநாட்டு
மாத ரிவரோ டுறுகின்றாய் வாழி மற்றென் மடநெஞ்சே.

## 5.10.11 தோழி தலைவிக்காக மாலை வேண்டுதல்

தலைவி தலைவன் மேல் கொண்ட ஒரு தலைக் காதலால் வருந்தி நிற்கின்றாள். அவள் பொருட்டு நந்திவர்மனிடம் தோழி மாலை வேண்டுவதைப் பொருளாக உடையது இப்பாடல்.

"காவிரி பாயும் வளமுடைய வயல்களும், வறுமையில்லாதபடி மக்களுக்கு நிழல் தரும் வெண்கொற்றக் குடையும் கொண்டவனே! இடபக்குறியை மண் முத்திரையிட்டு ஓலைகளை அனுப்பும் விடேல் விடுகு என்றும் சிறப்புப் பெயர் பெற்ற நந்திவர்மனே, தீயைப்போல் நிலவொளி வருத்தலும் துன்பத்தால் மனம் வாடவும் உறக்கமில்லா கண்களோடும் வருந்தும் தலைவிக்கு நீ தொண்டை மாலையை அருளாது உள்ளாயே" என்று தோழி தலைவிக்காகத் தலைவனிடம் மாலையை வேண்டுகிறாள்.

நெஞ்சாகுல முற்றிங னேமெலிய
நிலவின் கதிர் நீளெரி யாய்விரியத்
தூஞ்சாநய னத்தொடு சொருமிவட்
கருளாதொழி கின்றது தொண்டைகொலோ
செஞ்சாலி வயற்படர் காவிரிசூழ்
திருநாடுடை நந்தி சினக்கலியின்
வெஞ்சாயன் மறைத்த தனிக்குடையான்
விடைமண்பொறி யோலை விடேல்விடுகே.

## 5.10.12 படைவீரன் நந்திவர்மன் வீரச் சிறப்பு கூறல்

நந்திவர்மனை எதிர்த்துப் போரிடக் கருதும் மன்னர்களைக் கண்ட படைவீரன், 'படையினை உடைய மன்னர்களே! எங்கள் அரசனிடம் சினம் கொண்டெதிர்த்தால் தோற்று விடுவீர்கள். அதனால் நீவிர் உம் நாட்டை இழப்பீர்களோ அல்லது திறைப் பொருள் பணிந்து கொடுப்பீர்களோ, காட்டுத்தீயில் உயிரை விடுவீர்களோ அல்லது ஐராவதம் போன்ற நந்திவர்மனின் யானையிடம் இறப்பீர்களோ இவற்றுள் உங்களின் எண்ணம் யாதோ?' என்று கூறுவதன் மூலம் எச்சரிக்கை விடுக்கின்றான்.

விடுதிர்கொல் லோவள நாடுடை வீரரசற்கு முன்னின்று
இடுதிர்கொல் லோபண் டிறுக்குந் தீறையெரி கானத் தும்மை
அடுதிர்கொல் லோதிற னந்தியங் கோனயி ராவதத்திற்
படுதிர்கொல் லோபடை மன்னீரென் னாமுங்கள் பாவனையே.

**5.10.13 கார் - தோழி கூற்று**

கார் என்னும் கலம்பக உறுப்பைச் சார்ந்து பொருட் பிரிவெண்ணிச் சென்ற தலைவன் தான் வருவதாகச் சொன்ன காலம் வந்தும் அவன் வராமைக்கு வந்தும் தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறுவதாக இப்பாடல் அமைகின்றது.

தோழி தலைவியை நோக்கி, 'விடேல் விடுகு என அழைக்கப்படும் நந்திவர்மனின் முரசு முழங்குவதைப் போன்று கார்கால இடி முழங்குகின்றது. இனி உன் கூந்தல் சடை விழாத வண்ணம் பொலிவுறும், கண்ணீரால் உன் ஆடை நனையாது, எனவே தலைவன் விரைவில் வந்து விடுவான் கலங்காதே என்கிறாள். இதனை,

'வனைவார் கழல் வேணியும் வாடைகணீர்
நனைவார் துகிலும் இவை நாளும் இரா'

என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன.

**5.10.14 யானை மறம்**

தும்பைத்திணையின் ஒரு துறை யானை மறத்தைச் சார்ந்து நந்திவர்மனின் யானைகளின் வீரத்தைப் பேசுகின்றது இப்பாட்டு.

கட்டப்பெற்ற திருமாலுக்கு நிகரானவன் நந்திவர்மன். அவனுடைய யானைகள் அதிர்கின்ற ஒலியினை உடைய மணிகளால் கட்டப்பட்டுள்ளன. யானையின் தந்தங்களில் வயிரப்பூண் போர் செய்வதற்காக அணிவிக்கப்பட்டு விட்டது. அதனால் மாளிகைகள் இடிந்து அழியப்போவது மதுரையோ? சோழனின் நகரமோ? எந்த ஊரோ அறிய முடியவில்லை.

அதிர்குரல மணிநெடுந்தே ரவனிநா ரணன்களிற்றில்
கதிரொளிய வெண்மருப்புக் கனவயிரஞ் செறிந்ததான்
மதுரைகொலோ வடுபுலிக்கோ னகரிகொலோ மாளிகை சாய்ந்
தெதிரெதிரே கெடநின்ற தெவ்வூர்கோ லறியோமால

**.5.10.15. நந்திவர்மனின் பாதச் சிறப்பு:**

மிகுதியான யானைகளை உடையவன் பல்லவன் நந்திவர்மன். அவனுடைய பாதங்களின் கீழே நந்திவர்மன் பாதம்பட்ட அரச வீதிகளில் ஒளி பொருந்திய பொன்னால் செய்யப்பட்ட வீரக்கழல் அணிந்த அரசர்கள் தன் முடியில் சூடிக் கொள்ளும் தாளிப்புல் என்னும் அருகம்புல்லைச் சென்று காணலாம் என்று பாடுவதன் மூலம் பலரும் பணியும் திருவடிகளின் பெருமை பேசப்படுகின்றது.

'ஓம மறைவாண ரொண்பொற் கழல்வேந்தர்
தாம முடிக்கணிந்த தாளிப்புற் - கோமறுகிற்
பாவடிக்கீழ்ப் பல்யானைப் பல்லவர்கோ னந்திதன்
சேவடிக்கீழ்ச் காணலாஞ் சென்று

## 5.10.16. யானை வீரம

இப்பாடலும் யானையின் வீரத்தைக் கூறும் தும்பைத் திணைத் துறையான யானை மறத்தில் அமைந்தது. நந்திவர்மன் திருவஞ்சைக் களத்தின் மீது படையெடுத்துச் சென்றான். அவனுடைய போர் யானைகளின் கண்கள் சினத்தால் சிவந்தமை கண்ட பகைவர் செய்வதறியாது திகைத்தனர். நந்திவர்மன் பகைவரை எளிதாக அழித்தான். இப்போது அவன் பார்வை குருக்கோட்டை மீது செல்கின்றது. எனவே திருவஞ்சைக்களம் அடைந்த நிலையைக் குருக்கோட்டையும் அடையும்.

## 5.10.17.நந்திவர்மனின் பெருமைகள்

மேகங்கள் பொழியும் மணிகளையும், மூங்கில்கள் தந்த முத்துக்களையும், நெற்கதிர்களையும் கொண்டு ஊர் யாவும் வளம் பெறக் காவிரி பாயும் நாட்டை உடையவன் நந்திவர்மன். நிலமகள் மற்றும் திருமகள் உரிமைகளைப் பிறர்க்கன்றித் தானே பெற்றவன். அவன் பாதம் பணியாதவர்கள் பின்னர் வானுலகை ஆள்பவர்கள் ஆவர் என ஆசிரியர் நந்தி வர்மனைப் புகழ்கின்றார். இதனை

பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு பருமணி பகராநெற்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு திழிதரு காவிரி வளநாடா
நிதிதரு கவிகையு நிலமக ளுரிமையு மிவையிவை யுடைநந்தி
மதியிலி யரசர்நின் மலரடி பணிகிலர் வானக மாள் வாரே.

என்னும் பாடலால் அறியலாம்

## 5.10.18. மடல்

தலைவியை அடைய முடியாத தலைவன் மடலேறத் துணிதலைப் பொருளாக உடையது மடல் என்னும் துறையாகும்.

தலைவன், 'மிகுந்த படைவீரர்களை உடைய நந்திவர்மன். அவன் தோளில் தேன் நிறைந்த மலர்களை உடைய கோவைமாலை தவழும். அந்தக்கோவையின் சிவந்த கனி போன்ற வாயினை உடைய மகளிர், வாள் போன்ற கண்களால் மயக்கிய காதல் நோயிலிருந்து இருந்து மீள்வதற்கு, பனைமடலில் ஆன தேரில் ஏறுதலே தக்கது' என்கிறான்.

ஆட்குலாங் கடற்படை யவனிநாரணன்
றோட்குலா மதுமலர்த் தொண்டை வாய்ச்சியர்
வாட்குலாங் கண்ணினால் வளைத்த மம்மர்நோய்
மீட்கலா மடல்கையில் விரவு மாயினே.

### 5.10.19 நந்திவர்மனின் மாலையை வேண்டுதல்

தம்மேல் பகை கொண்ட அரசர்கள் அனைவரும் மண்ணுலகைத் துறந்து விண்ணுலகை அடையும் வண்ணம் வெள்ளாளாற்றில் போர் புரிந்து வெற்றிபெற்ற நந்திவர்மனின் தொண்டை மாலையை எவ்வாறாயினும் அடைய முயலும் மகளிர் பலர். காதல் நோயால் வாடைக் காற்று பட்டுத் துன்புறுபவர்கள் பலராவர். பகைவரை வருத்தித் துன்பத்தைக் கொடுக்கும் நந்திவர்மனின் செங்கோல் நடுநிலையானது என்று கூறுகின்றனர். ஆனால் அச்செங்கோல் நமக்குத் துன்பத்தைத் தருகிறது. அதனால் நாம் தொண்டை மாலையை எதிர்நோக்கி இருத்தல் நல்லதாகும். இதனை,

விரவாத மன்னரெல்லாம் விண்ணேற
வெள்ளாற்று வெகுண்டோன் தொண்டைக்கு
இரவாத பரிசெல்லாம் இரந்தேற்றும்
பாவைமா ரெல்லீர் வாடை
வரவாதை உற்றிருந்து வருந்துவார்
பலரென்னும் வாழி வாழி
பரவாதை நந்திசெங்கோல் அதுவாகில்
அதுபார்க்கும் பரிசு நன்றே

என்ற பாடல் உணர்த்துகிறது

### 5.10.20. தலைவன் கூற்று

தலைவியைப் பிரிந்திருக்கும் தலைவன் தென்றல், நிலா இவற்றின் தன்மையால் துயரம் கொண்டு தனக்குள்பேசுவதைப் பொருளாக உடையது.

‘இரவு நெடியதாக இருக்கிறது. தென்றல் காற்று துன்பம் தருவதாக இருக்கிறது. நிலவின் ஒளி தீயெனச் சுடுகிறது. பேதையாகிய நான் என்ன செய்வேன். ஏழு உலகங்களையும் திருமால் தன் பாதங்களால் அளந்தான். அவனைப் போல் உள்ளவனும் அடல் உக்ரம கோபனாகிய நந்திவர்மனின் பகைவர்கள் தங்கள்; மனைவியைப் பிரிந்து வருத்தம் கொண்டு இரவுப்பொழுதில் இருப்பதைப்போல நானும் உறங்காமல் தவிக்கின்றேன். என் மனைவியின் மார்பில் உறங்குவதை விட்டு எவ்வாறு நான் தூங்க இயலும்’ என்று தலைவன் துயருற்றுப் புலம்புகிறான்.

## 5.11 தொகுத்துக் காண்போம்

பல்வகைப் பொருளாலும் யாப்பாலும் கலம்பகம் எனப்பெயர் பெறுதலை உணரமுடிகின்றது. கலம்பத்தின் அமைப்பு பற்றியும் அறிந்துகொள்ள முடிகின்றது. நந்தி வர்மனின் வீரம்,கொடை மற்றும் பெருமைகளைக் கூறும் ஒப்பற்ற இலக்கியமாக நந்திக் கலம்பகம் திகழ்வதை அறிந்துகொள்ளமுடிகின்றது. அலர், கார், மடல் போன்ற அக

இலக்கியச் செய்திகளும் யானை வீரம், கடுவாய்ப்பறை போன்றவற்றால் நந்திவர்மனின் புகழ் பேசப்படுவதையும் இப்பகுதியால் அறிய முடிகின்றது.



## 5.12 தன் மதிப்பீட்டு வினா விடைகள்

இரு மதிப்பெண் வினா விடைகள்

1. கலம்பகம் -பெயர்க்காரணம் தருக.

கலப்பு - அகம். பல உறுப்புகள் கலந்து, கதம்ப மாலை அமையும் இலக்கியம்

3. கலம்பக உறுப்புக்கள் நான்கனைக் கூறுக.

கார், அலர், மடல், மடக்கு, வலைச்சியார், கொற்றியார், யானை மறம், பாண்

4. நந்திவர்மனின் வேறுபெயர்களைச் சுட்டுக.

அவனி நாராயணன், மல்லையர் கோன், கச்சி வளநாடன், தமிழாகரன், உறந்தையர் கோன், உக்ரமகோபன், அரசர் கோமான் கங்கை நாடன், கச்சி நாட்டோன், கங்கை மணாளன், சந்திரகுலப் பிரகாசன், குவலய மார்த்தாண்டன்

குறு வினா

5. கலம்பகத்தின் இலக்க்கணத்தையும் உறுப்புக்களையும் விளக்குக.

5.3, 5.4., 5.5 என்ற எண்ணிட்ட பத்திகளின் செய்திகள்

6. யானைமறம் குறித்து நந்திக் கலம்பகத்தின்வழி எழுதுக.

5.10.14, 5.10.16 என்ற எண்ணிட்ட பத்திகளின் செய்திகள்

பெருவினா

7. சிவபெருமானிடம் நந்திக் கலம்பக ஆசிரியர் வேண்டும் திறத்தை விளக்குக.

5.10.1 என்ற எண்ணிட்ட பத்திகளின் செய்திகள்

8. நந்திக் கலம்பக்த்தில் காணலாகும் காதலுணர்வை அகமாந்தர் கூற்று வழி விவரிக்க.

5.10.2, 5.10.3, 5.10.4 , 5.10.6 , 5.10.8 , 5.10.9, 5.10.10 , 5.10.11, 5.10.13, 5.10.18, 5.10.19 ஆகிய எண்ணிட்ட பாடல்களின் கருத்துக்கள்

9. நந்திக் கலம்பகம் உணர்த்தும் நந்தி வர்மனின் வீரத்தையும் கொடையையும் புலப்ப்படுத்துக.

5.10.5, 5.10..7, 5.10.12, 5.10.14, 5.10.15, 5.10.16, 5.10.17 ஆகிய எண்ணிட்ட பாடல்களின் கருத்துக்கள்

## 5.13 மேலும் அறிந்துகொள்ள



மருதூர் ச.அரங்கராசன் - தமிழில் பாட்டியல் நூல்கள்

எஸ்.சௌந்தரபாண்டியன் - தமிழில் கலம்பக இலக்கியம்

# கூறு -6நந்திக்கலம்பகம் - சொல் விளக்கம் - பாட்டுடைத் தலைவன் - (21 முதல் 45 பாடல்கள்)

## 6.1.முன்னுரை

நந்திவர்மன் புகழைப்பேசும் இலக்கியமான நந்திக் கலம்பகத்தில் பின்வரும்பகுதி குடையின் சிறப்பு, பாண் பெற்ற பரிசில் போன்ற புறத்துறைகளையும் இயலிடங்கூறல், செலவழுங்கல் போன்ற அகத்துறைகளையும் கொண்டது.

## 6.2. நோக்கம்

அகத்துறைகளும் புறத்துறைகளும் பாட்டுடைத்தலைவர் பெருமையைப் பேசுவதற்கு உத்திகளாக அமைவதை நந்திக் கலம்பகத்தைக் கற்போர் உணரலாம். நந்திவர்மன் மீது காதல் கொண்ட மகளிர் பெறும் காதல் நோயின் பல்வேறு கூறுகளையும் அறிந்துணரலாம். மேலும் நந்திவர்மனின் போர், வீரம், கொடை ஆகிய செய்திகள் கலம்பக உறுப்புக்களால் விளக்கம் பெறுவதையும் உணரலாம்

## 6.3. நந்திக் கலம்பகம் (21 முதல் 45 வரையிலான பாடல்கள்)

### 6.3.1. குடை மங்கலம் (21)

அரசன் மக்களுக்குத் தண்ணிய ஆட்சி செய்வதன் அடையாளமாக அவனுடைய வெண்கொற்றக்குடை பாராட்டப்பெறும் இத்துறை குடை மங்கலம் எனப்படும். வறியவருக்குத் துணையான நந்திவர்மனின் குளிர்ந்த நிழல் தரும் வெண்கொற்றக் குடை இவ்வுலகம் உள்ளவரை என்றும் நிலைபெற்று விளங்குவதாகுக என்ற கருத்தில் இப்பாட்டு அமைகின்றது.

“ஏழை மார்துணை வாழி நந்திதண்
நிழல் வெண்குடை ஊழி நிற்கவே“

என்னும் பாடலடிகள் உணர்த்தி நிற்கின்றன.

### 6.3.2. செவிலி கூற்று (22)

இது தன் மகளின் நிலையை எண்ணிச் செவிலி பேசுவதாக அமைந்த பாட்டு ஆகும்.

செவிலி, ‘நந்திவர்மன், பகைவர்கள் பணிந்துநிற்க வெண்கொற்றக் குடையோடு நெருங்கி நிற்கக் கூடிய பெரிய வாயில்கள் உடைய அரண்மனையைக் கொண்டவன், காஞ்சியை ஆள்பவன் அழகிய புருவங்கள்கொண்ட பெண்கள் விரும்பித் தழுவும் தோள்கள் உடையவன். அவனி நாராயணன் என்று புகழப்படுபவன். அத்தகைய தலைவனிடம் என் மகளுக்கு அவன் தொண்டைமாலையால் உண்டான துயரத்தைக் கூறினால் அவளுக்கு இவ்வுலகத்தை கொடுப்பானோ? என்கிறாள் .

நிற்க மன்னவர் நிரந்த வெண்குடை மிடைந்த நீள்கடை நெடுந்தகை
விற்கொ ணன்னுதன் மடந்தை மார்மிக முயங்கு தோளவனி நாரணன்
கற்கொள் வார்மதிற் கச்சி நந்தி நலங்கொ ளன்னவ னலங்கன்மே
லொற்க மென்மக ளுரைசெய் தோவுல களிப்ப னித்திற னுரைத்திடே.

### 6.3.3 பாண் (23)

பாண் என்பது கலம்பக உறுப்புகளுள் ஒன்று. பாணனை விளித்தோ அவன் பெற்ற பேறுகளைக் குறித்தோ அமைந்து பாணனைப் பொருளாக உடைய உறுப்பு. இப்பாடல் நந்திவர்மன் அவையில் பாணன் பெற்ற சிறப்புப் பேசப்படுகின்றது.

பாணன் முன்பு நைந்துபோன ஆடையில் ஏற்பட்ட கிழிசலால் கால்கள் தெரியும்படி வாயில்கள் பல சென்று பொருள் கேட்டு அலைந்தான். ஆனால் இப்போது நந்திவர்மனைக் கண்டு தன் குறைகளைக் கூறி இரந்தமையால் நிறைந்த மலர்களால் பொலிவுடன் விளங்கும் கொன்றை மரம்போல விளங்குகின்றான். அவன் பல்லவ மன்னன் நந்திவர்மனின் புகழைப் பாடினானோ? எனக் கண்டோர் பாணன் பெற்ற பரிசில்நிலை குறித்துக் கூறினர்.

உரைவரம் பிகந்த வுயர்புகழ்ப் பல்லவன்
அரசர் கோமா னடுபேர் நந்தி
மாவெள் ளாற்று மேவலர்க் கடந்த
செருவே லுயர்வு பாடினன் கொல்லோ
நெருநற் றுணியரைச் சுற்றிப்
பரடு திறப்பத் தன்னாற் பல்கடை
திரிந்த பாண னறுந்தார்ப் பெற்றிக்
காஅர் தளிர்த்த கானக் கொன்றையின்
பதுப்பூ பொலன்கல னணிந்து
விளங்கொளி யானன னிப்போ
திடங்களி யானை யெருத்தமிசை யன்னே.

### 6.3.4. இயலிடங் கூறல் (24)

பாங்கற் கூட்டத்தின் ஒருதுறை இயலிடங்கூறல் ஆகும். தலைவன் பாங்கனிடம் தலைவியின் அழகும் இடமும் கூறுவது இதன் பொருளாகும்.

நந்திவர்மன் மக்களுக்கு உணவு வழங்கும் அன்ன மடங்கள் நிறைந்த மயிலாப்பூரை ஆள்கின்றவன். மதயானைகளை உடையவன். வறியோர் கேட்ட பொருளை வழங்குபவன் இத்தகு பெருமை மிக்க நந்திவர்மனின் நீர்வளம்மிக்க தொண்டை நாட்டில், அன்னநடை உடைய தலைவியின் சாயலுக்கு மயிலே ஒப்பானதாகும். இங்கு தலைவியின்

இருப்பிடமான தொண்ட நாடும் இயல்பாக மயிலின் சாயலும் குறிக்கப்பட்டன.

அன்ன மடமயிலை யாளி மதயானை நந்தி வறியோர்
சொன்ன பொருணல்கு வள்ள றொசுநீர தொண்டை வளநாட்
டன்ன நடையாளை யல்குல் பெரியாளை யங்கை யகல்வான்
மின்னை மெலிவாளை நுலி னிடையாளை நேர்வ மயிலே.

### 6.3.5 தலைவன் செலவழுங்கல் (25)

இப்பாட்டு மடக்கு எனும் உறுப்பில் அமைந்து தலைவன் பொருள் தேடிச் செல்லாமல் தவிர்ப்பதாகிய செலவழுங்கல் துறையில் அமைந்தது. மடக்கு என்பது சொல்லோ சீரோ மீண்டும் மீண்டும் வந்து வேறு பொருள் தருவதாகும்.

'மனமே, பகையரசர்களின் உயர்ந்த மதிலைக் கைப்பற்றியவனும், மாமல்லபுர தலைவனும், கடம்பூர் போரில் பகைவரை வானுலகு அனுப்பியவனும் நந்திவர்மனே ஆவான். அவனது நாட்டில் உள்ள அன்ன நடைகொண்ட தலைவியைப் பிரிந்து சென்று பொருளீட்ட எண்ணினேன். அவ்வாறு நான் பொருளீட்ட சென்றால், அங்கு மயிலை அவள் சாயல் கருதியும் மானைக் கண்டால் அவள் கண்கள் நினைத்தும், குயிலைக் கண்டால் அவள் குரலை எண்ணியும் வருத்தம் கொள்ள நேரிடும். எனவே பொருள் தேடும் நினைவைக் கை விடுவாயாக' என்கிறான் தலைவன். இதனை

மயில்கண்டால் மயிலுக்கே வருந்தி ஆங்கே
மான்கண்டால் மானுக்கே வாடி மாதர்
குயில்கண்டால் குயிலுக்கே குழைதி ஆகில்
நெஞ்சுரம் போக் கொழிநெஞ்சே கூடா மன்னர்
எயில் கொண்டான் மல்லையங்கோ னந்திவேந்தன்
இகல்கொண்டா ரிருங்கடம்பூர் விசும்புக்கேற்றி
அயில் கொண்டான் காவிரிநாட் டன்னப் பேடை
அதிசயிக்கும் நடையாளை அகல நூற்றேன்.

என்ற பாடல் உணர்த்துகின்றது.

### 6.3.6 நந்திவர்மனின் வீரம் (26)

வேலேந்திய பகைமன்னர்களின் கடல் போன்ற பெருக்கத்தையுடைய படைகள், ஆழ்ந்த புலமை பெற்றவனும் நான்கு கடல்களுக்குத் தலைவனுமான நந்திவர்மனின் கடைப்புருவம் கோபத்தால் துடிக்கும் அளவில் தாக்குப்பிடிக்குமோ என நந்திவர்மன் வீரமும் ஆற்றலும் புகழப்பெறுகிறது.

**6.3.7. நந்திவர்மனின் வீரமும் கொடையும் (27)**

வீரத்தில் சிறந்தவனும் வெற்றி தரும் கவசம் அணிந்தவனுமாகிய நந்திவர்மன், வெறியலூரை வெற்றி கொண்டவன். உள்ளத்தில் அன்பு கொண்டவர்களை நட்பாகக் கொண்டவன் பரந்த அரண்மனை நுழைவாயிலில் காத்துநின்ற சேரர், சோழர், பாண்டியர், வட நாட்டு மன்னர்கள் ஆகியோர் பணிந்து திறைப்பொருட்களாக யானைகள், குதிரைகள் ஆகியவற்றை அளித்தனர். இவற்றை இரவலர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

வீர தீரநல் விறலவிர்கஞ்சுகன் வெறியலூர்ச் செருவென்றோன்
ஆர்வ மாவுள நின்றவ ரன்றிமற் றவன்பெருங் கடைநின்ற
சேர சோழருந் தென்னரும் வடபுலத் தரசருந் திறைதந்த
வீர மாமத கரியிவை பரியிவை யிரவலர் கவர்வாரே.

**6.3.8 உடன்போக்கு (28)**

உடன்போக்கு என்பது பெற்றோர் மணம் முடித்து வைக்காத நிலையில் அயலார் பெண் கேட்டும் வரும் நிலையில் தலைவி தான் விரும்பிய தலைவனுடைய நாட்டிற்குச் செல்வதாகும். செவிலி, 'நெல்வயல்களும் சோலைகளும் சூழ்ந்த வளமிகு காவிரி நாட்டை உடையவன். குமரி ஆற்றுக்குத் தலைவன், கங்கை நதியின் கணவன், வீரக்கழல் அணிந்தவன் நந்திவர்மன். அவன் தெள்ளாற்றில் செய்த போருக்கு அஞ்சி அவன் பகைவர்கள் ஓடி ஒளியும் காட்டும் வழியில் அழகிய பற்களைக் கொண்ட என் மகள் தான் காதலித்த ஆண்மகனோடு எவ்வாறு சென்றாளோ? என வருந்தி உரைக்கின்றாள்.

கவரிச் செந்நெற் காடணி சோலைக் காவிரி வளநாடன்
குமரிக் கொண்கன் கங்கை மனாளன் குரைகழல் விறனந்தி
அடியிற் றெள்ளாற் றஞ்சிய நெஞ்சத் தரசர்கள் திரள்போகும்
இவரிக் கானத் தேகிய வாறென் னெழினகை யிவனோடே.

**6.3.9 ஊசல் (29)**

ஊசல் என்னும் கலம்பக உறுப்பு மகளிர் ஊசலாடுவதைப் பொருளாகக்கொண்டு பாட்டுடைத்தலைவனின் பெருமையைப் பேசுவதாகும்.

செவ்வரி பரந்த அகன்ற கண்களை உடைய பெண்களே, பட்டு மேலாடை அசையவும், அணிகலன் ஆடவும் மலர்கள் அணிந்த கூந்தல் அவிழவும் ஊசல் ஆடுவோமா? தெள்ளாற்றில் தன்னை எதிர்த்தோரை வானுலகிற்கு அனுப்பியவனும், நிறைந்த படைவலிமை உடையவனும், சூரியனை ஒத்த புகழுடையவனும் காடவர் கோனுக்குச் சகோதரனும் ஆகிய நந்திவர்மனின் கையிலுள்ள வேலினையும் அவனது காஞ்சிமா

நகரத்தையும் புகழ்ந்து பாடிக்கொண்டு ஊசல் ஆடுவோமா? என்று அவன் புகழ் பரவப்படுகிறது. இவ்வூசல் பொருண்மையில் அமைந்த பாடல் வருமாறு:

ஓடரிக்கண் மடநல்லீர் ஆடாமோ வூசல்
உத்தரியப் பட்டாட வாடாமோ வூசல்
ஆடகப்பூண் மின்னாட வாடாமோ வூசல்
அம்மென்மலர் குழல்சரிய வாடாமோ வூசல்
கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த
கோமுற்றப் படைநந்தி குவலயமார்த் தாண்டன்
காடவற்கு முன்தோன்றல் கைவேலைப் பாடிக்
காஞ்சிபுர மும்பாடி ஆடாமோ வூசல்.

**6.3.10 தலைவியின் காதல் மிகுதி (30)**

செவிலி, தன் மகள் காதல் மிகுதியால் புலம்பி வருந்துவதை 'நந்திவர்மனே, போரில் வெற்றிபெறும் இலைவடிவவேல் ஏந்தியவனே! என் மகள் மென்மையானவள் ஆவாள். ஊசல் ஆடுவதைக் கூட மறந்து விடுவாள், கழங்கு, அம்மானை ஆடுதலைக் கூட மறந்து விடுவாள். ஆனால் உன் தொண்டைமாலையைப் பாடுவதை மட்டும் மறவாள் ' என்று உரைக்கின்றாள்.

**6..3.11 நந்திவர்மன் அரண்மனைச் சிறப்பு (31)**

'பாடிய நாவலரோ வேந்தரோ பல்புரவிப்
பீடியல் மாகளிற்றா; பிச்சத்தா; - கூடா;
படையாறு சாயப் பழையாறு வென்றான்
கடையாறு போந்தார்; கலந்து'

என்னும் பாடல் நந்திவர்மனின் அரண்மனைச் சிறப்பைக் கூறுகின்றது. நந்திவர்மன் பகை மன்னர்களின் படைகள் வரும் வழியிலேயே அழியுமாறு பழையாற்றில் நடைபெற்ற போரில் போரிட்டு வென்றான். அவனது அகன்ற அரண்மனை வாயிலின் வழியே குதிரைகளிலும் யானைகளிலும் மயில் இறகால் ஆன குடைகளோடு வந்து நிரம்பியவர்கள் அவனைப் போற்றிப் பாடிய புலவர்களோ? அன்றி அரசர்களோ? என அரண்மனைச் சிறப்பு வியந்து உரைக்கப்படுகின்றது.

**6.3.12 நலம் புனைந்துரைத்தல் (12)**

நலம் புனைந்துரைத்தல் என்பது தலைவியின் எழிலைப் பாராட்டித் தலைவன் உரைப்பதாகும்.

காஞ்சியை உரிமையாகக் கொண்டு பல கலங்களையும் மலர் மாலைகளையும் அணிந்து வேல் தாங்கியுள்ளவன் நந்திவர்மன், அவனுடைய கழல் அணிந்த பாதத்தை வணங்கியவர்கள்

அறிவுடையவர்கள். அவன் புகழ் கூறுபவர் பொன்மாலையினைப் பெறுவர். ஆனால் மின்னலை ஒத்த இவள் தலைசாய்த்து நின்று நாணத்துடன் பார்க்கும் பார்வையை விட நல்வினை உடைய எனக்கு மேலும் பெறவேண்டியது வேறொன்றுமில்லை.

கலங்கொ ளலங்கல் வேனந்தி கச்சி நாட்டோ னவன்கழல்
புலங்கொ ளொளிய நல்லோர்க்கும் புகல்கின் றோற்கும் பொன்னாரம்
நலங்கொண் முறுவன் முகஞ்சாய்த்து நாணாநின்று மெல்லவே
விலங்கல் வைத்த மின்னோக்கின் மேலுமுண்டோ வினையேற்கு.

**6..3.13 இற்செறிப்பு (33)**

அகப் பொருட் களங்களில் ஒன்று இற்செறிப்பு. அலரால் ஐயுற்ற செவிலி தலைவியை வீட்டினுள் அடைத்திருப்பாள் அலல்து தினைப்புனம் காவல் முடிந்தபின் தலைவியை வீட்டை விட்டுச் செல்லாதவாறு காவல் செய்வாள். அதுவறியாத தலைவனுக்குத் தோழி இற்செறிப்பை அறிவுறுத்துவது இப்பாடலாகும். தெள்ளாறு என்னும் இடத்தில் தன்னை எதிர்த்த பகைவர்களை அழியும்படி போர் புரிந்த நந்திவர்மனின் மலை உச்சியில் தேனீக்கள் தேன் கூடு கட்டும்படியான வடவேங்கட மலை உள்ளது. அம்மலையில் உள்ள குளிர்ந்த மலைப் பகுதியில் உள்ள நீண்ட தினைப்புனத்தில் தினை விளைந்தது. இனி தினைப்புனம் காக்கத் தலைவி வரமுடியாததால் தலைவனும் தலைவியும் சந்திக்க இயலாமல் துன்புற நேரும். இதனை,

‘வினையின் சிலம்பன் பரிவும் இவள் தன் மெலிவும் மென்பூந்
தினையும் விளைந்தது வாழிதன் மீறுதெள்ளாற்று நள்ளார்
முனையும் அன்றுஏக முனிந்தபி ரான்முனை யிற்பெருந்தேன்
வனையும் வடவேங் கடத்தர்; தன் சாரலின் வார்புனமே’

என்ற பாடல் உணர்த்தும்.

**6.3.14 செவிலிக்கு அறத்தொடு நிற்றல் (34)**

தலைவனுமடன் தலைவி உடன்போக்கு மேற்கொண்ட செய்தியைத் தோழி செவிலிக்குக் கூறி அறத்தொடு நிற்கின்றாள்

நந்திவர்மனின் மாமல்லபுரத்தைச் சேர்ந்த மக்கள் செய்யும் ஆரவார ஒலி தினைப்புனத்தில் நின்ற வேங்கை மரத்தின் மேல் அன்று கோபம் கொண்ட யானையை போக்கிய வில்லேந்திய வீரனின் வீரத்தைப்பற்றி எழுந்ததோ? அல்லது நந்திவர்மனின் பட்டத்து யானை சங்கிலியை அறுத்துக் கொண்டு காட்டுக்குள் ஓடியதால் அதனைப் பிடிக்க முயன்ற வீரர்கள் எழுப்பிய ஒலியோ?

தலைவியை அழைத்துச் சென்ற தலைவனின் வீரத்தைப் போற்றும் ஆரவாரத்தை நந்திவர்மனின் வீரர்கள் செய்யும் ஆரவாரத்துடன் இயைத்துச்

சொன்னதன்மூலம் தலைவனைப் பற்றிச் செவிலிக்குத் தோழி உணர்த்துகின்றாள். களிறு தரு புணர்ச்சியில் தலைவன் தலைவியை மணந்தான் என்பதை யானையை அடக்கிய வீரர் தீரமோ என்பதால் கூறுகின்றாள்.

புனத்து நின்ற வேங்கைமேற் புகைந்தெ ழுந்த வானையின்
சினத்தை யன்றொ ழித்தகைச் சிலைக்கை வீரர் தீரமோ
மனத்து ணின்ற வெஞ்சினம் மலைத்தல் கண்ட திர்ந்தமான்
வனத்த கன்ற திர்ந்ததோ நந்தி மல்லை யார்ப்பதே.

## 6.3.15 . பிரிவுத்துயர் கூறுதல் (35)

இரங்கல் என்னும் துறையில் அமைந்த பாடல் இதுவாகும். பிரிவுத் துயர் தாங்காத தலைவி கடல், தென்றல் நிலவு கண்டு துயரடைந்து பேசுவதைப் பொருளாக உடையது.

குருக்கோட்டை எனுமிடத்தில் நந்திவர்மன் போர் புரிந்தபோது, பகையரசர்களின் முகத்தில் புள்ளிபெற்ற யானைகளின் முகத்தில் அம்புகள் தைத்தன. அந்த அம்புகள் பூமியில் விழுந்த போது அம்புகளின் நுனியைப் பகைவர்களின் ரத்தமானது கழுவும்படியான வில்வீரனாக நந்திவர்மன் திகழ்கிறான். பசியமாலை அணிந்து உலகிற்குச் சிறந்த நீதியை வழங்கும் நந்திவர்மனின் அருளை நாம் பெற்றால் நாம் இன்பம் பெறலாம். இப்போது அவ்வாறின்றி ஒலிக்கும் கடல் ஒலியும், தென்றலும், நிலவொளியும் வருத்துகின்றன என்கிறாள் தலைவி.

ஆர்க்கின்ற கடலோத மார்க்கு மாறும்
அசைகின்ற விளந்தென்ற லசையுமாறும்
கூர்க்கின்ற விளமதியங் கூர்க்குமாறும்
காணலாங் குருக்கோட்டைக் குறுகாமன்னர்
போர்க்கின்ற புகர்முகத்துக் குளித்த வாளி
பூதலத்தில் வடிம்பலம்பப் பூண்ட வில்லோன்
பார்க்கொன்று செந்தனிக்கோற் பைந்தார் நந்தி
பல்லவர்கோன் றன்னருள்யாம் படைத்த ஞான்றே.

## 6.3.16 தோழி கூற்று (36)

மலையிலிருந்து விழும் வெள்ளை அருவியே, தினைத்தாள்களே! பொன்போல் உயர்ந்த தலைவன் வந்தானென்றால் அத்தலைவனிடம் சூரிய சந்திரனாக விளங்கும் நந்திவர்மனின் மலையில் வேங்கை மரம் முன் அறிவிப்பாக மலர்ந்து சோதிடனாக விளங்கும் சூழ்ச்சித் திறத்தைக் கூறுவீர்களாக என்கிறாள் தோழி. இதனை,

'ஞான்றவெள்ளருவி இருவி எங்கள் பொன்
தோன்றல் வந்திடில் சொல்லுமின் ஒண்சுடர்

போன்ற மன்னவன் நந்திதன் பூதரத்து

ஈன்ற வேங்கை இருங்கணிச்சூழ்ச்சியே'

என்ற பாடல் எடுத்தியம்பும். வேங்கை மலருங் காலம் தினை அறுவடைக் காலம். அறுவடை முடிந்தால் தலைவி தினைப்புனம் வரவேண்டிய தேவையில்லை. எனவே இற்செறிக்கப்படுவாள் என்பதை வேங்கை மலர்ந்து சோதிடர் போலக் காட்டிற்று எனத் தோழி உணர்த்துகின்றாள்

**6.3.17 தலைவி நந்திவர்மனைத் திருமால் நிகரெனல் (37, 38)**

பூவைநிலை என்பது புறத்துறை. பாட்டுடைத் தலைவனைக் கடவுளரோடு ஒப்பிட்டுப் பாடுதல் பூவை நிலை. இங்கு அகப்பொருளில் தலைவி பூவை நிலையில் பாடுதல் புதிய மரபாகும்.

தலைவி, 'ஆணைச்சக்கரம் உடைய பல்லவர் குலத்தவனே நந்தி மன்னனே! உன் காலில் மதயானைகளின் பிடரிகளால் ஏற்பட்ட தழும்புகள் காணப்படுகின்றன. அத்தழும்புகளோடு பகை மன்னர்கள் நாளும் உன்னுடைய பாதம் பணிந்ததால் ஏற்பட்ட தழும்புகளும் கண்டோம். திருமாலை ஒத்தவனே ஆய்ச்சியர்களும் உன் அன்னையர்களும் கயிற்றினால் உன் தோளில் அடித்த வடுவைக் காணவில்லையே என்ன காரணமென உரைப்பாய் எனத் தலைவன் நந்திவர்மனிடம் வினவுகிறாள். இதன்மூலம் நந்தி வர்மனைத் திருமாலுடன் ஒப்பிடக் காணலாம்.

தொடர்ந்து வரும் இப்பாட்டும் பூவை நிலை எனும் துறையில் அமைந்ததாகும்.

'தெள்ளாற்றில் நடைபெற்ற போரில் பகைவர் யானைகள் இறந்தொழியும்படி கண்கள் சிவந்தவனே! பாண்டிய நாட்டுத் தொண்டி நகரைக் கைப்பற்றியவனே! அரசர்கள் வணங்கும் சிறந்த மன்னனே! பாற்கடலைக் கடைந்த திருமால் என்று உன்னைக் கூறுவர்' எனத் தோழி நந்திவர்மனைப் புகழ்கிறாள்.

பகரங்கோ ணெடுந்திவலை பனிவிசும்பித்
பறித்தெறியப் பண்டு முந்நீர்
மகரங்கொள் நெடுங்கூல வரைதிரித்த
மாலென்பர் மன்னர் யானை
சிகரங்கள் போன்மடியத் தெள்ளாற்றுக்
கண்சிவந்தான் றென்னன் தொண்டி
நகரங்கைப் படுத்தபிரா னந்திநர
பதிபணிகோ நங்கள் கோவே.



**6.3.18 . காதல் மகளிர் கூற்று (39)**

'தொண்டை நாட்டின் தலைவனும், வேல்படை கொண்ட மன்னர்களுக்கெல்லாம் மன்னனாக இருப்பவனும் அங்க நாட்டுக்கு உரிமை

உடையவனும் சந்திர குலத்திற்கு ஒளியாக இருப்பவனும் ஆனவன் நந்திவர்மன். அவன் வெண்கொற்றக்குடை சந்திரன் போலக் குளிர்ச்சி உடையது என்பர். ஆனால் அவன் நிலையில் எங்கள் கையிலணிந்த வளையல்கள் நிற்காமல் நழுவுகின்றன. ஏனிந்த மாறுபாடு? அவன் செங்கோலுடைய அவனுக்கு ஏற்புடையதா? என மகளிர் வினவுகின்றனர்.

நங்கள்கோத் தொண்டை வேந்தன்
நாமவேன் மன்னர்க் கெல்லாந்
தங்கள்கோ னங்க நாடன்
சந்திர குலப்ர காசன்
திங்கள்போற் குடையி னீழற்
செய்யகோல் செலுத்த மென்பர்
எங்கள்கோல் வளைக ணில்லா
விபரீத மிருந்த வாறே.

### 6..3.19 . தோழி தன்னுள் கூறுதல் (40)

பலவாகிய வெற்றிகளைக் குவித்துப் பகைவரைக் கொன்றழிக்கும்படி போர் செய்தவன் நந்திவர்மன். பருந்துகள் சுற்றும் போர்க்களத்தில் யானைமேல் ஏறி வரும் பல்லவர் தலைவனாகிய அவனின் மாமல்லபுரத்தை மட்டுமே தலைவி பேசுகின்றாள். இவள் கொங்கைகளிலும் மற்றும் உடலிலும் தொண்டைமாலையின் மணம் மட்டுமே வீசும். இதனைக் கூற இவள் ஏன் நாணுகிறாள்' எனத் தோழி தன் மனத்தினுள் கூறிக்கொள்கிறாள். இதன்மூலம் நந்திவர்மன் மீதுகாதல் கொண்ட தலைவியின் நிலையைத் தோழி முன்னுற உணர்ந்தமை குறிக்கப்படுகின்றது.

ஆறா விறலடு போர்வன்மை யாலம ராடியப்பாற்
பாறார் களிற்றுயர் பல்லவர் கோனந்தி மல்லையன்றிக்
கூறா ளிவிளிளங் கொங்கை யவன்வளர் தொண்டையல்லால்
நாறா திவடிரு மேனி நாமென்கொ னாணுவதே.

### 6.3.20 தலைவனிடம் மாலை வேண்டல் (41, 42 )

தன் தலைவி நந்திவர்மன் மீது கொண்ட காதலால் வருந்தும் வருத்தம் நீங்க அவனுடைய தொண்டை மாலையை வேண்டுவதைப் பொருளாக உடையது இப்பாட்டு.

பகைவர்களின் வாழ்நாளைக் கோபமுடன் அழிக்கின்ற மதம் கொண்ட யானைப்படை உடையவனே, பகைவர் குலத்திற்கு எமனாக விளங்குபவனே, கொங்கு நாட்டை ஆள்பவனே, உன் வீரக்கழல் அணிந்த பாதங்களை வணங்கும் மங்கையர் பலராவர். அவர்களுள் எம் தலைவி அணிகலன் அணிந்த மார்பில் உன் தொண்டைமாலையைப் பிற மகளிருக்கு முன்னர் நீ நாணாமல் அவளுக்கு தந்தருள வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் உன்

செங்கோல் நீதி வழுவியது ஆகாதா? கூறுவாயாக எனத் தோழி நந்தி வர்மனை முன்னிலைப்படுத்தி வினவுகின்றாள்.

நீதிநெறியில்லாத சேர, சோழ, பாண்டியர்கள் மீது போர் தொடுத்து அவர்களின் நாடுகளைச் சீர்பெறச் செய்தவனே! சினம் பொருந்திய நந்திவர்மனே! இளம் பெண்ணான இவள் துயர்ப்படும்படியும் பிற மகளிர் அனைவரும் உன் மேல் கொண்ட காதலால் தங்கள் கை வளையல்களை இழக்கவும் நீ அரசாள்வது என்ன முறை? எனத் தோழி நந்திவர்மனிடம் தலைவிக்கு மாலை வேண்டுகிறாள். இதனை,

செங்கோல் வளைக்கை யிவளுந் துவண்டு செறி மாமை வாட வெழிலார்
அங்கோல் வளைக்கை யிளையா ரிழப்ப அரசாள்வ தென்ன வகையோ
தங்கோல் வளைத்த திகழ்சேரர் சோழர் தமிழ் மன்னர் நின்ற நிலமேல்
வெங்கோ னிமிர்த்த வரையுஞ் சிவந்த விறனந்தி மேன்மொ ழிவையே.

என்ற பாடலால் அறியலாம்.

### 6.3.21 . தலைவன் தேர்ப்பாகனிடம் கூறுதல் (43)

பொருள் ஆர்ப்பரிக்கின்ற கடல் சூழ்ந்த உலகில் சிறந்த பண்புடைய மேகமே, அருளும் கொடையும் நிறைந்த நந்திவர்மனின் நாடு வரை நீ செல்கிறாயா, அல்லது இடைவெளியில் நின்று விடுவாயா, உன்னைக் கண்டால் கா;காலம் வந்ததென நினைத்துத் தலைவி துன்புற்று மெலிவாள் என்கின்றான். இதன்மூலம் பாகனுக்குத்; தேரை மிக வேகமாகச் செலுத்த வேண்டும் எனக் குறிப்பாக உணர்த்துகின்றான். இதனை,

'மொழியார் தொண்டைப் பன்மலா; முற்றும் தெருவந்து
விழியாள் என்றும் மேனி வெளுத்துற மெலிவாளே
ஒழியா வண்கைத் தண்ணருள் நந்திதன் ஊர்மட்டோ
வழியாம் தமரக் கடல்வட் டத்தொரு வண்கோவே'

எனும் பாடல் உரைக்கின்றது.

### 6.3.22 . நிலவொடு புலம்பல் (44)

ஒருகோமக னந்தி யுறந்தையர்கோன்
உயர்நீள்வலயத்து உயர் வாளைவளை
குருகோடு வயற்படர் காவிரியிற்
குலவும்புயல் கண்டு புகார்மணலிற்
பெருகோடு நெடுங்கழி சூழ்மயிலைப்
பெருமானது பேரணி நீண்முடிமேல்
தருகோதை நினைந்து அயர்வேன்மெலியத்
தழல் வீசுவதோ குளிர் மாமதியே.

தலைவி, 'நிலவே, பரந்த இந்த உலகில் வயல்களை வாளை மீனும், சங்கும், நீர் பறவைகளும் என நிறைக்கும் காவிரியை மேகங்கள் கடக்கும்

உறையூருக்குத் தலைவன் நந்திவர்மன். உப்பங்கழிகள் நிறைந்த மயிலாப்பூரை ஆளும் அந்த நந்திவர்மன் திருமுடியில் சூடியுள்ள தொண்டைமாலையை நினைத்து நான் வருந்தும் வண்ணம் நிலவே, நீயும் தீயை வாரி இறைக்கின்றாய்' என்கிறாள்.



### 6.3.23 கார்காலம் (45)

கார் என்ன்பது கலம்பகத்தின் ஓர் உறுப்பாகும். தன்னை விட்டுப் பொருள்தேடிச் சென்ற தலைவன் வராமையால் வருந்தும் அவன் வருவதாகச் சொன்ன கார் காலத்தை எண்ணித் துயருடன் இருப்பாள். அவளுடைய நிலையை அறிந்த தோழி கூற்றாக இப்பாடல் அமைகின்றது.

தலைவி கார்காலம் கண்டு துயர்ப்படுவதைப் பார்த்து, நிலவானது தீயைப் பொழியும் காலம் மாலைக் காலமாகும், அதையொத்த மயக்கம் தரும் இரவுக்காலம் விடியாமல் இருக்கும். இத்தகைய பொழுதில் வண்டுகள் காந்தாரப்பண் பாடி ஆரவாரித்து மகிழும். நந்திவர்மனின் தொண்டை மலர்மாலையைப் பெறாமல் மகளிர் வருந்தியுள்ளனர். அவர்களின் அந்நிலையை அம்மகளிரின் ஊழ்வினை என்று சொல்லி எதுவும் செய்யாமல் பார்ப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்' என்று தோழி தன் நெஞ்சிற்கு உரைக்கின்றாள்.

மதிய மெரிசொரியு மாலையம் மாலை
மறந்தும் புலராது கங்குலாங் கங்குல்
கதிர்செய் யணிவண்டு காந்தாரம் பாடக்
களிவண்டு புகுந்துலவுங் காலமாங் காலம்
பதியின் வளர்ந்தநறுந் தொண்டையங்கோ னந்தி
பல்லவர்க்கு நேராத பாவையர்தம் பாவை
விதியின் விளைவுகண் டியாமிருப்ப தல்லால்
வினைமற்று முண்டோநம் மெல்லோதி மாட்டே.

## 6.4 தொகுத்துக் காண்போம்

அகத்துறைகளும் புறத்துறைகளும் பாட்டுடைத்தலைவர் பெருமையைப் பேசுவதற்கு உத்திகளாக அமைவதை இதுவரை அறிந்த பாடப் பகுதி உணர்த்துகின்றது, நந்திவர்மன் மீது காதல் கொண்ட மகளிர் காதல் நோயுற்றதன் பல்வேறு நிலைகளையும் மெய்ப்பாடுகளையும் கார், நிலவை விளித்தல் போன்ற உறுப்புக்கள்வழி சுவையுற ஆசிரியர் பாடியுள்ளார். அரண்மனைச் சிறப்பு போன்ற புறச் செய்திகளும் இப்பகுதியில் விளக்கம் பெறுகின்றன.

## 6.5 தன்மதிப்பீட்டு வினா விடைகள்



இருமதிப்பெண் வினா விடைகள்

1. குடைமங்கலம் என்றால் என்ன?

பாட்டுடைத் தலைவனின் வெண் கொற்றக் குடையின் சிறப்பைப் பாடுதல்

2. இயலிடம் கூறல் என்றால் என்ன?

தலைவன் பாங்கனிடம் தலைவியின் இருப்பிடமும் அழகும் பேசுதல்

3. கதிர் செய்யளி காந்தாரம் பாடும் காலம் எது?

கார் காலம்

4. பூவை நிலைத் துறையில் எந்தத் தெய்வத்துடன் நந்திவர்மன் ஒப்பிடப்பெறுகின்றான்?

நந்திவர்மன்

குறுவினா

5. பூவை நிலைத் துறையில் ஆசிரியர் நந்தி வர்மனை எவ்வாறு போற்றுகின்றார்?

6.3.17 என்னும் எண்ணிட்ட பத்தியின் செய்திகள்

6. இற்செறிப்பைப் பொருளாகக் கொண்டமைந்த அகப்பாடல்களை விவரிக்க.

6.3.13, 6.3.16 என்னும் எண்ணிட்ட பத்திகளின் செய்திகள்

7. மாலை வேண்டல் என்னும் துறையில் அமைந்த அகப்பாடலை விளக்குக.

6.3.20 என்னும் எண்ணிட்ட பத்தியின் செய்திகள்

பெருவினா

8. அகப்பொருள் துறைகள் உத்தியாக அமைவதை நந்திக் கலம்பகம் வழி விவரிக்க.

6.3.2,6.3.4, 6.3.5, 6.3.8, 6.3.10, 6.3.12, 6.3.13, 6.3.16, 6.3.18, 6.3.19, 6.3.21, 6.3.22, 6.3.23 என்னும் எண்ணிட்ட பத்திகளின் செய்திகள்

9. நந்திவர்மனின் வீரச் சிறப்பைப் புறப் பாடல்கள் வழி விவரிக்க.

6.3.1, 6.3.3, 6.3.6, 6.3.7, 6.3.9, 6.3.11, 6.3.17 என்னும் எண்ணிட்ட பத்திகளின் செய்திகள்

## 6.6 மேலும் பயிலவேண்டிய நூல்கள்

மருதூர் ச.அரங்கராசன் - தமிழில் பாட்டியல் நூல்கள்

எஸ்.சௌந்தரபாண்டியன் - தமிழில் கலம்பக இலக்கியம்.

# கூறு -7 தமிழ் விடு தூது - தூது இலக்கணம் - தூதுவரலாறு

## 7.1 முன்னுரை

ஒருவருடைய கருத்தை மற்றொருவருக்கு அறிவிக்கும் செயல் தூது. இது அகத்தூது, புறத்தூது எனப்படும். தூதிலக்கியங்கள் பொதுவாக அகப்பொருளைப் பற்றியே அமைந்தன. தமிழில் தூதுக்கூறுகள் சங்க காலம் முதலாக அமைந்துள்ளன. பாட்டுடைத்தலைவரைப் போற்ற அவரைக் காதலித்தாள் ஒருத்தி தூது விடும் பான்மையில் பாடப்பெறுதல் இத்தூதின் பொருண்மையாகும்.

## 7.2 நோக்கம்

இப்பகுதி தூது இலக்கிய மரபு, தமிழில் தூது நூல்கள் இலக்கணம் ஆகியவற்றை அறிந்துகொள்ள உதவும். தூது விடுவதற்குரிய பொருட்களாகச் சுட்டப்பெற்றவை ஆகியன குறித்தும் இப்பகுதியில் உணரலாம். தமிழ் விடு தூது குறித்த அறிமுகத்தையும்பெறலாம்

## 7.3 தூதுக் கூறுகள்

சிற்றிலக்கியங்களில் தூது நூல்கள் பல்வேறு காலங்களில் தோன்றியுள்ளன. பழந்தமிழ் இலக்கண, இலக்கியங்களில் அகப்பாடல், புறப்பாடல் என்னும் வேறுபாடு இல்லாமல் எல்லா இலக்கியங்களிலும் தூது பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. பொதுவாகப் பிரிவு பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடும்போது தூது செல்வதாலும் பிரிவு ஏற்படும் எனக் குறிப்பிடுகின்றார்.

ஓதல் பகையே தூது இவை பிரிவே (தொல். பொருள் 27)

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையில் மூன்று பிரிவுகளுக்கும் காரணங்களைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> ஓதற்குப் பிரிதலாவது தமது நாட்டகத்து வழங்காது பிறநாட்டகத்து வழங்கும் நூல் அளவன்றே, அவற்றைக் கற்றல் வேண்டிப் பிரிதல், பகைவயின் பிரிதலாவது மாற்று வேந்தரோடு போர் கருதிப் பிரிதல் தூதிற் பிரிதலாவது இருபெரு வேந்தரைச் சந்து செய்தற்பொருட்டுப் பிரிதல். (தொல். பொருள். 27. உரை)

தூது என்பது பழந்தமிழ் இலக்கியங்களில் ஒரு தனி இலக்கியமாக அமையாவிட்டாலும் பிற்காலப் பிரபந்தங்களுள் ஒன்றான தூது இலக்கியத் தோற்றத்திற்கான அடிப்படைகள் அவற்றில் காணப்படுகின்றன.

தமிழில் சங்க அக, புற இலக்கியங்களில் தூதுக் கூறுகள் இடம்பெற்றுள்ளன. அகநூலான குறுந்தொகையில் தோழி அனுப்பும் தூது

சிறப்பாகப் பாடப்பட்டுள்ளது. களவு வாழ்க்கையில் ஈடுபட்ட தலைவி தலைவன் விரைந்து வந்து மணமுடிக்காமையால் மிகவும் வருந்துகிறாள். காவல் மிகுதியால் தலைவனைக் காணமுடியவில்லை. சிறைப்புறமாகத் தலைவன் இருப்பதைப் பாராதவள் போல் தோழி வண்டு ஒன்றிடம் தலைவியின் நிலையைக் கூறுகிறாள். "அம்ம வாழியோ மாரிச் சிறைத் தும்பி" எனத் தொடங்கும் குறுந்தொகையின் 392 ஆம் பாடலில் தும்பியே தலைவியை அவளின் தமர் வீட்டுக்காவலில் வைத்துள்ளார்கள் என்று கூறுவாயாக" என்கிறாள் தோழி.

அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் போர்மூள இருந்தபோது ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்றார். தூது சென்ற ஔவை வஞ்சப்புகழ்ச்சியாகப் பாடி அதியமானின் பெருமையைக் கூறிப் போரைத்தவிர்த்து விட்டார். அப்பாடலாவது.

"இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியன்நகர் அவ்வே ; அவ்வே
பகைவர்குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ!" (புறம். 95 )

என்பதாகும். இவ்வாறு சங்க அகம், புறம் பற்றிய நூல்களில் அமைந்த தூதுக் கூறுகள் பிற்கால தூதிலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் துணைநின்றன.

சங்க நூல்களுக்குப் பின்னர்த் தோன்றிய திருக்குறளில் தூது என்ற ஒரு தனி அதிகாரமே உள்ளது. இடைக்கால பக்தி இலக்கியங்களிலும் தூதுக்கூறுகள் அமைந்துள்ளன. திருஞானசம்பந்தர் "சிறை ஆரும் மடக்கிளியே" என்று தொடங்கும் பதிகத்தில் கிளியை விளித்துப்பேசுகின்றார்.

வைணவத்தில் ஆண்டாள் "விண்நீல மேலாப்பு விரித்தாற் போல் மேகங்காள்" என்ற பாகரத்தில் இறைவனிடம் (தலைவன்) மேகத்தைத் தூதாகவிடுகின்றாள். காப்பியங்களில் கம்பராமாயணத்தில் அனுமன் தூதும் சீவக சிந்தாமணியில் சீவகனிடம் குணமாலை கிளியைத் தூது அனுப்புதலும் இடம் பெறும்.

தூது இலக்கிய வகையின் முதல் நூல் நெஞ்சுவிடு தூது என்ற நூல் ஆகும். இதனை இயற்றியவர் உமாபதி சிவாச்சாரியர் ஆவார். இதன் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு. தமது ஞானாசாரியரிடம் சென்று தமது குறைகளை எடுத்துக் கூறுமாறு, உமாபதி சிவாச்சாரியர் தமது நெஞ்சைத்

தூது விடுக்கிறார். இந்நூலைத் தொடர்ந்து பல நூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

எல்லாத் தூது நூல்களும் தூது என்ற சொல்லை இறுதியில் பெற்றுள்ளன. ஆனால் சோம சுந்தர பாரதியார் இயற்றிய தூது நூல் மட்டும் மாரிவாயில் என்ற பெயருடன் அமைந்துள்ளது. இதன் பொருள் மேகவிடு தூது என்பது ஆகும். தூது அனுப்பப் பெறும் பொருளின் பெயராலும் (மான் விடு தூது, தென்றல் விடுதூது) தூதுப்பொருளுடன் பாட்டுடைத் தலைவன் பெயரை இணைத்தும் (மதுரை சொக்கநாதர் தமிழ் விடுதூது) தூதிலக்கியப் பெயர்கள் அமையும்.

தூது அனுப்புவோர், தூது பெறுவோர் ஆகிய அடிப்படையில் தூது நூல்களை மூன்று வகைகளாகப் பாகுபடுத்தலாம்.

1) ஆடவர் ஆடவர்க்குத் தூது அனுப்பும் நூல்கள்

2) ஆடவர் பெண்களுக்குத் தூது அனுப்பும் நூல்கள்

3) பெண்கள் ஆடவர்க்குத் தூது அனுப்பும் நூல்கள்

என்று வகைப்படுத்தலாம்.

தமிழில் தூது இலக்கியச் செழுமையைப் பின்வரும் பட்டியலால் தெளியலாம்.

1. நெஞ்சு விடு தூது - உமாபதி சிவாச்சாரியார்
2. பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது - பலபட்டடைச் சொக்கநாதர்
3. அழகர் கிள்ளைவிடுதூது - பலபட்டடைச் சொக்கநாதர்
4. கச்சி ஆனந்த ருத்ரேசர் வண்டுவிடு தூது - கச்சியப்ப முனிவர்
5. கூளப்பநாயக்கன் விறலிவிடு தூது- சுப்பிரதீபக் கவிராயர்
6. சிவஞான பாலைய தேசிகர் நெஞ்சுவிடு தூது - துறைமங்கலம் சிவப்பிரகாசர்
7. பஞ்சவன்னத் தூது - இணுவில் சின்னத்தம்பிப் புலவர்
8. பழனி முருகன் புகையிலைவிடு தூது - சீனிச்சக்கரைபு புலவர்
9. மதுரைச் சொக்கநாதர் பணவிடு தூது - அருணாசலக் கவிராயர்
10. சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது - மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்
11. சேதுபதி விறலிவிடு தூது - சரவணப் பெருமாள் கவிராயர்

12. மதுரை சொக்கநாதர் தமிழ்விடு தூது -ஆசிரியர் பெயர் தெரியவில்லை
13. திருத்தணிகை மயில்விடு தூது - முத்துவேலுக் கவிராயர்
14. திருப்பேரூர்க் கிள்ளைவிடு தூது - கோவை கந்தசாமி முதலியார்
15. துறைசை அம்பலவாண தேசிகர் பொன்விடு தூது - சுந்தரநாதர்
16. நெல்விடுதூது - ஆசிரியர் பெயர் தெரியவில்லை
17. காக்கை விடு தூது - க. வெள்ளை வாரணனார்
18. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது - ந. மு. வேங்கடசாமி நாட்டார்
19. மாரிவாயில் (1936) - சோமசுந்தர பாரதியார்

## 7.4 தூது விடு பொருள்கள்

தூது போவதற்கு உயர்திணை, அ∴றிணை என்னும் வேறுபாடு இல்லாவிட்டாலும் சிற்றிலக்கியங்களில் மன உணர்வுகளை மக்களிடம் கூறுவதற்கு மனம் ஒப்பாது அ∴றிணைப் பொருட்களே அதிகமாகத் தூதுக்குரியவாக அமைத்துக் கொள்ளப்படுகின்றன. எனினும் விறலி போன்ற உயர்திணை மாந்தரும் அகத்தூதிற்குரியவராக இடம்பெறுவர். அ∴றிணைப் பொருட்கள் பேசா. பொருட்களை வாங்கி வருதல் என்பதும் சாத்தியமில்லை என்றாலும் மனபாரத்தைக் குறைக்கும் வடிகால் எனலாம்.

வடமொழியில் சந்தேசம் என்பது தூதைக் குறிக்கும். மேகத்தைத் தூதுவிடும் மேக சந்தேசம் என்னும் காளிதாசர் இயற்றிய தூதுநூல் புகழ்பெற்றது.

அ∴றிணைப் பொருட்ளை தூதுவிடுக்கும் மரபைத் தொல்காப்பியர்,

ஞாயிறு, திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மானே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுதலிய நெறியாப்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங்கு அமையும் என்மனார் புலவர் (தொல் . பொருள் .505)

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். நன்னூலில் பவணந்தியாரும்,

கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயக்குந போலவும் இயற்றுந போலவும்
அ∴றிணை மருங்கினும் அறையப் படுமே. ( நன்னூல் - 409)

என்கிறார்.

பாட்டியல் நூல்கள் தூதிற்கு இலக்கணம் குறிக்கின்றன. இலக்கண விளக்கம் கலிவெண்பாவில் அமைந்து உயர்திணை, அ.்.றிணைகளைத் தூதனுப்புவது பற்றி விளக்குகின்றது.

"பயில்தருங் கலிவெண் பாவினாலே
உயர்திணைப் பொருளையும் அ.்.றிணைப் பொருளையும்
சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப்
பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே (இலக்கண விளக்கம், 874)

தமிழ் நூல்களில் புகையிலை, நெல், பழையது, செருப்பு, அன்பு, நெஞ்சு, மேகம், தமிழ், தென்றல், பணம், துகில், சவ்வாது, தந்தி போன்ற பொருட்களும், கிளி, வண்டு, அன்னம், காக்கை, நாகனவாய்ப்பறவை போன்ற பறவைகளும், விறலி, பிள்ளை, வானவன், மறலி, புலவர், தோழி போன்றோரும், மான், எலி போன்ற விலங்குகளும், தாமரை போன்ற மலர்களும் உள்ளன. தூதுப்பொருள்கள் பற்றி ச.வே.சுப்பிரமணியன் கூறும் கருத்து கருதத்தக்கது.

"தூது இலக்கியம் தொல்காப்பியத்திலேயே விதையைக் கொண்டிருந்தது என்பது புலனாகும். புறத்தூதாகத் தொல்காப்பியம் மனிதனை குறித்து அகத்தூதாகத் தலைவன் தலைவியே (தாமே) அமைந்தனர். வாயிலாக உயர்திணை மாந்தர் அமைந்தனர். உணர்வின் வடிவங்களில் முன்னிலையாக அ.்.றிணையும் அமைந்தன.

(தூது இலக்கியத்தின் நோக்கமும் பயனும், பக். 70 - 71)

பிரபந்தத்திரட்டு 10 வகையான தூதுப்பொருளைக் குறிப்பிடுகின்றது அவற்றில் தோழி தவிர அன்னம், மயில், கிளி, மேகம், பூவை, குயில், திறஞ்சு, தென்றல், வண்டு என்றும் ஒன்பதும் அ.்.றிணைப் பொருள்கள் ஆகும்.

கருடன், கழுதை, நெல், மான், காக்கை, வெற்றிலைபாக்கு, தண்ணீர், வேட்டி எனப் பலபொருள்கள் தூதனுப்பி பயன்பட்டதாக இலக்கிய ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.

எகினமயில் கிள்ளை எழிலியொடு பூவை
சகிகுயினெஞ் சந்தென்றல் வண்டு . தொகைபத்தை
வேறுவேறா கப்பிரித்து வித்தரித்து மாலைகொண்டன்பு
ஊறிவா வென்றல் தூது"

இயம்புகின்ற காலத்து எகினமயில் கிள்ளை
பயம்பெறுமே கம்பூவை பாங்கி - நயந்தகுயில்
பேநைநெஞ்சம் தென்றல் பிரமரம் ஈரைந்துமே
தூதுரைத்து வாங்கும் தொடை

என்ற நூற்பாக்கள் தூதுக்குரிய பொருட்களைப் பேசும்



## 7.5 பாவகை

தமிழில் தூதுநூல்கள் கலிவெண்பாவால் இயற்றப் படுதல் வேண்டும் என இலக்கணநூல்கள் குறிப்பிடுகின்றன ஆனால் மாறுபட்ட பாவகையால் அமைந்த நூல்களும் (மாரி வாயில்) உண்டு.



## 7.6 தூது நூல்களின் அமைப்பு

1. நூலின் தொடக்கத்தில் காப்புச் செய்யுள் இடம்பெறும். நூலின் பெயர், தலைவன் பெயர், இறைவன் பெயர், இறைவன் புகழ், காக்கும்படி வேண்டுதல் என்னும் செய்திகள் இதனுள் இடம்பெறுகின்றன.

2. தூதுப் பொருளின் பெருமைகளைக் கூறுதல் என்னும் பகுதி தமிழ் தூது நூல்களில் இன்றியமையாதது. ஏனைய பொருள்களைத் தவிர்க்கக் காரணம், தான் தேர்ந்தெடுத்த பொருளின் சிறப்புகள் ஆகியன கூறப்படும். தூதுப் பொருளின் பெயர்ச் சிறப்பு, நிறம், பண்புகள், உறவினர்கள் ஆகியன விளக்கப்படுகின்றன.

3. தலைவன் பெருமைகளைக் கூறுதல் அமைப்பில் பாட்டுடைத் தலைவன் அழகு, உலா வந்தமை, தசாங்கம், ஆகியன பேசப்படும்.

4. தொடர்ந்து காதல் கொண்ட தன்னிலையும் கூறப்படும். இப்பகுதியில் காதல் வெம்மையால் மயங்குதல், மன்மதன் போர் தொடுத்தல், தோழியர் துயர்தணித்தல், உலாத் தலைவியைக் கடந்து செல்லல், தலைவி புலம்புதல் என்ற அமைப்பினைக் கொண்டுள்ளன.

5. இறுதியில் மாலை வாங்கி வரச்சொல்லித் தூது நூல்கள் முடியும்.

தமிழில் சிற்றிலக்கிய வகை ஒன்றில் பிற இலக்கிய வகைக் கூறுகள் அமைவதைக் காணலாம். தூது நூல்களிலும் உலா, தசாங்கங்கள், போன்ற பிற இலக்கியக் கூறுகள் உள்ளன. கடவுளை நாயகனாக்கியும் தூதனுப்புதல் தமிழ் நூல்களின் தனித்தன்மை ஆகும். தூது இலக்கிய வகைகளுள் சேர்க்கப்பட்டுருப்பினும் அதன் குணங்களில் மாறுபட்ட நூல்களும் தமிழில் உண்டு (எலிவிடுதூது). தூது ஒருவரைப் புகழ்வதற்கு இயற்றப்பட்டது போல் வசைபாடவும் இயற்றப்படுதலுண்டு (செருப்பு விடு தூது). தமிழ்விடு தூது கடவுளை (சிவன்) நாயகனாக்கி தூதனுப்பும் முறையில் இயற்றப்பட்டுள்ளது.

தூது நூல்களின் முடிவு மாலை வாங்கி வரும்படி வேண்டுவதாய்ப் பெரும்பாலும் அமைய சில நூல்களில் மாறுபட்டு உள்ளது (துகில் விடு தூது)

## 7.7 தமிழ்விடு தூது - அறிமுகம்

தமிழில் தூதனுப்புவது என்பது பாடுபொருளாக அமைவது தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே இருந்துள்ளது இடைக்காலத்தில் தனி இலக்கியமாகச் சிற்றிலக்கியமாக வளர்ச்சி அடைந்த நிலையில் நூற்றுக்கணக்கான தூதுநூல்கள் தோன்றியுள்ளன.

தூது செல்லும் உயர்திணை, அஃறிணைப் பொருள்களாகத் தோழி, வண்டு, கிளி, நெஞ்சு போன்றவை நூற்றுக்கணக்கானவை இடம்பெற்றுள்ளன. தூது சென்று பார்க்க வேண்டியவர்களாகச் சுட்டி ஒருவர் பெயர் அறியப்படாத பழம்தமிழ் அகத்தலைவன் இறைவன், வள்ளல் எனப்பலர் இடம்பெறுகிறார்கள்.

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் இயற்றிய அழகர் கிள்ளை விடு தூது குறிப்பிடத்தக்க நூலாகும். இதனுள் கிளியை திருமாலிடம் (அழகர்) தூதுவிடும் செய்திகள் உள்ளன. இவ்வாறு ஒவ்வொரு தூது நூலிலும் தூது செல்லும் பொருளும் பாட்டுடைத் தலைவனும் சமன் அற்ற நிலையில் உள்ளதைக் காணலாம். ஆனால் தமிழ்விடு தூது என்னும் இந்நூலில் தூது செல்வது தமிழ், தூது தலைவன் சிவபெருமான்.

பழந்தமிழ்ப் புலவர்கள் இலக்கிய இலக்கணங்களையும் எழுதியுள்ளார்கள். சைவ சமயக் குரவர்கள் தமிழால் இறைவனைப் பாடியுள்ளார்கள். பார்த்துள்ளார்கள். தமிழ் விடு தூதரோ தமிழால் இறைவன் வளர்ந்ததையும் இறைவனால் தமிழ் வளர்ந்ததையும் சமமாகப் பார்க்கின்றனர். இறைவன், சைவ சமயச் சான்றோர் என அனைவரின் செயற்பாடுகளும் தமிழால் நிகழ்ந்துள்ளதால் தமிழின் செயல்களாகவே அவற்றைக் காண்கின்றார் தமிழ்விடுதூது ஆசிரியர்.

இவ்வாறு நுட்பமாகப் பார்க்கும்போது மற்றைய தூதுநூல்களைக் காட்டிலும் தமிழ்விடுதூது உயர்ந்துள்ளதை உணரலாம். தூது செல்லும் தமிழின் தோற்ற காலத்தை அறிய முடியாது. அதே போல் சிவபெருமான் பிறவாயாக்கைப் பெரியோன் அனாதி காலந்தொட்டு இருப்பவர் எனவே இவ்விருவரையும் தமிழ்விடுதூது ஆசிரியர் தேர்ந்தெடுத்துப் படைத்திருப்பது இந்நூலிற்குரிய மிக உயரிய சிறப்பாகும். இந்நூலாசிரியர் யாரென்று தெரியவில்லை.

தூது செல்லும் தமிழைப் போற்றும் வழியாகத் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கூறுவதில் தமிழ்விடு தூது ஒரு தமிழ்க்களஞ்சியமாகத் திகழ்கிறது. பாட்டுடைத் தலைவனாகிய சிவபெருமானைப் போற்றும்போது பல புராணக்கதைகள் வழி இறைவனின் பெருமையைப் பேசுகிறது

சிற்றிலக்கியங்கள்

குறிப்புகள்

## 7.8 தொகுத்துக் காண்போம்

சிற்றிலக்கியங்களில் தூதின் தனிச்சிறப்பு, தூதின் வகைகள் இரண்டு ஆகியன உணரமுடிகின்றது. சங்க காலம் முதல் தற்காலம் வரை தூதுப் பொருண்மையுடைய இலக்கியங்கள் வெளிவந்துள்ளன. புகழ்வதோடு வசை பாடவும் தூது விடுவர் என்பதைச் செருப்பு விடு தூது உணர்த்தும். அன்னம், கிளி, மான், தமிழ், நெஞ்சு மேகம் போன்ற பொருட்கள் தூதாக விடுக்கின்ற மரபுண்டு. தூதுப் பொருளின் பெருமை கூறுதல், பிறவற்றை விலக்கியதன் காரணங்களைக் கூறுதல் பாட்டுடைத் தலைவர் பெருமைகளைக் கூறுதல், வழி கூறல், மாலை வாங்கிவரப் பணித்தல் முதலான பல செய்திகள் தூது நூல்களில் அடங்கியுள்ளன. தமிழில் நெஞ்சுவிடு தூது முதல் பலதூது நூல்கள் தோன்றியுள்ளன.

## 7.9 தன் மதிப்பீட்டு வினாவிடைகள்

**இரு மதிப்பெண் வினா விடைகள்**

1. தூதிலக்கியம் எவ்வகை யாப்பில் பாடப்பெறும்?

   கலிவெண்பா

2. முதல் தூது நூல் எது?

   உமாபதி சிவாச்சாரியார் பாடிய நெஞ்சு விடு தூது

3. தூது எத்தனை வகைப்படும்? அவையாவை?

   அகத்தூது, புறத்தூது என இரண்டு

4. தூதுக்குரிய அ∴றிணைப் பொருட்களைச் சுட்டுக.

   அன்னம், கிளி, மான், தமிழ், நெஞ்சு, மேகம், தென்றல் போன்றன

   குறுவினா

5. தூது விடுக்கப்பெறும் பொருட்கள் குறித்தெழுதுக.

   தூது விடு பொருட்கள் என்னும் தலைப்பின் கீழ் அமைந்த செய்திகள்

6. தூதுக் கூறுகளின் வளர்ச்சியை எழுதுக.

   தூதுக் கூறுகள் என்ற தலைப்பின்கீழ் அமைந்த செய்திகள்

7. தூது நூல்களின் அமைப்பு குறித்தெழுதுக.

   தூதுநூல்களின் அமைப்பு என்ற தலைப்பிலான செய்ஹிகள்

   பெருவினா

8. தமிழில் தூது இலக்கியப் போக்குக் குறித்துக் கட்டுரை வரைக.

   பாடப்பகுதியின் திரண்ட கருத்து

## 7.10. மேலும் பயிலவேண்டிய நூல்கள்

தா.ஈசுவரப்பிள்ளை - தமிழில் சிற்றிலக்கிய வரலாறு

பி.இரத்தின சபாபதி - தூதுஇலக்கியம் ஒரு பார்வை

ந.வீ.செயராமன் - தூது இலக்கியங்கள்

# கூறு 8 தமிழ்விடு தூது-தமிழின் தனிச்சிறப்பு -தமிழின் தெய்வீக ஆற்றல தமிழின் சிறப்பு

## 8.1 முன்னுரை

தமிழ் விடுதூது தமிழின் இலக்கண இலக்கியப் பரப்பை உணர்த்தும் கருத்துக் கருவூலம். அடியார் பெருமைகளைப் பேசும் ஆன்ற தமிழ் இலக்கியம். தமிழைத் தெய்வ நிலைக்கு உயர்த்திப் போற்றும் உன்னத இலக்கியம். இதன் கண் அமைந்த தமிழின் சிறப்பும் தெய்வீக ஆற்றலும் இங்கு பொருளாக விரித்துரைக்கப்படும்

## 8.2 நோக்கம்

தமிழ்ப் புலவர் செய்தனவற்றைத் தமிழே செய்தது என்று உருவகப்படுத்திப் பாடும் கவி மரபை அறிந்துகொள்ளலாம். மேலும் தமிழைத் தெய்வமொழியாகக் காண்பதற்கு இத்தூதின் ஆசிரியர் எடுத்தாளும் கருத்துக்களை அறிந்து கொள்ளலாம். தமிழின் இலக்கிய இலக்கண வளங்களைக் குறியீடாகக் கொண்டு குழந்தையாகவும் பயிராகவும் மன்னனாகவும் தமிழைப் பாடும் திறத்தை அறிந்து கொள்ளலாம்.

## 8.3 தமிழ்விடு தூது - தமிழின் தனிச்சிறப்பு

இந்நூலாசிரியர் தமிழின்மீது கொண்ட அளவற்ற ஈடுபாட்டை அவர் தமிழைத் தலைவியின் பொருட்டாக இறைவனிடம் தூது அனுப்புவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். மேலும் தமிழின் முக்கியமான பல பொதுச் சிறப்புகளையும் குறிப்பிடுகின்றார். நூலின் தொடக்கத்தில் மதுரைமாநகரச் சிறப்புக் குறிப்பிடப் பெறுகிறது.

### 8.3.1 எல்லாமுமாய் நின்ற தமிழ்

-----------------------------------------------------------------------------------------------------------------------

புகழுடைய சிவராசதானியான மதுரையில் சங்கப்புலவரும் தமிழரசி என்று பாடப்பெறும் மீனாட்சியம்மையும் சிவஞானத் திரட்டில் ஒரேட்டை எடுத்த கணபதியும் உக்கிர குமார பாண்டியனாய் அவதரித்து மதுரையை ஆண்டதோடு இடைக்காடர் முன் பாடல் பெற விழைந்து தானும் பாடிய முருகனும் நீயன்றோ தமிழே.

சீர்கொண்ட கூடல் சிவராச தானி புரந்து
ஏர் கொண்ட சங்கத்துஇருந்தோரும் - போர்கொண்டு 1
இசையும் தமிழரசி என்று ஏத்தெடுப்பத் திக்கு
விசையம் செலுத்திய மின்னும் - நசையுறவே 2
செய்ய சிவஞானத் திரள் ஏட்டில் ஓரேடு

கையில் எடுத்த கணபதியும் - மெய்யருளால் 3
கூடல் புரந்து ஒருகால் கூடற் புலவர்எதிர்
பாடல் அறிவித்த படைவேளும் - வீடு அகலா 4

மூவாண்டில் உமையின் ஞானப்பாலால் வடமொழியும் தென்மொழியும் அறிந்து பாடிய திருஞான சம்பந்தரும் அவினாசியில் சிவபெருமானிடம் முதலையுண்ட பிள்ளையை மீட்கப் பாடிய சுந்தரரும் அயனும் மாலும் அடைய முடியாத திருவடியைத் திருநல்லூரில் பெற்ற அப்பரும் தான் பாட ஈசன் எழுதுமாறு திருக்கோவை பாடிய மாணிக்க வாசகரும் நீயன்றோ தமிழே

மன்னும் மூவாண்டில் வடகலையும் தென்கலையும்
அன்னை முலைப்பாலில் அறிந்தோரும் - முன்னரே 5
மூன்று விழியார் முன் முதலையுண்ட பிள்ளையைப்பின்
ஈன்றுதரச் சொல்லின் இசைந்தோரும் - தோன்று அயன் மால் 6
தேடி முடியா அடியைத் தேடாதே நல்லூரில்
பாடி முடியாப் படைத்தோரும் - நாடிமுடி 7
மட்டோ லைப் பூவனையார் வார்ந்துஓலை சேர்த்துஎழுதிப்
பட்டோ லை கொள்ளப் பகர்ந்தோரும் - முட்டாதே 8

தமிழ் முனியாகிய அகத்தியரும் தொல்காப்பியரும் பன்னிரு சூத்திரங்களில் சிவஞான போதமாகச் சித்தாந்தத்தை அறிவித்த மெய்கண்டாரும் திருமாளிகைத் தேவர் முதலான ஒன்பதாம் திருமுறைப் பாடல் பாடியவரும் திருமந்திரம் பாடிய திருமூலரும் பொய்யிலாத சங்கப்புலவரும் ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், திருவள்ளுவரும் என எல்லாருமாய் தமிழே நீ இருக்கின்றாய்

**8.3.2 தமிழ்க் குழவி**

தமிழாகிய தலைவனே!, உன்னைப் போற்றினால் என் துயர் தீரும் என்று எண்ணி உன் பொன்னடியைப் போற்றினேன். நீ பஞ்சி படாத நூல், பலர் தீண்டி நெருடாப் பா, குற்றமிலா கலை ஆவாய். சொல்லேருழவராகிய புலவரின் அகமாகிய வயலில் செய்யுளாக விளைகின்றாய். ஒரு குலத்திற்கு மட்டுமின்றி எல்லாக் குலத்திற்கும் உயிராய் நின்றாய், வெண்பா, அகவல், கலி, வஞ்சி மருட்பா எனும் பாக்குலம் தோன்ற நின்றாய்.

பஞ்சி படா நூலே பலர்நெருடாப் பாவே கீண்டு
எஞ்சி அழுக்கு ஏறா இயல்கலையே - விஞ்சுநிறம் 17
தோயாத செந்தமிழே சொல்ஏர் உழவர் அகம்
தீயாது சொல்விளையும் செய்யுளே - வீயாது 18
ஒருகுலத்தும் வாராது உயிர்க்கு உயிராய் நின்றாய்
வருகுலம் ஓர் ஐந்தாயும் வந்தாய் - இருநிலத்துப் 19

உந்தியில் காற்றாக எழுந்து தொண்டையில் நின்று தலை, மிடறு மூக்கு நெஞ்சு ஆகிய ஒலிக்கும் உறுப்புக்களைச் சேர்ந்து இதழ், நாக்கு, மூக்குபல் அண்ணம் ஆகியவற்றின் முயற்சியால் தலை திரும்பி முதலெழுத்து (உயிர் 12, மெய் 18) முப்பதாகவும் சார்பெழுத்து 240 (உயிர்மெய் 216, உயிரளபெடை 7, ஒற்றளபெடை 11ஆய்தம் , குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம்.ஆகியன ஒன்று என 240) ஆகவும் நீ பிறந்தாய்

புண்ணியம் சேர்உந்திப் புலத்தே வளிதரித்துக்
கண்ணிய வாக்காம் கருப்பமாய் - நண்ணித் 20
தலைமிடறு மூக்குரத்தில் சார்ந்து இதழ்நாத் தந்தம்
உலைவிலா அண்ணத்து உருவாய்த் - தலைதிரும்பி 21
ஏற்பமுதல் முப்பது எழுத்தாய்ச் சார்பு இருநூற்று
நாற்பது எழுத்தா நனிபிறந்தாய் - மேற்படவே 22

எண் பெயர் முறை பிறப்பு உருவம் மாத்திரை முதல், ஈறு, இடைநிலை, போலி, பதம் புணர்ப்பாகிய என்று பன்னிரு பருவங்களை உற்றாய். பள்ளிக் கூடத்தில் நாவாகிய தொட்டிலில் சிறார் தாலாட்டக் கிடந்தாய். (ஓலையில் அமைந்த )உன்னை மஞ்சளில் குளிப்பாட்டி மையிட்டுஅறம் பொருள் இன்பம் ஆகிய முப்பாலும் தந்து வளர்த்தனர். உன் பிள்ளைகளைப் பத்துப் பருவங்களில் (காப்புமுதலான பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள்) வளர்த்த உன்னை ஒருவர் தான் வளர்க்க இயலுமோ. படிக்க வேண்டியவர் யாவரும் உன்னைத்தான் படிப்பர். அவ்வாறிருக்க உன்னைப் படிப்பிப்பது உண்டோ.?

### 8.3.3 தமிழ் மாப்பிள்ளை

பெயர், வினை, இடை, உரி ஆகிய சொல் நான்கு, இயற்சொல், திரிசொல், திசைச்சொல் வடசொல் நான்கு, புறமும் அகமும் ஆகிய ஏழேழ் திணைகள், யாப்பின் கூறுகள் எட்டு (எழுத்து, அசை, சீர், அடி, தளை, தொடை, பா, இனம்) முப்பத்தைந்து பொருளணிகளும் பெற்று எழில் மாப்பிள்ளையாகத் திகழ்ந்தாய். பாக்களின் ஓசை உன் பட்டத்தரசியரோ? மகிழ்ச்சிதரும் தோல்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என்னும் ஐவகைக்கருவிகள் தரும் நூற்றிமூன்று பண்களும் உனக்கு காமக்கிழத்தியர் போல் விளங்குகின்றன. அனைவரும் விரும்பும் நவரசங்கள் எனப்படும் வீரம், அச்சம், இழப்பு, வியப்பு, காமம், அவலம், நகை, நடுநிலை, உருத்திரம் என்னும் ஒன்பான் சுவைகளையும் மக்களாய் பெற்றுத் திகழ்கிறாய். இவ்வாறு எல்லாமாக நீ இருப்பதால் ஒரு குடும்பமாகத் தோன்றும் பா, பண் முதலிய இல்லத்தரசிகளோடும், ஒன்பான் சுவைகளாகிய மக்களோடும் நாடகமாகிய மேடையில்

கொலுவீற்றுள்ளாய். அங்கு பதினெட்டு வித வருணனைகளும் கண்டுமகிழ்ந்தாய்.

செய்யுள்சொல் நான்கும்உயர் செந்தமிழ்ச்சொல் ஓர்நான்கும்
மெய்உட்பொருள் ஏழ்விதத் திணையும் - மையில் எழுத்து 28
ஆதியாப்பு எட்டும் அலங்காரம் ஏழ்ஐந்தும்
பேதியாப் பேரெழில் மாப்பிள்ளையாய்ச் - சாதியிலே 29
ஆங்குஅமை செப்பல்பண் அகவல்பண் துள்ளல்பண்
தூங்கல்பண் பட்டத்துத் தோகையரா - ஓங்குமனத்து 30
எண் கருவி ஐந்துஈன்றிடு நூற்று மூன்றான
பண்களும்பின் கல்யாணப் பாவையரா - எண்கொளும் 31
நல்தாரகமா நவரசமாம் பிள்ளைகளைப்
பெற்றாய் பெருவாழ்வு பெற்றாயே - உற்று அகலாப் 32
பண்கள்முதல் பெண்களொடும் பாலரொடும் நாடகமாம்
பெண்கொலுவில் வீற்றிருக்கப் பெற்றாயே - மண்புகழத் 33
தாழ்விலா அட்டாதச வன்னனைகள் எனும்
வாழ்வுஎலாம் கண்டு மகிழ்ந்தாயே - ஆழ 34

### 8.3.4 தமிழ்ச் சக்கரவர்த்தி

வையையில் எம் தலைவர் சிவபெருமான் பட்ட பிரம்பைச் செங்கோலாக ஏற்றாய். பத்துத் திசைகளில் உன்செங்கோல் செல்லாத இடமில்லையே. பிற இடங்களிலிருந்து வந்த கலந்த திசைச்சொல் பதினேழும் உன் சிற்றரசர்களோ? மேற்கில் மேலைக் கடலும் கிழக்கில் வங்கக் கடலும், தெற்கில் குமரியும், வடக்கில் திருவேங்கடமலையும் என எல்லை வகுத்துத் தமிழாய் ஆளுகின்றாய். பல வட்டார வழக்குகள் பேசும் தமிழகத்தில் வையை, கருவூர், மருதையாறு, மருவூர் எல்லைக்குட்பட்ட இடத்தில் உனக்கு அரண்மனை உள்ளதோ? மூவேந்தரான சேர, சோழ,

பாண்டியரை வாகனமாகக் கொண்டு மண்ணுலகம், விண்ணுலகம், கீழுலகம் எனும் மூவுலகையும் ஆளும் நீ பாவேந்தனோ அல்லது பார்வேந்தனோ?

நெடுங்கோல வையையில் என் நேசர்மேல் பட்ட
கொடுங்கோல் செங்கோலாகக் கொண்டாய் - அடங்காத 35
எம்கோவே பத்தென்று இயம் பு திசைக்குள்ளே நின்
செங்கோல் செலாத திசையுண்டோ - இங்கே உன் 36
தேசம் ஐம்பத்தாறில் திசைச்சொல் பதினேழும்
மாசற நீ வைத்த குறுமன்னியரோ - வீசு 37
குடகடலும் கீழ்கடலும் கோக் குமரியாறும்

வடவரையும் எல்லை வகுத்தாய் - இடைஇருந்த 38
முன்உறும் தென்பாண்டி முதல் புனல்நாடு ஈறான
பன்னிரண்டு நாடும் அப்பால் நாடோ - அந்நாட்டுள் 39
வையை கருவை மருதாறு மருவூர் நடுவே
ஐய! நீ வாழும் அரண்மனையோ - செய்யபுகழ் 40
மூவேந்தர் வாகனமா மூவுலகும் போய் வளைந்த
பாவேந்தே நீ பெரிய பார்வேந்தோ -

புண்ணியதமிழே வானுலக தேவர்களும், நால்வேதமும் இருபத்தெட்டு ஆகமங்களும் உனக்குத் தொண்டு செய்யக் கூடிய புரோகிதர்களோ? பெருமைமிகு காப்பியங்கள், நாடகங்கள், அணி இலக்கண நூல்கள் எல்லாம் உனக்குத் தோழர்களோ? உன்னைச் சார்ந்து புலமை பெற்றோரைக் காக்கும் தமிழ் வேந்தே மகாபாரதமும் பதினெண் புராணங்களும் உன் படைத்தலைவர்களா?

தமிழே, உன்னை அறிந்தவர் நீதான் எழுத்துக்களுக்கு எல்லாம் அதிபதியான சக்கரவர்த்தி என்பர். ஆனால் நீதான் ஆதி மொழியாக இப்பூவுலகின் சக்கரவர்த்தி. கையில் சக்கரம் ஏந்தி நெடிய தேரேறிச் சுழிகுளத்தில் இறங்கி நீந்திக்கடந்து, கூடங்கள் நிறைந்த சதுக்கத்தில் அமர்ந்திருப்பாய். தேன்கமழும் மாலைகளை அணிந்து நாற்படைகளாகிய தேர், யானை, குதிரை, காலாட்படைகள் சூழப்பெறுவாய் முரசங்கள் முழங்கச் சேர, சோழ, பாண்டியர் எனப்படும் முடியுடை வேந்தரும் புடைசூழத் தமிழ்ப் புலவர்கள் நிறைந்த தமிழ்ச் சங்கத்தில் தமிழே நீ வாழ்ந்துகொண்டுள்ளாய். இதனை,

அக்கரவர்த்தி எனலாம் என்பார் பூலோக
சக்கரவர்த்தியும் நீதான் அன்றோ - சக்கரம்முன்பு 46
ஏந்தி நெடுந் தேர்மேல் ஏறிச் சுழிகுளம்
நீந்திஓர் கூடநிறை சதுக்கம் - போந்து 47
மதுரம் கமழ் மாலைமாற்று அணிந்து சூழும்
சதுரங்க சேனை தயங்கச் - சதுராய் 48
முரசம் கறங்க முடிவேந்தர் சூழ
வர சங்கம் மீதிருந்து வாழ்ந்தே

என்னும் கண்ணிகள் விளக்கும். இவற்றுள் சுழிகுளம், கூட சதுக்கம், மாலைமாற்று என்பன சித்திரக் கவிகள் ஆகும்.

### 8.3.5 தமிழைக் காப்பவை (50- 61)

அருளால் உயர்ந்த திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் பாடிய தேவாரப் பதிகங்களும், மாணிக்கவாசகர் பாட சிவபெருமானே ஓலையில்

எழுதிய திருக்கோவையாரும், தாயாக வணங்கப்படும் காரைக்காலம்மை எழுதிய திருவிரட்டை மணிமாலையும் தமிழை வேந்தனாகக் காத்துநின்றன.

மொழியின் ஐயங்களை அகற்றும் இலக்கணங்களும் அவற்றைக்கற்ற புலவர்களால் எழுதப்பட்ட காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி போன்றவையும் பொழுது, நாடு, நகர் போன்ற வருணனைகள் நிறைந்த காப்பியங்களும் தமிழை வேந்தனாகக் காத்துநின்றன.

சேரமான் பெருமாள் நாயனார் தில்லையில் பாடி அதனை ஈசனே கேட்டு மகிழ்ந்த பொன்வண்ணத்தந்தாதியும் மேலும் சேரமான் இயற்றிய மும்மணிமாலையும் பட்டினத்தாரின் மும்மணிக்கோவையும், பழந்தமிழரின் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் தமிழை வேந்தனாகக் காத்து நிற்கின்றன.

இரட்டைப்புலவரான முதுசூரியர், இளஞ்சூரியர் என்போரால் எழுதப்பட்ட திருவாமாத்தூர்க் கலம்பகமும் ஆயிரம் யானை கொன்றவீரனைப் பாடும் செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணியும், சோழமன்னன் ராசராசன் ஓராயிரம் பொன்கொடுக்க ஒட்டக்கூத்தரால் பாடப்பட்ட இராசராச சோழன் உலாவும், குலோத்துங்கன் பிள்ளைத்தமிழும் தமிழை வேந்தனாகக் காத்துநின்றன. இதனை,

முன்னம் பேராத பல்குரவர்
வெள்ளத்தினும் மிகுந்தோர் மெய்காப்ப - உள்ளத்து
வீரியம் செய்து வினையொழியவே ராச
காரியம் செய்யும் கவிதையே . ( கண்ணிகள் 60 -61)

என்ற கண்ணிகளில் வீரத்தை விளைவித்து அல்லவற்றை நீக்கும் அரசனாகச் செயல்படும் கவிதை வேந்தனாகத் தமிழ் விளங்குவது குறிப்பிடப்பட்டுள்ளது.

**8.3.6 தமிழாகிய விளைச்சல் (62-70)**

அருந்தமிழே இவ்வுலகில் அரியாசனம் உனக்குமட்டுமே உண்டு. அதனால் உனக்கு நிகராக யாரும் இல்லை. பொருளை விரிவாக உணர்த்தும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாவகைகள் வரப்பாகவும், துறை, தாழிசை, விருத்தம் என்னும் பாயும் அல்லது வடியும் மடைப்போக்காகவும் உள்ளன. செய்யுளுக்கு வளம் சேர்க்க மனம் புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கை ஏர்களாகப் பூட்டிச் சொல்லேர் உழவர்களாகிய புலவர்கள் சேர்ந்து உழுது பண்படுத்துகின்றனர்.

வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம் என்னும் கவிதைக் கோட்பாட்டு விதைகளை விதைத்து வளர்த்து அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள்களையும் விளைபொருளாகப் பெறுகின்றனர்.

பிழையான பாடலைப் பாடுபவரைத் தலையில் குட்டும் அதிவீரராமப்பாண்டியன், செவியை அறுக்கும் வில்லிபுத்தூராரும் தலைகளை வெட்டும் ஒட்டக்கூத்தரும் தமிழ் விளைச்சலில் களைகளை அகற்றினர். இதனை,

“குட்டிச் செவி அறுத்துக் கூட்டித் தலைகள் எல்லாம்
வெட்டிக் களைப்பறிக்க மேலாய்த் தூர் (கண்ணி - 67)

என்னும் கண்ணி உணர்த்தும். இவ்வாறு மேன்மக்கள் கண்காணிப்பால் வளர்ந்து தூர்கட்டுகின்றாய். பலா, முந்திரி, வாழைப்பழங்களாகவும், கரும்பாகவும், தென்னங்கனியாகவும் இவற்றுக்கெல்லாம் மேலான அமுதமாகவும் அதற்கும் மேலான முத்திதரும் முத்தமிழாகவும் இருக்கின்றாய். (பலா, முந்திரி, வாழைப்பழம், கரும்பு, தென்னங்கனி ஆகியன சுவைக்கப்படுவதில் உள்ள எளிமை, அருமை போலக் கவிதைகளில் பொருட் புலப்பாட்டைச் சுவப்பதில் உள்ள எளிமை, அருமையைக் குறிக்க அவை குறியீடாக அமைந்துள்ளன.)

உண்ணப்படும் தமிழ்த்தேனே உன்னிடம் ஓர் வேண்டுகோள் அதனை ஏற்று அருள்புரிவாயாக. என்கின்றாள் தலைவி. இவ்வாறு தலைவி வேண்டுவதை

திகழ்பா ஒருநான்கும் செய்யுள் வரம்பாகப்
புகழ் பாவினங்கள் மடைப்போக்கா - நிகழவே 63
நல்ஏரினால் செய்யுள் நால்கரணத்து ஏர்பூட்டிச்
சொல்லேர் உழவர் தொகுத்து ஈண்டி - நல்லநெறி 64
நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்
மேலே பலன்பெறச் செய்விக்கும் நாள் - மேலோரில் 65
பாத்தனதாகக் கொண்ட பிள்ளைப்பாண்டியன் வில்லி ஒட்டக்
கூத்தன் இவர் கல்லாது கோட்டி கொளும் - சீத்தையரைக் 66
குட்டிச் செவிஅறுத்துக் கூட்டித் தலைகள் எல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த் தூர் - கட்டி 67
வளர்ந்தனை பால் முந்திரிகை வாழைக் கனியாய்க்
கிளர்ந்த கரும்பாய் நாளிகேரத்து - இளங்கனியாய் 68
தித்திக்கும் தென்அமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியே என் முத்தமிழே - புத்திக்குள் 69
உண்ணப்படும் தேனே

என்று தூதின் ஆசிரியர் பாடுகின்றார்.

களைபறிக்கும் சான்றோர்கள் பற்றிக் குறிப்பிடுகையில்
குட்டுவதற்கோர் பிள்ளைப் பாண்டியன் இங்கில்லை
குறும்பியளவாக் காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட்டும் அறுப்பதற்கோர் வில்லி இல்லை
இரண்டொன்றாய் முடிந்து தலையிறங்கப் போட்டு
வெட்டுதற்ககோ கவி ஓட்டக் கூத்தனி ல்லை
விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத்துரைகளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே

என்ற தனிப்பாடற் கருத்து எடுத்தாளப்பட்டுள்ளது.

**8.3.7 தமிழின் பெருமை கூறித் தலைவி வேண்டுதல் (71- 106)**

மேலும் தமிழின் பெருமைகளைப் பேசும்போது

அருந்தமிழே உன்னுள் குறம், பள்ளு, என்னும் இலக்கியங்கள் வளர்ந்துள்ளன. அவற்றுக்கும் தாழிசை, துறை விருந்தம் எனப்படும் பாவினங்களுக்கும் உறவுள்ளதா? திருத்தக்க தேவரால் எழுதப்பட்ட சீவகசிந்தாமணியாய் இருக்கும் உன்னைக் குறை கூறியோரின் நாக்கு சிதைந்துவிடும்.

தேவர்கள் சத்துவம், இராசதம், தாமதம் என்ற மூன்று குணங்களையே பெற்றுள்ளனர். நீயோ அறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலின் பொருண்மை காந்தம், வலி, சமாதி என்னும் பத்து செய்யுள் நெறிகளாகிய குணங்களைப் பெற்றுள்ளாய்.

உலகமக்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை ஆகிய ஐந்துவண்ணங்களை மட்டுமே அறிவர். நீயோ நூறு வண்ணங்கள் கொண்டுள்ளாய்.

நாவினால் உணரப்படும் சுவை ஆறு கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு ஆகும். ஆனால் நீயோ நகை, அழுகை, இழிவு, வியப்பு, அச்சம், பெருமிதம், சினம், மகிழ்ச்சி, அமைதி என்னும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய்.

மக்களுக்கு வனப்பு என்னும் அழகு ஒன்றுதான். நீயோ அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன் இழைபு என்னும் எட்டு வனப்புகள் கொண்டாய்.

பாராளும் வேந்தர் இயல்பாக வரும் பொருள், வரியால் வரும் பொருள், திறைப்பொருள் (கப்பம்) என்னும் முப்பொருள்கள் உடையவராயிருக்க நீயோ ஆற்றுநீர், மொழிமாற்று, நிரனிறை, விற்பூட்டு,

தாப்பிசை அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு, அடிமறி மாற்று, என எட்டு பொருள் கோள்களைப் பெற்றுள்ளாய்.

வாழ்வியலை விளக்க அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலைப் பெற்றிருக்கும் தமிழாகிய நீ இலக்கணத்தில் ஐந்துபாலைக் கொண்டுள்ளாய் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்)

அருந்தமிழே உன்னைப் போல் முப்பது சீர்களைப் பெற்ற பெருமைபடைத்த செல்வந்தர் இந்த உலகில் யார்? (ஓரசைச்சீர் - 2 ஈரசைச்சீர் - 4, மூவசைச்சீர் - 8, நாலசைச்சீர் - 16 மொத்தம் - 30) என்கின்றாள் தலைவி.

### 8.3.8 தளை அவிழ்க்கும் சுடரான தமிழ் (79 -88)

சோழன் செங்கணானிடம் தோற்ற கணைக்கால் இரும்பொறை சிறையிலடைபட்டான். பொய்கையார் சோழன் மீது களவழிநாற்பது பாடியதால் சேரன் கால்தளையைத் தமிழே நீ களைந்தாய். இத்தகு பெருமை உடைய உன் பொற்பாதங்களுக்கு (1) நேரொன்றாசிரியத்தளை, (2) நிரையொன்றாசிரியத்தளை (3) வெண்சீர் வெண்டளை (4) இயற்சீர் வெண்டளை (5) கலித்தளை (6) ஒன்றிய வஞ்சித்தளை (7)ஒன்றாத வஞ்சித்தளை என்னும் ஏழு தளைகள் ஏனோ ?

என்னை ஆளும் தமிழே புலவர்க்கு அறிவூட்டும் உன்னை வெள்ளை அறிவினன் (தெளிவற்றவன்) எனக் கூறல் தகுமோ ! சங்கம் வளர்த்த கிரேதாயுகம், திரேதாயுகம் துவாபரயுகம் என்னும் மூன்று யுகத்திலும் நீ வளர்ந்தாய் கலியுகம் எனப்படும் இக்காலத்திலும் நீ இருப்பதால் உன்னைக் கலிப்பா என அழைத்தல் குறையாகுமா ?

மயக்கம் மாற்றி நல்லறிவைத்தரும் உன்னை மருட்பா எனக் கூறுவது பொருத்தமோ ? பாட்டுடைத் தலைவன் பெயருக்கும் அவனைப் பாடும் பாடலின் முதல் சீருக்கும் மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள் கதி, கணம் என்னும் பத்துப் பொருத்தம் பார்ப்பர். இவை அத்தனையும் உள்ளபோது பொருந்தாமை எனும் விருத்தம் உள்ளதாகக் கூறுதல் முறையா.

இருளகற்றும் ஞாயிறு, திங்கள், தீ என்னும் முச்சுடரும் வரும் போது மனத்து இருளை அகற்றும் உன்னைப்போல் அவற்றால் வரமுடியுமா ? இதனை,

முந்திஒளியால் விலக்கும் முச்சுடர் என்பார் உனைப் போல்
வந்து என் மனத்து இருளை மாற்றுமோ - (கண்ணி - 84)

என்னும் கண்ணி விளக்கும்.

வானுலக சிந்தாமணி கொடையில் சிறந்தது. உனக்கு இருக்கும் சீவகசிந்தாமணி என்னும் நூலால் அதற்கும் அப்பெயர் வந்திருக்குமோ.

பலவகை அணிகலன்களை அணிந்தாலும் அலங்காரம் என்னும் அணிநூலைப் பெற்ற உனக்கு அவை நிகராகுமோ ?

உன்பொருளை விரித்து உரைக்க உரைக்க நீ வளர்வாய் உரைக்கும்போது தேயும் பொன்னையும் பொருளாகக் கொள்ளலாமோ ?

திருடர்களால் கவலைப்படுவதும் மன்னர்கள் பெற்றுக் கொள்வதும் உலகப் பொருள்களாகும். ஆனால் அவை உன்னைப்போல் வாழ்க்கைக்கு உதவாதன.

## 8.3.9 தெய்வத்தமிழ் (89- 96)

செந்தமிழே! இவ்வுலகில் நன்னெறியில் வாழ்ந்தவர் விண்ணுலகில் தெய்வலடிலம் பெறுவர். அந்நிலையை அடைவதற்கு உன்னைக்கற்று ஆராய்ந்தவரால் மட்டுமே முடியும். உன்னை அறியாதவர்க்குத் தென்திசையிலுள்ள எமன் உலகமே கிட்டும்.

தண்ணியதமிழே உன்னை வளர்ந்த முச்சங்கங்களால் சிவபெருமான் புகழ்பெற்றாரா ? அல்லது அடிமுடி காண முடியா சிவபெருமானால் நீ புகழ்பெற்றாயா

தமிழே கலைமகளின் கரத்தில் நீ இருக்கிறாயா. அல்லது கலைவாணி நீயாகவே உள்ள ஓலைச்சுவடிகளில் அமர்ந்து உள்ளாளா ?

திருவெ.ஃ.காவூரில் திருமழிசை ஆழ்வாருக்காகத் திருமால் பாம்புப்பாயைச் சுருட்டிய போது தமிழாகிய நீதான் அவர் பின்னால் சென்றாயோ அல்லது திருமால்தான் உன்னைத் தொடர்ந்து பின்னால் வந்தாரோ? இக்கருத்துகளை,

“ஈங்கு உனது சங்கத்தால் ஈசர் உயர்ந்தாரோ
ஓங்கும் அவரால் நீ உயர்ந்தாயோ - பூங்கமல
வீடு ஆளும் வாணி அங்கை மேலே இருந்தாயோ
ஏடா உன்மேல் இருந்தாளோ - ஆடு அரவத்
தாழ் பாயலாளரை நீ தானே தொடர்ந்தாயோ
சூழ் பாயோடு உன்னைத் தொடர்ந்தாரோ. (கண்ணி - 91- 93)

என்னும் கண்ணிகள் விளக்குகின்றன.

அகத்திய முனிவர் கேட்க முருகப்பெருமான் அவருக்குத் தமிழைக் கற்றுக் கொடுத்தாரா அல்லது தமிழாகிய நீதான் அகத்தியருக்கு தமிழ்கற்க உணர்த்தினாயா?

சிவனார் இறையனார் அகப்பொருள் எழுதும்போது தமிழாகிய உனக்குப் பாடுபொருளாக வந்தாரோ அல்லது நீதான் மதுரையில் எழுந்தருளிய ஈசனைப் பாடுபொருள் ஆக்கினாயோ. இனிய தமிழே சொக்கநாதர் மேல் காதல் கொண்டு மயக்கம் அடைந்துள்ள எனக்கு

எல்லோருக்கும் போல உதவி செய்வது நீதியாகும். உன்னை முழுதும் அறிந்து என்னால் உரைக்க முடியுமோ?

தமிழே, கற்பவற்றைப் பிழையின்றித் தெளிவாகக் கற்கவேண்டும், அவ்வாறு கற்றபிறகு முறைப்படி வாழவேண்டும் என்னும் திருக்குறள் கருத்தைப் போன்று எல்லோர்க்கும் அறிவுரை கூறி வாழ்விக்கும் வல்லமை பெற்றுள்ளாய். உனக்கு நல்வழி உரைக்க என்னால் முடியுமோ?

ஈரடிகளால் ஆன திருக்குறளிலேயே உலகுக்கு வேண்டிய அறிவுரைகள் அனைத்தும் இருக்கும் என்றால் நேரடி எனப்படும் நான்கடிப்பாக்களில் (நாலடியார்) இடம்பெறாதன உள்ளனவோ?

பாடல் அடி ஒவ்வொன்றுக்கும் ஓராயிரம் பொன்அள்ளிக்கொடுத்த சிவபெருமானைச் சுந்தரமூர்த்தி நாயனாருக்காக பரவை நாச்சியாரிடம் தூது போக அனுப்பிய தமிழே! அதனை அறிந்ததால் கூறுகின்றேன். பெண்ணாகிய இவள் கூறினாள் என்றெண்ணாமல் எனக்காக மதுரை சொக்கநாதரிடம் சென்று தூதுசொல்லி வருக. என்கிறாள் தலைவி. இதனை,

“ஆயிரம் பொன் இறைக்கும் ஐயரை வீதியிலே
போய் இறந்து தூது செல்லப் போக்கினோய் - ஆயிருந்தும்
மாண்பாய் ஓர் தூது சொல்லி வா என்பேன் என் வருத்தம்
காண்பாய் என் பெண்மதி நீ காணாதே. (கண்ணி - 100, 101)

என்னும் கண்ணிகள் விளக்குகின்றன.

**8.3.10 தெய்வீக ஆற்றல் தமிழ் (102 - 106)**

தமிழே ! திருஞானசம்பந்தரின் பெருமையை உலகறிய ஆண்பனையை பெண்பனை ஆக்கினாய். சைவம் தழைக்க காரைக்காலம்மையாராகவும், நீதி போதிக்க ஔவையாராகவும் அவதாரம் செய்தாய்.

நட்பை விரும்பும் திலகவதியாரின் உடன்பிறந்த நாவுக்கரசராய்ப் பிறந்தாய். உத்திராட்சமும் வெண்ணீறும் அணிந்து அடியவரைப் போற்றும் மங்கையர்க்கரசியாரின் குருவாகிய திருஞானசம்பந்தராய் அவதரித்தாய்.

ஞானியர்க்கு சுந்தரர் என்னும் மகனாய்த் தோன்றி கோட்புலி நாயனாரின் மகன்கள் வனப்பகை, சிங்கடி என்னும் இருவருக்கும் வளர்ப்புத் தந்தையாய் பாதுகாத்தாய்.

பெண்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டும் என்னும் நோக்கமுள்ள நீ பெண்ணாகிய என் வாட்டத்தைப் போக்க மதுரைச் சொக்கநாதரிடம் தூது சென்று மனப்புண்ணை ஆற்றி அருள் புரிவாயாக.

### 8.3.11 தமிழே தூதுசெல்லச் சிறந்தது (107 - 112)

தாமரை மலரில் இருக்கும் அன்னத்தைத் தூது அனுப்பலாமா என எண்ணினேன். அதனிடம் சொன்னால் நான் மையல் கொண்ட சொக்கநாதரைத் தெரியாது என்று கூறிவிடும். (பிரமன் அன்னமாக இருந்து திருமுடியைக் கண்டறியாதது இங்கு கூறப்படுகின்றது)

ஒரு வண்டைத் தூது அனுப்பலாம் என்றால் அது அவர் அருகில் சென்று என் மையலைக் கூறும் முன்பே "காமம் செப்பாது" என்றால் அப்படியே திகைத்துப் பறந்துவிடும். (இறையனார் என்னும் புலவராகச் சிவன் தோன்றி கொங்குதேர் என்ற குறுந்தொகைப்பாட்டில் காமம் செப்பாதே என்றமையை நினைத்துச் சொன்னது)

ஒரு மானைத் தூதனுப்பலாம் என்றால் அதுவும் சிவபெருமான் அணிந்துள்ள புலித்தோலைப் பார்த்து அஞ்சி பக்கம் போகாது வந்துவிடும். குயிலைத் தூதாக அனுப்பலாம். காக்கை இனத்தைச் சார்ந்த அதுவும் கரிச்சானைக் கண்டால் நடுங்கும். எனவே குயிலும் தூதுபோகத் தகுதியற்றது. (மதுரையம்பதிச் சிவபெருமான் கரிக்குருவிக்கு உபதேசித்தமையை நினைத்துக் கூறியது)

மனதைத் தூதாக அனுப்பலாம் என்றால் அதுவும் பொருத்தமானதாகத் தெரியவில்லை. மனதைக் கடந்தவராகவும் மனதிற்கு எட்டாதவராகவும் இருப்பதால் அதனாலும் ஈசனை அணுகமுடியாது.

எப்படி ஆராய்ந்தாலும் தமிழே உன்னைத்தவிர வேறு யார்க்கும் தூது செல்லத் தகுதியில்லை. அதனால் என் காதலையும் கவலையையும் உன்னிடம் கூறுகின்றேன் கேட்டருள்வாயாக ! என்கிறாள் தலைவி. இதனை,

அன்னம்தனை விடுப்பேன் அன்னந்தான் அங்குஅவரை
இன்னம்தான் கண்டு அறியாது என்பரே - மன்எந்தாய் 107
அப்பால் ஓர் வண்டை அனுப்பின் அவர் காமம்
செப்பாதே என்றால் திகைக்குமே - தப்பாது 108
மானைப் போய்த் தூது சொல்லி வா என்பேன் வல்லியப் பூந்
தானைப் பரமர்பால் சாராதே - ஏனைப்பூங் 109
கோகிலத்தை நான் விடுப்பேன் கோகிலமும் காக்கையினம்
ஆகி வலியானுக்கு அஞ்சுமே - ஆகையினால் 110
இந்த மனத்தைத் தூதாய் ஏகுஎன்பேன் இம்மனமும்
அந்த மனோதீதர்பால் அண்டாதே - எந்தவிதம் 111

என்னும் கண்ணிகள் வாயிலாக அறியலாம்.

### 8.3.12 சொக்கநாதரின் திருவிளையாடல் (113 - 131)

பின்னர் தலைவி தமிழை நோக்கிப் பேசுகையில் சொக்கநாதர் நிகழ்த்திய பல்வேறு திருவிளையாடல்களைப் பற்றி உரைக்கின்றாள்.

அப்போது சொக்கநாதரையும் தமிழையும் இணைத்தும் ஒப்பிட்டும் உரைக்கின்றாள். பத்தொன்பதாயிரத்து இருநூற்று தொண்ணுற்று ஒன்று தொடைகள் உடைய தமிழே நீ சொக்கநாதனிடம் சென்று எனக்காக ஒரு தொடையை (மாலை) வாங்கி வா என்கிறாள். இதனை,

“ஒருதொடை வாங்கி உதவாயோ ஓர்சே
விருது உடையார்க்கு நீ வேறோ (கண்ணி - 114)

என்னும் கண்ணி விளக்கும்.

தருமிக்காக கொங்குதேர் வாழ்க்கை என்று பாடியதும் நக்கீரனுடன் வழக்காடியதும் தன்னைப் பாடிய பாட்டுக்கிரங்கிச் சேரமான் பெருமாளிடம் பாணபத்திரருக்கு பொருளுதவுமாறு சீட்டுக்கவி அருளியதும் அறுபது சூத்திரத்தில் அகப்பொருளைப் பேசியதும் என ஒன்றோ உன்னோடு ஈசர் செய்த விளையாட்டுக்கள்? பலவன்றோ. மன்னன் மதியாததால் சென்ற இடைக்காடரின் பின்சென்றதும் காரியார் நாரியார் கவியில் பாதி திருடி விளையாடியதும் பாணபத்திரருக்காக விறகு சுமந்ததும் அவன் மனைவி இசைப் போட்டியில் ஏமநாதனை வெல்ல அருளியதும் செய்தவன் நம்பியோர்க்கு அருளும் சொக்கர். அவன் உனக்குள்ளும் இருப்பது உண்மையன்றோ என்கிறாள்.

வடமொழியே ஈசர் மொழி என அறியாமையால் சிலர் கூறுவர். பௌத்த, சமண சமயங்களுக்கு எதிராய் திருஞானசம்பந்தர் உருவிலே தமிழே நீ வந்து வையையில் சமணர்களுடன் வாதிட்டு வென்றாய். புனல் வாதத்தில் வையைக் கரையில் தமிழ்ப் பாட்டை ஆகமமாகத்திருஞான சம்பந்தர் நிறுவினார் என்பதற்கு ஏடுகள் கரை சேர்த்த திருவேடகமே சாட்சியன்றோ.

திருமறைக்காட்டில் அடைத்த கதவம் திறப்பித்தாய். வடமொழி உயர்ந்தது எனக்கருதிய அகத்தியருக்குச் சிவபெருமான் தமிழாகிய உன்னைக் கற்பித்து தமிழ்முனி அகத்தியன் எனச் செய்தான். பிரம்மனே வள்ளுவனாய் பிறந்து அறம், பொருள், இன்பத்தைத் திருக்குறளாய் உணர்த்தினான். வேதங்கள் போற்றும் சிவபெருமான் கீழே அமர்ந்திருக்க நீ சங்கப் பலகையில் வீற்றிருந்தாய் தமிழே. நரிகளைப் பரிகளாக்கியதும் பரிகளை நரிகளாக்கியதும் உன்பால் இறைவன் கொண்ட அன்பால் என்பதை யார் அறிவார்? உலகெங்கும் இயக்கும் நடராசர் தென் திசை நோக்கி ஆடுவதும் உன்பால் வைத்த அன்பன்றோ

சிவபெருமான் சுந்தரரிடம் ”நீ பாடும் சொற்றமிழே எனக்கு அர்ச்சனை” என்று கூற நாயனாரும் பித்தா என்று தொடங்கிப் பாடினார்.

அதை ஈசன் வழிபாடாக ஏற்றுக் கொண்டார். தமிழே எல்லாவற்றுக்கும் நீயே அடிப்படையாக உள்ளாய்.

இவ்வாறு தலைவி மதுரை சொக்கநாதர் பால் தமிழைத் தேர்ந்து தூது விடுத்துப் பேசும்பாவனையில் தமிழ்ன் தெய்வீக ஆற்றலைப்புலவர் பலவாறு பாடியுள்ளார்.

**8.3.13 பிற்பகுதியின் சுருக்கம்**

தமிழின் தெய்வீக ஆற்றலைப் பாடிய ஆசிரியர் தொடர்ந்து பூசலார், கண்ணப்பர் ஆகிய நாயன்மாரின் திருத்தொண்டுகளைச் சுட்டி அவருடைய கோயில் திருமஞ்சனம் முதலியவற்றை தமிழ் விடுதூதின் ஆசிரியர் பேசுகின்றார்.

தலைவி தமிழிடம் வேண்டுதல் (151 - 177)

வளமிக்க தமிழே மதுரை சொக்கநாதர் பால் கொண்ட காதலால் மிக வேதனைப்படும் நான் நீ துணையாக இருப்பதால்தான் இன்னும் உயிரோடுள்ளேன் தேவர்கள் உண்ணும் அமிழ்தமே கிடைத்தாலும் அதனை விரும்பேன். காமத்துயரால் நான் யானை என்னும் நோய்பற்றிய விளங்கனி போல் உள்கூடு அற்று வருந்துகின்றேன். காமன் என்னும் மலையாகிய யானை நின்ற கரும்பு போல ஆனேன். என்கிறாள் தலைவி. இதனை,

“இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் - வருந்தினைமால்
வெல்லானை தின்ற விளங்கனி ஆனேன் விரகக்
கல் ஆனை தின்ற கரும்பானேன் (கண்ணிகள் 151 - 152)

ஆற்றுவெள்ளம் கடக்க திருஞானசம்பந்தர் உன்னைப் பாடினார். அவருக்கு உதவாயோ. உன் அருளால் கூன் பாண்டியனின் கூன் காமத்தைக் கடக்க உதவும் உன் அருளால் கூன்பாண்டியனின் கூன் நிமிர்ந்தது. என்னை வாட்டும் மன்மதனின் வில்லை நிமிர்த்தி என் நோய் போக்க மாட்டாயா சம்பந்தர் சமணர் அனல்வாதம் ஏற்பட்டபோது சம்பந்தரின் ஏடுகள் தீயில் வேகாமல் காத்த நீ என்னை காமத்தீயில் வேகாமல் காக்கமாட்டாயா ? நாவுக்கரசரைக் கல்லில் கட்டி கடலில் எறிந்தபோது உன்னைப் பாடி கல்தெப்பமாக மாறி மிதந்தார். அதைப்போல் காமக்கடலில் மிதக்கும் என்னைக் காப்பாற்றமாட்டாயா ?

தமிழே நீ பொதிகை மலைத் தென்றலோடும் சந்தனத்தோடும் நட்பு கொண்டுள்ளாய். காமநோயால் வாடும் என்னோடும் அவற்றை நட்டாக்க மாட்டாயா. சம்பந்தர் தமிழாகிய உன்னைப் பாடியதால் அழுகுமிக்க பெண்ணானது நோயால் எலும்பாய் மெலிந்த என் மெலிவு நீக்கி என்னை அழகிய பாலையாக்க மாட்டாயா? என்று தலைவி தமிழிடம் வேண்டுகிறாள்.

சொக்கரிடம் சென்று நானுற்ற நோயைத் தூதுசொல்லி இனிமையாகப் பேச உன்னைவிட யாருமில்லை என்கிறாள். பல்வேறு வடிவங்களில் வலம் வந்து எங்கும் நிறைந்துள்ள நீ தென்கைலாயம் எனப் போற்றப்படும் மதுரைக்குச் சென்றாயே அப்படிப்பட்ட உன்னால் செய்ய முடியாத செயல் என்று ஒன்றுள்ளதா என வினவுகிறான்.

தாம் விரும்பியவரிடம் செய்தியை விரைவாகச் சென்று சொல்ல வேண்டும் எனத் தலைவி விரும்பினாலும் செல்லும்போது பத்திரமாகச் செல்ல வேண்டும் என்பதில் கவனமாக இருப்பார். அவ்வழியில் தமிழைத் தூதனுப்பும் தலைவி வழிகூறி நல்லோர் இருக்கும் இடம் கூறி அறிவுரை கூறி தூதனுப்புகிறாள்.

## 8.4 தொகுத்துக் காண்போம்

தமிழ்விடு தூது பாட்டுடைத் தலைவர் சிவபெருமானைப் போற்றுவதுபோலத் தூதுப்பொருளான தமிழையும் போற்றுகின்றது. தமிழைக் கடவுளராக, அடியவராக, குழந்தையாக, மாப்பிள்ளையாக, சக்ரவர்த்தியாக உருவகித்துப் பாடுகின்றது. மேலும் தமிழைத் தெய்வத்தன்மையுடையதாகப் பாராட்டித் தமிழ் செய்தனவாகத் தமிழ்ப்புலவர்கள் செய்த செயல்கள் பாராட்டப்பெறுகின்றன. தமிழைப் பல்வேறு இலக்கண இலக்கிய வளமும் பாட்டில் உத்திகளாக, சிலேடையாக இடம்பெற்றுள்ளது

## 8.5 தன் மதிப்பீட்டு வினா விடைகள்

இருமதிப்பெண் வினா விடைகள்

1. தலைவி மதுரை சொக்கநாதரிடம் எதனைத் தூது விடுத்தாள்?

   தமிழ்

2. பாடலறிவித்த படைவேள் யார்?

   முருகவேள்

3. ஈசர் பட்டோலை கொள்ளப் பகர்ந்தோர் யார்?

   மாணிக்க வாசகர்

4. தமிழ் விடு தூது கூறும் சார்பெழுத்தின் எண்ணிக்கை யாது?

   240

5. சிவபெருமான் எந்த முனிவருக்குத் தமிழறிவுறுத்தினார்?

   அகத்தியர்

6. இறையனாராக வந்த சிவபெருமான் யாருக்குப் பொற்கிழியை அருளினான்?

   தருமி

7. தமிழின் பின்னால் பாயலோடு சென்றவர் யார்?

   திருமால்

8. சிவராசதானிபுரம் எது?

   மதுரை

9. தமிழின் களைகள் அகற்றுவோர் யாவர்?

   பிள்ளைப்பாண்டியன் ஒட்டக்கூத்தர், வில்லிபுத்தூரார்

10. அன்னத்தைத் தூது அனுப்பாதது ஏன்?

    ஈசரைக் கண்டறியாதது

11. தூது விடாது விலக்கிய பொருட்களைச் சுட்டுக.

    அன்னம், வண்டு, மான், மனம்

குறுவினா

12. எல்லாருமாய் இருந்தனை - என்பதை விளக்குக.

    எல்லாமாய் இருந்த தமிழ் என்னும் தலைப்பிலான செய்திகள்

13. தமிழைக் குழந்தையாகக் காணும் திறத்தை விளக்குக.

    தமிழ்க்குழவி என்னும் தலைப்பிலான செய்திகள்

14. சொக்கரின் திருவிளையாடல்களை விளக்குக

    சொக்கநாதர் திருவிளையாடல்கள் என்ற தலைப்பிலான செய்திகள்

பெருவினா

15. தமிழின் இலக்கிய இலக்கண வளத்தை விவரிக்க.

    3.1 முதல் 8.3.8 வரையிலான பகுகளின் திரண்ட கருத்து.

16. தமிழைச் சக்கரவர்த்தியாகப் பாடும் திறத்தை விளக்குக

    8.3.4 8.3.5 ஆகிய தலைப்புகளில் அமைந்த செய்திகள்

17. தமிழின் பெருமைகளைத் தமிழ்விடுதூதுவழிக் கட்டுரைக்க.

    8.3.7, 8.3.8 பகுதியின் திரண்ட கருத்து.

18. தமிழின் தெய்வீக ஆற்றல் குறித்துக் கட்டுரைக்க.

    8.3.9, 8.3.10 ஆகிய எண்ணிட்ட தலைப்புகளின் கருத்துகள்

## 8.6 மேலும் பயிலவேண்டிய நூல்கள்

தா.ஈசுவரப்பிள்ளை - தமிழில் சிற்றிலக்கிய வரலாறு
பி.இரத்தின சபாபதி - தூதுஇலக்கியம் ஒரு பார்வை
ந.வீ.செயராமன் - தூது இலக்கியங்கள்

# கூறு 9 திருக்குற்றாலக் குறவஞ்சி வசந்த வல்லி

## 9.1 முன்னுரை

குறிசொல்லும் இயல்புடைய குறவர் குலத்து வஞ்சிக்கொடி போலும் பெண்ணைக் கொண்டு பாட்டுடைத் தலைவர் பெருமையைக் கூறுவது குறவஞ்சி. குறி சொல்லும் மரபில் வந்தவளைப் பற்றிய குறத்திப் பாட்டு. குறவஞ்சியின் மறு பெயரே குறம், குறவஞ்சி நாடகம் என்பர். இக்குறவஞ்சி இலக்கியத்தில் தலை சிறந்த நூல் திரிகூட ராசப்ப கவிராயர் பாடிய திருக்குற்றாலக் குறவஞ்சி ஆகும்.

## 9.2 நோக்கம்:

குறவஞ்சியின் பாடுபொருள் தொல்காப்பியம் முதலாக வேர்விட்டுத் தனித்த இலக்கிய வகையாக உருவானதை அறிந்து கொள்ளலாம். தமிழில் தோன்றிய குறவஞ்சி நூல்கள் குறித்த பொது அறிமுகமும் கிட்டும். திருக்குற்றாலக் குறவஞ்சியின் அமைப்பும் கவிராயரின் புலமையும் உணரவாய்ப்பாக அமையும். குற்றாலக் குறவஞ்சியில் கடவுள் வணக்கம், தலைவன் பவனி வருதல், வசந்தவல்லி வருகை, காதல் ஆகியனவும் இங்கு விளக்கியுரைக்கக் காணலாம்.

## 9.3 குறவஞ்சி பாடுபொருள் - இலக்கணம்

பாட்டுடைத் தலைவன் உலா வரும்போது அதனைக் கண்ணுற்ற தலைவியின் நிலை, அத்தலைவியின் காதல் துயர், குறத்தியின் வருகை, குறவஞ்சி குறியறிந்து கூறல், பரிசு பெற்ற குறவஞ்சியைத் தேடி சிங்கன் வருதல் ஆகியன நிரலே அமையப் பாடுவது குறவஞ்சியாகும். .

குறவஞ்சி ஒருவகையில் நாடக இலக்கியம். வெண்பா, அகவல், விருத்தம் எனம் பா, பாவினங்களால் பாடப்படும். இடையிடையே சிந்து கண்ணி ஆகியனவும் கீர்த்தனை மரபும் கலந்து அமையும்.

கட்டினும் கழங்கினும் வெறியென ஒருவரும்
ஒட்டிய திறத்தால் செய்திக்கண்ணும்

என்று குறி கூறுதல் தொல்காப்பியத்தில் கூறக்காணலாம். ‘அகவன் மகளே! அகவன் மகளே!’ என்று சங்க இலக்கியத்திலும் வரும் தொடர்களும் குறவஞ்சியின் தொடக்க நிலைக் கூறுகளே. பெருங்கதைக் காப்பியத்திலும் குறி சொல்லும் நிகழ்ச்சி இடம்பெறக் காணலாம். (உஞ்சைக் காண்டம், பாடல்கள் 235-238)



பக்தி இலக்கியத்தில், திருவாய்மொழியில் நம்மாழ்வார் குறிபார்க்கும் பெண்ணைக் கட்டுவிச்சி என்கிறார். (பாடல் 6:3) சிறிய திருமடலிலும்

குறிபார்க்கும் மரபு காட்டப்படுகின்றது. இவ்வாறு எளிய மக்களின் வாழ்வை உணர்ந்து பாடப்பெற்ற இலக்கியம் குறவஞ்சி ஆகும்

மருங்காபுரி முத்து வீரப்ப பூஞ்சைய நாயக்க குறவஞ்சியே தமிழின் முதல் குறவஞ்சி ஆகும். அடுத்துக் குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மை குறம் வெளிவந்தது. இதுவரை முப்பத்து நான்கு குறவஞ்சிகள் வெளிவந்துள்ளன. சில குறிப்பிடத் தக்க குறவஞ்சிகள் வருமாறு

சரபேந்திர பூபாலக் குறவஞ்சி அழகர் குறவஞ்சி திருக்குற்றாலக் குறவஞ்சி செந்தில் குறவஞ்சி கும்பேசர் குறவஞ்சி விராலிமலைக் குறவஞ்சி தியாகேசர் குறவஞ்சி பெத்தலகேம் குறவஞ்சி

## 9.4. திருக்குற்றாலக் குறவஞ்சி

திருக்குற்றால நாதர் உலா வரக்கண்ட வசந்தவல்லி என்னும் தலைவி காதலுற்று வருந்துவதையும் அக்குற்றால மலைச்சாரல் குறத்தி ஒருத்தி வந்து குறி கூறுவதையும் பொருளாகக் கொண்டு தோன்றியது திருக்குற்றாலக் குறவஞ்சி ஆகும்.

திருக்குற்றாலக் குறவஞ்சி இலக்கியத்தின் அமைப்பை இனிக் காணலாம்.

பாயிரம், கடவுள் வாழ்த்து, பாட்டுடைத் தலைவன் உலா வருதல் ஆகியன தொடக்கப்பகுதிகள் ஆகும். உலாவைச் சுட்டுகையில் பாட்டுடைத் தலைவனின் தோற்றம், பண்பு நலன்கள், பெருமைகள், உலாவில் உடன் வருவோர்கள் என்பன விளக்கமாக வருணிக்கப்படும்.

பாட்டுடைத் தலைவியான வசந்தவல்லி எழில், பந்து விளையாடிய பான்மை. உலாவைக் காணப் பெண்களுடன் வருதல், காதலால் மயங்கி விழுதல் ஆகியன அடுத்துப் பாடப்படுகின்றன. தலைவியின் துயர், தோழியைத் தூது அனுப்பல், மாலை வாங்கி வரப்பணித்தல் ஆகியனவும் இப்பகுதியில் இடம்பெறுகின்றன.

பாட்டுடைத் தலைவரான திருக்குற்றால நாதரைப்புகழ்ந்து பாடியபடி வரும் குறத்தியின் வருகை அடுத்துக் கூறப்பெறும். வந்த குறத்தியின் நாடு, நகர வளத்தைத் தலைவியும் தோழியும் வினவி உரைக்கும் பான்மையில் திருக்குற்றாலத் தலச் சிறப்பும் எழிலும் பேசப்படும்.

இவற்றை அடுத்துத் தலைவி குறத்தியின் குறி கூறும் சிறப்பைக் கேட்டலும் தலைவிக்குக் குறி கூறுவதும் பாட்டுடைத் தலைவன் பெருமைகளை எடுத்தோதுவதும் பேசப்படும். மனம் மகிழுமாறு நற்குறி கூறிய குறத்திக்கு வசந்தவல்லி வெகுமதிகளும் பரிசுகளும் தருவாள்.

நாடகத்தின் இறுதிக் காட்சியாக குறவன் குறத்தியைக் காணாது வரவே அவர்களிருவரும் உரையாடும் பகுதி இடம்பெறும். குறவஞ்சி பெற்ற பரிசில்களைக் குறவன் வினவக் குறத்தி விடை கூறுவாள். இவ்வாறு

பரிசில்கள் மிகுதியாகப் பெற அருளிய குற்றால நாதரைகுறவனாகிய குறத்தியாகிய சிங்கியும் வாழ்த்திப் பாடுவர். இறுதியாக வாழ்த்துப் பாடல் அமைந்திருக்கும்.

## 9.5 திரிகூட ராசப்ப கவிராயர்

திருக்குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் தென்காசியை அடுத்த மேலகரத்தைச் சேர்ந்தவர் திரிகூட ராசப்ப கவிராயர். இவர் நல்ல இசையறிவும் பக்தி இலக்கியத்தோய்வும் மிக்கவர். சந்தங்களும் எளிய மக்களின் பேச்சு வழக்காறுகளும் ஒருங்கே அமைத்துப் பாடுவதில் வல்லவர். பதினெட்டாம் நூற்றாண்டினர். திருக்குற்றாலத் தலபுராணம், திருக்குற்றால மாலை, திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, திருக்குற்றால யமக அந்தாதி, திருக்குற்றால நாதர் உலா, திருக்குற்றால ஊடல், திருக்குற்றாலப் பரம்பொருள் மாலை, திருக்குற்றாலக் கோவை, திருக்குற்றாலக் குழல்வாய்மொழி மாலை, திருக்குற்றாலக் கோமளமாலை, திருக்குற்றால வெண்பா அந்தாதி, திருக்குற்றாலப் பிள்ளைத்தமிழ், திருக்குற்றால நன்னகர் வெண்பா ஆகிய நூல்கள் திரிகூட ராசப்ப கவிராயரால் பாடப்பட்ட ஏனைய நூல்களாகும்

## 9.6 குறவஞ்சி

### 9.6.1. கடவுள் வணக்கம்

சிற்றிலக்கிய வகைமை வளங்களுள் குறிப்பிடத்தக்கது குறவஞ்சி இலக்கியம். அக் குறவஞ்சி இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றது திருக் குற்றாலக் குறவஞ்சி. இக்குற்றாலக் குறவஞ்சியின் பல்வேறு உள்ளடக்கத்தையும் அறிந்துகொள்ளும் வகையில் முதற்கண் கடவுள் வணக்கம் அறிமுகம் செய்யப்படுகிறது. எந்த ஒரு செயலையும் கடவுளை வணங்கி செய்யத் தொடங்கினால் அச்செயல் தடையின்றி முடியும் என்பது பழமையான நம்பிக்கை இந்த நம்பிக்கையை நூல் எழுதும் நூலாசிரியரும் கடைபிடித்தொழுகினார்

### 9.6.1 1 கைவலான் காவலான்

பெருகி வழியும் மதநீர் அருவி நீரினைப் போல் பாய்கின்ற மலையோ! என்று சொல்லும்படியாக ஓங்கி வளர்ந்த கரிய திருமேனியை உடையவன் விநாயகப் பெருமான். அவன்வேண்டுபவர்களுக்கு வேண்டியதைத் தரும் கற்பகத் தருவே ஒன்றுக்கு ஐந்தாக வந்து வாய்த்திருப்பது போல் ஐந்து திருக்கைகளை உடையவன். அந்த விநாயகப்பெருமானின் கைகள் மிகுந்த வள்ளன்மை உடையனவாகும். அத்தகைய அருளாளனாகிய விநாயகப் பெருமான் எனக்கும் காவலனாக இருந்து என்னுடைய நூல் எழுதும் முயற்சி இனிதாக நிறைவடைவதற்கு உதவுவானாக.

### 9.6.1.2 ஆறுமுகன் தமிழ் தந்தான்

பன்னிரண்டு கைகளை உடையவன் ஆறுமுகனாகிய முருகப்பெருமான். அவனுடைய பன்னிரு கைகளும் முறையே தோமரம், கொடி, வாள், குலிசம், பகழி, அங்குசம், மணி, பங்கயம், தண்டம், வில், மழு, வேல் ஆகியவற்றைத் தாங்கியிருக்கும். பத்துத்திசைகளிலும் நவசக்தியிடத்து தோன்றியவரான நவவீரர்களும் அவன் புகழைப் போற்றுவர். முருகன் கைலை, மந்தரம், இமயம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலமலை, கந்தமாதனம் எனும் எட்டு மலைகளையும் நன்னீர், உவர்நீர், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு எனும் ஏழு கடல்களையும் விரும்பிச் சென்று அங்கெல்லாம் திருவிளையாடல் செய்து மகிழ்பவன். தன் ஆறு தலைகளின் மேலும் பொன்னாலாகிய ஆறு திருமுடிகளைத் தாங்கியிருப்பவன். அவன் அன்பர்களின் அச்சத்தைப் போக்கி அவர்களுக்கு அருள் தருபவன். நான் இந்நூலினைப் பாடும் போது எனக்கு எழுகின்ற அச்சத்தையும் போக்கி அருள்பவன். பன்னிருகை திண்தோளனாகத் தன் இரு திருவடிகளை எனக்குப் புகலிடமாகத் தந்தருளும் ஒப்பற்றவன். அந்த முருகப் பெருமான் குற்றாலக் குறவஞ்சியாகிய இந்த தமிழினையும் என்னுள்ளே கலந்து என்னை இயக்கி என் வாயிலாக இவ்வுலகிற்கு தந்து அருளியவன்.

பன்னிருகை வேல்வாங்கப் பதினொருவர் படைதாங்கப் பத்துத் திக்கும்
நன்னவவீ ரரும்புகழ மலைகளெட்டும் கடலேழு நாடி யாடிப்
பொன்னின்முடி ஆறேந்தி அஞ்சுதலை யெனக்கொழித்துப் புயநால் மூன்றாய்த்
தன்னிருதாள் தருமொருவன் குற்றாலக் குறவஞ்சித் தமிழ்தந் தானே.

### 9.6.1.3. சிவக் கொழுந்தை வேண்டுவோம்

பற்பல கிளைகளாகக் கிளைத்திருக்கும் பற்பல கொப்புகள் எல்லாம் வேதங்களின் இயல்பைக் கொண்டவை. அக்கிளைகள் ஈன்ற களைகளெல்லாம் சிவலிங்க சொரூபம் கலைகளிலே தோன்றிய கனிகள் எல்லாம் சிவலிங்க சொரூபம் கனிகள் ஈன்ற சுளைகள் அனைத்தும் சிவலிங்க சொரூபம். சுளைகளின் உள்ளிருக்கும் வித்துக்கள் அனைத்தும் சிவலிங்க சொரூபங்களாகவே விளைகின்ற ஒப்பற்ற சிவத்தன்மையைக் கொண்டது குற்றாலத்து குறும்பலா மரம் அதன் கண் முளைத்தெழுந்த சிவக்கொழுந்து திருக்குற்றால நாதர் இக் குறவஞ்சித் தமிழைப் பாடுவதற்கு அருளுமாறு சிவக்கொழுந்தை நாம் வேண்டுவோமாக.

கிளைகளாய்க் கிளைத்தபல கொப்பெலாஞ் சதர்வேதம் கிளைக ளீன்ற
களையெலாஞ் சிவலிங்கம் கனியெலாம் சிவலிங்கம் கனிக ளீன்ற

சுளையெலாஞ் சிவலிங்கம் வித்தெலாஞ் சிவலிங்க சொரூ பமாக

விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த சிவக்கொழுந்தை வேண்டு வோமே

**9.6.1.4. கோதை குழல்வாய்மொழி**

வெண்ணிலவு தவழ்ந்து செல்லும் மலை உச்சியை உடையது பனிபடர்ந்த பெருமலையாகிய இமயம். அதன் கண் தோன்றி வளர்ந்தவள் உமையம்மை. முக்கண்களை உடையவனும் பவள மலை போன்ற செந்நிற மேனியைக் கொண்டவன் ஆகிய சிவபெருமான் இடத்தே விருப்பம் கொண்டவள் உமையம்மை. அவள் சிவபெருமானிடத்து வைத்த ஆசையானது முகிழ்த்து பின் பருவமும் ஆகித் தேன் சொரியும் அழகிய கடப்ப மலர்மாலை அணிந்த குமரப் பெருமானையும், ஒற்றை கொம்பினையுடைய யானைமுகப் பெருமானையும் பெற்றவள். இவ்வுலகம் அனைத்தையும் ஈன்றருளிய உலக மாதாவும் அவளேயாவாள். அத்தகைய கொடி போன்றவளாகிய குழல் வாய்மொழி அம்மையின் புகழினையும் இந்நூல் இனிது நிறைவேறப் பாடுவோம்

**9.6.1.5. மூவர் வணக்கம்**

தன் தலையின் மீது கங்கை ஆற்றினைக் கொண்டிருந்தும் தன் மாமியாகிய காஞ்சனமாலை அம்மையின் விருப்பத்திற்கு இணங்கப் பெரிய சப்த சமுத்திரங்களையும் அழைத்துத் தந்த சிறப்புடையவர் திருக்குற்றாலநாதர். அவருடைய பருத்த அகன்ற தோள்களை வாழ்த்திச் செழித்த இக்குறவஞ்சி நாடகத்தைப் பாட முனைகிறேன். கடலிலே கல் மிதக்க அதன் மீது ஏறி அமர்ந்து கரை சேர்ந்தவர் திருநாவுக்கரசர் பெருமான். எலும்பில் இருந்து பூம்பாவை என்ற பெண்ணை உயிர்ப்பித்து எழுப்பியவர் திருஞானசம்பந்தப் பெருமான். தன்னுடைய பதிகம் பாடிப்பெற்ற பொன்னை எல்லாம் திரு முதுகுன்றத்து மணி முத்தாற்றில் போட்டு விட்டு பின் அவற்றைத் திருவாரூர் கமலாலயக் குளத்திலே வந்து எடுத்துக் கொண்டவர் சுந்தரமூர்த்தி பெருமான். இம்மூவரும் இந்நூல் இனிது நிறைவேற எனக்குத் துணை நின்று காத்து உதவுவார்களாக.

தலையிலே யாறிருக்க மாமிக் காகத்
    தாங்குகட லேழழைத்த திருக்குற் றாலர்
சிலையிலே தடித்ததடம் புயத்தை வாழ்த்திச்
    செழித்தகுற வஞ்சிநா டகத்தைப் பாட
அலையிலே மலைமிதக்க ஏறி னானும்
    அத்தியிலே பூவையந்நா ளழைப்பித் தானும்
கலையிலே கிடைத்தபொரு ளாற்றிற் போட்டுக்
    கனகுளத்தில் எடுத்தானுங் காப்ப தாமே.

**9.6.1.6 அகத்தியனும் மாணிக்கவாசகரும்**

சிவபெருமான் பிறப்பு இறப்பு அற்றவர். அவர் அடியவர் மீதுள்ள கருணைப் பெருக்கினால் திரிகூட நாட்டில் சிவலிங்க ரூபராய் திகழ்பவர். அவரை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இக் குறவஞ்சி நாடகம் அமைதல் வேண்டும். அதற்கு முத்தராகிய சிவபெருமானின் திருமேனி முழுவதும் உருகும்படி முன்பு தமிழ் உரைத்த அகத்திய முனிவரின் புகழினைப் பாடுவோம். இவ்வுலகில் உயிர்போகும் இறுதிநாளில் சிலேட்டுமம் வந்து பற்றிக் கொள்ளாத வண்ணம் பித்தனாகிய சிவபெருமானின் அடிகளைத் துணையாகச் சேர்ந்தவர் மணிவாசகப் பெருமான் அவருடைய திருவடிகளையும் நாம் போற்றுவோம்.

**9.6.1.7. கலைமகள் போற்றி**

இணைந்த திருவடி மலர்களும் சிவந்த வாய் ஆகிய அல்லி மலரும் செந்நிறமாக பெற்று விளங்குபவள். நீண்ட அழகிய கூந்தலும் மை தீட்டிய குவளைமலர் கண்களும் கரிய நிறமாகக் கொண்டவள் திருமேனி ஸ்படிகமணி போன்று வெளுப்பாக விளங்கப் பெற்றவள். அறிவின் அதிதேவதையாகி ஞானக்கொடியாய் விளங்கும் கலைமகளையும் இத் திருக்குற்றாலக் குறவஞ்சி இனிது நிறைவேற அருளுமாறு நாம் போற்றுவோம்.

**9.6.1.8 நூற்பயன்**

சிவபெருமான் கையில் வில்லை ஏந்திப் பெரும் கொலைத் தொழிலில் ஈடுபட்ட வேடனுக்கும் நரிக்கும், வேதச்செல்வர்களும், தேவர்களுக்கும் இரக்கம் கொண்டவன். முன்பு அவர்கள் இயற்றிய கொலை, களவு, கள், காமம், குருத்துரோகம், எனும் கொடிய பஞ்சமா பாதகங்களையும் தீர்த்து அருளியவன் . அதனாலேயே நிலவினைச்சூடிய அக் குற்றால நாதரை வணங்குபவர்கள் தான் வேண்டிய வரத்தை தவறாது பெறுவர். அங்ஙனம் அனைவரும் நினைக்க வேண்டிப் பல வளமும் சேர அமைந்த இக் குறவஞ்சி நாடகத்தைப் பாடினோம். இதனைப் படிப்பவர்க்கும் படிக்கக் கேட்பவர்க்கும் உறுதியாகப் பலன் உண்டாகும்.

**9.6.1.9 அவையடக்கம்**

உலகத்தவர்கள் மலர்ச்சரத்தை தம் தலையில் ஆர்வத்துடன் சூட்டிக் கொள்வார்கள். அப்படிச் சூட்டிக் கொள்ளும் போது அம்மலர்களை இணைத்திருக்கும் நாரினை இது பொல்லாது என்று கூறித் தனியே ஒதுக்கித் தள்ளிவிடுவார்களோ? சீர்மை பெற்ற தமிழ் மாலைகள் பல உடைய செல்வராகிய குற்றாலத் தீசர் பெயரை மலர்களாகக் கொண்டு

அமைக்கப் பெற்ற இக் குறவஞ்சி நாடகத்தின் அமைதி எப்படியாயினும் குற்றாலத்தீசரின் பெயரினைஉடைய அந்தச் சிறப்பின் காரணமாக என் சொற்களையும் பெரியவர்கள் தள்ளாமல் ஏற்றுக் கொள்வார்கள்.

தாரினை விருப்ப மாகத் தலைதனில் முடிக்குந் தோறும்
நாரினைப் பொல்லா தென்றே ஞாலத்தோர் தள்ளு வாரோ?
சீரிய தமிழ்மா லைக்குட் செல்வர்குற் றாலத் தீசர்
பேரினா லெனது சொல்லைப் பெரியவர் தள்ளார் தாமே

### 9.6.2. இறைவனின் திருவுலா

#### 9.6.2.1 கட்டியங்காரன் வருகை

மன்மதன் தன் தேராகிய தென்றலில் ஊர்ந்து வரும் வசந்த வீதிகளை உடையதாய் திருக் குற்றால நகரம் விளங்கியது. அந்நகர வீதியில் குற்றாலத்து ஈசர் திருமால் எருது ஊர்தியாகத் தாங்கி வர அதில் அமர்ந்து பவனி வரப்போகிறார். அதனை ஊர் மக்களுக்குக் கூறி எச்சரிக்கைச் செய்ய கட்டியங்காரன் வந்தான். மார்பில் முப்புரிநூல் விளங்க கையில் பிரம்பினை உடையவனாய்க் கரிய மேகத்தைப் போன்று நிறம் உடையவனாய்க் குற்றால வீதியில் வந்தான்.

#### 9.6.2.2 கிழக்கெழுந்த ஞாயிறு

இறைவனின் கட்டளைக்கிணங்க வடதிசையில்இருந்து தென்திசை நோக்கிச் சென்ற அகத்தியருக்காக மான் ஏந்திய திருக்கைகளையும் அருள் உள்ளத்தினையும் உடைய திருக்குற்றாலநாதர் அருளிய நான்கு வேதங்களும் சிலம்புகளாக அவர் திருப்பாதங்களில் ஒலி எழுப்பும். அவன் விடை மீதேறி இளம் பிறையைச்சூடி கிழக்கு எழுந்த இளம் ஞாயிறு போல் காட்சியளிக்கின்றான். முத்து மூக்குத்திகளை அணிந்த இளம் பெண்கள் வீதியில் இரு மருங்கும் திரண்டு நிற்கின்ற குற்றால நகர் வீதியில் அவன் எழுந்தருளி வருகின்றான் காண்பீர் எனக் கட்டியங்காரன் அறிவித்தான்

மூக்கெழுந்த முத்துடையா ரணிவகுக்கும்
நன்னகர மூதூர் வீதி
வாக்கெழுந்த குறுமுனிக்கா மறியெழுந்த
கரங்காட்டும் வள்ள லார்சீர்த்
தேக்கெழுந்த மறைநான்குஞ் சிலம்பெழுந்த
பாதர்விடைச் சிலம்பி லேறி
மேக்கெழுந்த மதிச்சூடிக் கிழக்கெழுந்த
ஞாயிறுபோல் மேவி னாரே



#### 9.6.2.3 பவனி வந்தனரே

சிவபெருமான் உலா வரும் காட்சியை ஆசிரியர் இவ்வாறு வருணிக்கின்றார்.

பவனி வருகின்றார் இளமை பொருந்திய விடையின் மீது ஏறி நம் இறைவன் பவனி வருகின்றார். உலகம் போற்றும் குறும்பலா ஈசன் சிவதவசியாகவும் இளமைக்குத் தலைவனாகவும் விளங்குபவன். சிவன், அரி, அயனாக விளங்கும் ஏக மூர்த்தி எருதின் மீதேறி பவனி வந்துகொண்டிருக்கின்றார்.

தேவர்கள், முனிவர்கள், அசுரர்கள், அடியவர்கள், ஆகியோர் கூட்டமாகக் கண் இமைக்காதவராய் ஒருவருடன் ஒருவர் கலந்து மயக்கம் கொண்டவராயினர். இவர் மக்களினம் இவர் தேவரினம் என நந்திப் பெருமான் அவர்களைத் தனித்தனியே பகுத்து நிறுவினான். ஆயினும் இறைவனை தரிசிக்கும் அடங்கா ஆர்வத்தால் தம் பகுதிக்குள் அடங்காது முனைந்து வரும் அரசர்களை நந்தி அவர்களின் மகுடத்தில் பிரம்படியால் புடைத்து வருந்தினான் இவ்வாறு குற்றாலநாதர் பவனி வந்து கொண்டிருக்கிறார்.

அடியவர்களின் துன்பத்தைத் தடுப்பது ஒருகை. அவர்களுக்கு வேண்டுவன வழங்குவது ஒரு கை. மழுவை உயர்த்திய ஒரு கை, மானினைப் பிடித்த ஒரு கை என இறைவன் பாம்பினை ஆபரணமாக அணிந்து புலித் தோலினை ஆடையாக உடுத்தி, யானைத் தோலினைப் போர்வையாகப் போர்த்தி விடை வாகனத்தில் வருகின்றான். அயன் வழங்கிய மண்டை ஓடாகிய உண்கலத்தைக் கையிலேந்திப் பவனி வருகின்றான்.

தடுப்ப தொருகரம் கொடுப்ப தொருகரம்
தரித்த சுடர்மழு விரித்த தொருகரம்
எடுத்த சிறுமறி பிடித்த தொருகரம்
இலங்கப் பணியணி துலங்கவே
அடுத்த வொருபுலி கொடுத்த சோமனும்
ஆனை கொடுத்தவி தானச் சேலையும்
உடுத்த திருமருங் கசைய மலரயன்
கொடுத்த பரிகல மிசையவே. (பவனி)

உலாவரும் இறைவனைத் தொடர்ந்து பிள்ளையாரும், முருகப்பெருமானும் உடன் வருகின்றன. இறைவன் மார்பில் கொன்றை மாலையும் அதனுடன் மணிபதக்கத்தின் ஒளியும் விளங்கும். இறைவனின் உலாவினைக் கண்டு உலகமெல்லாம் வளத்தால் தழைக்கும்படி வருகின்றான்.

யானைமேலிருந்து பேரிகைகள் முழங்க, உடுக்கையின் முழக்கம் முழங்க அவ்வொலியைத் தாங்க இயலாமல் களிறுகள் தம் துதிக்கைகளால் தம் செவிகளைப் புதைத்துக் கொள்கின்றன. அதனை

அடியவர்கள் பாடும் திருப்பல்லாண்டின் இசை சென்று திறந்து விடுகின்றது. மூவர் தேவாரம் ஒருபுறம், நான்மறை முழக்கம் ஒருபுறமும் இசைந்து வர இறைவன் வீதியில் உலா வருகின்றார்.

பொன்னாற் புனையப்பெற்ற தம்புரு, கின்னரம் ஆகியவையும் வீணையும் இசை எழுப்ப முத்துப் பல்லாக்கும், ஆலவட்டமும் நிழல் தரப் பெண்கள் பலர் இருபுறமும் குஞ்சம், சாமரை, விசிறி ஆகியவற்றை சுழற்றிவர குபேரன், இந்திரன், வருணன் ஆகியோர் இறைவன் புகழ்பாடி உடன்வர இறைவன் வீதியில் பவனி வருகின்றான்.

படை வீரர் பெருக்கமும், படையணிகளின் பெருக்கமும், தேர்களின் பெருக்கமும், கொடிப்படைகளின் பெருக்கமும், யானை, குதிரைப் படைகளின் பெருக்கமும் அணி அணியாகத் திரண்டு வரக் கொடிகள் பரந்த ஆகாயத்தை மூடியதால் வானம் இருண்டு போக இடபக்கொடி விளங்க இறைவன் வீதி உலா வருகின்றார்.

மலர்சூடிய தெய்வ மகளிர்கள் குரவை ஆடுகின்றனர். அக்குரவை ஒலி கடல் ஒலியை அடக்கி எழுகின்றது. கனக, கம்பளர் எனும் கந்தருவர்களின் பாடல் இனிமை ஏழு உலகங்களையும் உருகச் செய்கின்றன மத்தளங்கள் இடிபோல் முழங்குகின்றன. பெண்களின் நடனங்கள் வீதி முழுவதும் நிகழ்கின்றன இவ்வாறாக உமையம்மையை இடப்பாகத்தில் கொண்ட இறையவர் வீதி உலா வந்து கொண்டிருக்கிறார்.

### 9.6.3. உலாக்காணும் மகளிர்

இடபம் ஊர்ந்து வரும் சிவபெருமானின் உலாக் காண பெண்கள் கூட்டமாக வந்தனர். தென்றல் ஏறிவரும் காமனின் படை தாங்கி வரும் சேனை போன்ற அப்பெண்கள் மீன் ஒத்த தம் கண்களால் ஆடவர் மனதில் கலகம் ஏற்படுத்துகின்றனர். புருவங்களை வில்லாக வகைத்து ஆடவர் மயங்கும்படி அவர்களைப் போரிட்டு வெல்வோம் எனத் தம் காலில் முழக்கம் இடும் சிலம்புகளை அணிந்து வருகின்றனர்

### 9.6.3.1 மகளிரின் பேச்சு

அப்பெண்கள் உலா வரும் இறைவனைக் கண்டு பின்வருமாறு பேசுவர்.

ஒரு மானைப் பிடித்து வரும் குற்றால நாதரைத் தொடர்ந்து ஒரு கோடி மான்களைப் போல ஒரு கோடி மான்களைப் போல ஒரு கோடிமகளிர் வந்தனர். அவர்களில் சிலர் முப்புரி நூல் அணிந்திருக்கும் மார்பினையுடைய இவன் அயனே என்பர். அதற்கு சிலர் அயனாக இருந்தால் சினம் கொண்ட பாம்பாராணம் அவனுக்கு ஏது? காதுகளில் குண்டலங்கள் ஏது? ஆகவே இவன் அயன் அல்லன் என்று பதிலுரைப்பர்.

சிலர் இவன் கருணைக் கடலான திருமாலே என்பார். அதற்கு இவன் திருமால் என்றால் இரு விழிகளுக்கும் மேல் இருக்கும்

நெற்றிக்கண்ணும், தலைமேல் இருக்கும் சடைமுடியும் திருமாலுக்கு உண்டோ? எனக் கேட்டு அவன் மால் அன்று என்பர். மேலும் சிவபெருமானின் இருபக்கங்களிலும் நான்முகனும் திருமாலும் வருகின்றனர் ஆகையால் இவன் ஈசனே என்றனர்.

ஒருமானைப் பிடித்துவந்த பெருமானைத் தொடர்ந்துவரும்
ஒருகோடி மான்கள்போல் வருகோடி மடவார்
புரிநூலின் மார்பனிவன் அயனென்பார் அயனாகில்
பொங்கரவ மேதுதனிச் சங்கமேது என்பார்
விரிகருணை மாலென்பார் மாலாகில் விழியின்மேல்
விழியுண்டோ முடியின்மேல் முடியுண்டோ என்பார்
இருபாலு நான்முகனுந் திருமாலும் வருகையால்
ஈசனிவன் திரிகூட ராசனே என்பார்.

### 9.6.3.2 பெண்டிர் நிலை

ஒருகையில் வளையல்களை அணிந்த பெண்கள் தன் அடுத்த கையில் வளையல் அணிய மறந்தவராய் இறைவனைக் காண ஓடுவார்கள். அவர்களின் தடுமாற்றத்தைக் கண்டு சிலர் நகைப்பர். மேலும் முறைப்படி அணிய வேண்டிய ஆடையினை முறை மாற்றி அணிந்து மயங்கினர். இதனை

ஒருகைவளை பூண்டபெண்கள் ஒருகைவளை பூணமறந்
தோடுவார் நகைப்பவரை நாடுவார் கவிழ்வார்
இருதனத்து ரவிக்கைதனை அரையிலுடை தொடுவார்பின்
இந்தவுடை ரவிக்கையெனச் சந்தமுலைக் கிடுவார்.
கருதுமனம் புறம்போக ஒருகண்ணுக்கு மையெடுத்த
கையுமா ஒருகணிட்ட மையுமாய் வருவார்

என்ற பாடலால் அறியலாம்.

பெண்டிரின் மனம் உலாவரும் நாதனை நோக்கிப் போய்விட ஒரு கண்ணில் மை தீட்டி இன்னொரு கண்ணில் மை எழுதி எடுத்த கையினராய் ஓடிவருவார்கள். சிலர் நம் உள்ளம் கவர்ந்த இவன் நம் தெருவில் நெடுநேரம் நிற்கமாட்டானோ? எம்மை வருத்தும் மனமதனை வெல்ல மாட்டானோ எனத் துடிப்பர்.

என் தோளில் பூண்ட வளைகளும் இறைவன் சடையில் சூடிய வெண்பிறையும் எம் பெண் மதிபோல் தளர்வுற்று விளங்குகின்றதே என்பார். நஞ்சினைக் கொண்டு இறைவன் உடலில் வளைந்து கொண்டிருக்குப் பாம்புக்கு பசியாதோ அது எம்மை வருத்துகின்ற தென்றலைப் பாம்புகள் புசித்து எமை காக்குமோ என்பர்.

## 9.6.4. வசந்த வல்லியின் காதல்

### 9.6.4.1 வசந்தவல்லி வந்தாள்

பொன் போன்ற பொட்டினை நெற்றியில் தீட்டி, கூந்தலில் மலர்ச்சரத்தைச் சூட்டி மோகினி போன்று தன்னை அழகுறப் புனைந்து குற்றால நகரப் பெருமானின் முன் சென்று நாணமும் ஆடையும் இழந்து நின்ற கன்னியர்களுக்குத் தானும் ஒரு துணையாவாள் ஆடவர்களிடம் காமவேளின் கலகச் செயலை மூட்டி விடுபவள் போல வசந்தவல்லி என்பவள் தன் வீட்டில் இருந்து புறப்பட்டுத் தெருவில் வந்தாள்.

நன்னகர்ப் பெருமான் முன்போய் நாணமும் கலையுந்தோற்ற
கன்னியர் சநுப்போற்காட்டிக் காமவேள் கலகமூட்டிப்
பொன்னணித் திலதந் தீட்டிப் பூமலர் மாலைசூட்டி
வன்னமோ கினியைக்காட்டி வசந்தமோ கினிவந்தாளே.

### 9.6.4.2. வசந்தவல்லியின் அழகு

அவள் பொன் ஆபரணம் பலவற்றைப் பூட்டி நெற்றிக்குத் திலகம் இட்டுத் தன் பார்வையால் காமனையும் மயங்கச் செய்பவள் போல் தோன்றினாள். சிருங்கார மோகனப் பெண்ணான வசந்த வல்லி தேவ மகளிர் போல வீதியில் வந்தாள்.

கைகளில் சூடகம் அணிந்து தன் போன்ற மகளிரை வெல்லும் பொருட்டுக் கண்ணில் ஏதும் அறியாதவள் போல் நாடகத்தை இட்டு ஒய்யாரமாக நடை நடந்து ஓர் ஓவியத்தைப் போன்று வசந்த வல்லி வீதியில் தோன்றினாள்.

சுருண்டு இருண்ட மேகங்கள் போல் சுருண்ட மயிரடர்ந்த கொண்டயினள், ஆடவர் நெஞ்சைக் கவரும் காதளவு ஓடிய கெண்டை விழியள், அழகினை உடைய சிவந்த சிவந்த முருக்கம் பூவின் அரும்பினைப் போன்ற இதழ்களை உடையவள், வில்போல் வளைந்து இளம்பிறை போன்ற ஒளிரும் நெற்றியினை உடையவளாக வசந்த வல்லி அழகுடன் விளங்கினாள்.இருண்ட மேகஞ்சுற்றிச் சுருண்டு சுழியெறியுங்

கொண்டையாள் - குழை
ஏறி யாடிநெஞ்சைச் சூறையாடும் விழிக்
கெண்டையாள்
திருந்து பூமுருக்கி னரும்பு போலிருக்கும்
இதழினாள் - வரிச்
சிலையைப் போல்வளைந்து பிறையைப் போலிலங்கு
நுதலினாள்.

வானவில் வசந்த வல்லியின் புருவ அழகைப் பெற வேண்டும் என ஆசை கொள்ளும் அளவுக்கு அழகான புருவங்களைக் கொண்டவள். கரும்புச்சாறு போன்று இனிமை பெற்றும் அமுதம் போன்று விளங்கும் சொல்லினை உடையவள். கடல் அலைகள் குவித்த முத்துக்களை வரிசைப்படுத்தினாற் போன்ற பல் வரிசையை உடையவள். பல்வரிசை அழகினை எட்டிப்பார்க்கும் மூக்கில் அணிந்த முத்தணியை அணிந்தவள். நிலவினைப் போன்று ஒளியுடைய அழகினைக் கொண்ட முகத்தினை உடையவள். உலகையே தனக்குரிய விலையாக எழுதி அத்துடன் இன்பநிலை இதுவே என எழுதியது போன்று தொய்யிலாகிய எழுத்தினை உடையவள்.பல்லி னழகையெட்டிப் பார்க்கு மூக்கிலொரு முத்தினாள் - மதி

பழகும் வடிவுதங்கி அழகு குடிகொளு முகத்தினாள்
வில்லுப் பணிபுனைந்து வல்லிக் கமுகைவென்ற கழுத்தினாள் - சகம்
விலையிட் டெழுதியின்ப நிலையிட் டெழுதுந்தொய்யில் எழுத்தினாள்.

மணிகள் பதிக்கப்பெற்ற கடகங்கள் அணிந்த சிவந்த கையினை உடையவள். இறைவன் அடியைக் கருதியவர்களான தவசிகளின் கல் மனமும் சுழலும்படியான அழகிய உந்திச் சுழியினை உடையவள். உடுக்கையின் நடுவில் உள்ள குறுகிய பகுதியை விடவும் உள்ளடங்கிய சின்ன இடையினை உடையவள்.

கல்லுப் பதித்ததங்கச் செல்லக் கடகமிட்ட செங்கையாள் - எங்கும்
கச்சுக் கிடக்கினும்தித் திச்சுக்கிடக்குமிரு கொங்கையாள்
ஒல்லுங் கருத்தர்மனக் கல்லுஞ் சுழிக்குமெழில் உந்தியாள் - மீதில்
ஒழுங்கு கொண்டுள்ளத்தை விழுங்கு சிறியரோம பந்தியாள்.

காமனின் அரண்மனை வாயிலுக்கு கட்டி வைத்த வாழைகளைப் போன்ற தொடையினை உடையவள். பல வண்ணச் சேலையை அழகாக உடுத்தி அன்னப்பறவையின் நடையினும் மென்மையான நடையினை உடையவள்.

திருப்பாற்கடலில் தோன்றிய அமுதத்தை எடுத்து சன்மித்ததைப் போன்ற மேனியை உடையவள். பக்குவமாகக் காய்ச்சப் பெற்ற பாலுக்கு மேலும் சுவையூட்டும் சீனியைப் போன்றவள். இத்தகைய வசந்தவல்லியின் அழகு திருக்குற்றால நாதரையும் உருகச் செய்யும் வண்ணம் விளங்கியது.

**9.6.4.3. வசந்தவல்லி பந்தாடுதல்**

தன் வீட்டில் இருந்து வெளியே வந்த வசந்தவல்லி தன் தோழிகளுடன் சேர்ந்து பந்து விளையாடத் தொடங்கினாள். சங்கு

வளையல்கள் அணிந்த கைகள் சிவக்கும் படியாக நாலடி முன் தாவியும் பத்தடி பின் வாங்கியும் ஒய்யாரமாகப் பந்தாடினாள்.

வசந்தவல்லி பந்தடிக்கும் போது அவள் சிவந்த கைகளில் அணிந்துள்ள வளையல்கள் “கலீர் கலீர்“ என்றும் “செயம் செயம்“ என்று ஒலி முழங்கின. இடை இனி நிலைத்திருப்பது சந்தேகம்தான் என சிலம்புகள் புலம்பின. சிலம்புடன் சேர்ந்து தண்டைகளும் புலம்பி ஒலி முழங்கின. கொங்கைகள் பந்தினை வென்றுவிட்டோம் எனக் குழைந்து குதித்து ஆடின. இப்படியாக பசுங்கொடி போன்ற வசந்தவல்லி பந்தாடினாள்.

காதணிகளுடன் கயல் மீனொத்த விழிகள் இரண்டும் நெருங்கிப் புரண்டு புரண்டு ஆடிக் கொண்டிருந்தன. மேகம் போன்ற கூந்தலில் மொய்த்துக் கொண்டிருந்த வண்டுகள் கலைந்து போதலைக் கண்டு மன்மதனின் சிலை வண்டு ஓடியது. இவள் பந்து அடிக்கும் நிலையைக் கண்டால் ஆடவர் என்ன பாடுபடுவரோ என அவளுடைய இடை துவண்டாடியது. தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் போன்ற வசந்தவல்லி அழகுடன் பந்து விளையாடினாள்.

செங்கையில் வண்டு கலின்கலி னென்று செயஞ்செயம்
என்றாட - இடை
சங்கத மென்று சிலம்பு புலம்பொடு தண்டை
கலந்தாட - இரு
கொங்கை கொடும்பகை வென்றன மென்று குழைந்து
குழைந்தாட - மலர்ப்
பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி
பந்து பயின்றாளே.
பொங்கு கனங்குழை மண்டிய கெண்டை புரண்டு
புரண்டாடக் - குழல்
மங்குலில் வண்டு கலைந்தது கண்டு மதன்சிலை
வண்டோட - இனி
இங்கிது கண்டுல கென்படு மென்படு மென்றிடை
திண்டாட - மலர்ப்
பங்கய மங்கை வசந்த சவுந்தரி
பந்து பயின்றாளே.

சூடகம் அணியப் பெற்றிருக்கும் முன் கைகளில் அணிந்துள்ள வெள்ளிய வளையல்கள் தம் அருகே தோன்றக் கண்டு தோள் வளையல்களும் மேலெழுந்தாடின. அணிந்துள்ள பாடகமும், சிறுபாதச் சிலம்பு மேலும் கீழும் எழுந்தாடின. இவ்வாறு குற்றால வீதியில் அழகிய

பொன் கொடி போன்ற வசந்தவல்லி நடனம் இடும் மயிலைப் போன்றும் ஒய்யாரமாகத் துள்ளித் துள்ளிப் பந்து விளையாடினாள்.

இவன் திருமகளோ, இரதி தேவியோ, தேவலோகத்து அரம்பையோ, இவள் அன்று அசுரரை மயக்கிய மோகினியோ! என்று அவளைக் கண்டோர் தம்மை மறந்து வியந்து நின்றனர். மனம் முந்தியதோ? விழி முந்தியதோ? கரம் முந்தியதோ? எனும் படியாக அவள் துள்ளித் துள்ளிப் பந்தாடினாள். சந்திரனைச் சூடிய குறும்பலா ஈசர் உலாவரும் வீதியில் பசிய வளையல் அணிந்த வசந்தவல்லி பந்து விளையாடினாள்

பூங்கொத்துக்கள் சூடிய அழகிய கூந்தல் அவிழ்ந்த நிலையில் அவள் முன்னால் அடியிட்டுப் பின்னால் அடியிட்டு இடையும் மூன்று நான்கடி நடந்து சென்றும் இடதும் வலதுமாகச் சுற்றி வந்தவளாக வசந்தவல்லி தன் தோழிகளுடன் சேர்ந்து பந்தாடினாள். கொடிய காமனின் படையான அவளைப் பார்த்த ஆண்கள் இவளைப் பார்க்கப் பிரம்மன் நமக்கு ஆயிரம் கண்களைப் பபடைக்வில்லையே என்று எண்ணி ஏங்கினர்.

**9.6.5. சிவபெருமானைக்காணுதல்**

வசந்தவல்லி வீதியுலாக் காணும் சிவபெருமானைக் காண்கின்றாள். அவருடைய அழகில் மயங்கி இவர் யார் எனத்திகைத்துத் தனக்குள் எண்ணுகின்றாள்.

வெகு வேடிக்கைக்காரராக எருதின் மேலே ஏறி மேலே ஏறி வருகின்றாரே இந்த சித்தர் யாரோ? மார்பினில் நாகாபரணம் பூண்டுள்ளார். கழுத்தில் நஞ்சுக் கறை கொண்டுள்ளார். காகம் அணுகாதபடி காடு கட்டிக் கொண்டு இடப்பக்கத்தில் பச்சைக்கிளிபோல ஒரு பெண்ணையும் மற்றொரு பெண்ணைத் தன் சடைமுடியிலும் வைத்திருக்கின்ற இவர்தாம் யாரோ? உடல் சிவந்திருக்கிறது. கையில் மழுவாயுதம் விளங்குகின்றது. சிவந்த சடையில் பிறை விளங்க அது நடுங்கும் எனப் பாராமல் அவர் அணிந்துள்ள பாம்பு படத்தை விரித்துக் கொண்டிருக்கின்றது.

மெய்யிற் சிவப்பழகும் கையில் மழுவழகும்
மையார் விழியார் கண்டால் மயங்காரோ
செய்ய சடையின் மேலே திங்கட் கொழுந்திருக்கப்
பையை விரிக்கு தம்மா பாம்பு சும்மா.

அருட்கண்ணின் பார்வையினால் என் மேனியெல்லாம் தங்க நிறம் கொள்ளும்படியாக அவர் என்னை உருக்கிப் போட்டாரே. இவரைக் கண்டால் குற்றாலநாதர் போன்றும் சில சமயங்களில் அவர்செய்யும் மாயங்கள் இருக்கின்றன. இந்த சித்தர் யாரோ? என எண்ணி மயங்கினாள் வசந்தவல்லி.

**9.6.6 மயல் கொண்டாள்**

இவள் இளந்திங்களைச் சடையிலே முடிந்தவர். அதனால் இவரே குற்றால நாதர் என்பதை அறிவாயாக. எவ்விடத்தும் உள்ள சித்துக்களுக்கெல்லாம் இவரே தலைவர். என்று தோழிமார்கள் கூறினார். அவர்கள் கூறிய நான் மொழித் தேறலை வசந்தவல்லி ஆர்வமுடன் பருகினாள். அவர் மீது மன ஈடுபாடு கொண்டு மையலும் கொண்டாள்.

அகத்திய முனிவர் போற்றியப் பரவும் இனியவன் இவன் தானோ ? வேதங்களென்னும் பலாவின் முழுக்கனியும் இவன் தானோ ? அக்கனியில் வைத்த செந்தேனோ ?பெண்களின் கருத்துக்களை உருவாக்குவதற்கென்றே இப்படி எழுந்து உலா வந்தானோ ? இள ஞாயிறு போன்ற சிவந்த அழகினையும், அழகிய கழுத்தில் தோன்றும் கருப்பின் அழகினையும் பாம்பணி விளங்கும் காதழகினையும் காணப் பெற்றால் பொற்பாவைகளும் அந்த அழகுக்கு வசமாகி உருகிவிடாதோ என வசந்தவல்லி தோழியரிடம் கூறினாள்.

முனிபரவும் இனியானோ (வேத) முழுப்பலவின் கனிதானோ
கனியில் வைத்த செந்தேனோ (பெண்கள்) கருத்துருக்க வந்தானோ
தினகரன்போற் சிவப்பழகும் (அவன்) திருமிடற்றில் கறுப்பழகும்
பனகமணி இருகாதும் (கண்டால்) பாவையுந்தா னுருகாதோ.
வாகனைக்கண் டுருகுதையோ (ஒரு) மயக்கமதாய் வருகுதையோ
மோகமென்ப திதுதானோ (இதை) முன்னமேநா னறிவேனோ
ஆகமெல்லாம் பசந்தேனோ (பெற்ற) அன்னைசொல்லுங் கசந்தேனே
தாகமின்றிப் பூணேனே (கையில்) சரிவளையுங் காணேனே.

**9.6.6.1 தோழியர் புலம்பல்**

வசந்தவல்லியின் நடையழகினை கண்டால் அன்னமும் தோற்றுப் போகும். இவள் விடைஊர்தி கொண்டவனின் எதிரே போய்த் தெருவில் கூடியுள்ள பலரும் அறியத் தன் சங்கு வளையல்களைத் தோற்று நிற்கின்றாளே? சடைமுடியை உடையவனின் கோலத்தில் ஒன்றித் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து நிற்கிறாளே? இறைவன் இவள் உடைகவர்ந்த வழக்கினால் இவள் அவன் தேர் செல்லும் நிலத்தைத் தனக்குப் புகலிடமாகக் கொண்டு மயங்கினாள்.

நடைகண்டா லன்னம் தோற்கு
நன்னகர் வசந்த வல்லி
விடைகொண்டா னெதிர்போய்ச் சங்க
வீதியிற் சங்கம் தோற்றாள்
சடைகொண்டா னுடைதான் கொண்டு
தன்னுடை கொடுத்தா ளையன்

உடைகொண்ட வழக்குத் தானோ
ஊர்கின்ற தேர்கொண் டாளே.

தோழியருள் சிலர் இவள் குற்றாலநாதர் மீது ஆசை கொண்டதால் மயங்கி விழுந்தாள் என்பர். விளையாட்டை மறந்தாள், பாட மறந்தாள், வாடாத மாலையை சூட மாட்டாள் பாருங்கள் என்பர் சிலர், காமப் பேய் பிடித்துவிட்டதோ? அல்லது பித்தம் கொண்டாளோ என்பர் சிலர், என்னமாயமோ? என்பர் வேறு சிலர், ஐயோ என் செய்வோம் எனப் பதறுவார் சிலர், தெய்வமே என்று வேட்டுவார் சிலர், களைப்பாய் விட்டதோ என்பர் சிலர், மூச்சு இருக்கின்றதோ என்பர் சிலர், கையில் திருநீறு எடுப்பார் சிலர், இப்படிப் புலம்பிய பெண்கள் எல்லாம் இறுதியில் சூலக் கையானா! திரிகூடநாதனே! கண்பாராய் என்று வாய்விட்டுப் புலம்பினர்.

**9.6.6.2 .விரகத் தீ**

திருக் குற்றாலநாதரின் மீது கொண்ட மையலால் வசந்தவல்லி உடல் சோர்ந்து விழுந்தாள் என்று பாங்கியர் அறிந்த உடன் அவளைத் தூக்கிக் கொண்டு போய்த் தமனிய மாடத்திலே சேர்த்தனர். மேலும் வசந்த வல்லியின் வெப்பம் தணியுமாறு குளிர்ச்சியான கலவைகளைப் பூசிப் பூசி மேலும் அவளுடைய உடல் நோயை அதிக மாக்கினார்.

மண மிகுந்த சந்தனக் குழம்பினை அவளுடலில் பூசுவார்கள். விரகத் தீயை மூட்டி மேலும் கொழுந்து விட்டு எரியச் செய்வது போல் விசிறி கொண்டு வீசுவார்கள். இவள் உடலனைத்தும் கருகின்றதே இவள் மேனி உருகுகின்றது என்பர். மேலும் மேலே பரப்பிய பூக்கள் கருகுகின்றதே முத்துமாலையில் முத்துக்கள் பொரிகின்றனவே என்று சொல்லித் துடிப்பார்கள்.

**9.6.6.3 நிலவைப் பழித்தல்**

அவளை மெதுவாக அணைத்து எடுத்து மெல்லிய வாழைக் குருத்திலே கிடத்துவார்கள் அவ்வேளையில் குறும்பலா ஈசன் திருமுடியில் சூடியுள்ள நிலவினைப் பழித்து வசந்தவல்லி புலம்பத் தொடங்கினாள்.

குளிர்ச்சி இல்லாத கொடிய பாவியாகிய வெண்ணிலவே உமையம்மைக்கு தன் உடற்பாதியைக் கொடுத்தவர். எனக்குத் தந்த மயக்கத்தின் காரணமாக நான் இப்படி மண்ணில் மயங்கிக் கிடக்கிறேன். என் போலவே உனக்கும் மதிமயக்கம் தந்தானோ? நம் நெற்றிக் கண்ணிலே நெருப்பை வைத்துக் கொண்டு பிறரை எல்லாம் எரியச் செய்கின்ற அவருடன் கூடிக் காந்திக் காந்தி விண்ணிலேயும் இப்படி நெருப்பை வைத்து விட்டாயோ? இது என்ன முறையோ?

குளிர்ச்சியான அமிழ்துடன் பிறந்த வெண்ணிலாவே, அந்த குளிர்ச்சியை ஏன் மறந்தாய்? வெண்ணிலாவே திருமகளாகிய பெண்ணுடன்

பிறந்தாயே, என் மென்மை கண்டு நீயும் காய்ந்து வருந்தலாமோ வெண்ணிலாவே

தண்ணமு துடன்பிறந்தாய் வெண்ணிலாவே அந்தத்
தண்ணளியை ஏன்மறந்தாய் வெண்ணிலாவே
பெண்ணுடன் பிறந்ததுண்டே வெண்ணிலாவே என்றன்
பெண்மைகண்டும் காயலாமோ வெண்ணிலாவே.

நீ விண்ணில் பிறந்ததற்கோ, நான் அருவிட்டு அறிந்ததற்கோ கண்விழிக்க விரும்பாத கொடிய பகைவனைப் போல் என்னைக் காந்தச் செய்து நீ வெறியாட்டம் ஆடுகிறாய் வெண்ணிலாவே.

என் கூந்தலை நாகம் என தவறாக எண்ண வேண்டாம். அது பின்னவிட்டுத் தொங்கும் சடையேதான் என்பதைக் காண்பாயாக. நீ தோன்றித் தாமரையின் அழகைக் கெடுத்து விட்டாய். என்னை ஏன் இப்படி காய்கின்றாய் முக்கூடல் லிங்கரின் முன்னாற் போய் அவரைக் காய்ந்தால் என்ன ?

குளிர்ச்சியான நிலவினைக் குடையாகக் கொண்ட குற்றால நாதர் தந்த மையலின் விளைவே என் நிலை என என் என் தோழிப் பெண்கள் அறிந்திருந்தும் எண்ணற்றப் பகைகளை உணர்ந்து அவற்றால் என்னைத் தெளிவிக்க முயல்கின்றனரே ? இந்த நகரத்தையும் நல்ல நகரம் என்று எவர்தான் சொன்னார்களோ ? அண்ணல் திரிகூட நாதர் எனக்கு அருள் செய்பவராக அமைந்திட மாட்டாரோ?
என்று கூறிப் புலம்பினாள் வசந்தவல்லி

### 9.6.6.4 மன்மதனைப் பழித்தல்

தொடர்ந்து மன்மதனை விளித்துப் புலம்புகின்றாள் வசந்தவல்லி. வெண்ணிலா குடைபிடித்து மகரமீன் கொடி பிடித்து இளந்தென்றலில் ஊர்ந்து வரும் மன்மதனே நீயாவது சொல்வாயா ?

மன்மதனே உன் கையிலுள்ள கரும்புவில் எதற்காக? அதன்பூட்டி எய்யும் மலர்கணைகள் எதற்காக? நீதான் எதற்காக? சிவந்து தோன்றுகின்றதே இந்த பாவி நிலவு இது ஒன்றே போதாதோ என்னை வதைப்பதற்கு? மையிட்ட கண்ணினையுடைய இரதியிடம் மயக்கம் கொண்டவனே, இடபத்தின் மேல் ஏறிவரும் குற்றால நாதரிடத்திலே நான் மையல் கொண்டால் உனக்கு என்மீது என்னதான் பொல்லாப்போ! கூறுவாயாக.

எல்லாத் திசையிலிருந்தும் தென்றலாகிய புலி வந்து என்மேல் பாய்கின்றதே மன்மதா! குயிலின் குரலாகிய எக்காளம் ஒலித்தபின் எனக்கு அன்னமும் பிடிக்காமல் போய்விட்டதே மன்மதா. என் அக்காள் எனும் தோழி வெட்கம் இல்லாமல் என்னை ஏசுவாளே. மன்மதா அஃதல்லாமல்

என்னைப் பெற்ற தாயும் பொல்லாத நீலியாயிற்றே என்ன செய்வேன் மன்மதா.

மன்மதனே இவ்வூரில் உள்ள பிற தோழியரைப் போய் பாரடா, அவர்கள் எவ்வளவு கவலையற்று நிம்மதியாக இந்நேரத்தில் உறங்குகின்றனர். என் கண்ணில் உறக்கம் வராமல் உறக்கமும் எனக்குச் சத்துருவாக விளங்குகின்றதே. கடல் ஒலியாகிய முரசமும் இல்லாமல் வேறொரு எக்காளமும் உனக்கு எதற்காகவோ ? சிறு பெண் பிள்ளையாகிய என்மேற் போரிடும் நீயும் ஓர் ஆண்பிள்ளையோ மன்மதா?

திக்கெலாந் தென்றற் புலிவந்து பாயுதே மன்மதா - குயிற்
சின்னம் பிடித்தபின் னன்னம் பிடியாதே மன்மதா
அக்கா ளெனுஞ்சகி வெட்காம லேசுவாள் மன்மதா - அவள்
அல்லாமல் தாயொரு பொல்லாத நீலிகாண் மன்மதா
நேரிழை யாரையு மூரையும் பாரடா மன்மதா - கண்ணில்
நித்திரை தானொரு சத்துரு வாச்சுதே மன்மதா
பேரிசை யேயன்றிப் பூரிசை யேன்பிள்ளாய் மன்மதா - சிறு
பெண்பிள்ளை மேற்பொரு தாண்பிள்ளை யாவையோ மன்மதா

குற்றால நாதரின் நீண்ட கடை இது வன்று, இது என் கடுமையான கூந்தல் பின்னல் காண்பாயாக மன்மதா. என் நெற்றியில் விளங்குவது நெற்றிக்கண்ணன்று, சிந்தூரப்பொட்டுதான் காண்பாயாக. பெண்ணைப் பாகமாக உடைய குற்றால நாதர் முன்னே உன் செயலைச் செய்யப் போவாயாக மன்மதனே. என்று வசந்தவல்லி மன்மதனிடம் கூறி முடிக்கின்ற நிலையில் தோழியுடன் வினாவி அறிகின்றாள்.

### 9.6.6.5 பாங்கியிடம் உரைத்தல்

மன்மதனைச் சாடிப் பேசிய வசந்தவல்லியின் நிலையறிந்த தோழி அருகில் வந்து, “கொடி போன்றவளே, பூங்கொம்பு போன்றவளே எங்கள் குடியில் பிறந்த பெண் பிள்ளையே உலகம் ஏழிணையும் உடையவர் திரிகூடநாதர். அவருடைய நகரிலே ஐம்படையுடன் வரும் மன்மதனைப் பயிற்று முகத்தால் நீ சொல்லிய சொற்களை நின் தோழியாகிய நானும் தெரிந்து கொண்டால் ஆகாதோ அதனை என்னிடம் சொல்வாயாக” என்றாள்

வசந்தவல்லியும் அவளுக்குக் கூறத்தொடங்கினாள். பாங்கியே அடியவர்களுக்கு மெய்யாக விளங்கும் நம் திரிகூட நாயகர் மீது நான் மையல் கொண்டுள்ளேன். அந்தச் செய்தியை நீயும் கேட்பாயாக. அவருடைய சிவந்த சடையும் அவர் சூடியுள்ள கொன்றை மாலையின் அழகும், அவர் கையில் விளங்கும் மழுவும் என் கண்களை விட்டு அகலவில்லை

மெய்யர்க்கு மெய்யர் திரிகூட நாயகர் மீதில்மெத்த
மையல்கொண் டேனந்தச் செய்தியைக் கேளாய் நீபாங்கி
செய்ய சடையுந் திருக்கொன்றை மாலை யழகுமவர்
கையில் மழுவுமென் கண்ணை விட்டே யகலாவே.

கங்கையைத் தலையில் வைத்துள்ள தெய்வங்களுள் உயர்வானவர். சூடியுள்ள மூன்றாம் பிறையும் எனக்குத் தீக்கொழுந்தாகியது. சங்குக் குழைகள் அணிந்த அவர் வீதியில் உலாவரக் கண்டு என் கைகளில் இருந்த சங்கு வளையல்களை இழந்து நான் மயங்கிவிட்டேன். இளம்பிறை சூடிய குற்றால நாதரைக் கண்டேன் அதனால் தென்றல் எனும் குளவி என்னைக் கொட்டிக் கொண்டே இருக்கிறது. அதனால் நான் மிகவும் நொந்து போய் விட்டேன். மேருவை வில்லாக வளைத்த குற்றால நாதர் முன்னர்ப் போயினேன், அதனால் மன்மதன் தன் கரும்பு வில்லைக் கொண்டு என்மீது மெல்லப் போரிடத் தொடங்கி விட்டான். பெரிய ராசவீதியில் உலாவந்த அவர் கையிலேந்திய மானைக் கண்டதும் என் ஆடையை நெகிழ விட்டேன்.

பெம்மானை நன்னகர்ப் பேரரச வீதியிற் கண்டு அவர்
கைம்மானைக் கண்டு கலையை நெகிழ விட்டேனே
செம்மேனி தன்னிற் சிறுகறுப் பாரைநான் கண்டிப்போது
அம்மாவென் மேனி யடங்கலு மேகறுத் தேனே.

வெண்மையான எருதின் மேல் ஊர்ந்து வரும் பாம்பணிகள் புனைந்தவரை கண்டதால் முன்பு குளிர்ச்சியான திங்கள் இன்று ஞாயிறு போன்று கொதிப்புடையதாயிருக்க கண்டேன் மேலும் உணவும் உறக்கமும் அற்றவளாய் போய்விட்டேன்.

வசந்தவல்லியின் கூற்றைக் கேட்ட பாங்கி “பூமியிலுள்ள பெண்களுக்கெல்லாம் ஆபரணம் போல் தோன்றிய எங்கள் பொற்கொடியே, பெண்களுக்கு எல்லாம் தலைவியாய் விளங்குபவளே, வசந்த வல்லியே இது வரை நீ சொன்ன பேதைமையான சொற்களுக்கு நான் என்ன பதில் சொல்லப் போகிறேன். மலைமகளின் மீது ஆசை கொண்டவராக மாட்டின் மீது ஏறிவருகின்றவரின் மீதா நீ மையல் கொண்டனை அதனை இப்போதே விட்டுவிடுவாயாக. என்று கூறினாள்.

வசந்தவல்லி தோழியின் கூற்றை மறுத்து ஈசன் பெருமைகளைத் தொடர்ந்து கூறுவாளாயினாள்.

அவள் “பாங்கியே குற்றால நாதரின் செய்தியை நீ இன்னும் கேட்க மாட்டாயோ. அவரின் வாகனமாகிய எருதுக்கு உலகம் முழுவதும் ஓரடிதான் என்பதை நீ அறிவாயா. அவர் சந்நிதியின் பயனால் பெற்ற பேறல்லவோ

பொன்னுலகத்தில் தேவர்கள் பெற்றுள்ள செல்வமெல்லாம் தினமும் சந்திரரும் சூரியரும் வந்திறங்கித் தரிசித்துச் செல்லும் வாசலன்றோ அவருடைய திருக்கோயிலின் வாசல். ஈசனிடத்தில் நான் ஒருத்தி மட்டுமா ஆசை கொண்டேன். என்று நீ நினைத்தாய். பல கன்னியர்களும் முனி பத்தினி மார்களும் முன்னாளில் அவர் மீது ஆசை கொள்ளவில்லையா? இலங்கையில் வாழ்ந்த மண்டோதரி அவருடைய திருவடியை அடைவதற்கு என்ன தவம் செய்தாளோ? அதனை நானும் செய்வதற்கு அறியேன். குறும்பலா மரத்தின் வேரிலே பழுத்த பழம் முற்றி, வெடித்து அதன் சுளைகளில் வடியும் தேனானது பூமியிலே பாதாள கங்கை பீரிட்டு வந்ததோ எனச் சொல்லும் படியாகக் குதித்து வந்தது. அப்படி வந்த தேன் ஆற்று நீரில் கலந்து பெருகும். இப்படிப்பட்ட குறும்பலா மரத்தின் அடியில் வீற்றிருக்கும் குற்றால நாதர். அவரிடத்தில் ஆசைகொண்ட பெண்கள் பலர், அவர்களுள் நானும் ஒருத்தி என்று தன் பக்க நியாயத்தை எடுத்துரைத்தாள்.

வேரிலே பழம்பழுத்துத் தூரிலே சுளைவெடித்து
வெடித்த தீந்தேன்
பாரிலே பாதாள கங்கைவந்த தெனக்குதித்துப்
பசுந்தேன் கங்கை
நீரிலே பெருகுகுறும் பலாவிலே கொலுவிருக்கும்
நிமல மூர்த்தி
பேரிலே பிரமைகொண்ட பெண்களிலே நானுமொரு
பெண்கண் டாயே.

வசந்தவல்லிக்கு உடன்பட்ட தோழி "தென்றலைப் போல் உலா வரும் பூங்கொடியே பூங்கொடிக்குப் பூங்கொடி பேசுவது போல என்னிடம் பேசும் போதே நின் மேனியில் படரும் பசலை நோயைக் காண்பாயாக நீ பரமர்மீது ஆசை கொண்டு விட்டனை. பேரின்பத்தை நல்கும் குற்றால நாதராகிய நம்பெருமான் உன்பால் இசைந்து கூடுமாறு செய்வதற்குரிய செயல் யாதோ ? அதனை நானும் அறியுமாறு எனக்குத் தெரிவிப்பாயாக" எனக் கூறி நின்றாள்.

### 9.6.6.6 பாங்கியைத் தூது சொல்லப் போக்குதல்

வசந்தவல்லி தோழியிடம் தனக்காகத் தூது சொல்லி வா என்றுரைத்தமையைப் பின்வரும்பகுதியால் அறியலாம்.

பாங்கியே நீ எனக்காகக் குற்றாலநாதர் முன்பாகப் போய்த் தூது சொல்லி வருவாய். முன்னாளில் சுந்தரருக்காகத் தூது போன அவர் முன்னே நீ என் பொருட்டாகத் தூது சொல்லி வருவாயடி பெண்ணே! உறங்கலாம் என்றால் உறக்கம் வரவில்லை. மாயஞ் செய்த அவரை

மறக்கலாம் என்றால் மறக்கவும் முடியவில்லை. பெண் பிறவி எடுத்த எனக்குப் பேராசை கூடாது என்பதை அறிந்திருந்தும் அவரிடத்தில் நான் ஆசை உடையவளாகி விட்டேன் அதனால் நீ போய்த் தூது சொல்லி வருவாயாக.

தூதுநீ சொல்லி வாராய் பெண்ணே குற்றாலர் முன்போய்த்
தூதுநீ சொல்லி வாராய்
ஆதிநாட் சுந்தரர்க்குத் தூதுபோனவர் முன்னே (தூதுநீ)
உறங்க உறக்கமும் வாராது மாயஞ் செய்தாரை
மறந்தால் மறக்கவும் கூடாது பெண்சென்ம மென்று
பிறந்தாலும் பேராசை யாகாது அ.்.த றிந்தும்
சலுகைக் காரர்க் காசையானே னிப்போது (தூதுநீ)
நேற்றைக்கெல் லாங்குளிர்ந்து காட்டி இன்று கொதிக்கும்
நித்திரா பாவிக்கென்ன போட்டி நடுவே இந்தக்
காற்றுக்கு வந்ததொரு கோட்டி விரகநோய்க்கு
மாற்று மருந்து முக்கண் மருந்தென்று பரஞ்சாட்டி (தூதுநீ)
வந்தாலிந் நேரம்வரச் சொல்லு வராதி ருந்தால்
மாலையா கிலுந்தரச் சொல்லு குற்றாலநாதர்
தந்தாலென் னெஞ்சைத் தரச்சொல்லு தராதி ருந்தால்
தான்பெண்ணா கியபெண்ணை நான்விடே னென்று.

நேற்றெல்லாம் குளிர்ச்சியைக் காட்டி இன்று கொதிப்புடையதாக மாறிவிட்ட நித்திரையாகிய பாவிக்குத் தான் என்னுடன் என்ன போட்டியோ? நடுவே இந்தத் தென்றல் காற்றுக்கும் அல்லவோ ஒரு கோட்டி வந்திருக்கின்றது. என் விரக நோய்க்கு மாற்று மருந்து முக்கண் மருந்தே. என்று எனக்காக நீ அவரிடம் போய் தூது உரைத்து வாராயோ.

அவர் வருவதென்றால் இந்த நேரத்திலே வரச்சொல்லு. அப்படி வரவில்லை என்றால் அவர் அணிந்துள்ள கொன்றை மாலையாவது தரச் சொல்லு. குற்றால நாதர் எனக்கு ஏதாவது தருவதாய் இருந்தால் என்னிடம் இருந்து பறித்து போன நெஞ்சைத் திருப்பித் தரச் சொல்லு. அப்படி அவர் தரவில்லை என்றால் அவரை நான் எளிதில் விடமாட்டேன். என்று சொல்லிப் போய்த்தூது சொல்லி வருவாயாக.

மின்னல் கொடி போன்றவளே. குமரனை ஈன்றருளியவர். மன்மதனை வென்றருளியவர். மீண்டும் மன்மதனை உயிர்ப்பித்து அருளியவர். அகங்காரம் மிகுந்த தாருகாவனத்து முனிவர்கள் பெரிய யானைகளை ஏவிவிட அதனைக் கொன்று அதன் தோலை உரித்தவர் குற்றால நாதர்.

அவரைத் தேவர்களும் எளிதில் காண இயலாது ஆதலால் அவரைக் காணக் கூடிய வேளை எதுவெனக் கூறுவேன் கேட்பாயாக.

சகியே திரிகூடராசருக்கு தினமும் ஒன்பது காலப் பூசை உண்டு. அபிடேகங்கள் நடைபெறும் காலங்களில் அவரிடம் பேசுவதற்கு ஏற்ற சமயம் அன்று. ஏழு நாட்களில் மூன்று நாட்கள் திருநாள்கள். வசந்தத் திருநாளும், மாத வழிபாடுகளும் வருட வழிபாடுகளும் நடக்கும். திருக் குற்றால நாதரை சந்திக்கத் தக்க சமயம் அறியாமல் சென்ற சித்தர்களும் தேவகணங்களும் சிவகணங்களும் உள்ளே நுழைய முடியாமல் கடைவாயில் காத்து நிற்பார்கள். எப்படியோ கடந்து உள்ளே சென்றவர்கள், நந்தியின் பிரம்படிக்குப் பயந்து ஆட்கொண்டார் குறட்டில் போய் நிற்பார்கள்.

மைதீட்டிய கண்களை உடைய மாதர்கள் தூதாக அனுப்பிய வண்டுகளும் கிளிகளும் ஒவ்வொரு வாசலிலும் உள்ளே செல்லத் தக்க சமயம் நோக்கிக் காத்திருக்கும். குற்றால சிவராம நம்பி செய்கிற சடங்குகள் அழகுடன் விளங்கும். அபிஷேக நைவேத்தியங்களை அவன் ஏற்றுக் கொண்டு அருள்செய்வான். நான்கு வேதங்களும், மூவர் தேவாரமும், நால்வகைக் கவிதையும் சதா முழங்கிக் கொண்டிருக்கும். குற்றால நாதர் தம் தேவியுடன் இருக்கும் போது நம் ஆசையை அங்கே சொல்லக் கூடாது.

முப்பொழுதும் திருமேனி தீண்டுவார் வந்து தம் காரியங்களைச் செய்கின்ற நேரத்திலே குழையணிந்த உமையம்மையின் பள்ளியறையில் இருந்து அவர்தம் கோவிலை நோக்கிப் போகின்ற ஏகாந்த சமயமே அவரிடம் பேசுவதற்கு மிகவும் ஏற்ற சமயம். அந்த சமயத்தில் என் விருப்பத்தை நீ அவரிடம் எடுத்துச் சொல்லி அவருடைய கொன்றை மாலையை வாங்கி வருவாயாக.

நாலுமறைப் பழம்பாட்டு மூவர்சொன்ன திருப்பாட்டும்
நாலுகவிப் புலவர் புதுப்பாட்டுஞ் சகியே.
நீலகண்டர் குற்றாலர் கொண்டருளு நிறைகொலுவில்
நீக்கமிலை எல்லார்க்கும் பொதுக்காண் சகியே.
அப்பொழுது குற்றாலர் தேவியுடன் கொலுவிருப்பார்
ஆசைசொலக் கூடாது கண்டாய் சகியே.
முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார் வந்துநின்று
முயற்சிசெயுந் திருவனந்தல் கூடிச் சகியே.
கொப்பழகு குழைமடந்தை பள்ளியறை தனிலிருந்து
கோயில்புகும் ஏகாந்த சமயஞ் சகியே.
மைப்பழகு விழியாயென் பெருமாலை நீசொல்லி
மருமாலை வாங்கியே வாராய் சகியே.

### 9.6.6.7 கூடல் இழைத்தாள்

தோழியைத் தலைவர்பால் தூதுபோக்கிய வசந்தவல்லி தன்மனக்காதல் முற்றுப்பெறுமோ பெறாதோ என்ற ஐயத்தால் மணலில் வட்டமிட்டுக் கூடலிழைத்துக் காண விரும்பினாள். தெளிந்த வடவருவியை தீர்த்தமாக உடைய குற்றால நாதர் தம் சடையில் கங்கையைச் சூடி இருப்பவர். அவர்பால் மையல் கொண்டதால் வந்த விரக வெம்மைக்கு ஆற்றாதவளாய் கண்ணீர் புனலாய் ஒழுகவும் கழன்று விழும் கை வளையல்கள் செய்யக் கரையாக விளங்கவும் கூடலாகிய உறைக் கிணறு செய்பவளானாள் வசந்தவல்லி.

வேதங்கள் தேடி அறியா நாயகன். நாகர்கள் பணிகின்ற குற்றால நாயகன். பாவலர்கள் மக்களின் காவலர்கள் ஆகியோரின் நாயகன். பதஞ்சலி முனிவர் பணியும் பாதங்களை உடையவன். இளம் பிறை சூடிய நாயகன். குழல்வாய் மொழியாளின் நாயகன். குறும்பலாவினருகே என்னைக் கூடுவார் என்பது உண்மையானால் கூடலே நீ கூடாய்.

பிரமனும் திருமாலும் அன்று அடிமுடி தேடிக் களைத்துப் போகும்படிச் செய்தவர், காமனை எரித்தவர், சந்திரனைச் சூடியவர், வேதங்களை அருளியவர், வேதங்களின் மூலப் பொருளாய் விளங்குபவர், யானை முதலான பல்லுயிரும் தொழ நின்ற நயகர். அகத்தியரின் தமிழ் கேட்டு மகிழ்ந்தவர் குற்றாலப் பெருமானாகிய அவர் குறும்பலாவிடத்தில் என்னைக் கூடுவார். கூடுவாரானால் கூடலே நீயும் இப்போது கூடி வருவாயாக என்று வசந்தவல்லி பேசிக்கொண்டே கூடலிழைத்தாள்.

பாடியமறை தேடிய நாயகர் பன்னகர்பணி நன்னகர் நாயகர்
பாவலர்மனுக் காவலர் நாயகர் பதஞ்சலி பணிதாளர்
கோடியமதி சூடிய நாயகர் குழல்மொழிபுண ரழகிய நாயகர்
குறும்ப லாவினிற் கூடுவ ராமெனிற் கூடலேநீ கூடாய்
கஞ்சனைமுகில் மஞ்சனை நொடித்தவர் காமனைச்சிறு சோமனை முடித்தவர்
காரணமறை யாரணம் படித்தவர் கருதிய பெருமானார்
குஞ்சரமுதற் பூசித்த நாயகர் குறுமுனிதமிழ் நேசித்த நாயகர்
குறும்ப லாவினிற் கூடுவ ராமெனிற் கூடலேநீ கூடாய்

## 9.7 தொகுத்துக் காண்போம்.

குறவஞ்சியின் முதற்பகுதியில் விநாயகன், சிவபெருமான் உள்ளிட்ட கடவுளரை வணங்கும் வணக்கம் இடம்பெற்றது. கட்டியங்காரன் கட்டியம் கூற சிவபெருமான் தன் பரிவாரங்களுடன் பவனி வந்தமை உணர்த்தப்பட்டது. வசந்தவல்லியின் அழகும் பந்தாடிய பான்மையும் சுவையாக வருணிக்கப்பெற்றுள்ளன. ஈசனைக் கண்டு காதலுற்ற

வசந்தவல்லி மேனி வேறுபடுதலும் சந்திரனையும் மன்மதனையும் பழிக்கின்ற நிலையும் பாங்கியைத் தூது அனுப்புதலும் கூடலும் உரைக்கப்பட்டன.

## 9.8 தன்மதிப்பீட்டு வினாக்கள்

இரு மதிப்பெண் வினாவிடைகள்

1. எலும்பில் இருந்து பூம்பாவையை உயிர்ப்பித்தவர் யார்?

   திருஞான சம்பந்தர்

2. குறவஞ்சி ஆசிரியர் கடவுள் வணக்கத்தில் போற்றும் கடவுளரைக் குறிப்பிடுக?

   விநாயகர், முருகன், சிவபெருமான்

3. நிலவு யாருடன் பிறந்தது?

   அமுதம் திருமகள்

4. குற்றால நாதர் எதனடியில் வீற்றிருக்கின்றார்?

   குறும்பலா

5. பந்தாடிய வசந்தவல்லியைக் கண்டார் எவ்வெவருடன் ஒப்பிட்டனர்?

   திருமகள், ரதி, அரம்பையர், மோகினி

   குறுவினா

6. குற்றால நாதர் பவனி வந்த சிறப்பை விளக்குக.

   பவனி வந்தனரே என்னும் தலைப்பிலான செய்திகள்

7. வசந்தவல்லி நிலவைப் பழித்துக் கூறியமையை விளக்குக.

   நிலவைப் பழித்தல் என்னும் தலைப்பிலான செய்திகள்

8. வசந்தவல்லி காமனைப் பழித்துரைத்த பாங்கினை விளக்குக.

   மன்மதனைப் பழித்தல் என்ற தலைப்பில் அமைந்த செய்திகள்

9. வசந்தவல்லி பாங்கியிடம் யாது கூறித் தூதாக விடுத்தாள்?

   பாங்கியைத் தூது சொல்லப் போக்குதல் என்ற தலைப்பில் அமைந்த செய்திகள்

   பெருவினா

10. வசந்தவல்லியின் அழகை விவரிக்க.

    9.6.4.2. வசந்தவல்லியின் அழகு என்ற பகுதி முழுவதும்

11. வசந்தவல்லி பந்தாடிய சிறப்பைக் கட்டுரைக்க.

    9.6.4.3. வசந்தவல்லி பந்தாடுதல் என்ற பகுதி முழுவதும்

12. குறும்பலா ஈசரைக் கண்ட வசந்தவல்லியின் காதல் துயரை விளக்குக.

9.6.6 மயலானாள் என்பதன் கீழமைந்த விரகத்தீ, தோழியர் புலம்பல், நிலவைப்பழித்தல், மன்மதனைப் பழித்தல் தூது அனுப்பல், கூடலிழைத்தல்

## 9.9. மேலும் படித்தறிய

நிர்மலா மோகன் - குறவஞ்சி இலக்கியம்

நாஞ்சில் நாடன் - சிற்றிலக்கியங்கள்

# கூறு 10. குற்றாலக் குறவஞ்சி - மலைவளம் கேட்டல் முதல் குறி கேட்டல் வரை

### 10.1 முன்னுரை:

திருக்குற்றாலக் குறவஞ்சியின் முதன்மையான பகுதி குறவஞ்சியின் வருகையும் குறி கூறுதலும் ஆகும். இப்பகுதியில் பாட்டுடைத் தலைவரின் பெருமையும் தலச்சிறப்பும் பலவாறு பேசப்படும். பின்னர் குறத்தி பழந்தமிழரின் குறி சொல்லும் மரபில் குறத்தி தலைவிக்குக் குறி கூறுவாள். பாட்டுடைத் தலைவனால் காதலுற்ற தலைவியுடன் குறத்தி பேசுதல் நாடகத் தன்மையில் அமையும் சிறப்புடையது.

### 10.2 நோக்கம்:

குறவர்களின் மலைவாழ்வு, பண்டைய மலை வளம், பண்பாடு ஆகியவற்றை அறிந்துகொள்ளலாம். தமிழரின் இயற்கையோடியைந்த வாழ்வை உணர்வதோடு இறைப்பற்றையும் உணரலாம். திரிகூட ராசப்ப கவிராயரின் வீறார்ந்த கவிப் புலமையையும் கற்பனையையும் அறிந்துணரலாம்

### 10.3 குறவஞ்சி நாடகம்

#### 10.3.1 குறவஞ்சியின் அழகு

திருவிளையாடல் புரிந்த இறைவனின் குற்றால வீதியிலே நெற்றிக் கண்ணினரான அவர் முன் நழுவிய தன் சங்கு வளையல்களை உன்வீட்டில் சென்று தேடுவதற்காக இடத்தை வளைத்த அடையாளத்தைப் போலக் கூடல் இழைத்த வசந்தவல்லி மயங்கிக் கொண்டிருந்த வேளையில் வளையல் நிரம்பிய தன் கைகளை அசைத்து, மாத்திரைக் கோலினை ஏந்திக் கொண்டு, மணிக் கூடையை இடுப்பில் தாங்கிக் கொண்டு, மாளிகை நிரம்பிய குற்றால தெருவில் குறவஞ்சி ஒருத்தி வருகிறாள்.

ஆடல்வளை வீதியிலே அங்கணர்முன் போட்டசங்க
மரங்கு வீட்டில்
தேடல்வளைக் குங்குறிபோற் கூடல்வளைத் திருந்துவல்லி
தியங்கும் போதிற்
கூடல்வளைக் கரமசைய மாத்திரைக்கோ லேந்திமணிக்
கூடை தாங்கி
மாடமறு கூடுதிரி கூடமலைக் குறவஞ்சி
வருகின் றாளே.

குறவஞ்சி அழகை ஆசிரியர் பின்வருமாறு பாடுகின்றார்.

வஞ்சி வந்தனளே. திருக்குற்றால மலையின் குறவஞ்சி வந்தனளே. வஞ்சிக் கொடி போன்றவள், செவ்வரி படர்ந்த விழிகளென்னும் நஞ்சினையுடையவள், திண்மையான நெஞ்சினையுடையவள், குறும்பலா ஈசனின் பக்தியை நெஞ்சில் எண்ணியவள் உண்மையான குறிகளைச் சொல்லக் குறவஞ்சி வந்தனளே.

இல்லையோ எனும் இடையினையுடையவள். வில்போன்ற நெற்றியும் இல்லை அரும்பை வெல்லும் பல்வரிசையும் உடையவள். பூங்கொடி போன்ற அழகினை உடையவள். வடக்கேயுள்ள தில்லி வரையில் குறி சொல்லி புகழ் பெற்றவள். குழல் வாய் மொழியாளுடன் இன்புறும் குற்றால நாதருடைய கல்வி சிறந்த மலைக் குறவஞ்சி வந்தனள்

மின்னலைப் போன்ற குன்றிமணிமாலை மார்பில் அசையவும் நாசியில் முத்துப் புல்லாக்கு விளங்கவும், இரதியும் மன்மதனும் ஊசலாடுவது போன்று செவியில் ஆடும் குழைகளும் அணிந்து நடனமிடும் திருவடிகளை உடைய குற்றால நாதரின் மலையில் வாழும் குறவஞ்சி வந்தனள்.

அசைந்தாடும் குழைகளாகிய தோடும் கூந்தல் காட்டினையும் கொண்டு தோடி, முரளி, வராளி, பயிரவி எனும் இராகங்களின் இனிமை தோன்றுமாறு பாடிக்கொண்டு, மயில் ஆடுவது போன்று ஆடிக்கொண்டு குறவஞ்சி வந்தனள். திரிகூட மலையின் இன்பமோகினியாகிய வசந்த வல்லியின் முன்பாக அவளுடைய விரக நோய்க்கு சஞ்சீவி மருந்தினைப் போன்று குறவஞ்சி வந்தாள். செம்மையான முறையில் குறி சொல்வதற்காக அம்மே ! அம்மே என்று கூவிக் கொண்டே குறவஞ்சி வந்தாள். சோலைகளில் வசந்த காலத்தில் குயிலினம் வந்ததுபோல் குறவஞ்சி கூறியபடி வந்தாள்.

குறிசொல்லும் கருவியாகிய மாத்திரை கோல் கையில் கொண்டு அவள் கண் பார்வையே அவளுடைய குறி சொல்லும் ஆற்றலை சொல்லும்படியாக கண்டவர் போற்றும் வடிவில் மலர்க் கொடி நடந்து வந்தாற் போல குறவஞ்சி வந்தாள்.

சிலைநுதலிற் கஸ்தூரித் திலகமிட்டு நறுங்குழலிற்
செச்சை சூடிக்
கொலைமதர்க்கண் மையெழுதி மாத்திரைக் கோல்வாங்கி
மணிக்கூடை தாங்கி
முலைமுகத்திற் குன்றிமணி வடம்பூண்டு திரிகூட
முதல்வர் சாரல்
மலைதனிற்பொன் வஞ்சிகுற வஞ்சியப ரஞ்சிகொஞ்சி

வருகின் றாளே.



**10.3.2 மலை வளம் கேட்டல்**

தேவ லோக வாத்தியங்கள் முழங்கும் அந்நகரில் கோயில் கொண்டுள்ள குற்றால நாதரின் அருளைப் பாடிக் கொண்டே வந்த குறவஞ்சியைக் கண்டு வசந்தவல்லி மன மகிழ்ச்சி கொண்டாள். சந்தனம் பூசிய மார்பும், துவளும் இடையும், முத்துப் பற்களும், பவள இதழ்களும் உடைய குறப் பெண்ணே உன் சொந்த மலையின் வளத்தைப் பற்றி எனக்குச் சொல்வாயாக என்றாள். அவளிடம் தங்கள் மலையின் வளத்தை விர்வாகக் கூறுத் தொடங்கினாள். குறத்தி கூறிய மலைவளம் வருமாறு

ஆண் குரங்குகள் பழங்களைப் பறித்துக் கொடுத்துத் தம் மந்திகளுடன் கொஞ்சிக் கொண்டிருக்கும். அம் மந்திகள் கீழே சிந்தும் கனிகளை எதிர்பார்த்துத் தேவர்கள் கெஞ்சிக் கொண்டிருப்பார்கள். வேடுவர்கள் தம் கண்களால் வானவர்களைக் கீழே வருமாறு அழைப்பர். சித்தர்கள் பலரரும் வந்து காய சித்தி மூலிகைகளை வளர்த்துக் கொண்டிருப்பார்கள். தேன் அருவியின் அலைகள் மேலே எழும்பிச் சென்று வானின் வழியாக ஒழுகும். அதனால் சூரியனின் தேர்ச் சக்கரங்களும், குதிரைக் கால்களும் வழுக்கும். வளைந்த பிறையினைச் சடையில் சூடிய குற்றால நாதரின் வளமுடைய திரிகூட மலைதான் எங்கள் மலை என்றாள் குறத்தி

முழங்கும் அலைகளை உடைய நீர் வீழ்ச்சி கழங்காடுவது போல் முத்துக்களை சொரிந்து கொண்டிருக்கும். கானவர் மனைகளின் முற்றங்களில் பரவிப் பெண்களின் சிற்றில்களைக் கொண்டு போகும். மலைகளில் கிழங்குகளைக் கிள்ளிஎடுத்தும், தேன்எடுத்தும் மலை வளம் பாடி நடனமாடுவோம். யானைகளின் தந்தங்களை ஒடித்து வந்து அதல் பூண் கட்டி அதன் மூலம் வறுத்த தினையை உரலில் இட்டு இடிப்போம். குரங்குகள் மாம்பழங்களைப் பறித்து பந்து விளையாடுவது போன்று விளையாடும். தேன் மிகுந்த செண்பக மலர் வாசம் வானுலகில் சென்று பரவும். இத்தகைய வளம் கொண்ட திரிகூட மலையே எங்கள் மலையாகும்.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்.
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்.
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண் டோடும்.
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடப்போம்
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவி லீசர்
வளம்பெருகுந் திரிகூட மலையெங்கள் மலையே

ஆடும் நாகப் பாம்புகள் கக்கும் மணிகள் கோடி ஒளி பரப்பும், வெண்ணிலவை உண்ணும் சோற்றுக் கவளம் என நினைத்து யானைகள் வழி மறிக்கும். வேடர்கள் தினை விதைப்பதற்காக நிலத்தைப் பண்படுத்தி எரிப்பதால் அகில், குங்குமம், சந்தனம் ஆகிய வற்றின் நறுமணம் கமழ்ந்து கொண்டிருக்கும். காடுகளில் வரையாடுகள் துள்ளி ஓடும். காகம் அணுகாத உயர்ந்த உச்சியைக் கொண்டிருக்கும். மேகக் கூட்டங்கள் தாங்கியிருக்கும் திரிகூட மலையே எங்கள் மலையாகும்.

வடதிசையில் உள்ள கயிலை மலைக்கு ஒப்பானது திரிகூட மலை. பொன்னிறமாக மேருமலை போன்றது, தென் திசையின் சிவசயில மலைக்கு வட திசையில் இருக்கும் மலை ஏனைய மலையின் சிறப்புகளை எல்லாம் தனக்குள்ளே கொண்டது. வயிரம், மாணிக்கம் விளையும் மலை, கதிரவனின் ஒளிக் கதிர்கள் மலைக் குகைக்குள் சென்று ஒளிபரப்பும் மலை. திருமால் கண் விழித்துத் தேடும் திரிகூட மலை எங்கள் மலையாகும்.

கொல்லி மலை என் இளையவள் செல்லி இருக்கும் மலை. என் கொழுநனுக்கு உரிமையுடைய மலை பழனி மலை. கதிரவனின் ஒளி பரவும் விந்திய மலை என் தந்தைமலை. இமயமலை என்னுடைய தமையன் மலை. சுவாமி மலை என்னுடைய மாமி மலை. நாஞ்சில் நாட்டு வேள்வி மலை என் தோழி மலை. மேகம் முழங்கும், மயில் ஆடும் திரிகூட மலையே எங்கள் மலையாகும்.

எங்கள் குலத்தை தவிர வேறு குலத்தில் பெண் கொடுக்கவும் மாட்டோம், எடுக்கவும் மாட்டோம். உறவு என்று பிடித்தவரை என்றாளும் நாங்கள் கைவிட மாட்டோம். அப்படிப்பட்ட குறவர் குலத்தவர் நாங்கள். திணைப்புனத்திலே நாங்கள் நடுங்கும் படியாக வந்த யானையை விலக்கி வேங்கை மரமாக நின்று எமக்கு நிழல் செய்த வேலவர்க்கு எம் குலத்துப் பெண்ணை மனைவியாகக் கொடுத்தோம். அப்போது எங்கள் உரிமையான மலைகளை எல்லாம் சீதனமாகக் கொடுத்தோம். சூரியனும் நிலவும்

சுற்றிவரும் மகா மேரு மலையை துருவனுக்கு கொடையாகக் கொடுத்தோம். குற்றால நாதருக்கு உரிய திரிகூட மலையே எங்கள் மலையாகும்.

கயிலையெனும் வடமலைக்குத் தெற்குமலை யம்மே
கனகமகா மேருவென நிற்குமலை யம்மே
சயிலமலை தென்மலைக்கு வடக்குமலை யம்மே
சகலமலை யுந்தனக்கு ளடக்குமலை யம்மே
வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை யம்மே
வானிரவி முழைகள்தொறு நுழையுமலை யம்மே
துயிலுமவர் விழிப்பாகி யகிலமெங்கும் தேடுந்
துங்கர் திரிகூடமலை யெங்கள் மலை யம்மே
கொல்லிமலை யெனக்கிளைய செல்லிமலை யம்மே
கொழுநனுக்குக் காணிமலை பழனிமலை யம்மே
எல்லுலவும் விந்தைமலை யெந்தைமலை யம்மே
இமயமலை யென்னுடைய தமயன்மலை யம்மே
சொல்லரிய சாமிமலை மாமிமலை யம்மே
தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை யம்மே
செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்க ளாடும்
திரிகூட மலையெங்கள் செல்வமலை யம்மே
ஒருகுலத்திற் பெண்கள்கொடோம் ஒருகுலத்திற் கொள்ளோம்
உறவுபிடித் தாலுவிடோங் குறவர்குலம் நாங்கள்
வெருவிவருந் தினைப்புனத்திற் பெருமிருகம் விலக்கி
வேங்கையாய் வெயில்மறைத்த பாங்குதனைக் குறித்தே
அருளிலஞ்சி வேலர்தமக் கொருபெண்ணைக் கொடுத்தோம்
ஆதினத்து மலைகளெல்லாஞ் சீதனமாக் கொடுத்தோம்
பரிதிமதி சூழ்மலையைத் துருவனுக்குக் கொடுத்தோம்
பரமர்திரி கூடமலை பழையமலை யம்மே

**10.3.3 நாட்டு வளம் கூறுதல்**

வசந்தவல்லி குறவஞ்சியை நோக்கி, அவளுடைய நாட்டு வளத்தின் பெருமையைக் கூற வேண்டி, “ குற்றால நாதரின் மலையில் வாழ்ந்து வரும் மயில் போன்றவளே கொடியின் தன்மையை உன் இடை காட்டும். காட்டு வளத்தை உன் கூந்தல் காட்டும் இப்படி உன் தோற்றமே மலை வளச் சிறப்பினைக் காட்டும் போது உன் வாயினால் அதனைச் சொல்லுவதும் வேண்டுமோ உன் நாட்டு வளத்தைச் சொல்வாயாக” என்றுரைத்தாள். வசந்தவல்லிக்குப் பின்வருமாறு குறத்தி தன் நாட்டுவளத்தைக் கூறத் தொடங்கினாள்.

மாமரங்களில் இருக்கும் குயில்கள் காமன் வந்தான் என்று முழக்கமிட்டுக் கொண்டு இருக்கும். நிலவு எனும் வெண்கொற்றக் குடை மேலே கவிந்து இருக்கும்.

எருமை மாடுகள் கூட்டமாக இறங்கும் நீர்த் துறையில் அவை சொரிகின்ற பாலினைப் பருகும் வாளைமீன்கள் பலாவினை நோக்கிப் பாயும். அதனால் பலா கனிகள் வாழை மரங்களின் மேலே உதிரும். வாழை மரம் சாய்ந்து தாழை மரத்தை தாக்கும் தாழை மகரந்தத்தோடு கூடிய பூக்களை சொரியும். வாழை தன் குருத்தினை விரித்து அச்சோற்றினை ஏந்திக் கொள்ளும்.

இள மங்கையரின் சொற்களைப் பழித்ததென்று ஆடவர்கள் கரும்பை வெட்டி மண்ணில் புதைப்பர். எனினும் அவை செழித்து வளர்ந்து மங்கையின் தோள் அழகை வெற்றி கொள்ளும். ஒளியுடைய முத்துக்களை ஈன்று அவர்களின் பற்களை வெற்றி கொள்ளும். பின்னர் அவர்களின் காதலர் பிரிந்தவுடன் பெண்மையை வெற்றி கொள்ள மன்மதனின் கரும்பு வில்லாக விளங்கும் தென் ஆரிய நாடு.

சூழ மேதி இறங்குந் துறையிற்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினிற் பாயக்
கொழும் பலாக்கனி வாழையிற் சாய
வாழை சாய்ந்தொரு தாழையிற் றாக்க
வருவி ருந்துக் குபசரிப் பார்போல்
தாழை சோறிட வாழை குருத்திடுஞ்
சந்திர சூடர்தென் னாரிய நாடே.
அந்த லார்மொழி தன்னைப் பழித்ததென்
றாடவர் மண்ணில் மூடுங் கரும்பு
துன்னி மீள வளர்ந்து மடந்தையர்
தோளை வென்று சுடர்முத்த மீன்று
பின்னு மாங்கவர் மூரலை வென்று
பிரியுங் காலத்திற் பெண்மையை வெல்லக்
கன்னல் வேளுக்கு வில்லாக ஓங்குங்
கடவுளாரிய நாடெங்கள் நாடே.

மாதம் தவறாமல் மூன்று மழை பொழிகின்ற நாடு. வருடம் மூன்று போகம் விளையும் நாடு. வேதங்களே வேர், மரம், பயன் என மூன்றாகவும் அமைந்த குறும் பலா மரத்தினை உடையநாடு. நித்தியம், நைமித்திகம், காமியம் ஆகிய மூவகைச் சிறப்புகளும் தவறாமல் நிகழ்கின்ற நாடு. பிறப்பு,

வாழ்வு, இறப்பு எனும் மூன்று நிலையிலும் நன்மை விளையும் சிவநாடு. நாதத்துவத்தின் மெய்ப்பொருளாக அரி, அயன், அரன் என மூன்றுருவாக விளங்கும் குற்றால நாதரின் ஆரியநாடே எங்கள் நாடாகும்.

இந்நாட்டில் உள்ளவர்கள் போய்விடக் காண்பதுதன் பாவங்கள். இந்நாட்டில் நெருங்கிக் காண்பது கரும்பும் நெல்லுமாகும். இங்கே தொங்கிக் கொண்டு இருப்பவை மாம்பழக்கொத்துகள் இங்கே சுழன்று கொண்டு இருப்பது தயிர்கடையும் மத்துக்கள். இங்கே வெடிக்கக் காண்பது முல்லையரும்புகள். ஏங்கக் காண்பது மங்கலப் பேரிகைஒலி

இங்கு ஓடிக் கொண்டிருப்பது பூக்களுடன் வரும் புது வெள்ளம். இங்கு ஒடுங்கி இருப்பது யோகியர்களின் உள்ளம். இங்கு வாடக் காண்பது நங்கையரின் இடைகள். இங்கு வருந்தக் காண்பது முத்துக்களை ஈன வருந்தும் சங்குகளே. இங்குப் போடக் காண்பது பூமியில் வித்தாகும். இங்கு புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்துக்கள்தாம் இங்கு தேடிக் கொண்டிருப்பது அற நெறிகளும் புகழுமாகும் இப்படிப்பட்டதே ஆரிய நாடாகும்.

மாத மூன்று மழையுள்ள நாடு
வருடம் மூன்று விளைவுள்ள நாடு
வேத மூன்றும் பலாவுள்ள நாடு
விசேஷ மூன்றுங் குலாவுள்ள நாடு
போத மூன்று நலஞ்செயு நாடு
புவனமூன்றும் வலஞ்செயு நாடு
நாத மூன்றுரு வானகுற் றால
நாத ராரிய நாடெங்கள் நாடே.

நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்
நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்
தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து
சுழலக் காண்பது தீந்தயிர் மத்து
வீங்கக் காண்பது மங்கையர் கொங்கை
வெடிக்கக் காண்பது கொல்லையின் முல்லை
ஏங்கக் காண்பது மங்கல பேரிகை
ஈச ராரிய நாடெங்கள் நாடே.

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகிய ருள்ளம்

வாடக் காண்பது மின்னார் மருங்குல்
வருந்தக் காண்பது சூலுளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறங் கீர்த்தி
திருக்குற் றாலர்தென் னாரிய நாடே.

**10.3.4 நகர்வளம் கூறுதல்**

நாட்டு வளம் கூறிய குறத்தி தொடர்ந்து தன் நகர்வளத்தையும் பேசத் தொடங்கினாள்.

திருமால், அயன், வேதங்கள் தேடியும் காணுதற்கு அரிதானவன். அவனுக்கு உரிய திரிகூட நகரம் உரைக்க உரைக்க தெவிட்டாத இனிமையுடையது. களிறுகள் பிடிகளுடன் கலந்து திரியும் மலைச்சாரலில், வேடனொருவன் வில்லினை ஏந்தி நரியைத் துரத்தியவாறே கயிலைமலை சென்று முத்தி பெற்றான். அத்தகைய திரிகூட மலையின் சிறப்பினை சொல்வேன் கேட்பாயாக

முனிவர்களும் சித்திர நதியின் குலத்தை அறிய மாட்டார்கள். நான் அறிந்த வகையில் சிறிது சொல்வேன் கேட்பாயாக. திரிகூடத் தேனருவித் துறையில் தேவர்களும் அறியா சிவலிங்கம் தோன்றி இருந்தது. அவ்விடம் எங்குள்ளது என அறியமாட்டாமல் அங்கு தவஞ் செய்ய வந்த அயன் பல இடங்களில் தேடி அலைந்தான். அவ்வயனுக்கு அவ்விடத்தை நாங்கள் காட்டிக் கொடுத்த ஆறே தற்போது சிவகங்கை எனவழங்கப் பெறும் ஆறாகும்.

அவ்வாற்றின் கரையில் விளங்கும் செண்பகாடவித் துறையின் பண்பினைக் கூறுவேன் கேட்பாயாக தவம் செய்யும் முனிவர் கூட்டமும் மலைக் குகைகளும் சஞ்சீவி மூலிகைகளும் உடையதாகச் சித்தர்கள், யோகிகள் புருஷர்கள் போன்றோர்கள் இறைவனின் தரிசனத்தை வேண்டிக் காத்துக்கிடக்கும் திருக்கைலாயத்தைப் போன்றது அந்த அடவி. அதனை கடந்து சென்றால் பொங்கு மாங்கடல் எனும் தீர்த்தத் துறையைக் காணலாம்.

இப் பொங்கு மாங்கடல் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய நதிகள் கலக்கும் திரிவேணி சங்கமத்தை போன்றது. அதனைப் பொருந்தியுள்ள இந்திரா நதித்துறை பொன்னும் முத்தும் கொழிக்கும் வளம் உடையதாகும். ஆகாய கங்கை என்னும்படியாக வான வில்லிட்டு வீழ்கின்ற இந்த தீர்த்தத்தில் நீராடினால் அழுக்குகள் மட்டுமின்றி அவர்களின் பாவங்களும் தொலைந்து போகும். மதில் உச்சியில் கயல் மீன்கள்

துள்ளிப் பாயும் பூங்கொத்துகள் இதழ் விரிந்து மணம் வீசும் திரிகூட தலமே எங்கள் நகரமாகும்.

பொங்குகடல் திரிவேணி சங்கமெனச் செழிக்கும்
பொருந்துசித்ர நதித்துறைகள் பொன்னுமுத்துங் கொழிக்கும்
கங்கையெனும் வடவருவி தங்குமிந்த்ர சாபம்
கலந்தாடிற் கழிநீராய்த் தொலைந்தோடும் பாபம்
சங்கவீ தியிற்பரந்து சங்கினங்கள் மேயுந்
தழைத்தமதிற் சிகரமெங்குங் கொழுத்தகயல் பாயும்
கொங்கலர்செண் பகச்சோலைக் குறும்பலா வீசர்
குற்றாலத் திரிகூடத் தலமெங்கள் தலமே

குற்றாலநாதர் நடனம் செய்யும் சித்திரச் சபையில் தேவ முரசம் முழங்கிக்கொண்டிருக்கும் இத்தலம் நான்கு யுகங்கள் சிவபூசை செய்து பேறு பெற்ற தலம். புட்பதந்தன் வழிபாடு செய்து பேறு பெற்ற தலம். அவர்களிடம் பாசம் கொண்ட இறைவன் வீற்றிருக்கும் குற்றாலம் தேவர்களாக உருமாறி தவம் செய்யும் சிறப்பு கொண்ட தலம்

பன்றியொடு வேடன்வலஞ் சென்றதிந்தத் தலமே
பற்றாகப் பரமருறை குற்றாலத் தலமே
வென்றிபெறுந் தேவர்களும் குன்றமாய் மரமாய்
மிருகமதாய்த் தவசிருக்கும் பெரியதல மம்மே

### 10.3.5 கிளை விசேடம் கேட்டல்

வசந்தவல்லி, “குறவஞ்சியே! தீர்த்தம், தலப்பெருமை இதுவரை சொன்னாய் திருக்குற்றாலநாதரின் சிறப்பினை உன் வார்த்தையால் அறிந்தேன் இனி அவரின் கீர்த்தி, உறவினர் விசேடங்களை சொல்லுவாயாக எனக் குறவஞ்சியிடம் கேட்கிறாள். வசந்தவல்லி கேட்டதும் குறத்தி அதனைக் கூறத் தொடங்கினாள்.

அவருடைய குலம் தேவர்களைக் காட்டிலும் பெருமையுடைய குலம். அவருடைய தாய் தந்தையரை நான் அறியேன் அதனை அவருக்குப் பெண் கொடுத்த மலையரசனிடம் கேட்டுத் தெரிந்துகொள். பனிமலையினனாகிய வெற்றிவேந்தனுக்கும் பாண்டியனுக்கும் இவர் மருமகனார். கடலில் பள்ளி கொண்ட திருமாலுக்கு மைத்துனர் இவர். தேவேந்திரனை தேவலோகப் பதவியில் அமர்த்தியவர். இவர் பிள்ளையார், முருகன், சண்டீச நாயனார் திருஞானசம்பந்தர் ஆகியோருக்குத் தந்தையானவர் தேவருக்கும் மன்மதனுக்கு இவர் மாமனார் வானவர்க்கும், மண்ணுலக உயிரினங்களுக்கும், முனிவர்களுக்கும், நாகர்களுக்கும், அயனுக்கும், திருமாலுக்கும் முன்னர் தோன்றியவர்.

குற்றாலர் கிளைவளத்தைக் கூறக்கே ளம்மே
குலம்பார்க்கில் தேவரினும் பெரியகுலம் கண்டாய்
பெற்றதாய் தந்தைதனை யுற்றுநீ கேட்கில்
பெண்கொடுத்த மலையரசன் தனைக்கேட்க வேணும்
உற்றதொரு பனிமலையின் கொற்றவேந் தனுக்கும்
உயர்மதுரை மாறனுக்குஞ் செயமருகர் கண்டாய்
வெற்றி பெறும் பாற்கடலில் புற்றரவி லுறங்கும்
வித்தகர்க்குக் கண்ணான மைத்துனர்கா ணம்மே

**10.3..6 குறியின் தன்மை**

மலை, நாடு, நகர், கிளை விசேடமெல்லாம் கேட்டறிந்த வசந்தவல்லி அவளிடம் குறிகேட்க விரும்பினாள். அதனால், "செம்பவளம் போன்ற வண்ணமுடையவர். பாசங்களில் இருந்து நீங்கியவர். குற்றால நாதர். அவருடைய பெருமைகளை ஆடிப் பாடிவரும் குறவஞ்சியே நீ ஆராய்ந்து சொல்லும் குறியின் தன்மைகளை எனக்குச் சொல்வாயாக" என்றாள். குறத்தியும் தன் குறியின் வித்தாரத்தைப் பேசுவாளானாள்.

அவள் "மிகவும் வித்தாரமானது எனது குறி அம்மே. வஞ்சி, மலையாளம், கொச்சி, கொங்கு, மக்கம், மராடம், துலுக்காணம் ஆகிய நாடுகளில் எல்லாம் என் குறியினைப் பலரும் பாராட்டியுள்ளனர். செஞ்சி, வடகாசி, சீனம், சிங்களம், ஈழம், கொழும்பு, வங்காளம், தஞ்சை, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் குறி சொல்லிப் பேறு பெற்றேன். நான் பெற்ற விருதுகளை நீ காண்பாயாக. நான் பரிசாகப் பெற்ற மோகனமலையைப் பார்ப்பாயாக. செண்பக மாற பாண்டியனுக்குக் நாங்களே குறி சொன்னோம். சொக்கநாதர் மணம் செய்வதற்கு முன்பே மதுரை மீனாட்சி அம்மையானவள் எங்களைக் குறி கேட்டதற்கு மதுரைச் சங்கத்தார்களே காட்சி. அம்மையே" என்றுரைத்தாள்.

நன்னகர்க் குற்றாலந் தன்னில் எங்கும்
நாட்டுமெண் ணூற்றெண்பத் தேழாண்டு தன்னில்
பன்னக மாமுனி போற்றத் தமிழ்ப்
பாண்டிய னார்முதல் சிற்றொடு வேய்ந்த
தென்னாருஞ் சித்ர சபையை எங்கள்
சின்னணஞ் சாத்தேவன் செப்போடு வேய்ந்த
முன்னாளி லேகுறி சொல்லிப் பெற்ற
மோகன மாலைபார் மோகன வல்லி

**10.3.7 குறி ஏற்பாடுகள்**

குறத்தியின் பெருமைகளைக் கேட்ட வசந்தவல்லி அவளிடம் தனக்கு குறி கூற வேண்டி, "காமனையும் உன் வசமாக்கிக் கொள்ளக்

கூடியவளே, உன் குலவித்தை குறி சொல்லுதலே ஆகும் என்றால் எனக்கும் ஒரு குறியினைச் சொல்வாயாக எனக் கேட்டாள். அதற்கு உடன்பட்ட குறத்தி பின்வருமாறு ஏற்பாடுகளைச் செய்யவேண்டினாள்.

அம்மே என்ன குறியானாலும் நான் சொல்வேன் அம்மே! இதற்காக நான் சபை ஏறி என்னை எதிர்த்து நிற்போர்களை வெல்லவும் செய்வேன். மன்னர்களும் பாராட்டும் குறவஞ்சி நான். என் வயிற்றுக்குக் கஞ்சி கொடுத்தால் அதனை என் குடுக்கை நிறையக் குடித்து விடுவேன். அம்மே பின்னர் தின்பதற்கு வெற்றிலையும் வெட்டுப் பாக்கும் கப்பலில் வந்த சீனப் புகையிலையும் தருவாயாக அம்மையே

என்னகுறி யாகிலுநான் சொல்லுவே னம்மே - சதுர்
ஏறுவே னெதிர்த்தபேரை வெல்லுவே னம்மே
மன்னவர்கள் மெச்சுகுற வஞ்சிநா னம்மே - என்றன்
வயிற்றுக்கித் தனைபோதுங் கஞ்சி வாரம்மே
பின்னமின்றிக் கூழெனினுங் கொண்டுவா அம்மே - வந்தால்
பெரிய குடுக்கைமுட்ட மண்டுவே னம்மே
தின்னவிலையும் பிளவும் அள்ளித்தா அம்மே - கப்பல்
சீனச்சரக் குத்துக்கிணி கிள்ளித்தா அம்மே

நான் குறி சொல்வதைக் கேட்பதற்கு வருவாயாக அம்மையே! கன்னி ஒருத்தி பேசும் பேச்சு நல்ல சகுனமாய் இருக்கிறது. மேற்கே வீற்றிடும் ஆந்தை குரலும் நல்லது. தும்மலும் இடப்புறம் செல்லும் காகமும் நல்ல நிமித்தங்கள். திரிகூட மலைதெய்வத்தின் அருள் உறுதியாக உனக்கு உண்டு அம்மையே

பூங்கொடியே பல்லியும் நல்ல நிமித்தம் சொல்லுகின்றது. திரிகூட நாட்டில் கல்வி மானாகவும், சிவப்பு நிறம் உடையவனாகவும், கழுத்தில் கருப்பு மச்சம் உள்ளவனாகவும் மேற்குலத்தினனாகவும் நன்மை பொருந்திய ஊரினனாகவும் உனக்கு நல்லவனாக மாப்பிள்ளை ஒருவன் விரைவில் வாய்ப்பான்.

பல்லியும் பலப லென்னப்
பகரும் திரிகூ டத்தில்
கல்விமான் சிவப்பின் மிக்கான்
கழுத்தின்மேற் கறுப்பு முள்ளான்
நல்லமேற் குலத்தா நிந்த
நன்னகர்த் தலத்தா னாக
வல்லியே உனக்கு நல்ல
மாப்பிள்ளை வருவா னம்மே

தரையினை மெழுகிக்கோலம் இட்டு, பிள்ளையார் பிடித்து வைத்து, நிறைகுடம் எடுத்து வைத்து வாழை, மா, பலா எனும் முக்கனி படைத்து தேங்காய் உடைத்து வைப்பாயாக. அருகம்புல், தண்ணீர், விளக்கு கொண்டுவந்து வைப்பாயாக. பாக்கும், வெற்றிலையும் கொண்டு வருவாயாக. வடை ,அப்பம், அவல் ஆகிய வற்றுடன் சக்கரையும் எள்ளுருண்டையும் பொரியும் கொணர்ந்து வைப்பாயாக. நிறை நாழியில் நெல் அளந்துவைப்பாயாக. குறியின் நிலையை உன் உள்ளத்தில் தெளிந்து கொள்வாயாக. இப்போது நான் குறி சொல்கிறேன் குறும்பலாவில் கோவில் கொண்டிருக்கும் நம் தலைவருடைய திருவுள்ளதால் உனக்கு பெரும்பலனாக விளங்கும் குறியினைச் சொல்லட்டுமா?

தரைமெழுகு கோலமிடு முறைபெறவே கணபதிவை அம்மே - குடம்
தாங்காய்முப் பழம்படைத்தாய் தேங்காயும் உடைத்து வைப்பாய் அம்மே
அறுகுபுனல் விளக்கிடுவாய் அடைக்காய் வெள்ளிலை கொடுவா அம்மே - வடை
அப்பமவல் வர்க்கவகை சர்க்கரையோ டெள்பொரிவை யம்மே
நிறைநாழி யளந்துவைப்பாய் இறையோனைக் கரங்குவிப்பா யம்மே - குறி
நிலவரத்தைத் தேர்ந்துகொள்வாய் குலதெய்வத்தை நேர்ந்துகொள்வா யம்மே
குறிசொல்லவா குறிசொல்லவா பிறைநுதலே குறிசொல்லவா அம்மே - ஐயர்
குறும்பலவர் திருவுளத்தாற் பெரும்பலனாங் குறிசொல்லவா அம்மே..

### 10.3.8 குறி கூறத் தொடங்குதல்

அவள் கூறியவாறு குறி ஏற்பாடுகளைச் செய்தவுடன் குறத்தி குறி கூறத் தொடங்கினாள். குறத்தி முதலில் வசந்தவல்லியின் திருக்கரங்களின் சிறப்பைப் பேசுகின்றாள்.

காளை ஊர்ந்து வரும் திரிகூட நாதர் வாழுகின்ற நகரத்திலே வாழும் மானே! நான் வந்தவேளை மிகவும் நன்று. நீ இருந்த இடமும் மிகவும் நன்று. தாமரை மலர் போன்ற கைமலரை என்னிடம் காட்டுவாயாக.

மோதிரம் அணிந்த விரல்களை உடையதும் வளையல், கடகம், சூடகம் முதலான அணிகலன்களை அணிந்ததுமான உன் கையை எனக்குக் காட்டுவாயாக.



இவ்வுலகில் அறம் வளர்க்கும் கை, தர்மங்களைச் செய்து புகழை வளர்க்கும் கை, நவநதிகளைப் பெருக்கும்கை, மக்களின் பசி ஆற்றும்கை,

தேவ மகளிர் வணங்கிப் போற்றும்கை, குற்றால நாதருக்கு பொருத்தமானதும் இந்த கையே.

அம்மையே உன் கைக் குறியினைப் பார்த்தால் இந்தக் கைப்பிடிக்கும் மணாளர் எட்டுத் திசையும் தமக்குச் சொந்தமாக உடையவர். நீ இவ்வுலகம் முழுமையும் அரசியாகத் திகழப் போகின்றவள். என் குறி எப்போதும் பொய்யாகாது.

மாறாமல் இருநிலத்தில் அறம்வளர்க்குங் கையே
மனையறத்தால் அறம்பெருக்கித் திறம்வளர்க்குங் கையே
வீறாக நவநிதியும் விளையுமிந்தக் கையே
மேன்மேலும் பாலமுதம் அளையுமிந்தக் கையே
ஆறாத சனங்கள்பசி யாற்றுமிந்தக் கையே
அணங்கனையார் வணங்கிநித்தம் போற்றுமிந்தக் கையே
பேறாக நன்னகரங் காக்குமிந்தக் கையே
பிறவாத நெறியார்க்கே றேற்குமிந்தக் கையே.

**10.3.9 தெய்வ வணக்கம்**

கையைக்காட்டி நின்ற வசந்தவல்லிக்குக் குறி கூற குறவஞ்சி தெய்வங்களை வணகி நிற்கின்றாள் அதனைப் பின்வ்ரும் பகுதி உணர்த்துகின்றது.

“குறும்பலா ஈசர் கோயிலில் வீற்றிருக்கும் அம்பல விநாயகனே, திருச்செந்தூர் முருகனே, திருமாலின் மருமகனே, கந்தனே, திரு இலஞ்சியில் கோயில் கொண்ட கடவுளே. உனக்கு என் வணக்கம். புள்ளிமான் ஈன்றெடுத்த பூவையே, வள்ளிநாயகியே எனக்கு உதவாயோ? அய்யனாரப்பனே, மலைமேல் வாழும் தேவ கன்னியர்களே, ஆரியங்காவு சொரிமுத்தய்யனே, மாகாளி அம்மையே, குற்றால நகரின் காவல் தெய்வமே, கால பைரவனே, திருமலை கருப்பனே, முருகனே, வன்னியராயனே, பன்றி மாடனே, எக்கலா தேவியே, துர்க்கையம்மனே, பிடாரியே சிறப்பான குறி சொல்ல உங்களை வேண்டுகிறேன். நீங்கள் என் முன் இருந்து உதவுவீர்களாக.

இவ்வசந்த மோகினியாள் சிந்தையில் நினைப்பது சிவனையோ? தாதுவையோ? ஆடைகளையோ ? வட்டிலோ? செம்போ? உயிரமோ? முத்தோ? கட்டிலோ? மெத்தையோ? தட்டி வராகனோ? புதையலோ? சிமிழில் சேர்த்து வைத்த பொருளோ? வரவோ? செலவோ? இவள் மோகம் கொண்டதன் அடையாளமாய் சேலை நெகிழவும் வளையல்கள் கழலவும் ஏற்பட்ட திகைப்போ? மாலையும் திருமணமும் விரைவில் வாய்ப்பதற்கான அடையாளமோ? என இவற்றுள் இவள் மனதில் வைத்துள்ள குறியை

எனக்கு காட்டி அருள் வீராக" எனத் தெய்வங்களிடம் குறத்தி முறையிட்டு வேண்டினாள்.

மிக்கதோர் குறிக்கா வேண்டினே னுங்களை
வந்துமுன் னிருந்து வசந்தமோ கினிப்பெண்
சிந்தையில் நினைந்தது சீவனோ தாதுவோ
சலவையோ பட்டோ தவசதா னியமோ
கலவையோ புழுகோ களபகஸ் தூரியோ
வட்டிலோ செம்போ வயிரமோ முத்தோ
கட்டிலோ மெத்தையோ கட்டிவ ராகனோ
வைப்பொடு செப்போ வரத்தொடு செலவோ
கைப்படு திரவியம் களவுபோ னதுவோ
மறுவிலாப் பெண்மையில் வருந்திட்டி தோடமோ
திரிகண்ண ரானவர் செய்தகைம் மயக்கமோ
மன்னர்தா மிவள்மேல் மயல்சொல்லி விட்டதோ
கன்னிதா னொருவர்மேற் காமித்த குறியோ
சேலையும் வளையுஞ் சிந்தின தியக்கமோ
மாலையு மணமும் வரப்பெறுங் குறியோ
இத்தனை குறிகளி லிவட்குறி இதுவென
வைத்ததோர் குறியை வகுத்தருள் வீரே.

அவ்வேளையில் வந்த குறத்தியின் அழகும் அவளுடைய நாடு, மலை, நகர், ஈசர் கிளை இடம்பெற்றன. இறுதியாக குறிவிசேடத்தைக் கேட்ட வசந்தவல்லி தனக்குக் குறி கூறச் சொன்னவுடன் குறி ஏற்பாடுகளைச் செய்து குறத்தி குறி கூறத்தொடங்கினாள்.

**10.3.10 குறத்தி கூறுதல்**

வசந்தவல்லியின் கரத்தைப் பிடித்தபின் பல தெய்வங்களிடம் வேண்டிய குறத்தி பின்வருமாறு கூறத் தொடங்கினாள். "அம்மையே பாம்பினை அணியாகக் கொண்ட குற்றால நாதர் நேசம் வந்து பிடிக்கிறது. இந்தக் கருத்து மிகவும் நன்றாக வந்து சொல்லு சொல்லு என்று என் உதட்டிலும் நாவிலும் துடிக்கிறது. குறளிப் பேய் சொல்லச் சொல்லி வாயில் இடிக்கிறது. இனிக் குறி சொல்கிறேன் கேட்பாயாக.

பெண்களின் தலைவியே! நான் குறி சொல்வதைக் கேள். முல்லை மலர் சூடிய கூந்தலை உடையவளே, அழகிய பசுங்கிளியே, நான் சொல்வதைக் கேள். பாம்பணி பூண்ட குற்றாலத்தரசன் எருதூர்தியில் அமர்ந்து பவனிவந்தான். அவரை பந்தடித்துக் கொண்டிருந்த நீ பார்த்ததால் ஏற்பட்ட மயக்கம் போல் குறி தோன்றுகின்றது" என்று குற்றால நாதரால் ஏற்பட்ட துயர் என்றுரைத்தாள்.

சொல்லக்கே ளாய்குறி சொல்லக்கே ளாயம்மே
தோகையர்க் கரசேகுறி சொல்லக் கேளாய்
முல்லைப்பூங் குழலாளே நன்னகரில் வாழ்முத்து
மோகனப் பசுங்கிளியே சொல்லக் கேளாய்
பல்லக்கே றுந்தெருவி லானை நடத்திமணிப்
பணியாபர ணம்பூண்ட பார்த்திபன் வந்தான்
செல்லப்பூங் கோதையேநீ பந்தடிக் கையிலவன்
சேனைகண்ட வெருட்சிபோற் காணுதே யம்மே

அதைக் கேட்ட வசந்தவல்லி அவளிடம் சினங்கொண்டவள் போல் பேசத் தொடங்கினாள் இவ்வாறு குறத்தியும் வசந்தவல்லியும் பேசுதல் நாடகப் பாங்கில் அமையும்.

**வசந்தவல்லி:**

நல்லது குறவஞ்சியே! நீ நாடகக்காரி, நாட்டில் உள்ளவர்க்குத் தக்கவாறு நீ பேசும் வார்த்தைகளை நான் அறியேன் என நினைத்தாயோ? முதலில் ஒன்று விடாமல் குறிசொல்லி வந்த நீ பின்னர் குறியைக் குழப்பிப் போட்டாய். திருவிழாவில் சேனையைக் கண்டால் பெண்களுக்கு மயக்கமும் கிறுகிறுப்பும் வருவதுண்டோ? இன்றுவரை உடலில் குளிரும் காய்ச்சலும் இருப்பதுண்டா? நன்கு ஆராய்ந்து பார்த்து எனக்கு இவை ஏற்பட்டது எப்படி என்று குறி சொல்லடி

**குறத்தி:**

விடையேறி வரும் யோக புருஷன். உலா வரக் கண்டு நீ அவன்மீது மோகங் கொண்டாய். அதைச் சொல்லப் பயந்திருந்தேன். இப்போது உன்னிடம் வெளிப்படையாகச் சொல்வேன். கேட்பாயாக! காகம் அணுகா திரிகூடமலையில் உனக்கு வந்திருப்பது காமக் காய்ச்சல். மோகினியே உன் கிறுகிறுப்பெல்லாம் அவன் மோகத்தால் ஏற்பட்ட கிறுகிறுப்படி

காகமணு காததிரி கூடமலைக் கேயுன்மேற்
காய்ச்சலல்ல காய்ச்சலல்ல காமக்காய்ச் சல்காண்
மோகினியே உன்னுடைய கிறுகிறுப்பை யெல்லாமவன்
மோகக்கிறு கிறுப்படி மோகனக் கள்ளி

**வசந்தவல்லி:**

என்னைக் காமக் கன்னி என்று குறிசொன்ன குறப்பெண்ணே! நீ சொன்ன குறி உண்மை என்றால் மாலையும், பேரும், ஊரும் பற்றிய விவரங்களைச் சொல்லடி.

**குறத்தி:**

பெண்களின் தலைவியே! உன்னைப் போல் அவர் எனக்கு அறிமுகமானவரோ ? ஊரும் பேரும் சொல்வது குறிமுகமோ ? எனில் உனக்காகச் சொல்வேன். பெண்களை அனுபவிப்பதில் அவர் வல்லமை உடையவர் அம்மையே.

உன்னைப்போ லெனக்கவ னறிமுகமோ அம்மே
ஊரும்பேருஞ் சொல்லுவதுங் குறிமுகமோ
பின்னையுந்தா னுனக்காகச் சொல்லுவே னம்மேயவன்
பெண்சேர வல்லவன்காண் பெண்கட் கரசே

**வசந்தவல்லி:**

பெரிய காடு அடர்ந்த மலைநாட்டுக் குறத்தியே, கள்ளியே, மயில் போன்றவளே. உன் உடல் வலிமைத் திமிரோ, வாய்திமிரோ, உன் வித்தைச் செருக்கோ, கொஞ்சமும் மதியாமல் என்முன் என் காதலனைப் பெண் சேர வல்லவன் எனத் தூற்றினாய். என்னை மயக்கும்படி பார்க்காமல் உண்மையைச் சொல்

வண்மையோ வாய்மதமோ வித்தைமத மோவென்முன்
மதியாமற் பெண்சேர வல்லவ னென்றாய்
கண்மயக்கால் மயக்காதே உண்மைசொல் லடிபெருங்
கானமலைக் குறவஞ்சி கள்ளி மயிலி

**குறத்தி :**

பெண்களுக்கு அரசியே பெண் என்றால் திரு என்ற பொருள் உண்டு, பெண்ணுடன் சேர என்றால் கூட என்று சொல்லலாம். உறுதியாக வல்லவன் என்பது நாதன் என்பதும் ஒரேபொருள் ஆகையால் அவன் பெயரைத் திரி கூட நாதன் என்றும் சொல்லலாம்.

பெண்ணரசே பெண்ணென்றால் திரியு மொக்குமொரு
பெண்ணுடன் சேரவென்றால் கூடவு மொக்கும்
திண்ணமாக வல்லவனும் நாதனுமொக் கும்பேதைத்
திரிகூட நாதனென்று செப்பலா மம்மே

### 10.3.11 அணிகலன்கள் அருளுதல்

வசந்த வல்லியிடம் ‘உன் உள்ளத்தில் இடம் பெற்றவர் திரிகூட நாதர்’ என்று குறத்தி சொன்னவுடன் அணிகள் பூண்ட வல்லி நாணம் கொண்டு தலை கவிழ்ந்தாள்.

‘ஈசன் உன்னை அணைவதற்கு விரைவில் வரப் போகிறார். உன் நாணத்தை நாளை நானும் காணத்தான் போகிறேன். பொன்னிறம் கொண்ட கொன்றை மாலை உன் தோழியின் மூலம் உனக்கு வந்தடையும்.

அப்போது உன் வெட்கத்தை கக்கத்தில் இடுக்கிக் கொள்வாயோ ? ’ என்று குறவஞ்சி கேலி பேசினாள்.



அதைக் கேட்டு மகிழ்ந்த வசந்தவல்லி தன் ஆபரணங்கள் அனைத்தையும் குறவஞ்சிக்குப் பூட்டி அவளை மகிழ்வுடன் அனுப்பி வைத்தாள்.

மன்னர்திரி கூடநாத ரென்னும்போ திலேமுகம்
மாணிக்க வசந்தவல்லி நாணிக் கவிழ்ந்தாள்.
நன்னகரில் ஈசருன்னை மேவவரு வாரிந்த
நாணமெல்லாம் நாளைநானுங் காணவே போறேன்
கைந்நொடியிற் பொன்னிதழி மாலைவருங் காணினிக்
கக்கத்தி லிடுக்குவாயோ வெட்கத்தை யம்மே
என்னுமொரு குறவஞ்சி தன்னையழைத் தேயவட்கு
ஈட்டுசரு வாபரணம் பூட்டினாளே

## 10.4 தொகுத்துக் காண்போம்

குறவஞ்சியில் குறத்தி கூறும் மலைவளமும் நாட்டு வளமும் நகர் வளமும் இறைத் தலத்திற்கேற்ற வகையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றையும் உள்ளடக்கிக் குறத்தியின் கூற்றாக மொழியப்படுகின்றன. திரிகூட ராசப்ப கவிராயரின் கவிநயம், கற்பனையை இப்பகுதிகள் உணர்த்துகின்றன. குறத்தி குறி கூறுதல் அந்நாளைய குறி காணும்மரபை உணர்த்துகின்றது. குறத்தியும் வசந்தவல்லியும் பேசும் நாடகப் பாங்கிலான காட்சி கற்பவர்க்கு இனிமை பயப்பதாகும்.

## 10.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

**இரு மதிப்பெண் வினா விடைகள்**

1. மந்தி சிந்தும் கனிகளை வேண்டிக் கெஞ்சுபவர் யார்?

   வானவர்

2. செங்கதிரோன் தேர்க்கால் வழுக்குவது எதனால்?

   தேனருவியின் திரை வானின்வழி ஒழுகுவதால்

3. காகம் அணுகா மலை எது?

   திருக்குற்றால மலை

4. திரிகூட நாதன் என்பதைக் குறவஞ்சி எவ்வாறு கூறினாள்?

   பெண்சேரவல்லான்

5. குறி ஏற்பாட்டிற்கு வைத்த பொருட்களைச் சுட்டுக.

வெற்றிலை, தேங்காய் அருகம்புல் நிறைகுடம் மா, பலா, வாழை



குறுவினா

6. குறி ஏற்பாடுகளை விளக்குக.

குறி ஏற்பாடுகள் என்ற பகுதி

பெருவினா

7. குறவஞ்சியின் அழகை விவரிக்க.
குறவஞ்சியின் அழகு என்ற தலைப்பில் அமைந்த செய்திகள்
8. குறவஞ்சி உரைத்த மலை வளங்கள் குறித்துக் கட்டுரைக்க.

மலை வளம் கேட்டல் பகுதி முழுவதும்

9. குறவஞ்சி உரைத்த நாட்டு வளங்கள் குறித்துக் கட்டுரைக்க.

நாட்டு வளம் கூறுதல் பகுதி முழுவதும்

10. குறவஞ்சி உரைத்த நகர் வளங்கள் குறித்துக் கட்டுரைக்க.

நகர்வளம் கூறுதல் என்ற பகுதி முழுவதும்

11. குறத்தி வசந்தவல்லிக்கு குறி கூறிய பாங்கினைக் கட்டுரைக்க

10.3.8 முதல் 10.3.10 வரையிலான பகுதி

## 10.6 மேலும் படித்தறிய

நிர்மலா மோகன் - குறவஞ்சி இலக்கியம்

நாஞ்சில் நாடன் - சிற்றிலக்கியங்கள்

# கூறு 11 - மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - பிள்ளைத்தமிழ் இலக்கணம்

### 11.1 அறிமுகம் :

சிற்றிலக்கியத்தில் ஒன்று பிள்ளைத்தமிழ். அது பாட்டுடைத் தலைவரைக் குழந்தையாக கருதிப் பாடப்பெறுவது ஆகும். பாட்டுடைத்தலைவரின் பெருமையை எடுத்துக் கூறும் கருவியாக இந்தப் பிள்ளைத்தமிழ் இலக்கியம் அமைகின்றது. பிள்ளைத்தமிழ் இலக்கியத்துள் மிகச் சிறந்ததாக மதிக்கப்பெறுவது குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ஆகும்.

## 11.2 நோக்கம்

இந்தப் பகுதியில் பிள்ளைத்தமிழின் இலக்கணம், பாடுபொருள் தமிழில் பிள்ளைத்தமிழ் வளர்ச்சி ஆகியவற்றை உணரலாம். மேலும் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின் சிறப்பையும் குமரகுருபரரின் கவியாற்றலையும் ஒருங்கு உணரலாம்.

## 11.3 இலக்கணம்

தமிழில் பல்வேறு சிற்றிலக்கியங்கள் எழுந்தாலும் அவற்றுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவது பிள்ளைத்தமிழே. தமிழின் முன்னைய இலக்கியக் கருத்துக்களை உட்கொண்டு அவற்றின் வளர்நிலையாகவும் விருந்திற் பாணி என்பதற்கேற்ப புதிய இலக்கியமாகவும் திகழும் சிறப்புடையது பிள்ளைத்தமிழ்.

### 11.3.1 பிள்ளைத்தமிழ் - பெயர்க்காரணம் - வேறுபெயர்

பிள்ளை என்பது குழந்தையைச் சுட்டும் இளமைப்பெயர். தமிழ் என்பது இலக்கியம், பாட்டு என்னும் பொருளை உணர்த்தியது. பாட்டுடைத்தலைவரைக் குழந்தையாகக் கருதி அவரின் அரும் பெருமைகளைப் பத்துவகையான குழந்தைப் பருவத்தில் அமைத்துப் பாடுவதாகும். இதனைப் பிள்ளைக்கவி என்றும் பிள்ளைப்பாட்டு என்றும் கூறுவர்.

### 11.3.2 அமைப்பு

பிள்ளைத் தமிழ் என்பது குழந்தையின் இளம்பருவச் செயல்கள் பத்தனைத் தேர்ந்து அவற்றைப் பாட்டுடைத் தலைவர் மீது ஏற்றிப் பாடுவதாகும். அரிதாகச் சில பிள்ளைத் தமிழ் நூல்களுள் பத்துப் பருவங்களுக்கும் மேலான பருவங்களும் உண்டு. பொதுவாக எல்லாப் பிள்ளைத் தமிழிலும் அமையும் பருவங்கள் வருமாறு;

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பெண்பாற் பிள்ளைத் தமிழ் எனப் பிள்ளைத் தமிழ் இருவகைப்படும். அவற்றுள் முதல் ஏழு பருவங்கள் பொதுப்பருவங்கள் ஆகும்.

1. காப்புப் பருவம் - மூன்றாம் மாதம் - திருமால் முதலான தெய்வங்களிடம் குழந்தையைக் காக்குமாறு வேண்டுதல்
2. செங்கீரைப் பருவம்- ஐந்தாம் மாதம் - குழந்தை மண்டியிட்டுக் கையும் தலையும் மெல்ல அசைத்தல்
3. தாலாட்டுப்பருவம் - ஏழாம் மாதம் -குழந்தையைத் தொட்டிலில் இட்டு உறங்க வைத்தல்
4. சப்பாணிப் பருவம் - ஒன்பதாம் மாதம் - குழந்தையைக் கைகொட்டி விளையாடச் செய்தல்
5. முத்தப்பருவம் - பதினோராம் மாதம் - குழந்தையிடம் முத்தம் தருமாறு இரந்து கேட்டல்
6. வருகைப்பருவம் - பதின்மூன்றாம் மாதம் - குழந்தையைத் தளர்நடையிட்டு வருமாறு அழைத்தல்
7. அம்புலிப் பருவம் - பதினைந்தாம் மாதம் குழந்தையுடன் விளையாட நிலவை அழைத்தல்

முற்சுட்டிய ஏழு பருவங்களோடு வரும் ஆண்பாற் பிள்ளைத் தமிழ்க்குரிய சிறப்புப் பருவங்கள்

8. சிறுபறை பருவம் - மூன்று வயது - ஆண்குழந்தையைச் சிறுபறை முழக்க அழைத்தல்
9. சிற்றிற் பருவம் - ஐந்து வயது - ஆண் குழந்தையைச் சிற்றிலைச் சிதையேல் என வேண்டுதல்
10. சிறுதேர்ப் பருவம் - ஏழாம் வயது - ஆண் குழந்தையைச் சிறுதேர் உருட்டி விளையாட வைத்தல்

முற்சுட்டிய ஏழு பருவங்களோடு வரும் பெண்பாற்பிள்ளைத்தமிழுக்குரிய சிறப்புப் பருவங்கள்

8. அம்மானைப் பருவம் - மூன்று வயது - பெண் குழந்தையை அம்மானை ஆடுமாறு வேண்டல்
9. நீராடற் பருவம் - ஐந்து வயது - பெண் குழந்தையை சுனை நீராடி மகிழ அழைத்தல்
10. ஊசற் பருவம் - ஏழு வயது - பெண் குழந்தையை ஊஞ்சலாடி மகிழ வேண்டுதல்

பொதுவாகப் பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் என வரையறை செய்யினும் காப்புப் பருவத்தில் பத்திற்கும் மேலான பாடல்கள் அமைவதுண்டு.

### 11.3.3 இலக்கணக் கருத்துக்கள்

பாட்டியல் இலக்கண நூல்கள் பிள்ளைத்தமிழை முதல் இலக்கிய வகையாக வைத்துப் பேசுகின்றன.

பிள்ளைப் பாட்டே தெள்ளிதின் கிளப்பின்
மூன்று முதலா மூவேழ் அளவும்
ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே. (பன்.174
காப்பொடு செங்கீரை தால்சப் பாணி
யாப்புறு முத்தம் வருகஎன் றல்முதல்
அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்
நம்பிய மற்றவை சுற்றத் தளவென
விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர்.'(பன்.179)

என பன்னிரு பாட்டியலும்

'சாற்றரிய காப்புத்தால் செங்கீரை சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை - போற்றரிய
அம்புலியே ஆய்ந்த சிறுபறையே சிற்றிலே
பம்புசிறு தேரோடும் பத்து.' (வெண்.8)

என வெண்பாப் பாட்டியலும்

கடுங்கொலை நீக்கிக் கடவுள் காப்புச்
செங்கீரை தால்சப் பாணி முத்தம்
வாரானை முதல வகுத்திடும் அம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதேர் என்னப்
பெறுமுறை ஆண்பால் பிள்ளைப் பாட்டே

என்று இலக்கண விளக்கமும் பிள்ளைத்தமிழுக்கு இலக்கணம் கூறுகின்றன. இலக்கண விளக்கம் இதன் யாப்பமைதியையும் பெண் பாற் பிள்ளைத்தமிழின் பாடுபொருளையும்

அவற்றுள்,
பின்னைய மூன்றும் பேதையர்க்கு ஆகா;
ஆடும் கழங்குஅம் மானை ஊசல்;
பாடும் கவியால் பகுத்து வகுப்புடன்
அகவல் விருத்தத் தாற்கிளை அளவாம்.

என்ற நூற்பாவில் கூறும். இதனால் பிள்ளைத்தமிழ் ஆசிரிய, சந்த ஆசிரிய விருத்தத்தில் பாடப்பெறவேண்டும் என்று உணரலாம். ஆசிரிய விருத்தம் எனப் பொதுப்படச் சுட்டினாலும் இரட்டை ஆசிரிய விருத்தம் என்னும்படி பன்னிரு சீர், பதினான்கு சீர் கொண்ட ஆசிரிய விருத்தத்தால் பாடுவதே மரபாக அமையும்.

காப்புப் பருவம் பதினொரு பாடல்களை உடையதாகப் பாடுதல் மரபாகும். இக்காப்புப் பருவத்தில் இடம்பெறவேண்டிய கடவுளர் இன்னார் என்பதை

சங்கு சக்கரம் தரித்த லானும்
காவற் கடவுள் ஆக லானும்
பூவினள் புணர்த லானும்முற் கூறி,
கங்கையும் பிறையும் கடுக்கையும் புனைஉமை
பங்கனென்று இறைவனைப் பகர்ந்து, முறையே
முழுதுஉலகு ஈன்ற பழுதுஅறும் இமையப்
பருப்பதச் செல்வியை விருப்புற உரைத்து,
நாமகள் கொழுநன், மாமுகில் ஊர்தி,
ஒற்றைக் கொம்பன், வெற்றி வேலன்,
எழுவர் மங்கையர், இந்திரை, வாணி,
உருத்திரர் அருக்கர் மருத்துவர் வசுக்கள்,
பூப்புனை ஊர்தியில் பொலிவோர், அனைவரும்
காப்ப தாகக் காப்புக் கூறல்.

என்னும் இலக்கண விளக்க நூற்பா உரைக்கும். காக்கும் சிறப்புடைய திருமாலை முதலில் வைத்துப் பின்னர் சிவபெருமான், பார்வதி, பிரமன், இந்திரன், விநாயகன், முருகவேள், சத்த மாதர், இந்திராணி, கலைமகள், உருத்திர் பதினொருவர், பன்னிரு சூரியர், மருத்துவர் இருவர், அட்ட வசுக்கள், பூப் புனைந்த தேரில் வருங் கடவுளர் எனத் தெய்வங்களிடம் குழந்தையைக் காக்க வேண்டுவர். பின்னர் நிரலே ஏனைய பருவச் செயல்கள் வருணித்துப் பாடப்பெறும்.

## 11.4 தமிழில் பிள்ளைத்தமிழ் இலக்கிய வளர்ச்சி

தமிழில் எழுந்த இலக்கிய வகைக் கூறுகள் அனைத்துக்கும் மூலவிதையாகத் தொல்காப்பியம் அமைகின்றது. தொல்காப்பியப் புறத்திணையியல் பாடாண் திணையில் குழவி மருங்கினும் கிழவதாகும் என்ற நூற்பா பிள்ளைத்தமிழின் இலக்கிய வகைக்கருவாக அமைந்துள்ளது. குழந்தைப் பருவமும் பாடப்பெறுதல் உண்டு எனும் தொல்காப்பியக் கருத்தின் வளர்ச்சியே பிள்ளைத்தமிழ் எனலாம்.

திவ்யப் பிரபந்தத்தில் பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகவும் தன்னை யசோதையாகவும் கருதிப் பாடிய பாடல்கள் பிற்காலப் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களுக்கு அடித்தளமிட்டன. பெரியாழ்வார் கண்ணனை நீராட அழைத்தும் காக்கையை மைதீட்டக் கோல் கொண்டு வரவும் புறம்புல்க அழைத்தும் பாடுகின்றார். பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் பருவங்களான தாலாட்டு, செங்கீரை, முத்தம் ஆகிய நிலைகளிலும் பெரியாழ்வார் முன்பே பாடியுள்ளார்.

பாலகனென்று பரிபவம் செய்யேல் பண்டொருநாள்
ஆலினிலை வளர்ந்த சிறுக்கனவன் இவன்

மேலெழப் பாய்ந்து பிடித்துக்கொள்ளும் வெகுளுமேல்
மாலை மதியாதே மாமதீ மகிழ்ந்தோடிவா

என்ற பாடலில் நிலவை விளையாட அழைக்கும் அம்புலிப்பருவ கூற்றையும்

கானார் நறுந்துழாய் கைசெய்த கண்ணியும்
வானார் செழுஞ்சோலைக் கற்பகத்தின் வாசிகையும்
தேனார் மலர்மேல் திருமங்கை போத்தந்தாள்
கோனே அழேல் அழேல் தாலேலோ
குடந்தைக் கிடந்தானே. தாலேலோ

என்ற பாடலில் தாலாட்டுப்பருவ நிகழ்வையும்

கோளரியின் உருவங்கொண்டு அவுணனுடலம்
குருதி குழம்பியெழக் கூருகிரால் குடைவாய்.
மீள அவன்மகனை மெய்ம்மைகொளக் கருதி
மேலையமரர் பதிமிக்கு வெகுண்டுவர
காள நன்மேகமவை கல்லொடு கால்பொழியக்
கருதி வரைக்குடையாக் காலிகள் காப்பவனே.
ஆள எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை
ஆயர்கள் போரேறே ஆடுக ஆடுகவே.

என்னும் பாடலில் செங்கீரைப் பருவச் செயலும்

பொன்னரை நாணொடு மாணிக்கக் கிண்கிணி
தன்னரையாடத் தனிச்சுட்டி தாழ்ந்தாட
என்னரை மேல்நின்றிழிந்து உங்களாயர்தம்
மன்னரை மேல்கொட்டாய் சப்பாணி மாயவனே.
கொட்டாய்சப்பாணி.

என்னும் பாடலில் சப்பாணிப் பருவச் செயலும்

திரைநீர்ச் சந்திர மண்டலம்போல் செங்கண்மால் கேசவன் தன்
திருநீர் முகத்துத் துலங்குசுட்டி திகழ்ந்தெங்கும் புடைபெயர
பெருநீர்த் திரையெழு கங்கையிலும் பெரியதோர் தீர்த்தபலம்
தருநீர் சிறுச்சண்ணம் துள்ளம்சோரத் தளர்நடை நடவானோ

என்னும் பாடலில் வருகைப்பருவச் செயலும் கூறக் காணலாம். இவ்வகையில் பெரியாழ்வாரைப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முன்னோடி எனலாம். இதன் வளர்ச்சியாக ஒட்டக்கூத்தர் பிள்ளைத்தமிழ் என்னும் முழுமையான இலக்கிய வகையில் குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழைப் பாடினார்.

அதனைத் தொடர்ந்து குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், பகழிக் கூத்தர் பாடிய திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ், சிவஞான முனிவர் பாடிய கலைசை செங்கழுநீர் பிள்ளைத்தமிழ் எனப் பிள்ளைத் தமிழ் நூல்கள் பல தோன்றியுள்ளன.

## 11.5 மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

-

தமிழில் எழுந்த பிள்ளைத்தமிழ் நூல்களில் மிகச் சிறந்த நூலாகப் போற்றப்படுவது குமர குருபரர் பாடிய மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ஆகும்.

### 11.5.1 ஆசிரியர் வரலாறு

குமர குருபரர் நெல்லை மாவட்டம் திருவைகுண்டத்தில் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமி அம்மைக்கும் மகவாகப் பிறந்தார். ஐந்து வயது வரை பேசாதிருந்த காரணத்தால் திருச்செந்தூர்க் கோயில் சென்று வழிபாடு நிகழ்த்தியபின் பேசும் ஆற்றல் கைவரப்பெற்றார். மேலும் அவ்விறைவனைப் போற்றிக் கந்தர் கலிவெண்பா பாடினார்.

தனக்கு உரிய ஞானாசிரியரைத் தேடி அலைந்து தருமபுரம் மாசிலாமணி தேசிகரைக் குருவாகக் கொண்டார். அவர் மீது பண்டார மும்மணிக்கோவை பாடினார். காசிக்குச் சென்றபோது சகல கலா வல்லி மாலையைப் பாடிக் கலைமகள் அருளால் இந்துத்தானி மொழியாற்றலைப் பெற்றார் என்பர். காசிக்கலம்பகம், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், சிதம்பரச் செய்யுட் கோவை போன்ற பலபிரபந்தங்களைப் பாடியதால் இவரைப் பிரபந்த வேந்தர் என்பர்.

இவர் பாடிய ஏனைய நூல்கள் வருமாறு கயிலைக் கலம்பகம், மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக்கோவை, சிவகாமி இரட்டை மணிமாலை ஆகியனவாம்.

### 11.5.2 மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அமைப்பும் சிறப்பும்

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் திருமலை நாயக்கர் வேண்ட மதுரை அங்கயற்கண்ணியம்மை மீது இந்தப் பிரபந்தத்தைக் குமரகுருபரர் பாடினார் என்பர். பெண்பாற் பிள்ளைத்தமிழான இந்நூல் பொதுப்பருவங்கள் ஏழினோடு அம்மானை, நீராடல், ஊசல் ஆகிய சிறப்புப் பருவங்களைப் பெற்று விளங்குகின்றது. நூலின் தொடக்கத்தில் கணபதி வழிபாட்டுப் பாடல் ஒன்று நூற்காப்பாக அமைந்துள்ளது. இந்நூலின் சிறப்பை

உணர்ந்துகொள்ளவும் பிள்ளைத்தமிழின் அமைப்பை அறிந்துகொள்ளவும் வாய்ப்பாகப் பருவந்தோறும் பாடலொன்றை நிரலே காணலாம்.



**11.5.2.1 காப்புப் பருவம்**

பன்னிரு பாட்டியல் கூறும் 16 தெய்வங்களுள் 11 தெய்வங்களை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் குறிப்பிட்டுக் குழந்தை மீனாட்சியம்மையைக் காக்குமாறு குறிப்பிடுகின்றது. அத் தெய்வங்களாவன: 1) திருமால் 2) சிவபெருமான் 3) சித்திவிநாயகர் 4) முருகப்பெருமான் 5) நான்முகன் 6) தேவேந்திரன் 7) திருமகள் 8) கலைமகள் 9) துர்க்கை 10) சப்தமாதர் 11) முப்பத்து மூவர்.

பிள்ளைத்தமிழ் நூல் தொடங்கும்போது காப்புப் பருவத்தில் தொடங்குவது போலக் காப்புப் பருவத்தையும் திருமாலிடம் வேண்டுவதாகப் பாடுதல் மரபு.

திருமாலின் மார்பில் துளசிமாலை காடாகக் காட்சிதரும். அதிலிருந்து பொழியும் தேன் வெள்ளமென வயல்களில் பாயும். அந்தச் சேற்றில் முளைத்த செந்தாமரையில் திருமகள் விளங்கினாள். அவளை அணைத்தபடியும் படுக்கையான ஆதிசேடனைத் தோளில் சுமந்ததால் அழுத்தப் பழமையான வேதங்கள் வாழ்த்தியபடி பின் செல்கின்றன. இவ்வாறு திருமழிசை ஆழ்வாரின் பின்சென்ற பசுமை நிறமுடைய கார்மேக வண்ணத் திருமாலே!

இறைவனாகிய சிவபெருமானோடு அரசு வீற்றிருக்கும் மீன் போன்ற கண்களை உடைய அமுதம் போன்ற மங்கையருக்கு அரசியாகிய மீனாட்சி அம்மையைக் காத்தருள்வாயாக. இவ்வாறு வேண்டிய தன்மையைப் பின்வரும்

மணிகொண்ட நெடுநேமி வலயம் சுமந்துஆற்று
மாசுணச் சூட்டுமோட்டு
மால்களிறு பிடர்வைத்த வளர்ஒளி விமானத்து
வால்உளை மடங்கல்தாங்கும்
அணிகொண்ட பீடிகையின் அம்பொன்முடி முடிவைத்துஎம்
ஐயனொடு வீற்றிருந்த
அங்கயல் கண்அமுதை மங்கையர்க்கு அரசியைஎம்
அம்மனையை இனிதுகாக்க
கணிகொண்ட தண்துழாய்க் காடுஅலைத்து ஓடுதேம்கலுழிபாய்ந்து அளறுசெய்யக் கழனிபடு நடவையில் கமலத்து அணங்குஅரசொர்
கைஅணை முகந்துசெல்லப்
பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப்

பணைத்தோள் எருத்துஅலைப்பப் பழமறைகள்
முறைஇடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசும்கொண்டலே

என்னும் பாடலில் அறியலாம்.

இப்பாடலில் கணிக்கண்ணனின் பொருட்டுத் திருமழிசையாழ்வார் பாடிய தமிழ்ப் பாடலொன்றிற்காகத் திருமால் பின் சென்றதை வேதங்கள் முறையிடத் திருமால் தமிழின் பின்சென்றமையைக் குறித்தார். தொடர்ந்து ஏனைய தெய்வங்களிடம் காக்குமாறு முறையிட்ட பத்துப் பாடல்களுடன் காப்புப் பருவம் பதினோரு பாடல்களில் அமைகின்றது.

**11.5.2.2 செங்கீரைப்பருவம்**

பிள்ளைத் தமிழின் இரண்டாம் பருவம் செங்கீரையாகும். குழந்தை பிறந்து ஐந்தாம் மாதத்தில் தலையை நிமிர்த்தி அசைந்தாடுவதைச் சிறப்பித்துப் பாடுவதாகும். இந்தப் பருவத்தில் குழந்தை மீனாட்சியின் மழலைப் பருவ நிகழ்வுகள் சுவையுற வருணிக்கப்படுகின்றன.

மீனாட்சி அம்மையே! உன்னை நீராட்டியும் நறுமணப்பொடி மேனியெங்கும் பூசியும் உச்சிக் கொண்டை முடித்தும் மாலை அணிவித்தும் சூட்டித் தலையணிகளைச் சூட்டுவர். காதில் குதம்பை, தமனியம் அணிவிப்பர். பாண்டிமாதேவி உனக்குத் தனி திருமுலைப் பாலை ஊட்டுவாள். நின் திருவாயிலிருந்து வாயமுதமும் உண்ட பாலும் வடிவதால் நீ அணிந்த பட்டாடை நனையும். அன்னையால் சீராட்டிப் பாராட்டப்பெறும் பசுங்கிளியே! கையூன்றி மண்டியிட்டுத் தலை தூக்கி ஆடும் செங்கீரை ஆட்டத்தை ஆடி அருள்வாயாக. தென்னன் மலையத்துவச பாண்டியனுக்கும், வடதிசை இமவானுக்கும் ஒப்பற்ற ஒரே மகளாக வாழ்பவளே செங்கீரை ஆடி அருள்வாய். இப்பொருளமைந்த பாடல் வருமாறு;

நீராட்டி யாட்டு பொற் சுண்ணந் திமிர்ந்தள்ளி
நெற்றியில் தொட்டிட்ட வெண்
ணீற்றினொடு புண்டரக் கீற்றுக்கு மேற்றிடவொர்
நித்திலச் சுட்டி சாத்தித்
தாராட்டு சூழியக் கொண்டையு முடித்துத்
தலைப்பணி திருத்தி முத்தின்
றண்ணொளி ததும்புங் குதம்பையொடு காதுக்கொர்
தமனியக் கொப்பு மிட்டுப்
பாராட்டு பாண்டிப் பெருந்தேவி திருமுலைப்
பாலமுத மூட்டி யொருநின்
பானாறு குமுதங் கனிந்தூறு தேறல்தன்
பட்டாடை மடிந னைப்பச்

சீராட்டி வைத்து முத்தாடும் பசுங்கிள்ளை
செங்கீரை யாடி யருளே
தென்னற்குமஅம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடி யருளே

### 11.5.2.3 தாலப் பருவம்

பிள்ளைத்தமிழில் மூன்றாவதாக அமைந்த பருவம் தாலாட்டு ஆகும். தால் என்பது நாவாகும். பாட்டுடைத் தலைவரைத் தொட்டிலில் இட்டு நாவை ஆட்டிப் பாடிப் பாராட்டுவது. இப்பருவத்தின் பொருளாகும்.

தென்னவன் எனும் பாண்டிய குலம் வளர்க்கும் தமிழுடன் பொதிகை மலையில் பிறந்த தென்றல் இனிதே வீசுகின்றது. தீப்போலும் சிவந்த நிறத்தில் தளிருடைய மாமர நிழலில் சிவந்த கண்களையும் பெரிய வாயினையும் கொண்டதாகவும் அண்மையில் கன்றை ஈன்றதாகவும் திகழும் எருமை உறங்கும். பசும்புல்லை மேயத் தெரியாத இளங்கன்றை நினைத்தவுடன் எருமையின் மடிசுரந்து தீம்பால் பெருகியது. இதனால் பால் வண்ணத்தில் பொய்கை விளங்குகின்றது.

அலையுடைய அப்பொய்கையில் பொன்னிறம் தோன்றப் பூத்த தாமரையின் மகரந்தப் பொடிகளில் நிலவு ஒளிக்கற்றைகளைப் பொழிகின்றது. இதனால் தாமரை மீது அன்னம் வீற்றிருக்கும் காட்சி திருப்பாற்கடலில் தோன்றிய இலக்குமி போலத் தோன்றும். இவ்வாறு பொன்னிறத்துடன் உச்சிக்கொண்டையை உடைய அன்னப் பறவைகள் வலம் வரும் மதுரைக்கு அரசியே! தாலோ தாலேலோ! அருளைக் கருவாகக் கொண்ட அங்கயற்கண்ணியே தாலோ தாலேலோ எனக் குமரகுருபரர் தாலாட்டிப் பாராட்டுகின்றார்.

தென்னன் தமிழின் உடன்பிறந்த சிறுகால்
அரும்பத் தீஅரும்பும்
தேமா நிழற்கண் துஞ்சும்இளஞ் செங்கண்
கயவாய்ப் புனிற்றுஎருமை
இன்னம் பசும்புல் கறிக்கல்லா இளங்கன்று
உள்ளி மடித்தலம்நின்று
இழிபால்அருவி உவட்டுஎறிய எறியும்
திரைத்தீம் புனல்பொய்கைப்
பொன்னம் கமலப் பசுந்தோட்டுப் பொன்தாது
ஆடிக் கற்றைநிலாப்
பொழியும் தரங்கம் பொறைஉயிர்த்த பொன்போல்
தொடுதோல் அடிப்பொலன்சூட்டு

குறிப்புகள்

அன்னம் பொலியும் தமிழ்மதுரைக்கு அரசே
தாலோ தாலேலோ
அருள்சூல் கொண்ட அங்கயற்கண் அமுதே
தாலோ தாலேலோ

இப்பாட்டில் மதுரையின் வளத்தைப் பேசுவதோடு தென்றலைத் தமிழோடு உறவாக்கிப் பாடுகின்றார்.

### 11.5.2.4 சப்பாணிப் பருவம்

பிள்ளைத்தமிழின் நான்காம்பருவம் சப்பாணிப்பருவம். குழந்தையைக் கைகளைக் கொட்டி விளையாடுமாறு வேண்டுதல் இப்பருவத்தின் பொருண்மையாகும். "சப்பாணி கொட்டி அருளே என்றோ, கொட்டுக சப்பாணி என்றோ இப்பருவப் பாடல்கள் அமையும். சக - பாணி என்பதே சப்பாணி என ஆயிற்று. பாணி என்றால் கரம். இருகைகளைச் சேர்த்தல் என்பது இதன் பொருளாகும். இப்பருவத்தில் குமரகுருபரர் பாடும் பாடலொன்றில் குழந்தை முருகனைச் சீராட்டும் செய்தியை அமைத்துப் பாடுகின்றார்.

மீன்போலும் தோற்றமுடைய ஒளியுடய கண்களை திறந்து அமுதமென அருளைப் பரப்பிடுவாய். கடலைத் தீயூட்டிய தெய்வக்குழந்தை முருகன். அம்முருகக் குழந்தையை உன் கணைக்காலில் கிடத்திக் குளிப்பாட்டி, உச்சிமோந்து, தலைக்கு எண்ணெய் தடவித் திருவெண்ணீறு பூசி, கொங்கைப் பாலைச் சங்கில் இட்டு குழந்தையின் வாயில் புகட்டுவாய், குழந்தைக்கு மேனியில் மணப்பொடிகளைத் தூவிப் பூசுவாய். மடியிலும் பின் தொட்டியிலும் தூங்கவைப்பாய். இவ்வாறு முருகவேளைத் தாலாட்டித் தொட்டிலாட்டும் திருக்கரத்தால் மீனாட்சி அம்மையே சப்பாணி கொட்டுக.

இவ்வாறு தாய்மை பொங்கத் திகழும் அம்மையின் செயலை வருணிக்கும் சப்பாணிப் பருவப் பாடல் வருமாறு

சேல்ஆட்டு வாள்கண் கருங்கடல் கடைமடை
திறந்துஅமுதம் ஊற்றுகருணைத்
தெண்திரை கொழித்துஎறிய வெண்திரை நெருப்பூட்டு
தெய்வக் குழந்தையைச்செங்
கோல்ஆட்டு நின்சிறு கணைக்கால் கிடத்திக்
குளிப்பாட்டி உச்சிமுச்சிக்
குஞ்சிக்கு நெய்போற்றி வெண்காப்பும் இட்டுவளர்
கொங்கையில் சங்குவார்க்கும்
பாலாட்டி வாய்இதழ் நெரித்துஊட்டி உடலில்
பசுஞ்சுண்ண மும்திமிர்ந்து
பைம்பொன் குறங்கினில் கண்வளர்த் திச்சிறு

பருஉமணித் தொட்டில்ஏற்றித்
தாலாட்டி ஆட்டுகைத் தாமரை முகிழ்த்துஅம்மை
சப்பாணி கொட்டிஅருளே
தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டிஅருளே

### 11.5.2.5. முத்தப்பருவம்

பிள்ளைத் தமிழாகிய சிற்றிலக்கியத்தில் ஐந்தாம் பருவமாக அமைவது முத்தப்பருவம். குழந்தையிடம் தாய் தனக்கு முத்தம் வேண்டும்வண்ணம் பாடப்பெறுதல் இதன்பொருளாகும். இப்பருவத்தின் பாடலொன்றில் முத்துக்கள் பிறக்கும் இடங்களைச் சுட்டும் குமரகுருபரர் அவையெல்லாம் அன்னையின் கனிவாய் முத்தத்திற்கு ஈடாகா என்று நயம்பட மொழிகின்றார்.

வண்டுகள் மொய்க்கும் மாலையுடைய உன் கூந்தலுக்குத் மேகம் தோற்றுவிடும், உன் மழலையின் இனிமைக்குக் கரும்பு தோற்றுவிடும், சிவபெருமானின் தலை பொருந்தியதால் இளம்பிறைக்கோடு உழுத திருவடி மலர்களுக்குத் தாமரைமலர்கள் தோற்றுவிடும், கழுத்து அழகிற்குச் சங்கும் தோற்றுவிடும். தோளளின் எழிலுக்கு மூங்கில் தோற்றுவிடும். நகிலின் எழிலுக்கு யானைத் தந்தங்கள் தோற்றுவிடும்.

உன் எழிலுக்குத் தோற்ற மேகம், கரும்பு, தாமரை சங்கு, பாக்கு, மூங்கில், யானைத் தந்தங்கள் ஆகியன முத்தை ஈனுவன. எனினும் அவை உன் திருவாய் முத்தத்திற்கு ஈடாகாதனவாகும்.

இம்மைக்கு மட்டுமின்றி மறுமைக்கும் இன்பம் தருபவளே முத்தம் தருவாயாக. முக்கட் சுடருக்கு விருந்துபோன்ற முலையுடையாய் முத்தம் தருகவே. என்று வேண்டுகிறார் குமரகுருபரர். இதனை,

கொழுதி மதர்வண்டு உழக்குகுழற்
கோதைக்கு உடைந்த கொண்டலும்நின்
குதலைக் கிளிமென் மொழிக்கு உடைந்த
குறுங்கட் கரும்புங் கூன்பிறைக்கோடு
உழுத பொலன் சீறடிக்கு உடைந்த
செந்தா மரையும் பசுங்கழுத்துக்கு
உடைந்த கமஞ்சூற் சங்கும் ஒழுகு
ஒளிய கமுகும் அழகு தொய்யில்
”எழுது தடந்தோட்கு உடைந்த தடம்
பணையும் பணைமென் முலைக்கு உடைந்த
இணைமா மருப்பும் தரும் முத்துன்
திருமுத்து ஒவ்வா இகபரங்கள்

முழுதும் தருவாய் நின் கனிவாய்

முத்தந் தருக முத்தமே

முக்கண் சுடர்க்கு விருந்திடுமும் முலையாய்

முத்தம் தருகவே" (பா - 44)

என்னும் பாடலடிகள் விளக்கும்.

### 11.5.2.6. வருகைப் பருவம்

பிள்ளைத்தமிழில் ஆறாம் பருவம் வருகைப் பருவம் ஆகும். பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவியாகிய குழந்தையைத் தன்னிடம் வருமாறு தாய் முதலியோர் அழைப்பதாகப் பாடும் பருவம் ஆகும். இப்பருவத்துப் பாடலொன்றில் தமிழையும் வேதத்தையும் ஒப்பவைத்துப் பாடி அடியவர் உள்ளத்தில் அன்னை வீற்றிருப்பதையும் பாடுகின்றார்.

தொடுக்கப்படும் தெய்வத் தன்மை பொருந்திய பழம் பாமாலை ஆகிய வேதத்தின் பொருள் ஆனவளே! மணம்மிக்க இனிய துறைகள் உள்ள தமிழின் சுவை ஆனவளே! ஆணவம் என்னும் கிழங்கைத் தோண்டி எறிந்த அடியவரின் மனம் என்னும் கோயிலில் ஏற்றப்படும் விளக்கே! வளரும் சிகரங்களைப் பெற்றுள்ள இமயமலையில் விளையாடும் இள மென் பிடி போன்றவளே!

கடலை ஆடையாகக் கொண்ட பூமிக்கு அப்பாற்பட்டு விளங்கும் சிவபெருமான் தன் உள்ளத்தில் அழகு பொங்க எழுதிப் பார்க்கும் உயிர் ஓவியமே! வண்டுகள் மொய்க்கும் மலர்கள் சூடிய கூந்தல் காட்டுக்குரிய இளவஞ்சிக் கொடியே வருக வருகவே. மலையத்துவசன் பெற்ற பெருவாழ்வே வருக வருகவே என்று பாராட்டி வருமாறு கூறுகின்றார்.

தொடுக்குங் கடவுட் பழம்பாடல்

தொடையின் பயனே நறைபழுத்த

துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்

சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து

எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்

கேற்றும் விளக்கே வளர்சிமய

இமயப் பொருப்பில் விளையாடும்

இளமென் பிடியே எறிதரங்கம்

உடுக்கும் புவனங் கடந்துநின்ற

ஒருவன் திருவுள் ளத்தில் அழகு

ஒழுக வெழுதிப் பார்த்திருக்கும்

உயிரோ வியமே மதுகரம்வாய்

மடுக்குங் குழற்கா டேந்துமிள

வஞ்சிக்கொடியே வருகவே

மலையத் துவசன் பெற்றபெரு

வாழ்வே வருக வருகவே.

இப்பாடலில் காணும் பக்திச்சிறப்பும் இறை நிலையும் கண்டு மகிழ்ந்த அன்னை மீனாட்சி தானே சிறுமி வடிவில் தோன்றித் தளர் நடையிட்டு வந்து குமரகுருபரரின் கழுத்தில் முத்து மாலையிட்டு மறைந்தனள் என்பர்.

### 11.5.2.7. அம்புலிப் பருவம்;

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் ஏழாம் பருவம் அம்புலிப் பருவம். இது சாம, தான, பேத, தண்டம் என்ற முறைகளில் அம்புலியை குழந்தையோடு விளையாட அழைப்பதைப் பொருளாக உடையது. அம்புலிப் பருவத்தின் தனித்த சிறப்புடைய தன்மையால் அப்பருவத்தின் பாடல்கள் அடுத்த இயலில் விரிவாகப் பேசப்படுகின்றது. இப்பருவத்தின் பாடல்கள் யாவும் ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன் அம்புலீ ஆடவாவே என்று நிலவை வேண்டுவதாக முடியும்.

### 11.5.2.8. அம்மானைப் பருவம்

பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கு உரிய சிறப்புப் பருவங்களுள் முதலாவதாகவும் பிள்ளைத் தமிழின் எட்டாம் பருவமாகவும் அம்மானைப் பருவம் விளங்கும். அம்மானை என்பது பெண்கள் விளையாடும் ஒருவகை விளையாட்டாகும் இது சந்த ஆசிரிய விருத்தத்தில் பாடப்பெறும். இந்த அம்மானைப் பருவத்தில் அன்னையின் சர்வ வல்லமையான பேராற்றலைப் பொருளாக்கிக் குமரகுருபரர் பாடுகின்றார்.

தேனூறும் தாமரை போன்ற சிவந்த கைகளில் இருக்கும் போது அம்மானைக் காய்கள் சிவந்த நிறத்துடனும் அமுதம் சுரக்கும் இடக்கண் பார்வையால் அக்காய்கள் கருப்பு நிறத்துடனும் நடுவிலுள்ள திருமுகத்து நிலவின் முத்துப்பல் ஒளியில் வெண்மை நிறத்துடனும் விளங்குகின்றன. இவ்வாறு அம்மானை ஆடும் அம்மானைக் காய்கள் சாத்விகம், இராசதம், தாமதம் எனும் மூன்று குணங்களைக் காட்டுவதுபோல விளங்கும். அம்மை அப்பராக நீவிர் இருவரும் துவாத சாந்தம் என்னும் அண்டப் பெருவெளியில் எழுந்தருளும் போது யோக நித்திரையிலுள்ள அடியார்கள் மனம் உருக வணங்கச் செய்பவளே அம்மானை ஆடுகவே.

கள் ஊறு கஞ்சக் கரத்தூறு சேயொளி

கலப்பச் சிவப்பூறியும்

கருணைப் பெருக்கூற அமுதூறு பார்வைக்

கடைக்கண் கறுப்பூறியும்

நள் ஊறு மறுவூற் அகற்றுமுக மதியில்வெண்

ணகையூறு நிலவூறியும்

நற்றரள வம்மனையொர் சிற்குணத் தினைமூன்று
நற்குணங் கதுவல் காட்ட
உள் ஊறு களிதுளும் பக்குரவர் இருவீரும்
உற்றிடு துவாத சாந்தத்
தொருபெரு வெளிக்கே விழித்துறங் குந்தொண்டர்
உழுவலன்பு என்புருக நெக்கு
அள் ஊற வுள்ளே கசிந்தூறு பைந்தேறல்
அம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண்
அம்மானை யாடியருளே.

என்ற பாடலில் அம்மானைக் காய்களின் நிற மாற்றத்தைத் தத்துவ சார்புடன் வருணித்துப் பாடுகின்றார்.

### 11.5.2.9. நீராடல் பருவம்

பெண்பால் பிள்ளைத் தமிழின் ஒன்பதாம் பருவம் நீராடற்பருவம் பாட்டுடைத் தலைவி தன் தோழியர் சூழ மகிழ்ந்து சுனை, அருவி, ஆற்றில் நீராடி மகிழ்வதைப் பாடுவது.

இசை போலும் கிளி மொழி பேசும் பாவையே, உன் மேனியில் அழகிய பச்சை நிறம் விரிவதால் அழகும் குளிர்ச்சியும் உடைய சிவந்த பவளக்கொடியும் பச்சை நிறமாக மாறும். வெண்ணிற முத்துக்களும் மரகதமணி போலப் பசிய நிறமாகத் தெரியும். குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறையில் தங்கியுள்ள வெண்ணிற அன்னப் பறவைகள் மழை மேகம் கண்ட மகிழ்ச்சியில் தோகை விரித்தாடும் மயில் போலாகும். இதனால் எல்லாப் பொருளும் உன் அழகிய வடிவமே என வேதங்கள் கூறும் மெய்ப்பொருள் புலனாகும்.

மகளிர் பூசிய செஞ்சாந்தும் கரிய கத்தூரிக் குழம்பும் வெண்ணிறக் கற்பூரம் ஒருசேரக் கலந்து ஓடுவது கங்கை, யமுனை, சரஸ்வதி என்னும் மூன்று நதிகளும் கலந்து ஓடுவது போல் தோன்றும். நதிகள் சேர்ந்து விளையாடுவது போலத் தோன்றும் வையை புதுப்புனலில் நீராடி அருள்வாய் என்கிறார் குமரகுருபரர். இதனை

பண்ணாறு கிளிமொழிப் பாவைநின் றிருமேனி
பாசொளி விரிப்ப வந்தண்
பவளக் கொடிக்காமர் பச்சிளங் கொடியதாய்ப்
பருமுத்த மரகதமாய்த்
தண்ணாறு மல்லற் றுறைச்சிறை யனங்களி
தழைக்குங் கலாமஞ்ஞைபாய்ச்
சகலமுந் நின்றிருச் சொருபமென் றோலிடுஞ்

சதுமறைப் பொருள் வெளியிடக்
கண்ணாறு குழலியர் குடக்கொங்கை பொங்குசெங்
களபமுங் கத்தூரியும்
கர்ப்புரமு மொக்கக் கரைத்தோடி வாணியுங்
காளிந்தி யுங்கங்கையாம்
விண்ணாறு மளவளாய் விளையாடு வையைபுது
வெள்ளநீ ராடியருளே
விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி
வெள்ளநீ ராடியருளே

என்பதால் அறியலாம்.

**11.5.2.10. ஊசல் பருவம்**

பெண்பாற் பிள்ளைத்தமிழின் இறுதிப் பருவம் ஊசல் பருவம் ஆகும். ஆசிரியச் சந்த விருத்தத்தில் பாட்டுடைத் தலைவியை ஊஞ்சலாடி அருள்க என வேண்டுதல் இப்பருவத்தின் பொருளாகும்.

அம்மையே! யாப்பு, தாளம், சந்தம் எனும் பாடல் இலக்கணம் பொருந்த நீ ஊஞ்சல் ஆட மதுரை சொக்கநாதர் தம் திருமுடியை அசைக்கின்றார். அவர் சடைமுடியில் தாங்கிய தலைவன் ஆதிசேடனும் அசைகின்றான். உலகத்தைத் தாங்கிய அவனும் தலை அசைப்பதால் அண்ட சராசரமும் அசைந்தாடும் கார்மேகம் போன்ற கூந்தலுக்கு மணம் மிக்க மலர்கள் சூடிய மகளிர் அந்தக் கூந்தலுக்கு ஊட்டும் அகிற்புகை வான் மண்டலத்துக் கதிரவனையே மறைக்கும்.

இவ்வாறு வளம்பொழியும் மதுரை மாநகருக்கு இளம்கிள்ளையே! பொன்னூஞ்சல் ஆடி அருள்க. என்கிறார் குமரகுருபரர் இதனை,

சேர்க்குஞ் சுவைப்பாட லமிழ்தொழுக வொழுகுபொற்
றிருவூசல் பாடியாடச்
சிவபிரான் றிருமுடி யசைப்பமுடி மேற்பொங்கு
செங்கணா வரசகிலம்வைத்
தார்க்கும் பணாடவி யசைப்பச் சராசரமு
மசைகின்ற தம்மனையசைந்
தாடலா லண்டமு மகண்டபகி ரண்டமு
மசைந்தாடு கின்ற தேய்ப்பக்
கார்கொந் தளக்கோதை மடவியர் குழற்கூட்டு
கமழ்நறும் புகைவிண்மிசைக்
கைபரந் தெழுவதுரு மாறிரவி மண்டலங்
கைக்கொள விருப்படலவான்
போர்க்கின்ற தொக்குமது ராபுரி மடக்கிள்ளை

பொன்னூச லாடியருளே

புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி

பொன்னூச லாடியருளே. (5)

எனும் பாடலடிகள் உணர்த்தும்.

இவ்வாறு குமரகுருபரர் பிள்ளைத் தமிழ் இலக்கணம் முழுதும் பொருந்தப் பாடிய தன்மையை மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழைக் கற்போர் நனியுணரலாம். மேலும் இயற்கைக் காட்சிகளாக மதுரையை வருணிக்கும் நிலையிலும் அவருடைய கற்பனை விரிந்து நிற்கின்றது. அன்னையைத் தொழும் நிலைகளில் தத்துவச் சார்பும் பக்தியும் கனிந்து நிற்கின்றது. இவற்றால்தான் பிள்ளைத் தமிழ் நூல்களில் சிறந்ததாக இந்த மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை அறிஞர் உலகம் போற்றுகின்றது.

## 11.6 தொகுத்துக் காண்போம்

பிள்ளைத்தமிழ் சிறந்த இலக்கிய வடிவம். கற்பனைக்கு இடந்தரும் செறிவான வடிவம். பாட்டுடைத் தலைவரைக் குழந்தையாகக் கருதிப் பத்துப் பருவங்களில் பாடப்பெறுவது. இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பென்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். ஆசிரிய விருத்தம், ஆசிரியச் சந்த விருத்தத்தில் பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் அமையப் பாடும் இலக்கியம். தொல்காப்பியம், பெரியாழ்வார் எனத் தமிழில் அமைந்த பிள்ளைத்தமிழ்க்கூறுகள் பிற்கால இலக்கியத்திற்கு அடிகோலின. பிள்ளைத்தமிழில் சிறந்த பிள்ளைத்தமிழ் குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ். மதுரை மீனாட்சியம்மையின் அருளையும் ஆற்றலையும் போற்றி அமைவது.

## 11.7 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

இரு மதிப்பெண் வினா விடைகள்

1. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின் ஆசிரியர் யார்?

   குமரகுருபரர்

2. ஆண்பாற் பிள்ளைத் தமிழின் பருவங்கள் எவை?

   சிற்றில் சிறுபறை, சிறுதேர்

3. பெண்பாற் பிள்ளைத் தமிழின் பருவங்கள் எவை?

   அம்மானை நீராடல் ஊசல்

4. குமரகுருபரர் பாடிய நூல்கள் நான்கனைக் குறிக்க.

   மீனாட்சியம்மை குறம், காசிக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், சகலகலாவல்லி மாலை

5. காப்புப் பருவத்தில் குறிக்கப்பெறும் கடவுளர் யாவர்?

திருமால், சிவபெருமான், பிரமன், இந்திரன், விநாயகன், முருகன், கலைமகள், திருமகள், சத்த மாதர், துர்க்கை, சத்த மாதர்

6. பைந்தமிழ் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டல் - யார்?

திருமால்

7. மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வு யார்? இமவான் மகள் யார்?

மீனாட்சியம்மை

8. சத்த மாதர் யாவர்?

பிராமி, நாராயணி, மாகேசுவரி, இந்திராணி, வராகி, கௌமாரி, காளி

9. குமரகுருபரர் அன்னையின் சிற்றில் விளையாட்டு எனக் கூறுவது எதனை?

அண்டங்களைப் படைத்து அளித்தல்

10. பொதிகை மலையில் தமிழோடு பிறந்தது எது?

தென்றல்

11. சப்பாணிப் பருவம் என்றால் என்ன?

குழந்தை இரு கைகளையும் சேர்த்துக் கொட்டுதல்

12. சாம, பேத, தான, தண்டம் எனும் நான்கு நிலைகளில் பாடப்பெறும் பிள்ளைத் தமிழ் பருவம் எது?

அம்புலிப் பருவம்

13. தேவர்களைப் போரில்வென்ற மீனாட்சிய்ம்மையின் மகன் யார்?

உக்கிர குமார பாண்டியன் ஆகிய முருகவேள்

14. முத்துப் பிறக்கும் இடங்கள் எவை?

மேகம், சங்கு, கரும்பு பாக்கு, கடல், யானை மருப்பு, மூங்கில், தாமரை

15. அவனி தழைந்திட மவுலி புனைந்தவள் யார்?

மீனாட்சியம்மை

16. மீன்கொடியைக் கொண்ட இருவர் யார்?

மீனாட்சியம்மையும் மன்மதனும்

17. களிறு ஈன்றபிடி, அடியவர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கு, சிவபெருமான் உள்ளத்தின் அழகோவியம் எனப் பாராட்டப்பெறுபவள் யார்?

மீனாட்சியம்மை

18. முக்குணங்கள் எவை?

இராசதம், தாமசம்,சத்துவம்

19. குமரகுருபரர் எந்நதியில் அம்மையை நீராட அழைக்கின்றார்?

வையை

**குறுவினா**

20. பிள்ளைத்தமிழ்ப் பருவங்களை விளக்குக.

அமைப்பு என்னும் தலைப்பில் அமைந்தவை

21. பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் தோற்றம் குறித்து விவரிக்க

பிள்ளைத்தமிழ் இலக்கிய வளர்ச்சி என்ற தலைப்பில் அமைந்தவை

22. மீனாட்சியம்மையைக் காக்குமாறு திருமாலிடம் குமரகுருபரர் வேண்டியமையை எழுதுக.

காப்புப் பருவம் தலைப்பில் அமைந்தவை

23. மீனாட்சியின் மழலைத் திருத்தோற்றத்தைச் செங்கீரைப் பருவத்தின்வழி எழுதுக.

செங்கீரைப் பருவம் தலைப்பில் அமைந்தவை

24. சேய் முருகனை மீனாட்சியம்மை சீராட்டிய திறத்தை எழுதுக.

சப்பாணிப் பருவத்தின் ஐந்தாம் பாட்டின் கருத்து

25. முத்துப் பிறக்கும் இடங்களாகக் குமரகுருபரர் கூறுவனவற்றை எழுதுக.

முத்தப்பருவத்தில் பாட்டின் கருத்து

26. தொடுக்கும்கடவுள் என்று தொடங்கும் வருகைப் பருவப் பாடற் கருத்தை எழுதுக.

வருகைப் பருவப் பாட்டின் கருத்து

27. அம்மானைக் காய்கள் நிறம்மாறிய தன்மையை விளக்குக.

அம்மானைப் பருவப் பாட்டின் கருத்து

28. அம்மையை வையையில் நீராடுமாறு குமரகுருபரர் கூறியது ஏன்?

நீராடற்பருவத்தின் பாட்டின் கருத்து

பெருவினா

29. பிள்ளைத்தமிழ் அமைப்பைப் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

பாடப் பகுதியின் தொகுத்துத் திரண்ட கருத்து

30. பெண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களில் அமைந்த குமரகுருபரரின் கற்பனையை விளக்குக.

அம்மானை, நீராடல் ஊசல் ஆகிய பருவங்களின் விளக்கம்

**குறுவினா**

31. மீனாட்சியம்மையைக் காக்குமாறு திருமாலிடம் குமரகுருபரர் வேண்டியமையை எழுதுக.
32. மீனாட்சியின் மழலைத் திருத்தோற்றத்தைச் செங்கீரைப் பருவத்தின்வழி எழுதுக.
33. சேய் முருகனை மீனாட்சியம்மை சீராட்டிய திறத்தை எழுதுக.
34. முத்துப் பிறக்கும் இடங்களாகக் குமரகுருபரர் கூறுவனவற்றை எழுதுக.
35. தொடுக்கும்கடவுள் என்று தொடங்கும் வருகைப் பருவப் பாடற் கருத்தை எழுதுக.
36. அம்மானைக் காய்கள் நிறம்மாறிய தன்மையை விளக்குக.
37. அம்மையை வையையில் நீராடுமாறு குமரகுருபரர் கூறியது ஏன்?

## 11.8 மேலும் அறிந்துகொள்ள

கு.முத்துராசன் - பிள்ளைத் தமிழ் இலக்கியம்

மு.அருணாசலம் - தமிழ் இலக்கியவரலாறு - பன்னிரண்டாம் நூற்றாண்டு

நாஞ்சில் நாடன் - சிற்றிலக்கியங்கள்

# கூறு 12 : மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - அம்புலிப்பருவம்

## 12.1 முன்னுரை

பிள்ளைத்தமிழ்ப் பருவங்களில் ஏழாவது பருவம். குழந்தை பிறந்த 15ஆம் மாதத்தில் பாடப்பெறுவது. பிள்ளைத்தமிழ்ப் பருவங்களில் ஏனைய பருவங்கள் பாட்டுடைத் தலைவரை விளிப்பது போல அமையக் காப்புப் பருவம் கடவுளரை விளித்தும் அம்புலிப் (நிலவு) பருவம் நிலவை விளித்தும் அமையும். அம்புலிப் பருவம் பாட்டுடைத் தலைவருடன் நிலவை விளையாட அழைப்பதாக அமையும். இவ்வகையில் மீனாட்சியம்மையுடன் விளையாட நிலவை விளிக்கும் பொருண்மையில் அமைந்த மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அம்புலிப் பருவம் அமைகின்றது.

## 12.2 நோக்கம்

அம்புலிப் பருவத்தில் குமரகுருபரர் கற்பனைச் செறிவுடன் பாடுகின்ற இலக்கியச் சுவையை உணரலாம். நான்குவகை நிலைகளில் நிலவை விளையாட அழைக்கும் உத்தியை உணரலாம். இடைக்காலத்து எழுந்த இலக்கியங்களில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் தனிச்சிறப்புடன் திகழ்வதற்குச் சான்றாக அம்புலிப் பருவம் அமைந்ததைக் கற்போர் உணரலாம்.

## 12.3 மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - அம்புலிப்பருவம்

நிலவைப் பாட்டுடைத் தலைவருடன் விளையாட அழைக்கும் அம்புலிப் பருவம் நான்கு கூறுகளை உடையது. அவையாவன

1. சாமம்
2. பேதம்
3. தானம்
4. தண்டம்

என்பனவாகும். இவற்றுள் சாமம் என்பது பாட்டுடைத் தலைவரை நிலவுக்கு நிகராக அமைத்துப் பாடுவதாகும். பேதம் என்பது நிலவினும் பாட்டுடைத் தலைவர் உயர்ந்தவர் என்று வேறுபடுத்திப் பாடுவதாகும். தானம் என்பது கொடை. நிலவு குழந்தையுடன் விளையாட வந்தால் இன்னது கிடைக்கும் என்று பாடுவதாகும். இவ்வாறு மூன்று நிலைகளில் அழைத்தும் வராவிட்டால் கிடைக்கும் தண்டனையைக் கூறிப் பாடுவது த் தண்டம் என்பதாகும். விளையாட அழைக்கின்ற ஒரே பொருளை நான்குவகையாக அமைத்துப் பாடுவது அரிய செயலாகும். எனவேதான் பிள்ளைத்தமிழில் அம்புலி புலி என்னும் தொடர் எழுந்தது.

இவ்வகையில் மீனாட்சியம்மையாகிய குழந்தையுடன் நிலவை நான்கு நிலைகளில் விளையாடக் குமரகுருபரர் அழைக்கின்றார். இப்பாடல்கள் குமரகுருபரரின் கவித்துவத்தைப் பறைசாற்றுவன. நிலவை ஒப்பிடும் தன்மையில் குல மரபை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் பாடிய கவிஞர் அம்மையின் அருளாற்றலை தானமாகவும் சர்வ வல்லமையை தண்டமாகவும் வைத்துப் பாடுகின்றார்.

### 12.3.1 சாமம்

1) கண்டுபடு குதலைப் பசுங்கிளி யிவட்கொரு
கலாபேத மென்னநின்னைக்
கலைமறைகண் முறையிடுவ கண்டோ வலாதொண்
கலாநிதி யெனத்தெரிந்தோ
வண்டுபடு தெரியற் றிருத்தாதை யார்மரபின்
வழிமுத லெனக்குறித்தோ
வளர்சடை முடிக்கெந்தை தண்ணறுங் கண்ணியா
வைத்தது கடைப்பிடித்தோ
குண்டுபடு பாற்கடல் வருந்திருச் சேடியொடு
கூடப் பிறந்தோர்ந்தோ
கோமாட்டி யிவணின்னை வம்மெனக் கொம்மெனக்
கூவிடப் பெற்றாயுனக்
கண்டுபடு சீரிதன் றாதலா லிவளுட
னம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே. (1)

அம்புலியாம் நிலவே! விளையாட இங்கு வருவாய்; கற்கண்டு போல இனிய மழலை மொழிபேசும் பச்சைக்கிளிபோன்றவள் மீனாட்சியம்மை. அவளுடைய நிறைந்த கலைகளில் ஒரு கூறு என நின்னை மறைகள் யாவும் போற்றுவது கருதியோ தன்னைப் போலவே கலைகள் நிரம்பிய பூரணன் என்று கருதியோ வண்டுகள் மொய்க்கும் மாலையணிந்த மலயத்துவச பாண்டியனின் வம்சமாகிய சந்திரவம்சத்தின் குல முதல்வனாக இருப்பது கருதியோ எம்பிரான் தன்னுடைய திருச்சடையில் கண்ணியாக வைத்தமையைக் கருதியோ ஆழமான பாற்கடல் பிறந்த தன்னுடைய தோழியான திருமகளுடன் நீயும் பிறந்தாய் என்பதைக் கருதியோ பாண்டியக் குல முதல்வியாகிய மீனாட்சியம்மை உன்னை விளையாட வாவெனக் கூவி அழைக்கின்றாள். இந்த வாய்ப்பு உனக்குக் கிடைத்தற்கரிய வாய்ப்பு ஆகும். பொன்மயமான மேருமலையினை வில்லாக வளைத்த

சிவபெருமானின் நாயகி மாணிக்க வல்லியாகிய மீனாட்சியம்மையுடன் விளையாட வருகவே.

இப்பாடலில் தானும் நிலவும் ஒரே குலத்தவர்களாக இருப்பதும் கலைகள் நிறைந்தவர்களாக (நிலவு ஒளிரும் கலைகள் நிறைந்தும் அம்மை சகல சாத்திரங்கள் கொண்டாடும் பூரணி) இருப்பதும் தன்னைப் போலவே சிவபெருமானுடன் ஒன்றிய தன்மையாலும் நிலவும் அம்மையும் சமமாகக் கருதத் தக்கவர் ஆயினர்.

### 12.3.2 பேதம்

குலத்தொடு தெய்வக் குழாம்பிழிந் தூற்றிக்
குடித்துச் சுவைத்துமிழ்ந்த
கோதென்று மழல்விடங் கொப்புளிக் கின்றவிரு
கோளினுச் சிட்டமென்றும்
கலைத்தோடு மூடிக் களங்கம் பொதிந்திட்ட
கயரோகி யென்றுமொருநாள்
கண்கொண்டு பார்க்கவுங் கடவதன் றெனவும்
கடற்புவி யெடுத்திகழவிட்
புலத்தோரு முடுமீன் கணத்தோடு மோடுநின்
போல்வார்க்கு மாபாதகம்
போக்குமித் தலமலது புகலில்லை காண்மிசைப்
பொங்குபுனல் கற்பகக்காடு
அலைத்தோடு வையைத் துறைப்படி மடப்பிடியொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே. (2)

நிலவே! அம்மையுடன் விளையாட வருக! வானுலகத் தேவர்களனைவரும் சேர்ந்து கசக்கிச் சாறு பிழிந்து குடித்த பிறகு எறிந்த சக்கை நீ ஆவாய். தீப்போலும் கொடிய நஞ்சினையுடைய இராகுவாகிய பாம்பு கவ்வித் துப்பிய எச்சில் என்றும் கூறுவர். பதினாறு கலைகளால் களங்கத்தை மறைத்துக் கொள்பவன் எனப் பழிப்பர். சஷயரோகம் உள்ளவன் என்றும் மாதத்தில் ஒருநாள் உன்னைப் பார்த்தால் தீங்கு நேரும் என்றும் இகழ்வர்.

ஆனால் மீனாட்சியம்மை அவ்வாறு இல்லை. விண்ணில் திரியும் விண்மீன்களும் உன்னைப்போலப் பாவம் செய்தவர்களும் தங்கள் பாவங்களை நீக்கிக்கொள்ளும் ஒரே தலம் அன்னை மீனாட்சி எழுந்தருளியுள்ள மாமதுரையே. வேறு போக்கிடம் உனக்கும் இல்லை என்பதை அறிந்துகொள். பொங்கி வரும் வெள்ளத்தால் கற்பகச்

சோலையையும் அழிக்கின்ற வையையாற்றில் நிராடும் இளமென்பிடி போன்றவளும் சிவபெருமானின் நாயகியுமான மீனாட்சியுடன் விளையாட வருக.

இப்பாடலில் நிலவினும் மீனாட்சியம்மை மேம்பட்டவள் பலராலும் பழிக்கத்தக்க நிலையை உடையது நிலவு. பலராலும் தொழத்தக்க நிலையை உடையவள் மீனாட்சியம்மை என்பதை இப்பாடலில் குமரகுருபரர் உணர்த்துகின்றார்.

கீற்றுமதி யெனநிலவு தோற்றுபரு வத்திலொளி
கிளர்நுதற் செவ்விவவ்விக்
கெண்டைத் தடங்கணா ரெருவிட் டிறைஞ்சக்
கிடந்தது முடைந்தமுதம்விண்
டூற்றுபுது வெண்கலை யுடுத்துமுழு மதியென
வுதித்தவமை யத்துமம்மை
யொண்முகத் தொழுகுதிரு வழகைக் கவர்ந்துகொண்
டோ டினது நிற்கமற்றை
மாற்றவ ளொடுங் கேள்வர் மௌலியி லுறைந்தது
மறைந்துனை யழைத்த பொழுதே
மற்றிவள் பெருங்கருணை சொற்றிடக் கடவதோ
மண்முழுதும் விம்முபுயம் வைத்
தாற்றுமுடி யரசுதவு மரசிளங் குமரியுட
னம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (3)

நிலவே விளையாட வருக! கீறிய கீற்றுப்போல இருக்கும்போது அன்னையின் நெற்றியழகைக் கவர்ந்துகொண்டு ஒளிசெய்தாய். கெண்டைபோலும் கண்களையுடைய பெண்கள் தங்களின் திருமணத்திற்கு உன்னை வேண்டி வழிபடுவர். அப்போதும் உனக்குப் படையலில் தொழு எருவைத்தானே வைத்தார். அமுதக் கலசம் உடைந்து ஊறிப் பரவியதால் வெள்ளையாடையை உடுத்தியது போல முழு வெண்மையுடன் திகழ்கின்றாய். அவ்வாறு ஆனபோது அம்மையின் அழகு முழுதும் கவர்ந்துகொண்டாய்.

சிவபெருமானின் திருமுடியில் அம்மையின் சகக் கிழத்தியான கங்கை இருக்கின்றாள். அவளுடன் கூடவே நீயும் ஒருங்கு இருக்கிறாய் என்பதை மறந்துவிட்டு உன்னை அழைக்கின்றாள் மீனாட்சியம்மை. அப்போதே இவளுடைய பெருங்கருணை சொல்ல அரிதானது என்று

அறிந்துகொள்.. இந்தப் பூமியைத் தன் தோள்களில் தாங்கிப் பாண்டியன் குலத்து உதித்த பேரரசியாக ஆள்கின்றாள். அந்த அரசிளங்குமரியும் மேருவை வளைத்த சிவபெருமானின் நாயகியுமான மீனாட்சியம்மையுடன் விளையாட வருக.

விண்டலம் பொலியப் பொலிந்திடுதி யேலுனது
வெம்பணிப் பகை விழுங்கி
விக்கிடக் கக்கிடத் தொக்கிடர்ப் படுதிவெயில்
விரியுஞ் சுடர்ப் பரிதியின்
மண்டலம் புக்கனை யிருத்தியெனி னொன்ளொளி
மழுங்கிட வழுங்கிடுதிபொன்
வளர்சடைக் காட்டெந்தை வைத்திடப் பெறுதியேன்
மாகணஞ் சுற்றவச்சங்
கொண்டுகண் டுஞ்சா திருப்பது மருப்பொங்கு
கோதையிவள் சீறடிகணின்
குடர் குழம்பிடவே குமைப்பதும் பெறுதியெங்
கோமாட்டி பாலடைந்தால்
அண்டபுகி ரண்டமு மகண்டமும் பெறுதியா
லம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (4)

இப்பாடலும் மீனாட்சியம்மையைவிடத் தாழ்ந்த நிலைக்குரிய நிலவின் பண்புகளைப் பேசுகின்றது.

அம்புலியே குழந்தை மீனாட்சியுடன ̇விளையாட வருவாய்! நீ பூமிக்கு வராது ஆகாயத்திலேயே திரிந்தால் இராகு கேதுக்களாகிய பகைப்பாம்புகள் விழுங்கவும் அவர்கள் வாயில் விக்கலுற்று கக்கும்போது இடரைப் பெறுவாய். இங்கு வராமல் சூரிய மண்டலத்திலேயே இருந்தால் உன்னுடைய ஒளி குன்றி மங்கிப்போகும். சிவபெருமானின் தலையில் வீற்றிருக்க விரும்பினால் அவன் அணிந்த பாம்புகளுக்கு அஞ்சி நடுங்கிப்போவாய். நீ சிவபெருமானுடன் எப்போதும் இருப்பதால் அன்னையின் வெறுப்புக்கு ஆளாவாய்; மணம்மிகுந்த தன் திருவடிகளில் குடல் கலங்குமாறு மிதிப்பட்டு அழிவாய்.

எம் தலைவியாகிய மீனாட்சியம்மையின் அழைப்பை ஏற்று இங்கு வந்தால் அண்டம்பேரண்டம் என்னும் பெருங்கோள்களை நீயே காவல் செய்யும் உரிமையைப் பெறுவாய். மேருமலையை வளைத்த சிவபெருமானின் நாயகி மாணிக்க வல்லியுடன் விளையாட வருக.

எண்ணில் பல புவனப் பெருந் தட்டை யூடுருவி
யிவள்பெரும் புகழ் நெடுநிலா
எங்கணு நிறைந்திடுவ தங்கதனின் மெள்ளநீ
யெள்ளளவு மொண்டுகொண்டு
வெண்ணிலவு பொழிவது கிடைத்தனை மடுத்திவள்
விழிக்கடை கொழித்த கருணை
வெள்ளந் திளைத்தாடு பெற்றியாற் றண்ணளி
விளைப்பதும் பெற்றனை கொலாம்
மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பது னிடத்தம்மை
வைத்திடுஞ் சத்தியேகாண்
மற்றொரு சுதந்திர நினைக்கென விலைகலை
மதிக்கடவு ணீயுமுணர்வாய்
அண்ணலங் களியானை யரசர்கோ மகளுட
னம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (5)

நிலவே விளையாட வருவாயாக! எண்ணற்ற பல உலகங்களை ஊடுருவி அன்னையின் புகழாகிய நீண்டஒளி எங்கும் பரவித் திகழ்கின்றது. அதில் எள்ளளவை முகந்துகொண்டு ஒளி செய்கின்றாய்.. அன்னையின் கடைக்கண் பார்வையின் அருளால் கருணையாகிய வெள்ளத்தில் திளைத்தமையால் நீ குளிர்ந்த தண்ணளியையும் செய்கின்றாய்..

இந்தப் புவியில் நீ பயிர்களுக்கும் மலர்களுக்கும் ஒளி தந்து புரப்பது அம்மை உனக்களித்த அருட் சக்தியால் அன்றோ? மற்று எந்த விதமான் ஆற்றலும் உனக்கென இல்லை என்பதை கலைகள் நிறைந்த மதிக்கடவுளாகிய நீயும் உணர்வாய். தலைமை பொருந்திய யானைகளுடைய அரசர் குல மகளாகியவளும் மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமானின் நாயகியுமான மீனாட்சி அம்மையுடன் விளையாட வருக!

### 12.3.3 தானம்

தானம் என்ற நிலையில் மதுரையில் வந்து வணங்கியோர் பெற்ற பேறும் அன்னையின் அருள் பெற்று உய்ந்தோரின் பேறும் உணர்த்தப்படுகின்றது. இதன்மூலம் நிலவிடம் அன்னியுடன் விளையாட வரின் நிலவும் இத்தகைய பேறுகளை அடையப்பெறும் என்பது உணர்த்தப்பெறும்.

முன்பும்ப ரரசுசெய் பெரும்பாவ முங்கோப
மூரிமாத் தொடர் சாபமும்

மும்மைத் தமிழ்செழியன் வெப்பொடு கொடுங்கூனு
மோசித்த வித்தலத்தின்
றன்பெருந் தன்மையை யுணர்ந்திலை கொல் சிவாராச
தானியாய்ச் சீவன்முத்தித்
தலமுமாய்த் துவாதசாந் தத்தலமு மானதித்
தலமித் தலத்திடையேல்
மன்பெருங் குரவர் பிழைத்த பாவமுமற்றை
மாமடிகளிடு சாபமும்
வளரிளம் பருவத்து நரைதிரையு முதிர்கூனு
மாற்றிடப் பெறுதிகண்டாய்
அன்பரென் புருகக் கசிந்திடு பசுந்தேனொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (6)

அம்புலியே! முன்பொருநால் இந்திரன் செய்த பாவமும் அவனுடைய ஐராவதமாகிய யானை செய்த பாவமும் முத்தமிழ் பேணிய கூன்பாண்டியன் கொண்ட வெப்பு நோயும் வளைந்த கூனும் மதுரைத்தலத்தில் வந்து வணங்கியதால் தீர்ந்தன. இவை எல்லாம் முன்பே அறிந்துள்ளாய். சிவபெருமான் பாண்டியனாக ஆட்சி செய்யும் தலமாகவும் நாரை முதலிய அஃறிணைக்கும் முத்தியளிக்கும் தலமாகவும் துவாதச அந்தத்துத் தலமாகவும் இது விளங்கும். இங்கு வந்தால் நீ செய்த பாவங்கள் நீங்கும்.

பெருமையுடைய ஆசிரியனான வியாழ் பகவானுக்கு நீ செய்த குருதுரோகத்தால் வந்த பெருங்குற்றமும் நீங்கும். உன் மாமனார் தட்சன் இட்ட க்ஷயரோகமாகிய துன்பமும் நீங்கும். வளர் இளம் பருவத்திலெயே நரை திரை கூன் ஆகியன தோன்றாமல் காக்கப்படுவாய். என்கின்றார் குமரகுருபரர். இதனால் ஏனையோர் அருள் பெற்றமை போல நிலவும் வந்து அன்னையைத் தொழுது அவளுடன் விளையாடப்பெற்றால் பாவங்கள் நீங்கி நன்மையடையும் என்கின்றார். இதனால் தானம் என்னும் நிலை உணர்த்தப்பெறுகின்றது.

இந்திரன் அகலிகையை வஞ்சகமாகக் கூடியதால் பெற்ற சாபம், துர்வாசர் அளித்த முத்து மாலையைத் தரையில் வீசியதால் ஐராவதம் பெற்ற சாபம் நெடுமாறப் பாண்டியன் அடைந்த கூன், வெப்பு நோய் ஆகியன மதுரைத் தல விசேடத்தால் தீர்ந்தன. அது போலவே குருவின்

மனைவியை விரும்பியதால் வியாழன் அளித்த சாபமும் ரோகிணியைத் தவிரப் பிறரிடம் விருப்பங் கொள்ளாமையால் மாமனார் தட்சன் இட்ட க்ஷயரோகம் ஆகியன தீர்வதற்குரிய அருளைத் தானமாக அன்னையிடமிருந்து பெறலாம் என்னும் பொருளில் இப்பாடல் அமைந்தது.

கும்பஞ் சுமந்தமத வெள்ளநீர் கொட்டுங்
கொடுங்களி றிடும் போர்வையான்
குடிலகோ டீரத் திருந்துகொண் டந்நலார்
கொய்தளிர்க் கை வருடவுஞ்
செம்பஞ் சுறுத்தவும் பதைபதைத் தாரழற்
சிகையெனக் கொப்புளிக்குஞ்
சீறடிகள் கன்றிச் சிவந்திட செய்வதுந்
திருவுளத் தடையாது பொற்
றம்பஞ் சுமந்தீன்ற மானுட விலங்கின்
தனிப்புதல்வனுக்கு வட்டத்
தண்குடை நிழற்றுநினை வம்மென வழைத்தன
டழைத்திடு கழைக் கரும்பொன்
றம்பஞ் சுடன்கொண்ட மகரக் கொடிக்கொடியொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (7)

தலையில் கும்பங்கள் சுமந்ததுபோல் மத்தகங்களை உடையதாய் மதநீர் வடிந்த கொடிய யானையைத் தாருகா வனத்து முனிவர்கள் ஏவிட அதனைக் கொன்று அதன் தோலைப் போர்வையாகப் போர்த்தியவன் சிவபெருமான். அத்தகு பேராற்றல் பொருந்திய சிவபெருமானின் திருமுடியில் நீ இருக்கின்றாய். அவ்வாறு இருந்தாலும் அதற்குரிய பெருமைக்குணம் உன்னிடம் இல்லையே.

அழகிய பெண்கள் தம் தலைவரைப் பிரிந்த காலத்துத் தளிர் போன்ற மென்மையான கரங்களால் வருடவும் செம்பஞ்சுக் குழம்பால் ஒற்றவும் செய்யும்போது அவர்கள் தீயென்று மனம் பதைபதைக்க அவர்களின் மேனி கொப்புளித்துத் தோன்றும்படி ஒளியை வீசுகின்றாய்.. சிறிய மென்பாதங்கள் கன்றிப்போய்ச் சிவந்துவிடும்படி துயர் தருவாய்.. இவ்வாறு பெண்களுக்குத் தீமை செய்யும்போதும் மீனாட்சியம்மை அதனைக் கருத்தில் கொள்ளாமல் உன்னைத் தன்னுடன் விளையாட அழைக்கின்றாள்.

தூணிலிருந்து தோன்றிய குழவி போன்றவன் நரசிங்க மூர்த்தி. அந்நரசிம்மாக அவதரித்த திருமாலின் தவப்புதல்வன் மன்மதன்.

மன்மதனுக்கு வெண்கொற்றக்குடை போல் விளங்கும் உன்னை வாவென அழைக்கின்றாள். இவளும் மன்மதனைப் போலவே மலரம்புகல் ஐந்தும் கரும்புவில்லும் மீன்கொடியும் உடையவள். இத்தகைய பெண்கொடி போன்றவளும் மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமானின் நாயகியுமான மீனாட்சியுடன் விளையாட வருகவே.

இங்குப் பெண்களுக்குத் துன்பம் செய்யும்போதும் அதனைக் கருத்தில்கொள்ளாத அருளுடன் தாயுள்ளத்துடன் அன்னை அழைப்பதாகக் குமரகுருபரர் பாடுகின்றார். காதலரைப் பிரிந்த பெண்களை நில்வின் ஒளி தீப்போல் வருத்தும் எனப்பாடுதல் இலக்கிய மரபாகும். அதனை உட்கொண்டே இவ்வாறு குமரகுருபரரும் பாடினார்

துளிதூங்கு தெள்ளமுத வெள்ளருவி பொழியுநின்
தொன்மரபு தழைய வந்து
தோன்றிடுங் கௌரியர் குலக்கொழுந்தைக் கண்டு
துணைவிழியும் மனமும் நின்று
களிதூங்க வளவளாய் வாழாம லுண்ணமுது
கலையொடு மிழந்துவெறுமட்
கலத்திடு புதுக்கூ ழினுக்கிரவு பூண்டொரு
களங்கம்வைத் தாயிதுவலால்
ஒளிதூங்கு தெளிவிசும் பினினின்னொ டொத்தவ
னொருத்தன் கரத்தின் வாரி
உண்டொதுக் கியமிச்சி நள்ளிருளி லள்ளியுண்
டோடுகின் றாயென் செய்தாய்
அளிதூங்கு ஞிமிறெழுந் தார்க்குங் குழற்றிருவொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (8)

அமுதம் சிந்திப் பரவும் வெள்ளை ஒளி அருவி போல் பாயும் சந்திரனே! உன்னுடைய தொன்மையான மரபில் தோன்றிய பாண்டியர் குலக்கொழுந்தாகிய மீனாட்சியம்மையைக் கண்ணாரக் கண்டு மனமும் களிப்பு எய்தலாம். இவ்வாறு அவளோடு விளையாடிக் கலந்து வாழாமல் உண்ணப்படும் அமுதக்கலைகளையும் இழக்கின்றாய் (தேய்பிறைப் பருவம்) திருமணம் வேண்டி உன்னைத் தொழும் பெண்கள் மரக்கலயத்தில் படைக்கும் புதுக்கூழுக்கு இரவில் தோன்றிக் களங்கமும் கொண்டாய்.

இது மட்டுமா? ஒளிபரவிய ஆகாயத்தில் உன்னை ஒத்த கதிரவன் தன் கைகளால் வாரி உண்ட ஒளிவெள்ளத்தின் மிச்சத்தை நள்ளிருளில்

உண்டு திரிகின்றாய். வண்டுகள் மொய்க்கும் குழலுடைய செல்வமகளாகிய மீனாட்சியுடன் விளையாட வருக. மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமானின் நாயகியான மாணிக்கவல்லி போன்ற மீனாட்சியுடன் விளையாட வருக.

## 12.3.4 தண்டம்

மழைக் கொந் தளக் கோதை வம்மின் என் றளவில் நீ
வந்திலை யெனக் கடுகலும்
வாண்முகச் செவ்விக்கு உடைந்து ஒதுங் கினவனெதிர்
வரவொல்கி யோ பணிகள்கோ
ளிழைக்குங்கொல் பின்றொடர்ந்தென அஞ்சியோ தாழ்த்
திருந்தனன் போலுமென யாம்
மித்துணையு மொருவாறு தப்புவித் தோம்வெகுளில்
இனியொரு பிழைப்பில்லைகாண்
தழைக்குந் துகிற்கொடி முகிற்கொடி திரைத்துமேல்
தலம்வளர் நகிற்கொடிகளைத்
தாழ்குழலு நீவி நுதல் வெயர்வுந் துடைதம்மை
சமயமிது வென அலுவலிட்டு
அழைக்குந் தடம்புரிசை மதுரைத் துரைப்பெணுடன்
அம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (9)

கார்மேகம் போன்ற கூந்தலையுடைய அன்னை மீனாட்சி உன்னை விளையாட வாவென்று கூவியும் நீ வாராமல் இருந்தாய். அவள் நீ வராததால் சினங்கொள்ளவும் கூடும். ஆகையால் இதுவரை அம்மையின் திருமுக ஒளிக்கு நாணி அவள் எதிர் வராமல் இருந்தாய். என்றும் அன்னை அணிந்த நாகாபரணங்களாகிய பாம்புகள் கவ்வும் என்று அஞ்சினாய் என்றும் கூறி ஒருவாறு உன்னை அன்னையின் சினத்திலிருந்து காத்துவிட்டோம். அவள் வெகுண்டால் இனியும் காத்தல் அரிது.

மதுரை நகரத்து உயர்ந்த மாடக்கொடிகள் வானுலகம்வரை பறக்கும். வானக மகளிரின் கூந்தலைத் தடவி அவர்களின் நெற்றி வியர்வையும் துடைக்கும்படி பறக்கின்றன. இதுவே தக்க சமயமாகும். உன்னை அழைக்கின்ற மதுரைப் பேரரசியாகிய (துரைப்பெண்) மீனாட்சியுடன் விளையாட வருக. மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமானின் நாயகியான மாணிக்கவல்லி போன்ற மீனாட்சியுடன் விளையாட வருக.

ஏடகத் தெழுதாத வேதச் சிரத்தர

சிருக்குமிவள் சீறடிகணின்
னிதயத் தடத்தும் பொலிந்தவர் திருவுளத்
தெண்ணியன் றேகபடமா
நாடகத் தைந்தொழி னடிக்கும் பிரான்றெய்வ
நதியொடு முடித்தல் பெற்றாய்
நங்கையிவ டிருவுள மகிழ்ச்சிபெறி லிதுபோலொர்
நற்றவப் பேறில்லைகாண்
மாடகக் கடை திரித்து இன்னரம்பு ஆர்த்து உகிர்
வடிம்புதை வரும் அந்நலார்
மகரயாழ் மழலைக்கு மரவங்கள் நுண்டுகில்
வழங்கக் கொழுங்கோங்கு தூங்கு
ஆடகப் பொற்கிழி அவிழ்க்கும் மது ரைத் திருவொடு
அம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
அம்புலீ யாடவாவே. (10)

ஏட்டில் எழுதாத வேதங்களின் உச்சியில் அரசியாக வீற்றிருப்பவள் அன்னை மீனாட்சி. அவளுடைய சீறடிகள் உன்னுடைய இதயத்திலும் இருக்கும் என்று எண்ணினார் சிவபெருமான். உயிர்கள் அறியாதபடி மாயையால் ஐந்தொழிலாகிய (படைத்தல், காத்தல், அழித்தல்,அருளல், மறைத்தல்) நாடகத்தை நடத்தும் அவ்விறைவன் வானக நதியாகிய கங்கையுடன் உன்னையும் தம் தலையில் வைத்தார். மீனாட்சியிந்திருவுளம் மகிழ்ச்சி பெறில் அதனினும் பெரிய பேறு வேறு இல்லை.

யாழின் முறுக்காணியைத் திருகி விரலால் மீட்டி இன்னிசையை இளம்பெண்கள் எழுப்புகின்றனர். குங்கும மரங்கள் மென்மையான மலர்களைத் தூவுகின்றன. செழித்த கோங்கமரங்கள் பொன் முடிப்பு அவிழ்ந்தது போல் மகரந்தங்களைத் தூவுகின்றன. இத்தகைய வளமான மதுரையின் செல்வமகளாகிய மீனாட்சியுடன் விளையாட வருக. மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமானின் நாயகியான மாணிக்கவல்லி போன்ற மீனாட்சியுடன் விளையாட வருக.

ஏட்டில் எழுதாது வாய்மொழியால் வழங்கிக் கேட்கப்படும் சிறப்பால் வேதம் சுருதி என அழைக்கப்படும். ஐந்தொழில் நடிக்கும் இறைவன் உன்னைத் தலையில் தாங்கினான் என்பதால் அவன் அழிக்கவும் செய்வான் என்பதைக் குறிப்பால் உணர்த்தி விளையாட அழைக்கின்றார் குமரகுருபரர்.

இவ்வாறு நான்கு நிலைகளில் இதமாகவும் அச்சுறுத்தியும் வேறுபடுத்தியும் கொடை கூறியும் நிலவை மீனாட்சியம்மையுடன் விளையாட

அழைக்கின்ற பாடல்கள் நயமான கற்பனைகளையும் புராணச் செய்திகளையும் இலக்கிய மரபுகளையும் கொண்டவாக அமைந்து விளாங்குகின்றன. அரிதான அம்புலிப் பருவத்தில் மீனாட்சியின் புகழ் தோன்றவும் அருள் சிறக்கவும் உத்தியாக இந்தப் பருவத்தைப் பாடியுள்ளார்.

## 12.4 தொகுத்துக் காண்போம்.

பிள்ளைத் தமிழில் அம்புலி புலி எனும் அளவு அரிய இலக்கிய உத்தியில் பாடப்படும் பிள்ளைத்தமிழ்ப்பருவம் அம்புலிப் பருவம். சாம தான, பேத தண்டம் என்னும் நான்கு நிலைகளில் அமைவது. மீனாட்சியுடன் விளையாட நிலவை நான்கு நிலைகளிலும் அழைத்துக் குமரகுருபரர் பாடியுள்ளார். அன்னையின் பேராற்றல், மேன்மை ஆகியன விளக்கப்படுகின்றன. மேலும் குமரகுருபரர் நான்கு நிலைகளில் பாடிய பாடல்கள் அவருடைய கற்பனைத்திறனைக் காட்டுவனவாகும்.

## 12.5 தன் மதிப்பீட்டு வினா விடைகள்

இருமதிப்பெண் வினா விடைகள்

1. அம்புலிப் பருவத்தில் பாடப்பெறும் நான்கு நிலைகள் எவை?

   சாம தான, பேத தண்டம்

2. இராகு துப்பிய எச்சில் எது?

   நிலவு

3. பெண்டிர் திருமணம் நடைபெற நிலவுக்குப் படைப்பது எது?

   தொழு எரு

4. மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பது எது?

   மீனாட்சியம்மை நிலவுக்கு ஈந்த சக்தி

5. நிலவு அம்மையுடன் வந்தால் எவை நீங்கப்பெறும்?

   குரு பகவானுக்குச் செய்த பிழை, மாமனார் தட்சன் இட்ட சாபம்

குறு வினா

6. நிலவைச் சாமம் என்ற நிலையில் குமரகுருபரர் பாடியமையை விளக்குக.

   கண்டுபடு என்ற பாடலின் கருத்து

7. நிலவைத் தண்டம் என்ற நிலையில் குமரகுருபரர் பாடியமையை விளக்குக.

   மழைக் கொந்தளம் என்ற பாடலின் கருத்து

சிற்றிலக்கியங்கள்

குறிப்புகள்

*Self- Instructional Material*

8. நிலவைத் தானம் என்ற நிலையில் குமரகுருபரர் பாடியமையை விளக்குக.

முன்பும்பர அரசு என்றபாடலின் கருத்து

பெருவினா

9. நிலவை மீனாட்சியம்மையுடன் வேறுபடுத்திக் கூறுதலை விவரிக்க.

12.3.2 என்ற எண்ணின் கீழமைந்த அனைத்துப் பாடல்களின் கருத்து

10. மீனாட்சியம்மையின் பெருமையை அம்புலிப் பருவத்தின்வழி விளக்குக.
11. குமரகுருபரரின் கற்பனை ஆற்றலை விவரிக்க,

12.3 என்ற தலைப்பிலான அனைத்துப் பாடல்களின் திரண்ட கருத்தும்

## 12.6. மேலும் அறிந்துகொள்ள

கு.முத்துராசன் - பிள்ளைத் தமிழ் இலக்கியம்

மு.அருணாசலம் - தமிழ் இலக்கியவரலாறு - பன்னிரண்டாம் நூற்றாண்டு

நாஞ்சில் நாடன் - சிற்றிலக்கியங்கள்

# கூறு : 13 தஞ்சை வாணன் கோவை (பாங்கி மதியுடன்பாடு மட்டும்)

## 13.1 முன்னுரை

கோவை என்றால் கோக்கப்பட்டது என்று பொருள். அகநானூற்றின் ஒரு பிரிவு நித்திலக் கோவை எனவருதலைக் காணலாம். அகப்பொருளுக்குத் தொல்காப்பியர் கூற்றையே விதித்தார். பிற்காலத்தில் கூற்று மரபுக்கு மாற்றாகத் துறை கூறும் மரபு எழுந்தது. காட்சி முதலாக அகப்பொருளுக்கு அமைந்த உரிய துறைகள் நானூற்றை நிகழ்ச்சி மாறாமல் நிரல்பட அமைத்துக்கொண்டு அத்துறைகளையே பாடுபொருளாக கோக்கப்பட்ட நூல் கோவை இலக்கியம் எனப்படுகிறது.

## 13.2 நோக்கம்

இக்கோவை இலக்கியத்தைக் கற்பதால் அகத்துறையின் செறிவை அறிந்துகொள்ளலாம். பாட்டுடைத் தலைவனான சந்திரவாணன் பெருமையை அறிந்துகொள்ளலாம். தமிழுக்கே உரிய பொருளிலக்கணத்தின் கூறுகளை உணரலாம்

## 13.3 கோவை இலக்கியம்

கோவை இலக்கியத்தைக் கட்டளைக் கலித்துறை எனும் யாப்பில் பாடுவர். இலக்கண விளக்கப் பாட்டியல் ஆசிரியர் தன்னுரையில் “இருவகைப்பட்ட முதற்பொருளும், பதினான்கு வகைப்பட்ட கருப்பொருளும் பத்துவகைப்பட்ட உரிப்பொருளும் பொருந்தி, கைக்கிளை முதலுற்ற அன்புடைக் காமப் பகுதியவாம் களவொழுக்கத்தினையும் கற்பொழுக்கத்தினையும் கூறுதலே எல்லையாகக் கொண்டு, நன்மையுற்ற கட்டளைக் கலித்துறை நானூறாகத் திணை முதலாகத் துறை ஈறாகக் கூறப்பட்ட பன்னிரண்டு அகப்பாட்டு உறுப்பும் வழுவின்றித் தோன்றப் பாடுவது அகப்பொருட் கோவை” என்பது எண்ணத்தக்கது.

திருக்குறள் காமத்துப்பாலில் காணும் அதிகாரங்களின் அகப்பொருள் நிரலும் கோவையை ஒத்ததே. நம்மாழ்வார் பாடிய திருவிருத்தம் நூறு பாடல்களுக்குக் குறைவாகக் கொண்டபோதும் அதுவும் அகப்பொருட் செய்திகளின் தொகுப்பே. இதுவே பாட்டுடைத் தலைவனைப் பொருளாகக்கொண்ட கோவை இலக்கியத்திற்கு வித்திட்டது எனலாம். அகப்பொருள் இலக்கணம் கூறும் துறைகளுக்கு உதாரண இலக்கிய நூல்களாக அமைந்தனவே கோவை நூல்கள். சான்றாகப் பாண்டிக்கோவை, தஞ்சை வாணன் கோவை ஆகியவற்றைச் சுட்டலாம். கூறலாம். பாண்டிக்கோவை என்ற நூல் இறையனார் அகப்பொருள் என்ற

இலக்கண நூலுக்கும் தஞ்சை வாணன் கோவை என்ற நூல் நம்பி அகப்பொருள் என்ற இலக்கண நூலுக்கும் எடுத்துக்காட்டு இலக்கிய நூலாக உள்ளன.

## 13.4 தமிழில் கோவை நூல்கள்

தமிழில் எழுந்த கோவை இலக்கியங்களில் முதலாக வைத்துப் போற்றப்படுவது ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டிக்கோவை. இந்நூலை இயற்றியவர் யாரெனத் தெரியவில்லை. பின்னர் மாணிக்கவாசகர் திருக்கோவையார் பாடினார். 13ஆம் நூற்றாண்டில் தஞ்சை வாணன் கோவை பொய்யாமொழிப் புலவரால் பாடப்பட்டது குளத்தூர்க்கோவை, கரந்தைக்கோவை என 70க்கும் மேற்பட்ட கோவை நூல்கள் தோன்றியுள்ளன.

## 13.5 தஞ்சைவாணன் கோவை

### 13.5.1 ஆசிரியர்

தஞ்சை வாணன் கோவையின் ஆசிரியர் பொய்யாமொழிப் புலவர். இவர் தொண்டை மண்டலத்துத் துறையூரைச் சேர்ந்தவர். இவருடைய ஆசிரியர் வயிரபுரம் ஆசான் என்பவரே இவருக்கு இப்பெயரிட்டார் என்று கூறப்படுகிறது. இந்நூலின் காலம் 13ஆம் நூற்றாண்டு ஆகும். பொய்யாமொழிப் புலவர் இந்தக் கோவை நூலை அரங்கேற்றுகையில் தன்சை வாணனின் பட்டத்தரசி பாடல் ஒன்றுக்கு ஒன்று என 400 பொன் தேங்காய்களை வழங்கினாள் என்றும் அரசன் தஞ்சை வாணன் அத்தேங்காய்களின் மூன்று கண்களுக்கும் விலை உயர்ந்த மாணிக்கங்களைப் பதித்துத் தந்தான் என்றும் கூறுவர்.

### 13.5.2 தஞ்சைவாணன்

இந்நூல் தஞ்சைவாணனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. இத்தலைவனின் இயற்பெயர் சந்திர வாணன். பாணர்கள் என்னும் குறுநில மன்னர்கள் சோழ நாட்டிலிருந்தும் பல்லவ நாட்டிலிருந்தும் தெற்கே பாண்டிய நாட்டிற்கு வந்தனர். அந்தப் பாணர் மரபில் தோன்றித் தென்காசியை அடுத்த மாறைநாட்டைத் தஞ்சாக்கூர் என்னும் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் சந்திர வாணன். இந்த தஞ்சாக்கூரே தஞ்சை எனச் சுட்டப்பெறுகின்றது. தஞ்சாக்கூர் சந்திரவாணன் பாண்டியன் கோமாற வர்மன் குலசேகரனுக்குப் படைத் தலைவனாக இருந்தான். அவன் சேரநாட்டுடன் போரிட்டு வெற்றியும் தேடித்தந்தான். எனவே இக்கோவை இவனை மலைநாடு கொண்ட வழுதிகண் போல்பவன் வாணன் (18) என்கின்றது.

### 13.5.3 அமைப்பு

தஞ்சைவாணன் கோவை நாற்கவிராச நம்பி இயற்றிய நம்பி அகப்பொருள் என்ற இலக்கண நூலை அடிப்படையாகக் கொண்டு அதற்குச் சான்றிலக்கியமாக எழுதப்பட்டுள்ளது. நம்பி அகப்பொருள் நூலில் அமைந்த களவியல், வரைவியல், கற்பியல் ஆகிய இயல் என்னும் வைப்பு முறையில் அகத்துறைகளின் அடிப்படையில் அகமாந்தர் கூற்றாக நாற்கவிராச நம்பி எவ்வாறு இலக்கணம் விதித்தாரோ அதே நிரலில் பொய்யாமொழிப் புலவரும் நிகழ்ச்சிகள் அமையப் பாடியுள்ளார். எனவே நம்பி அகப்பொருள் இலக்கணத்திற்குரிய முழுமையான இலக்கியம் தஞ்சைவாணன் கோவை என்பதை உணரலாம்.

## 13.6 பாங்கிமதியுடன்பாடு

தலைவனும் தலைவியும் நல்லூழினால் ஒருவரை ஒருவர் தனித்துக் காண்பர். அப்போது அவள் அணங்கோ பெண்ணோ என்று ஐயுறுவான். அவள் மானிடப்பெண்ணே என்பத் தெளிந்து தன் காதல் வேட்கை கொள்வான். தலைவ்யும் தன் மனக்காதலைக் குறிப்பாக உணர்த்துவான். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சியில் தலைவனும் தலைவியும் கூடியவழி இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் என்னும் காதற் களங்களில் தலைமக்கள் சந்தித்து இன்புறுவர். இவ்வாறு நாளும் நடைபெற்ற கூட்டத்தால் தலைவியின் காதலைத் தோழி அறிந்துணர்வாள். தலைவியிடம் காணும் அக, புற மாறுபாடுகளைக் கண்டு புணர்ச்சியுண்மையை அறிந்து ஆய்ந்து தோழி தன் மதியை உடன்படுத்துதல். பாங்கிமதியுடன்பாடு மூவகைப்படும். இதனை

முன்னுற உணர்தல், குறையுற உணர்தல்
இருவரும் உள்வழி அவன்வர வுணர்தலென்
றாங்குமூ வகைத்தே பாங்கிமதி யுடன்பாடு

என்னும் நூற்பாவால் உணரலாம்.

1. முன்னுற உணர்தல் : தலைவி தன்னுடைய தோழியர் கூட்டத்திலிருந்து நீங்கிச்சென்று தலைவனைக் கண்டு புணர்ந்து மீண்டும் வரும்போது அவள் முன் உற்ற தோழி நிகழ்ந்த கூட்டத்தின் உண்மையை அறிதல்
2. குறையுற உணர்தல் : தலைவன் தழையும் கண்ணியும் கொண்டுவந்து தந்து தன்னிடம் குறைதீர்க்க வேண்டுவதால் அதனால் கூட்டத்தின் உண்மையை உணர்தல்
3. இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் : தலைவனும் தோழியும் ஒருங்கே இருந்தபோது தலைவன் அயலான் போல் வந்துநின்று பேசுன் குறிப்புகளால் கூட்டத்தை உணர்தல்.

இந்த மூன்றுநிலைகளிலும் பலதுறைகள் பயின்றுவரும். தஞ்சை வாணனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அகப்பொருளைப் பேசும் இந்த நூலில் அமைந்த பாங்கிமதியுடன்பாட்டுக் களனில் அமைந்த துறைகளை நிரலே காணலாம்.

**13.6.1 முன்னுறவுணர்தல்:**

தலைவனுடனான புணர்ச்சியால் தலைவியிடம் காணும் மணம், உருவ மாறுபாடு, பழக்கங்களின் வேறுபாடு, உணவுண்ணாமை, தன் செயலை மறைத்தல், தன்கூட்டத்தாரை விட்டுச் செல்லுதல், எப்போதும் ஒன்றையே சிந்தித்து ஓரிடத்து நிற்றல் ஆகியவற்றால் தோழி தலைவியின் காதலை உணர்ந்துகொள்வாள். இதனை

நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்வினை மறைப்பும் செலவும் பயில்வும் என்று
இவ்வகை ஏழினும் ஐயமுற் றோர்தலும்.

என்னும் நூற்பாவால் அறியலாம்.

**13.6.1.1 தோற்றத்தாலாராய்தல்:**

தலைவியின் தோற்றத்தில் காணும் வனப்பு வேறுபாட்டால் தலைவியின் காதலை ஆராய்ந்து அறிந்துகொள்ளுதல் தோற்றத்தால் ஆராய்தலாகும்.

வண்டலை ஆயத்துடன் அயர்ந்தோ அன்றி வண்டிமிர்பூந்
தண்டலை ஆரத் தழைகள் கொய்தோ தஞ்சை வாணன் வெற்பில்
புண்டலை வேலினுங் கண் சிவப்பு ஆரப் பொலஞ்சுனைத்தேன்
கொண்டலை நீர்குடைந் தோ இவள் மேனி குழைந்ததுவே.

‘நெஞ்சமே! இவள் மேனி குழைந்துவிட்டது. தோழியர் கூட்டத்துடன் வண்டல் மண்ணில் பாவையை இழைத்து வருந்தினாளோ? ஆரவாரிக்கும் சோலையில் சந்தனத் தழைகள் கொய்து வருந்தினாளோ? தஞ்சை வாணனின் மலையில் பொன் விளையும் சுனையில் புண்ணாக்கும் கூரான உச்சியை உடைய வேலினும் கண்கள் சிவக்குமாறு நீருள் குளித்ததாலோ? இவ்வாறு மேனி குழைந்து வேறுபட்டாள் இதனை அறியேன்’ என்று தோழி தலைவியின் தோற்றத்தை ஆராய்ந்து புணர்ச்சியை அறிந்துகொண்டு உரைத்தாள்.

**13.6.1.2 ஒழுக்கத்தால் ஐயம் தீர்தல்**

பண்டுபோல் ஒழுக்கத்தில் நில்லாது மாறுபடுதலை உணர்ந்த தோழி தன் ஐயம் நீங்கப்பெறுகின்றாள்.

திளைக்குந் திரைமேல் உனக்குமுன் தோன்றலின் செம்பொன்வெற்பை
வளைக்கும் பிரான்முடி வைகுதலால் தஞ்சை வாணன்மண்மேல்

விளைக்கும் புகழ்போல் விளங்குதலால் செக்கர் விண்பிறைகார்
தளைக்குங் குழற்றிருவே தொழவே தகுந் தன்மையதே.

“மேகத்தைப் பிணிக்கும் வண்ணம் கரிய குழலையுடைய திருவே! கடலிடத்தில் உனக்கு முன்னே தோன்றியது திங்கள். அது செம்பொன் மலையான மேருவை வில்லாக வளைக்கும் சினாரின் திருமுடியில் நிலைத்தது. தஞ்சைவாணன் இந்தப் பூமியில் விளைக்கும் புகழ் போல நாளுக்கு நாள் மிகுதியான ஒளி பெறுகின்றது. இதனால் செவ்வானத்தின் இடையே தோன்றும் பிறையைத் திங்கள்தோறும் தொழுவதுபோல இன்றும் அந்தப் பிறை நிலவு தொழப்படும் தன்மையது. நீயும் தொழுவாய்.” எனத் தோழி தலைவியிடம் கூறுகின்றாள்.

தலைவியைத் திருமகளுடன் ஒப்பிட்டுப் பேசுவதை நிலவு தலைவிக்கு முன் பிறந்தது என்பதால் அறியலாம். இதற்கு முன் பிறையைத் தொழும் இயல்புடைய தலைவி தலைவனுடனான கூட்டத்தால் பிறை தொழுதல் போன்ற ஒழுக்கத்தை மேற்கொள்ளாள். இதனால் தலைவியின் ஒழுக்க வேறுபாடு தலைவியின் காதலை உணர்த்தும்.

### 13.6.1.3 சுனை நயப்புரைத்தல்

உண்மையான சில செய்திகளைக் கூறித் தலைவியின் கூட்டமுண்மையை அறிந்துகொள்ளும் வகையில் சுனையின் நன்மையைப் பேசுதல்

பூட்டிய வார்சிலை வீரரை வென்று எப்பொருப்பினுஞ்சீர்
தீட்டிய வாணன் தென் மாறை அன்னீர்! இதழ்ச் செம்மையுமை
ஊட்டிய வாளின் கருமையுந் தான்கொண்டு உமக்கிங்ஙனே
சூட்டியவாறு நன் றால் முல்லை மாலை சுனைப்புனலே.

‘நாண் கட்டிய வில்லை ஏந்திய வீரர்களை வென்று குலமலைகள் எட்டையும் விடச் சிறப்புடைய நாண்பூட்டிய வில் வீரரை வெற்றி கொண்டு எத்திசை மலைகளிலும் தன் புகழைப் பொறித்தவன் தஞ்சை வாணன். அவனுடைய அழகிய தென்மாறை நாட்டை ஒத்த அழகுடையவளே! உன்னுடைய இதழின் செம்மையையும் மை தீட்டிய கண்ணின் கருமையையும் தான் வாங்கிக்கொண்ட சுனைப்புனல் அவற்றிற்கு மாற்றாக முல்லை மாலையைச் சூட்டியது நன்றே’ எனத் தோழி தலைவியின் மேனி வேறுபாட்டைச் சுனையின் மீது வைத்துக் கூறுவாள். தலைவனுடனான புணர்ச்சியால் கண்கள் சிவந்தன; இதழ் வெளுத்தன. தலைவன் அளித்த முல்லை மாலையைத் தலைவி அணிந்திருக்கின்றாள். சுனை நீராடிய தலைவிக்கு முல்லை மாலையைச்

சிவப்பும் கருப்புமாகக் கலங்கிய சுனை நீர் தந்தது என்று கூறியதன்மூலம் உண்மையைத் தான் அறிந்துகொண்டமையைத் தோழி உரைக்கின்றாள்.

**13.6.1.4 சுனைவியந்துரைத்தல்**:

சுனை வியந்துரைத்தல் என்பது தலைவிக்கு மேனியில் வேறுபாடு காட்டிய சுனையை வியந்து தானும் நீராடுவேன் என்று மொழிதல்

மறலா யெதிர்ந்த மறமன்னர் வேழ மலையெறிவேல்
திறலார் முருகன் செழுந்தஞ்சை வாணன்தென் மாறைவையை
அறலார் குழலாய் நுதற்குறு வேர்வும் அழகுநின்போற்
பெறலாம் எனிற் குடைவேன் அடியேன் நம்பெருஞ்சுனையே.

"மறதியினால் எதிர்த்து வந்த மன்னர்களின் மலை போன்ற யானைகள் மீது வீசுகின்றவன் முன்பு மலையை வீழ்த்திய திறலுடைய முருகனை ஒத்த தஞ்சை வாணன், அவனுடைய தென் மாறை நாட்டில் வையையாற்றின் கருமணலை ஒத்த குழலுடைய பெண்ணே! நெற்றியில் சிறு வேர்வை தோன்றும் அழகை நினைப்போலப் பெறலாம் என்றால் அடியேனும் பெருஞ்சுனையில் நீராடிக் காண்பேன்" என்று தோழி தலைவியிடம் கூறுவாள். தலைவனுடனான புணர்ச்சியால் முன் நெற்றி வியர்த்திருக்கப் புதிய பொலிவுடன் தோன்றிய தலைவியிடம் சுனை நீராடினால் இவ்வாறு மேனி அழகு பெறும் என்றால் தானும் அதனைப் பெறுவதாகக் கூறிப் புணர்ச்சியைத் தான் அறிந்தமையை உணர்த்தினாள்

**13.6.1.5 தகையணங்குறுத்தல்**

தகையணங்குறுத்தல் என்பது தலைவியின் புதிய அழகினால் அவளைத் தெய்வப் பெண்ணாக வலியுறுத்திக் கூறல்.

குவளை சிவத்துக் குமுதம் வெளுத்த குறையல்லவேல்
அவளைமறைத்துன்னைக் காட்டலு மாமலர்த் தேன்குதிக்கத்
தவளை குதிக்குந் தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன்வெற்பில்
இவளை வரக்கண்டு நீயணங் கேபின் எழுந்தருளே.

"மலரிலிருந்து பொங்கும் தேனைப் புதுப்புனல் வந்தது என்று கருதித் தவளைகள் குதித்து மகிழும் பெரிய பொய்கை சூழ்ந்த தஞ்சை வாணன் மலையில் வாழும் தெய்வப்பெண்ணே! எங்கள் தலைவி ஒருத்தியுண்டு. அவள் வடிவில் நின்னை ஒத்தவள். தலைவியிடம் குவளை போன்ற கண்கள் சிவந்து குமுதம் போன்ற இதழ்கள் வெளுத்துக் காணப்படும் தன்மையைக் குறையாகக் கொள்ளாவிட்டால் அவளை மறைத்து உன்னையே அவளென்று காட்டிவிடலாம். எம் தலைவி வரும்வரை இருந்து நின்னோடு அவள் உருவ ஒப்புமை கண்டபின் நீ எழுந்தருள்க" என்று தோழி மலைத்தெய்வத்திடம் பேசுவதுபோல்

கூறுகின்றாள். தலைவியைத் தெய்வப்பெண் என்று ஒப்புமை காட்டி அவளிடத்துப் புணர்ச்சியால் ஏற்பட்ட கண்சிவப்பும் வாய் வெளுப்பும் உரைத்து மேனி வேறுபாட்டைத் தான் உணர்ந்தமையைப் புலப்படுத்தினாள்.

முன்பு சொன்ன சுனை வியந்துரைத்தலும் இந்தத் தகையணங்குறுத்தலும் தலைவியின் நாணத்தை ஆராயும் கூற்றாகிய நாண நாட்டம் ஆகும்.

**13.6.1.6 நடுங்கநாட்டம்**

நடுங்கநாட்டம் என்பது, தலைவி மனம் நடுங்குமாறு ஆராய்ந்து கூறுதல்.

பால்போல் மொழிவஞ்சி! அஞ்சிநின்றேன் இந்தப் பார்முழுதும்
மால்போற் புரந்தவன் மாறை வரோதயன் வாணன்வென்றி
வேல்போற் சிவந்து நெறிமுறை கோடிய வேந்தன் வெய்ய
கோல்போற் கொடியன வாங்கொலை யானையின் கோடுகண்டே.

"பால்போலும் இனிய மொழி பேசும் வஞ்சிக்கொடி போன்றவளே! இந்தப் பரந்த உலகத்தைத் திருமால்போல் இடையூறு இல்லாது காத்த மாறைநாட்டின் வரோதயனான வாணனின் வெற்றி பொருந்திய வேல் போல் குருதியில் மூழ்கிச் சிவந்து முறை தவறிய அரசனுடைய செங்கோலைப் போல் வளைந்து கண்டாருக்கு அச்சம் தரும் கொடிய கொலைத்தொழிலையுடைய யானையின் தந்தங்களைக் கண்டு அஞ்சி நின்றேன்". என்று அச்சம் தரும் யானையைப் பற்றிக் கூறித் தோழி ஆராய்ந்தாள்.

யானையைக் கண்டு தான் அஞ்சவும் தலைவி அஞ்சாமையைப் புலப்படுத்தினாள் என்பதால் தலைவனின் காவலைத் தன்னுள்ளத்துக் கொண்டாள் என்பது உணர்த்தினாள்.

**13.6.2. குறையுற உணர்தல்**

தலைவன் தலைவியை அடையவேண்டித் தோழியிடம் குறையிரந்து நிற்றலாகும். அப்போது ஊர்வினவுபவன் போலவும் பெயர் வினவுபவன் போலவும் தொலைத்த பொருள் ஒன்றை (கெடுதி) வினவுபவன் போலவும் பேசாமைக்கு வருந்தியும் கூற்று நிகழ்த்துவான்

**13.6.2.1 பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுத்தல்**

பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுத்தல் என்பது, இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர்ப் தலைவியைப் பிரிந்தநிலையில் மனங் கலங்கினான். அதனால், வாயிலாகத் தோழியைப் பெற்று உய்தலை விரும்பிக் குறையிரத்தலை நெஞ்சுக்கு வலியுறுத்திக் கூறுதலாகும்.



பொருமணி வெண்டிரைப் பைங்கடல் வங்கம் பொருந்திமுன்பு
தருமணி பின்பெற்று அணிபவர்போல் சென்று சார்ந்திரந்து

பருமணி நன்கலப் பாங்கியை நீங்கியப் பாவையைநாம்
மருமணி வண்டுறை தார்வாணன் மாறை மருவுதுமே.

"நெஞ்சமே! வெண்மையான திரைகள் மோதும் கடலில் மரக்கலத்தைச் செலுத்திப் பின் அக்கடல் தரும் மணிகளைப் அணிபவர் போல் பெரிய மணிகளால் செய்யப்பட்ட நல்ல அணிகலன் புனைந்த பாங்கியைச் சார்ந்து நமது குறையைக் கூறி இரந்து நிற்போம். அவள் நமக்கு உடன்பட்டபின் அவளை விடுத்துப் பாவை போன்ற தலைவியை மணிநிறத்து வண்டுகள் மொய்க்கும் மாலையணிந்த வாணனின் தென்மாறையில் தழுவி இன்புறுவோம்" என்று தலைவன் தன்னெஞ்சுக்குக் கூறித் தோழியிடம் குறை இரந்து நிற்பதை வலியுறுத்துகின்றான்.

**13.6.2.2 ஊர்வினாதல்:**

ஊர்வினாதல் என்பது, தலைவன் தழையாடையும் கண்ணியும் ஏந்தியவனாய்க் குறையுற்றவன்போல வந்து நின்று ஊர் வினவுதல் ஆகும்.

புதியேன் மிக இப்புனத்திற்கு யான் தனிப் போந்தனனும்
பதியேது செல்லும்படி சொல்லுவீர் படிமேற் படித்த
மதியேய் சுதைமதில்சூழ் தஞ்சை வாணன் தென் மாறை வையை
நதியேய் சுழிநிக ரும்பழி தீருந்தி நல்லவரே.

"நிலத்தின் மீது படிந்துள்ள மதியைப் போன்று வெள்ளிய சுதையால் விளங்கிய மதில் சூழ்ந்தது தஞ்சை வாணனின் தென்மாறை நாடு. அங்கே பெருகியோடும் வையையில் காணப்படும் நீர்ச்சுழியை ஒத்த கொப்பூழை உடைய மடவாரே! நான் இந்தப் புனத்திற்கு மிகவும் புதியவன். முன்பு ஒருமுறையும் வந்ததில்லை. இப்போது தனியாக வந்தேன். தாங்கள் இருக்கும் ஊர் யாதெனச் சொல்வீர்" என்று தலைவன் பாங்கியிடம் ஊர் வினவுபவன் போல வந்து நின்றான்.

**13.6.2.3 பெயர் வினாதல்:**

பெயர் வினாதல் என்பது தோழியிடம் பெயரை வினவி நிற்றலாகும்.

கரைத்தாவி உந்திய காவிரி வைகிய காலத்தினும்
தரைத்தாரு வன்ன செந்தண்ணளி வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்
வரைத்தாழ் சிலம்பினும் வாழ்பதி ஈது என்று வஞ்சியன்னீர்
உரைத்தால் இழிவதுண்டேல் பெயரேனும் உரைமின்களே.

"வஞ்சிக் கொடி போன்றவரே! கரையைக் கடந்து பெருகிய காவிரி வளங் குன்றியபோதும் பூமியில் உள்ள கற்பகத்தைப் போல செம்மையான அருளைக் குறையாது வழங்குபவன் தஞ்சை வாணன். அவனுடைய இனிய தஞ்சையைச் சூழ்ந்த மலைகள் பொருந்திய பொதிய மலையிடத்து நீங்கள் வாழும் ஊரைக் கூறினால் உங்களுக்கு இழிவு உண்டாகுமோ?

அவ்வாறாஇயின் உங்களுடைய பெயரையேனும் உரைத்தருளுங்கள்" என்று தோழியை நாடிப் பெயரை வினவுபவன் போலவந்து தலைவன் குறையிரந்தனன்.

**13.6.2.4 கெடுதி வினாதல்:**

கெடுதிவினாதல் என்பது தன்னிடமிருந்து நீங்கிய ∴ தொலைத்த பொருள் ஒன்றைத் தேடி வருபவன் போல வருதலாகும்.

தண்பட்ட மேவும் வயல் தஞ்சை வாணன் தமிழ்ச்சிலம்பில்
பண்பட்ட தேமொழிப் பாவையன்னீர்! பனை பட்டகையும்
மண்பட்ட கோடு மதம்பட்ட வாயும் வடிக்கணைதோய்
புண்பட்ட மேனியுமாய் வந்ததோ ஒரு போர்க்களிறே.

தலைவன் தோழியை அணுகி, "தண்ணிய ஓடையும் வயலும் சூழ்ந்த தஞ்சை வாணனது தமிழ் நிறைந்த பொதியவெற்பிடத்துப் பண்பட்ட இனிய மொழியைப் பேசும் பாவை போன்றவரே! பனை போன்ற துதிக்கையும் தனது நிழலைக் கண்டு சினந்து பாய்ந்ததால் மண்பட்ட கொம்பையும் மத்தகத்திலிருந்து வடியும் மதநீரையும் கூரான் என் வில்லிடமிருந்து புறப்பட்ட அம்பு பாய்ந்ததால் புண்பட்ட உடலுமாய் ஒரு போர்க்களிறு நும் புனத்தருகே வந்ததோ; அதனைக் கண்டிருந்தால் எனக்குச் சொல்வீர்" என்று கூறித் தான் யானையைத் தேடி வந்தவன்போல் நின்றுரைக்கின்றான்.

**13.6.2.5 ஒழிந்தது வினாதல்:**

ஒழிந்தது வினாதல் என்பது, தான் வினவியவற்றிற்குத் தோழி மாற்றம் ஏதும் கூறாது நீங்குவதற்குக் காரணம் யாதோ என வினவுதலாகும்.

வனமார் குடிஞைப் பகைக்குர லாமென வாணன்தஞ்சைப்
புனமார் குளிரிப் புடைப்பொலி யாற்கிள்ளை போயினமீண்டு
இனமா மெனவந்து இவ்வேனல் எல்லாம் வவ்வும் என்பதற்கோ
கனமா நறுங்குழலீர் மொழியாது ஒழிகாரணமே.

தலைவன் தன்னோடு தோழி ஏதும் பேசாமையை எண்ணி வருந்துகின்றான். அதற்கு ஒரு காரணத்தைக் கற்பித்தவனாய் "மேகம் போலும் கரிய நறுங் கூந்தலை உடையவரே! தஞ்சை வாணன் நாட்டில் குளிரி என்னும் கருவியை அடித்துத் தாங்கள் எழுப்பும் ஓசையைக் காட்டில் வாழும் ஆந்தைக்குப் பகையாகிய காக்கைக் குரல் என்று அஞ்சியபடிக் கிளிகள் ஓடின. நீங்கள் வாய் திறந்து பேசினால் உம்குரல் என்று உணராமல் கிளிக்குரல் என்று எண்ணி மீண்டும் வந்து இத்தினைக் கதிர்களைக் கொய்யும் என்று கருதியோ என்னோடு பேசாமல் நீங்குகின்றீர்." என்று உரைக்கின்றான்.

**13.6.2.6 எண்ணம் யாதெனத் தேர்தல்:**

கண்ணியும் தழையும் ஏந்தியவனாய்த் ஊரும் பெயரும் கெடுதியும் வினாவுவான் போலத் தன்னிடம் வந்து நின்று பேசும் தலைவனைக் கருதி இவர் யார், இவர் கருதும் கருத்து யாது எனத் தோழி ஆராய்தல்.

தரையார வண்புகழ் தேக்கிய வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்
வரையாது நும்பதி யாதுநும் பேரென்பர் வார்துளிக்கார்
புரையானை யம்பொடு போந்தநுண் டோவென்பர் பூங்கொடியீர்
உரையாத தென்னென் பராலென் கொலோவிவர் உட்கொண்டதே.

‘இப்புவியெங்கும் தன் நிறைந்த புகழைப் பரப்பிய வாணனின் தமிழ் நிறைந்த தஞ்சையைச் சூழ்ந்த மலைப்பகுதியில் உம் ஊர் யாது? உம் பெயர் யாது? என்று சொல்வார். மேலும் குருதித் துளி சிந்தும்படி தாக்கப்பட்ட அம்புடன் மேகம்போன்ற யானை வந்ததுண்டோ என்று வினவுகின்றார். மேலும் பூங்கொடி போன்றவரே! எதுவும் பேசாமல் செல்வது ஏனோ என்றும் சொல்வார். ஆதலால் இவர் யாரோ? இவருடைய மனக்கருத்து யாதோ என நான் அறிந்திருக்கவில்லையே’ என்று தலைவனின் செயல்களால் ஐயுற்றுத் தோழி தனக்குள் ஆராய்ந்து மொழிகின்றாள்.

**13.6.2.7 எண்ணந் தெளிதல்:**

எண்ணம் தெளிதல் என்பது தலைவன் மொழிகளால் ஐயுற்ற தோழி தலைவனின் எண்ணம் யாது என அறிந்து தெளிதல்

யாரே இவர் என்று அறிகின்றிலேம் எதிர்ந் தாரைவென்று
வாரேய் கழற்புனை வாணன்தென் மாறை வரையுறைவீர்
ஊரே தெனமுன் வினாவிப்பின் வேறொன் றுரைப்பதெல்லாம்
நேரே இவள்பொருட் டால் என்று தோன்றுமென் நெஞ்சினுக்கே.

“கண்ணியும் தழையும் ஏந்தியவர்களாய்க் குறையுற்றவர்போல வந்து நிற்பவர் யார் என நாம் அறியவில்லை. ‘எதிர்ப்பட்ட பகைவரை வென்று வீரக்கழல் அணிந்த வாணனுடைய தென்மாறை மலையில் வாழ்பவரே! உம் ஊரேது’ என முன் வினவினார். பின்னர் பேரும் கெடுதியும் வினவி நிற்கின்றார். இவ்வாறு முன்னொன்றை வினவிப் பின் வேறொன்றாக வினவிப் பேசுகின்றார். இவற்றை ஆராய்ந்து பார்த்தால் இத்தலைவனுடைய மொழிகள் எல்லாம் நிச்சயமாக இந்தத் தலைவியின் பொருட்டாக என்று என் மனம் எண்ணும். இதில் ஐயமில்லை” என்று தோழி தன்மனத்துத் தலைவன் கருத்து யாதென ஆராய்ந்து தெளிகின்றாள்.

**13.6.3 இருவருமுள்வழி அவன் வரவு உணர்தல்**

தலைவி தோழியோடு ஒருங்கு இருக்கின்ற போது தலைவியை நாடி வருதலும் புதியவனைப் போலப் பேசுதலும் செய்வான். அவ்வேளையில் தலைவியின் செயல்களால் தலைவியின் காதலைத் தோழி உணர்வாள்.

**13.6.3.1 தலைவன் கையுறையேந்தி வருதல்:**

தலைவன் கையுறையேந்தி வருதல் என்பது, தலைவியும் பாங்கியும் சேர்ந்திருப்பது கண்டு தலைவன் கையுறையுடன் வருதலாகும்.

தண்டா மரைமலர்ப் பொன்னையும் பார்மங்கை தன்னையும்போல்
வண்டார் குழல்மட வார்மணந் தார்சென்று வாணன்தஞ்சை
நுண்டா தணிபொங்கர் நீழலின் கீழ்ந் நுடங்கிடையார்க்
கண்டா தரவையெல் லாஞ்சொல்ல வேநல்ல காலமிதே.

தண்டாமரை மலரிலிருக்குந் திருமகளும் பார்மங்கையாகிய நிலமகளும் சேர்ந்திருந்தது போல, வாணனது தஞ்சையில் நுண்ணிய தாது பொருந்திய சோலைநிழலில் வண்டுகள் மொய்க்கும் கூந்தலையுடைய தலைவியும் தோழியும் ஒருங்கி இருக்கின்றனர். ஆகவே நாம் சென்று அந்த நுண்ணிய வளையும் இடையாரைக் கண்டு நம்முடிய காதலைச் சொல்ல சிறந்த தருணம் இதுவே என்று தலைவன் தன்மனத்துக் கருதுகின்றான்.

**13.6.3.2 தலைவன் அவ்வகை வினாதல்:**

தலைவன் அவ்வகை வினாதல் என்பது, தலைவன் முன்பு தோழியிடம்கெடுதி வினாவியதைப் போலவே மீண்டும்வந்து கலைமான் ஒன்று வந்ததோ என்று வினவி நிற்றலாகும்.

வல்லா ரிளங்கொங்கை வஞ்சியன் னீர்! தஞ்சை வாணனைக்கண்டு
ஒல்லார் களத்தி னுடைந்தது போல ஒருகலைபோர்
வில்லார் கணைதைப்ப மெய்சோர்ந் தினம்விட்டு வெய்துயிர்த்துப்
புல்லார் வதுமின்றி யேவந்த தோநும் புனத்தயலே.

தலைவன் தன்னுடைய தலைவி தோழியுடனிருப்பது அறிந்தவனாய் வருகின்றான். அவர்களிடம் சென்று "சூதுக் காய் அளவாகிய முலையுடைய வஞ்சிக் கொடி போன்றவரே! ஒரு ஆண்மான் என் வில்லின் அம்பினால் தாக்குண்டது. தஞ்சை வாணனைக் கண்ட பகைவர் போர்க்களத்தில் மனமுடைந்து வருந்தியதுபோல் மெய் சோர்ந்து தன் கூட்டத்தைவிட்டுத் தப்பிப் பெருமூச்சு விட்டபடி புல்லும் உண்ண முடியாதபடி அந்தக் கலைமான் உங்கள் புனத்தருகில் வந்ததோ என்பதைச் சொல்லுங்கள்" என்று கேட்டு மறுமொழிக்காக நின்றான்.

**13.6.3.3 எதிர்மொழி கொடுத்தல்:**

தலைவன் வினவியவற்றிற்கு இதுவரை எதுவும் சொல்லாத தோழி மறுமொழி அளித்தல் எதிர்மொழி கொடுத்தலாகும்.

வாக்குந் திறனு மதனையொப் பீர்தஞ்சை வாணன்மஞ்சு
தேக்குங் குடுமிச் சிறுமலைக் கேதிரி கோட்டிரலை
கோக்குஞ் சரமுங் குருதியுஞ் சோரக் கொடிச்சியரேம்
காக்கும் புனமருங் கேதனி யேவரக் கண்டிலமே.

"மேனியழகாலும் திறனாலும் மன்மதனை ஒத்தவரே! மேகம் தங்கும் உச்சியை உடைய சிறுமலை தஞ்சை வாணனுடையது. அங்கு கொடிச்சியராகிய நாங்கள் காவல் செய்யும் புனத்து அருகிலே திரிந்த கொம்புடைய இரலை மானோ அண்ணல் யானையோ குருதி பாயுமாறு தனியே வந்தமையைக் காணவில்லை" என்று தலைவன் பேச்சிற்கு எதிர்மொழி உரைக்கின்றாள் தோழி. இங்கு நாங்கள் காணவில்லை என்று தோழி கூறியதால் தலைவன் உண்மையாகக் கூறும் கூற்று கெடுதி வினாவுதல் இல்லை என்பதை உணர்ந்து கூறினாள் என அறியலாம்.

**13.6.3.4 இறைவனை நகுதல்:**

இறைவனை நகுதல் என்பது, தோழி தலைவன் கெடுதி வினவி அவற்றைத் தான் காணாமையைக் கூறிட அவனும் அவ்விடத்து நீங்கிச் சென்றான். அப்போது தலைவன் இயல்பைத் தலைவியிடம் கூறி வேடிக்கையாகச் சில மொழிந்துரைத்தல் ஆகும்.

மைவா னிலங்குகண் மங்கைநல் லாய்தஞ்சை வாணன்வெற்பில்
இவ்வாளி மொய்ம்பரின் றெய்தமெய்ம் மானிள மாந்தளிரின்
செவ்வாளி யுங்கொண்டு சேட்சென்ற தாலன்று சீதைகொண்கன்
கைவாளி யுங்கொண்டு போனபொய்ம் மானினுங் கள்ளத்ததே.

"மையெழுதி வாள் போலும் கூரிய கண்ணையுடைய மங்கையே! தஞ்சை வாணன் மலையில் ஆளி போன்று வலிமையை உடைய இந்தத் தலைவர் இப்போது எய்த மெய்யான மான் இளமாந்தளிராகிய சிவந்த அம்புகளைக் கொண்டு வெகு தொலைவில் சென்றுவிட்டது. ஆகவே முன்னாளில் இராமனுடைய அம்பைக் கொண்டுசென்ற பொய்ம்மானைவிட மிகுந்த கள்ளத்தனத்தை உடையது." எனத் தோழி தலைவன் தேடி வந்த மானைப் பற்றிக் கேலி பேசுகின்றாள். அம்பினால் தாக்குண்ட மான் என்று சொல்லும் தலைவன் கையில் அம்பின்றித் தழைகளை ஏந்தி வந்ததால் அவன் உரைக்கின்ற மான் பொய்ம்மான் என்பது அறிந்துகொண்டு கள்ளத்தனம் உடையது எனத் தோழி கூறினாள்.

**13.6.3.5 பாங்கிமதியின் அவரவர் மனக்கருத்துணர்தல்:**

தோழி தன்னுடைய அறிவால் தலைவன் தலைவி ஆகியோரது மனக்கருத்தை ஆராய்ந்து உணர்தல் பாங்கிமதியின் அவரவர் மனக்கருத்து உணர்தல் என்னும் துறையாகும்.

புனங்காவ லன்று இவள் பூண்டதும் ஆண்டகை போந்ததும் மான்
இனங்காவ லின்கலை எய்யவன் றால் இகலாழி விந்தை
தனங்காவ லன் தஞ்சை வாணன் னாட்டிவர் தங்களில்தாம்
மனங்காவல் கொண்டதெல் லாங்கண்க ளேசொல்லும் வாய்திறந்தே.

தோழியும் தலைவியும் என இருவரும் உள்வழித் தலைவன் வந்தான். தன்னுடைய கெடுதியைச் சுட்டி வினவினான். ஆனால் தலைவன் மனக்கருத்தையும் தலைவி மனக்கருத்தையும் அவர்கள் கூறாதபோதும் அவர்களின் கண் செய்த குறிப்பால் தானுணர்ந்துகொண்டாள்.

"போரிடும் வீரச் சக்கரத்தையுடைய வெற்றித் தெய்வத்தின் செல்வங்களுக்குக் காவலன் தஞ்சை வாணன் அவனுடைய நாட்டில் தலைவனும் தலைவியுமான இவ்விருவரும் வெளியே தோன்றாமல் தங்கள் மனத்தைத் தாம் காவல் செய்து தங்கள் காதலை மறைத்துக் கொள்கின்றனர். ஆனால் இவர்கள் மறைத்தவற்றையெல்லாம் இவர்களின் கண்கள் யாம் அறியும்படி வாய் திறந்து சொல்வதுபோல் காட்டிவிடுகின்றன. ஆதலால் நம் தலைவி மனத்தில் எண்ணியிருப்பது புனத்தைக் காவல் செய்வதற்கு அன்று; இந்த ஆண்டகையாகிய தலைவன் வந்ததும் மானினத்தைக் காக்கும் கலை மானை அம்பினால் எய்யவும் அன்று. " என்று தோழி தன்மனத்து ஆராய்ந்து தலைமக்களின் காதலை ஊகித்துணர்ந்தாள்.

## 13.7 தொகுத்துக் காண்போம்

கோவை அகப்பொருள் தழுவிய சிற்றிலக்கியம். நானூறு அகப்பொருள் துறைகளை உள்ளடக்கியது. தஞ்சை வாணன் கோவை நம்பியகப்பொருளுக்கு உதாரண இலக்கியம். பாங்கிமதியுடன்பாட்டின் மூன்று நிலைகள் முன்னுற உணர்தல், குறையுறவுணர்தல், இருவரும் உள்வழி அவன்வரவுணர்தல் என்பனவே. அகப்பொருள் துறைகளை உத்தியாக்கிப் பாட்டுடைத்தலைவன் பெருமைகளைப் பேச கோவை இலக்கியம் கருவியாகும்.

## 13.8 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

இரு மதிப்பெண் வினா விடைகள்

1. அகப்பொருள் துறைகள் நானூறு அமையப் பாடும் இலக்கிய வகை எது?

   கோவை

2. கோவையின் யாப்பு வடிவம் எது?

   கட்டளைக்கலித்துறை

3. முதல் கோவை நூல் எது?

பாண்டிக்கோவை

4. தஞ்சை வாணன் கோவையின் ஆசிரியர் யார்? பாட்டுடைத் தலைவர் யார்?

ஆசிரியர் - பொய்யாமொழிப் புலவர்

தலைவர்: தஞ்சாக்கூரை ஆண்ட சந்திரவாணன்

5. தஞ்சை வாணன் ஆண்ட நாட்டின் பெயர் யாது?

மாறைநாடு

6. எந்த அகப்பொருள் இலக்கணத்திற்கு உதாரண நூலாகத் தஞ்சை வாணன் கோவை அமைந்தது?

நம்பியகப்பொருள்

7. பாங்கி மதியுடன்பாட்டின் மூவகை நிலைகளைச் சுட்டுக.

முன்னுற உணர்தல், குறையுற உணர்தல், இருவரும் உள்வழி உணர்தல்

8. குவளை சிவத்து குமுதம் வெளுப்ப - குவளை எது? குமுதம் எது?

குவளை - கண் குமுதம் - வாய்

குறுவினா

9. முன்னுற உணர்தலைத் தஞ்சை வாணன் கோவைவழி விளக்குக.

13.6.1 என்ற எண்ணிட்ட பகுதியின் கீழ் உள்ள செய்திகள்

10. குறையுற உணர்தலைத் தஞ்சை வாணன் கோவைவழி விளக்குக.

13.6.2 என்ற எண்ணிட்ட பகுதியின் கீழ் உள்ள செய்திகள்

11. இருவரும் உள்வழி அவன் வரவுணர்தலைத் தஞ்சை வாணன் கோவைவழி விளக்குக.

13.6.3 என்ற எண்ணிட்ட பகுதியின் கீழ் உள்ள செய்திகள்

12. தஞ்சை வாணன் பெருமைகளை விவரிக்க.

பாடல்தோறும் அமைந்த தஞ்சை வாணன் பற்றிய செய்திகள்

பெருவினா

13. தஞ்சை வாணன் கோவையின் வழி பாங்கிமதியுடன்பாட்டின் நிலைகளை விளக்குக.

பாங்கிமதியுடன்பாடு 13.6 என்ற தலைப்பிலான செய்திகள்

## 13.9 மேலும் அறிந்து கொள்ள

நாஞ்சில்நாடன் - சிற்றிலக்கியங்கள்
எஸ்.சௌந்தர பாண்டியன் - தமிழில் கோவை இலக்கியம்

# கூறு : 14 முத்தொள்ளாயிரம்

## 14.1 முன்னுரை

முத்தொள்ளாயிரம் சங்கச் செவ்வியல் மரபையொத்த இலக்கிய வளமுடையது. அதன் செறிவான இலக்கியக் கூறுகள் கற்போரை மிகவும் களிப்புறச் செய்யும் இயல்புடையது. பாரமான கற்பனையும் வருணனையும் நிறைந்தது.

## 14.2 நோக்கம்

இதனைக் கற்பதால் முத்தொள்ளாயிரத்தின் இலக்கிய நலனை உணர்ந்துகொள்ளலாம். சங்க மருவிய கால இலக்கியமான முத்தொள்ளாயிரம் பிற்கால சிற்றிலக்கிய மரபுகளுக்கு வித்தான தன்மையை அறிந்துகொள்ளலாம்.

## 14.3 முத்தொள்ளாயிரச் சிறப்புக்கள்

.முத்தொள்ளாயிரம் வெண்பா யாப்பில் எழுதப்பட்ட நூல். இந்நூல் முழுதும் கிடைக்கப்பெறவில்லை. பழைய இலக்கண நூல்களில் இந்நூற் பாடல்கள் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளன. புறத்திரட்டு எனும் பாடல் தொகுப்பில் இடம்பெற்ற 108 பாடல்களே இன்று முத்தொள்ளாயிரச் செய்யுட்களாகக் கிடைக்கப்பெறுகின்றன. தமிழ்கெழு மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்களின் பெருமையைப் பேசும் நூலாகும். எனினும் தனித்த ஒரு அரசன் பெயரைச் சுட்டாமல் சேர, சோழ, பாண்டியர்களின் குடிப்பெயர்களாகிய கோதை, கிள்ளி, மாறன் ஆகியவற்றைக் குறிப்பிட்டே நூல் அமைந்துள்ளது.

மூவேந்தர்களின் வீரம், குதிரை மறம், யானை மறம், நகரச்சிறப்பு, கொடைச்சிறப்பு, பகைவர் நாட்டழிவும் இந்நூலில் பேசப்படுகின்றது. பிற்கால அகப்பொருள் தழுவிய சிற்றிலக்கிய வகைகளுக்கு வித்திடுவதுபோல் அமைந்த பெண்பாற் கைக்கிளைப் பாடல்கள் நிரம்ப இந்நூலில் உள்ளன. இவை பாட்டுடைத் தலைவர்களின் பெருமையைப் பேசிடக் காதலை ஓர் உத்தியாகக் கொண்டு அமைவன. இதன் விரிந்த வளர்ச்சியே உலா, தூது போன்ற சிற்றிலக்கிய வகைகளாகும் என்பதை நூலைக் கற்போர் எளிதில் உணரலாம்.

### 14.3.1 பெயர்க்காரணம்

மூவேந்தர்களைப் பற்றிய 900 பாடல்கள் கொண்டது என்றும் சேர, சோழ, பாண்டியரைத் தனித்தனியே தொள்ளாயிரம் பாடல்களில் புகழும் நூல்என்றும் கருதுவர். அவ்வாறாயின் 2700 பாடல்கள் இருந்திருக்கக்கூடும்.

இலக்கண விளக்கத்தின் ஆசிரியர் வைத்திய நாத தேசிகர் பாட்டியலில் எண் இலக்கியத்தை விளக்கியுரைக்கையில்

> பாட்டுடைத் தலைவனுடைய ஊரினையும் பெயரினையும் உவந்து எண்ணாலே பத்து முதல் ஆயிரம் அளவும் பொருள் சிறப்பினாலே பாடுதல் அவ்வவ்வெண்ணால் பெயர் பெற்று நடக்கும் எண் செய்யுளாம் என்றவாறு. அவை முத்தொள்ளாயிரம் அரும்பைத்தொள்ளாயிரம் முதலாயின.

என்கின்றார். எனவே தொள்ளாயிரம் பாடல்கள் கொண்டு மூன்று அரச மரபினரைப் பாடும் நூலாகவே இ∴து இருந்திருக்கவேண்டும்.

## 14.4 நூலாசிரியர்

முத்தொள்ளாயிரத்தின் ஆசிரியர் இன்னார் என அறியப்படவில்லை. பேராசிரியர் தம் பொருளதிகார உரையில் சங்கச் சான்றோர் என்னாது பதினெண்கீழ்க்கணக்கு நூலாசிரியர்களுடன் இணைத்து முத்தொள்ளாயிர ஆசிரியரையும் ஒருங்கே சுட்டும் வகையில் பிறசான்றோர் என்றார் . பதினெண்கீழ்க்கணக்குக் காலமாகிய சங்க மருவிய காலத்தில் வெண்பா யாப்பே பெரிதும் வழங்கியது என்பதும் எண்ணத்தக்கது. இவற்றால் இவர் சங்க காலத்தைச் சேர்ந்தவர் ஆகார் என்பதுணரலாம். அறிஞர் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார். இந்நூலாசிரியரை கி.பி. 5ஆம் நூற்றாண்டினர் என்கின்றார். இந்நூலாசிரியர் கடவுள் வாழ்த்தாகச் சிவபெருமானைப் பாடியுள்ளார். கடப்ப மலர் மாலை அணிந்த முருகனையும் குறிப்பதால் இவர் சைவப் பற்றுடையவர் என்பது உணரமுடிகின்றது.

## 14.5 முத்தொள்ளாயிரம் - சோழன்

இன்று கிடைக்கும் முத்தொள்ளாயிரப் பாடல்களில் 29 பாடல்கள் சோழ மன்னனைப் பாராட்டுவதாக அமைந்துள்ளன.

சோழனுடைய ஆத்தி மாலை, வீரம், பகைவர் நாட்டழிவு, உறையூர் வளம், யானையின் மறம்,சோழருடைய வெண் கொற்றக்குடைச் சிறப்பு ஆகியவற்றைப் பேசும் 29 பாடல்கள் சோழனைப் பற்றியதாக அமைகின்றன. அவற்றுடன் சோழன் மீது காதல் கொண்டு பேசும் தலைவியரின் நிலை, அவர்களைத் தடுக்கும் செவிலியர் செயல், ஊடவர் பேச்சு ஆகியனவும் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

### 14.5.1. பெரும் பழி

திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதாம் ஏதம்-உறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் தமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு!

சோழன் வீதியுலா வருகின்றான்; அவனைக் கண்டால் தம் மகள் காதல்நோயால் வருந்துவாள் என்பதால் கதவடைத்துள்ளாள் செவிலி. அவளுக்கு அயலார் அறிவுரை கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. செவிலியிடம் ‘தண்ணிய சந்தனத்தால் அழகுபெற்ற மார்பை உடையவனும் உறந்தையர் கோனும் தமிழர் பெருமானுமாகிய சோழனைத் தலைவி தன் கண்ணாரக் கண்டு மகிழட்டும். அதன்பொருட்டு அடைத்த கதவைத் திறந்துவிடுங்கள். சோழனைக் கண்டால் நேரும் காதல் நோயைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். அவனைக் காணாத ஏக்கத்தால் தலைவி இறந்துவிட்டால் தீராப்பழி நேருமே’ என அயலார் கூறுவர்.

### 14.5.2. கானல் நீர்

குதலைப் பருவத்தே கோழிக்கோ மானை
வதுவை யெருகென்றால் அன்னை- அதுபோய்
விளைந்தவா இன்று! வியன்கானல் வெண்தேர்த்
துலங்குநீர் மாமருட்டி அற்று!

சிறுவயது முதலாகச் சோழன் மீது ஆசைப்பட்ட பெண் அவனை அடைய முடியாத பெண்ணின் நிலையை இப்பாடல் விளக்குகின்றது. கோழியூராகிய உறையூரின் அரசனை தனக்கு மணம் முடித்து வைப்பதாக (எருக்குகிறேன்) என்று மழலை மொழி பேசும் பருவத்திலேயே தாய் மகளுக்குச் சொல்லியிருந்தாள். ஆனால் அவள் இன்று பருவப் பெண்ணாகி நிற்கும்போது அது நிறைவேறாததால் மானைக் கானல் நீர் ஏமாற்றுவது போல் ஏமாற வைத்திருக்கிறது.

### 14.5.3. கண்ணும் கயலும்

சுடரிலைவேற் சோழன் தன் பாடலம் ஏறிப்
படர்தந்தான் பைந்தொடியார் காணத்- தொடர்புடைய
நீர் வலையிற் கயல்போற் பிறழுமே
சாலேக வாயில்தொறுங் கண்!

உலா வரும்போது சாளரம் வழியாகக் கண்ட பெண்களின் கண்களை வலையகப்பட்ட மீன்போல வருணிப்பதை இப்பாடல் விளக்கும். ஒளிரும் சுடர் போலும் வேலேந்தியவன் சோழன், அவன் தன்னுடைய பாடலம் என்னும் பெயருடைய குதிரையில் ஏறி உலா வந்தான். பைந்தொடியராகிய பெண்டிர் கண்டு காதலுற்று வருந்துமாறு வந்தான். வீட்டுக்குள் அடைக்கப்பட்ட பெண்கள் சாளரம் வழியாக அவனைக் கண்டனர். சாளரம் (சன்னல்) வழியாகப் பார்க்கும் பெண்களின் கண்கள் சோழனைக் கண்டு மகிழும் காட்சி வலையில் அகப்பட்ட மீன்கள் திரிவதுபோலத் தோன்றின.

### 14.5.4. தேரையும் பாவையும்

அன்னையும் கோல்கொணடு அலைக்கும் அயலாரும்
என்னை அழியுஞ்சொற் சொல்லுவர்-நுண்ணிலைய
தெங்குண்ட தேரை படுவழிப் பட்டேன்யான்
திண்தேர் வளவன் திறத்து!

தேரில் உலா வரும் வளவனைக் காணாத ஏக்கத்தாலும் அயலார் பேசும் பேச்சாலும் வருந்தும் தலைவியின் நிலையை இப்பாடல் உணர்த்துகின்றது. ‘திண்ணிய தேரில் வளவன் உலா வருகின்றான். அவனைக் கதவைத் திறந்து பார்க்க வேண்டாம் என என் அன்னை என்னைத் தடுத்துக் கோலால் அடிக்கிறாள். அயலாரோ என்னை அவனோடு சேர்த்து அலர் தூற்றிப் பேசுகின்றனர். இதனால் தேரைநோய் விழுந்த தேங்காய் உள்ளே கெட்டழிவது போல நானும் என் மனம் வாடி நொந்து கிடக்கிறேன்.’ எனத் தலைவி தன்னிலைக்கு இரங்கி மொழிகின்றாள்

### 14.5.5. நீரும் நெருப்பும்

அலங்குதார்ச் செம்பியன் ஆடெழில்தோள் நோக்கி
விலங்கியான் வேண்டா வெனினும்- நலந்தொலைந்து
பீர்மேற் கொளல் உற்ற பேதையர்க் கென்வாய்ச்சொல்
நீர்மே லெழுந்த நெருப்பு!

சோழனைக் கண்ட தலைவி ஒருத்தி தான் கூறும் கூற்றினைச் செவிமடுப்பாரின்மையை எண்ணி வருந்துவதாக இப்பாடல் அமைகின்றது. சோழன் செம்பியனின் அசைகின்ற மாலை விளங்கும் அழகிய தோளை நோக்கினேன். அதனால் நான் தடுத்தும் என்நெஞ்சம் காதலுற்றது. என் மேனியின் நல்லெழில் தொலைந்து பீர்க்கம்பூ நிறத்தில் பசலைநோய் உற்றது. இதனைப் பார்த்த பேதைப் பெண்களிடம் யாது கூறியும் பயனில்லை; நான் அவன் மேல் மையல் கொண்டதால் ஏற்பட்ட நோய் என்பர். நான் என்ன சொன்னாலும் நீரின் மேல் எழுந்த நெருப்பு அவிந்துவிடுவது போல என்பேச்சு அவர்களிடம் எடுபடவில்லை என்று தலைவி தான் காதல் கொள்ளாவிட்டாலும் தன்மேனி கெட்டுவிட்டது என வருந்துகின்றாள்.

### 14.5.6. நாணும் நலனும்

நாணொருபால் வாங்க நலனொருபால் உள்நெகிழ்ப்பக்
காமருதோட் கிள்ளிக்கென் கண்கவற்ற- யாமத்து
இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு போலத்
திரிதரும் பேருமென் நெஞ்சு!

கிள்ளி உலா வருகின்றபோது அவனைக் காணவிரும்பிய தலைவியின் மனவேட்கையை இப்பாடல் உணர்த்துகின்றது. விரும்பத் தக்க

தோளையுடைய கிள்ளியைக் காணாத ஏக்கத்தால் என் கண் கவலை கொண்டுள்ளது. நாணமோ அதற்கு உடன்படாதபடி என்னைப் பின்வாங்கச் செய்கிறது. அவனைக் காணாது என் எழில்நலம் நெகிழ்ந்து தளர்கிறது. இவற்றால் நடுச் சாமத்தில் என் நெஞ்சு இருதலைக் கொள்ளி எறும்பு போல முன்னும் பின்னும் திரிந்து உழலும்.



### 14.5.7. கனவிலும் இழந்தேன்

ஊடல் எனஒன்று தோன்றி அலருறூஉங்
கூடல் இழந்தேன் கொடியன்னாய்!-நீடெங்கின்
பாளையிற் தேன் தொடுக்கும் பாய்புனல் நீர்நாட்டுக்
காளையைக் கண்படையுட் பெற்று

இப்பாடல் தலைவி ஒருத்தி தன்கனவு நிலையுரைத்தது. 'கொடி போன்றவளே! நீண்டு உயர்ந்த தென்னையின் பாளையில் தேனடைகளில் தேனீக்கள் தேனைச் சேர்க்கும். பாய்கின்ற நீரால் வளங்கொழிக்கும் நாட்டையுடைய காளையாகிய சோழனைக் கனவினில் கண்டேன். அப்போது அவனிடத்தில் ஊடல் கொண்டதாக எண்ணிக்கொண்டு அவனுடனான கூடலை இழந்தேன். இஃது அயலார் அலர் கூறும்படி ஆயிற்று.' எனக் கனவிலும்கூட இயலாத தன்னிலையை எண்ணித் தலைவி புலம்புகின்றாள்.

### 14.5.8. கண்ணாரக் காணேன்

புலவி புறக்கொடுப்பன் புல்லிடில் நாண் நிற்பன்
கலவி களிமயங்கிக் காணேன் - நிலவியசீர்
மண்ணளுஞ் செங்கோல் வளவனை யானிதன்றோ
கண்ணாரக் கண்டறியா வாறு!

வளவனுடைய திருமுகத்தை ஆசைதீரத் தான் காணாத நிலையைப் பெண்ணொருத்தி மொழிகின்றாள். நிலைத்த புகழுடையவனும் நாட்டை ஆள்பவனும் செங்கோல் ஆட்சியை உடையவனுமான வளவன் திருமுகத்தை ஆசை விடாய்த்தீர ஒருநாளும் கண்டதில்லை. அவன்நெருங்கி வருகையில் ஊடலால் திரும்பி விடுவேன். அவன் என்னைத் தழுவும்போது நாணத்தால் கண்ணை மூடிக்கொள்வேன். கலவியின்போது களிப்பால் மெய்மயங்கிவிடுவேன். இதுவே வளவனுடைய திருமுகத்தைக் கண்ணாரக் காணாமைக்குக் காரணம் ஆகும். என்று தன் உள்ளம்படும் துயரைப் பெண் ஒருத்தி பேசுகின்றாள்.

### 14.5.9. கண்ணும் நாணமும்

கனவினுள் காண்கொடா கண்ணும் கலந்த
நனவினுள் முன்விலக்கு நாணும்-இனவங்கம்
பொங்கோதம் போழும் புகாஅர்ப் பெருமானார்

செங்கோல் வடுப்படுப்பச் சென்று!

தான் தலைவனைக் காணாமைக்கு அவனுடைய செங்கோலைப் பழித்துப் பேசும் தலைவியின் கூற்றாக இப்பாடல் விளங்குகின்றது. இப்பாடலில் 'கப்பல்கள் பல பொங்கும் கடலைப் பிளந்து செல்லும் புகாருக்குரிய தலைவன் சோழன். அவன் என் கனவில் தோன்றி நான் அவனைக் காணுமாறு செய்யவில்லை. எப்போதாவது வரும்போது கண்கள் நிறைய அவனைக் காணலாம் என்றால் என் நாணம் முன்னே வந்து தடுக்கிறது. இது அவனது செங்கோலுக்குக் குற்றமாகிவிடுமே' எனத் தலைவி மொழிகின்றாள்

**14.5.10. முறை இதுவோ?**

கண்டன உண்கண் கலந்தன நல்நெஞ்சம்
தண்டப் படுவ தடமென்தோள்-கண்டாய்
உலாஅ மறுகில் உறையூர் வளவற்கு
எலாஅம் முறைகிடந்த வாறு!

தலைவனால் தன் நலனிழந்த பெண் தன் மெலிவை அரசனுடைய முறை செய்யும் பண்பைப் பேசுவதால் வெளிப்படுத்துகின்றாள். 'உறையூர் அரசன் வளவன் உலா வந்தபோது அவனைப் பார்த்து என் மையுண்ட கண் மகிழ்ந்தன. அதனால் அவனோடு என் நெஞ்சம் கலந்தது. ஆனால் அவற்றிற்குரிய தண்டனை பெற்றவை என் தோள்கள். தலைவனை அடைய முடியாமல் தோள் வாடி மெலிந்தன. வளவன் முறை செய்து நீதி வழங்குவது இப்படித்தான் முறைமாறிக் கிடக்கிறது.' என்று காதலால் வருந்திய பெண் கூறிப்புலம்புகின்றாள்

**14.5.11. அரசர்க்குரியது**

என்னெஞ்சும் நாணும் நலனும் இவையெல்லாம்
மன்னன் புனனாடன் வெளவினான் -என்னே
அரவகல் அல்குலாய் ஆறில்ஒன் றன்றோ
புரவலர் கொள்ளும் பொருள்!

அரசர்கள் குடிகளிடம் வரி பெறுகையில் ஆறில் ஒரு பங்கைப் பெறுதல் மரபு. தலைவனாகிய சோழன் தன்னிடம் இருந்த நலன் எல்லாவற்றையும் பறித்துக்கொண்டான் என்று பழிப்பதுபோலத் தன்காதல் மிகுதியைத் தலைவி ஒருத்தி கூறுகின்றாள். என்னுடைய எண்ணம், நாணம், நலம் ஆகிய எல்லாவற்றையும் காவிரி பாயும் புனல் நாட்டை ஆளும் சோழன் என்னிடமிருந்து பறித்துக்கொண்டான். என் தோழியே! வருவாயில் ஆறில் ஒரு பங்கைத்தானே குடிகளைக் காப்பாற்றும் அரசன் வரியாகப் பெற வேண்டும். இப்படி எல்லாவற்றையும் பறித்துக்கொள்ளலாமா? என்று

தலைவி தன் தோழியிடம் கூறும் கூற்றில் தன் காதல் மிகுதியை உணர்த்துகின்றாள்

**14.5.12. காவானோ**

தெண்ணீர் நறுமலர்த்தார்ச் சென்னி யிளவளவன்
மண்ணகங் காவலனே யென்பரால் - மண்ணகங்
காவலனே யானக்காற் காவானோ! மாலைவாய்க்
கோவலர்வாய் வைத்த குழல்!

மாலை நேரத்தில் தனிமையால் வருந்தும் தலைவி ஒருத்தி, 'தெளிந்த நீரிலே பூக்கும் மணம் மிக்க பூவால் ஆகிய மாலை அணிந்தவன் சென்னியாகிய சோழன். இளமையான அவ்வளவனை இந்தப் பூவுலகத்தைக் காக்கும் காவலன் என்பர். இப்பூவுலகைக் காப்பவனே ஆனால் மாலை நேரத்தில் ஆனிரைகளுடன் வீடு திரும்பும் கோவலர் இசைக்கும் குழலோசை என் தனிமையை மேலும் துன்பம் செய்கின்றதே. அதனைத் தடுத்து என்னைக் காத்திருக்கவேண்டாமா?' என்று வருந்துகின்றாள்

**14.5.13. அறமும் அரசும்**

அறைபறை யானை அலங்குதார்க் கிள்ளி
முறைசெயும் என்பரால் தோழி -இறையிறந்த
அங்கோல் அணிவளையே சொல்லாதோ மற்றவன்
செங்கோன்மை செந்நின்ற வாறு!

சோழனை எண்ணித் தன் நலனிழந்த பெண்ணொருத்தி, தன் தோழியிடம் சோழன் செங்கோலன் அல்லன் என் கைவளை நெகிழச்செய்தவன் என்று குறை கூறுவதைப் பொருளாக உடையது இப்பாடல். 'தோழியே! சோழன் வருகையைத் தன் அசைகின்ற மணிகளால் யானை பறைபோல அறைந்து ஊரெங்கும் தகவல் தெரிவிக்கும். அந்த யானைமீது அமர்ந்து அசையும் மாலையையுடைய கிள்ளியை நீதிப்படி அறம் செய்வான் என யாவரும் சொல்வர். என் கையிலிருந்து கழன்றுவிழுந்த அழகிய வளையே அந்தச் சோழன் செங்கோன்மையில் சிறந்து நின்றமையைக் காட்டிக் கூறிவிடாதோ' என்று தன் நிலையை எள்ளுவதுபோல் சோழனின் காதலின்மைக்கு வருந்திப் புலம்புகின்றாள்.

**14.5.14. பெண்தன்மை**

நீள்நீலத் தார்வளவன் நின்மேலான் ஆகவும்
நாணிமை யின்றி நடத்தியால் - நீள்நிலம்
கண்தன்மை கொண்டலரும் காவிரி நீர்நாட்டுப்
பெண்தன்மை இல்லை பிடி.

தலைவன் பெண் யானையின் மீது உலா வருகின்றான். தன்னால் அடைய முடியாத சோழனைப் பெண் யானை சுமந்து வருதலால் பொறாமை

கொண்ட பெண்ணொருத்தியின் கூற்றாக இப்பாடல் அமைகின்றது. 'அடி! பெண்யானையே! நீண்ட நீல மலர் மாலையை அணிந்த வளவன் ஒரு ஆண். அவனை உன்மேல் அமர்ந்து இருக்கிறான். அவனைச் சுமந்தபடி இவ்வாறு வெட்கம் இன்றி உலா வருகிறாயே! காவிரி நாட்டுப் பெண்-தண்மை உனக்கு இல்லை. கண்ணருள் கொண்டு உலகைக் காத்து மலரும் நாடு காவிரியாறு பாயும் நாட்டுப் பெண்களிடம் பெண்மையாகிய நாணக்குணம் உன்னிடம் இல்லையே' என்பதால் தான் நாணத்தால் தலைவனை அடைய முடியாது வருந்தும் வருத்தத்தைப் புலப்படுத்துகின்றாள்.

### 14.5.15. நாரைவிடு தூது

செங்கால் மடநாராய்! தென்னுறந்தை சேறியேல்
நின்கால்மேல் வைப்பன் என் கையிரண்டும் - நன்பால்
கரை உறிஞ்சி மீன் பிறழும் காவிரிநீர் நாடற்கு
உரையாயோ யானுற்ற நோய்!

இப்பாடல் சோழன் மேல் உற்ற காதலால் வருந்தும் தலைவிநாரையைத் தூது விடுக்கின்ற பான்மையில் அமைந்தது. 'சிவந்த காலுடைய இளநாரையே! தெற்கே உள்ள உறையூருக்குச் செல்வதாயின் உன்னுடைய கால்களில் என் கையிரண்டையும் வைத்துத் தொழுவேன். நல்ல நிலத்தில் கரைகளை மோதுவதாகவும் மீன்கள் திரிவதாகவும் அமைந்த நீர்வளம் உடையது சோழநாடு. அங்கே உள்ள சோழ நாடனுக்கு யான் கொண்ட காதல் நோயைக் கூறாயோ' எனத் தலைவி சோழனிடம் நாரையைத் தூதாக அனுப்புகின்றாள்.

### 14.5.16. கண்ணோட்டம்

வரக்கண்டும் நாணாதே வல்லையால் நெஞ்சே
மரக்கண்ணோ மண்ஆள்வார் கண்ணென்று - இரக்கண்டாய்
வாள்உழுவை வெல்கொடியான் வண்புனல்நீர் நாடற்கென்
தோள்அழுவம் தோன்றத் தொழுது.

சோழன் மீது காதலுற்ற ஒருத்தி அவனிடம் காதலை யாசிக்குமாறு தன் நெஞ்சைத் தூண்டுவது இப்பாடலின் பொருளாகும் இதில் 'நெஞ்சே! வெல்லும் புலிக்கொடியானும் வளமான ஆற்றுநீர் பெருகிப் பாயும் நாட்டையுடையவனுமான சோழன் உலா வரும்போது அவனைக் கண்டு, பெண்மை உணர்வோடு நாணியிருக்க உன்னால் இயலுமோ? இயலாதே. ஆகையால் நாணாமல் அவனைக் கண்டு இரந்து என் தோளுற்ற துயரைக் காட்டிக் கேள். உன் கண் அருளற்ற மரத்தாலான கண்ணா (உணர்ச்சி

இல்லாத கண்ணா) என்று கேட்டு அவன் அருளை இரந்துநில்.' என்று தலைவி தன் நெஞ்சிற்கு அறிவுறுத்துகின்றாள்.

### 14.5.17.வாடைத்துயர்

பேயோ பெருந்தண் பனிவாடாய் பெண்பிறந்தா
ரேயோ உனக்கிங்கு இறைக்குடிகள் - நீயோ
களிபடுமால் யானைக் கடுமான்தேர்க் கிள்ளி
அளியிடை அற்றம்பார்ப் பாய்.

வாடை தலைவனுடன் இருக்கும்போது துயர் செய்வதில்லை. அவன் இல்லாத போது வருத்துவதை, 'பனிக் காலத்தில் பெருங் குளிருடன் வீசும் வாடைக் காற்றே! நீ என்ன பேயோ? பெண்ணாகப் பிறந்தவரெல்லாம் உனக்கு அடிமைப்பட்ட குடிகளோ? களிப்புடைய யானையும் குதிரையும்தேரும் உடையவன் கிள்ளி. அவன் எனக்கு அருளைச் செய்கிறான். அவன் எப்போது அரவணைப்பிலிருந்து விலகும் தருணத்தில் வாடையாக வீசி என்னை வருந்தச் செய்கின்றாய்' என்று பெண்ணொருத்தியின் கூற்றில் ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார்.

### 14.5.18. வாடையே வராதே

நாம நெடுவேல் நலங்கிள்ளி சோணாட்டுத்
தாமரையும் நீலமுந் தைவந்து - யாமத்து
வண்டொன்று வந்தது வாரல் பனிவாடாய்
பண்டன்று பட்டினங் காப்பு.

'நலங்கிள்ளி அச்சம் தரும் வேலை உடையவன். அவனது சோழநாட்டின் வண்டு தாமரையிலும், நீல மலரிலும் தேனை உண்டு நள்ளிரவில் வருகிறது. குளிரும் வாடையே! நலங்கிள்ளி காவிரிப்பூம் பட்டினத்தைக் காப்பாற்றும் செயல் பண்டுபோல் எல்லாருக்கும் காப்புடையதாக இல்லை. எனவே நீ இங்கு வரவேண்டாம்' என்று தலைவி வாடைக்காற்றை வேண்டுகின்றாள். வண்டு பகலில் தாமரையிலும் மாலையில் குவளையிலும் தேனையுண்டு வருவதுபோல் தலைவன் பிற மகளிரிடத்து அருளைச் செய்கின்றான் என்பதும் உணர்த்தினார்.

### 14.5.19. தானையும் யானையும்

தானைகொண் டோடுவ தாயதன் செங்கோன்மை
சேனை யறியக் கிளவேனோ - யானை
பிடிவீசும் வண்தடக்கைப் பெய்தண்தார்க் கிள்ளி
நெடுவீதி நேர்பட்ட போது.

சோழன் உலா வந்தபோது அவனைக் கண்ட அளவில் தன் ஆடை நெகிழத் தன்னை மறந்த தலைவி ஒருத்தியின் கூற்றாக இப்பாடல் அமைகின்றது. களிறு, பிடி யானைகளை வளமாகத் தரும் கொடையாளன்

கிள்ளி. குளிர்ந்த ஆத்தி மாலை சூடிய அவன் உலா வரும் நேரம் அவனை நீண்ட வீதியில் கண்டதும் என் சேலை நழுவியது. இவ்வாறு என் சேலையை நெகிழச் செய்தலாகிய செங்கோன்மையை அவன் படைகளெல்லாம் அறியுமாறு எடுத்துச் சொல்லாமல் இருப்பேனா?

**14.5.20. சோழ நாடு**

காவல் உழவர் களத்தகத்துப் போர் ஏறி
நாவலோஓ என்றிசைக்கும் நாளோதை-காவலன்தன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு!

சோழநாட்டு உழவர்களையும் மன்னனையும் ஒருங்கே போற்றுவதாக இப்பாடல் அமைகின்றது. வயலில் அறுவடை செய்து நெல்லைப் போராகக் குவித்துள்ள உழவர்கள் அதனைக் காவல் செய்வார்கள். அவர்கள் ஆர்வத்துடன் அப்போரின் மீது ஏறிநின்று நாவலோஓ என்று அழைக்கும் ஓசை சோழன் தன் கொல்லும் இயல்புடைய யானை மீதிருந்து நாவலோஓ என்று பகைவரை விளித்து அழைப்பது போலிருக்கும். இவ்வாறு நல்ல யானையை உடைய கிள்ளியின் நாடு வளமோடு விளங்கும்.

**14.5.21. உறந்தை வளம்**

மாலை விலைபகர்வார் கிள்ளிக் களைந்தபூச்
சால மருவியதோர் தன்மைத்தால்-காலையே
வில்பயில் வானகம் போலுமே வெல்வளவன்
பொற்பார் உறந்தை அகம்!

உறந்தை என்னும் உறையூரின் அழகைப் பேசுவதாக இப்பாடல் அமைகின்றது. உறையூர்க் கடைத்தெருக்களில் பூக்களை மாலையாக்கிக் கட்டி விலை பேசுகின்றனர். அவர்கள் மாலை கட்டுகையில் பூக்களைக் கிள்ளிக் களைந்த உதிரிப்பூக்கள் எங்கணும் பரவிக் கிடக்கின்றன. அதனால் வேலேந்திய வளவனின் பொன்போலும் நிலப்பரப்பையுடைய உறந்தை நகரம் காலைப்பொழுதிலே வானவில் பரவிக்கிடக்கும் வானகம் போலக் காட்சி தரும் எழிலையுடையது.

**14.5.22. குடைச் சிறப்பு**

மந்தரங் காம்பா மணிவிசும் போலையாத்
திங்கள் அதற்கோர் திலதமா எங்கணும்
முற்றுநீர் வையம் முழுதும் நிழற்றுமே
கொற்றப்போர்க் கிள்ளி குடை!

சோழன் வெண் கொற்றக்குடையால் தன் மக்களை நிழல் செய்து காக்கின்றான். அவன் செய்யும் அருளும் அவன் ஆளும் நாடும் பெரிது என்பதை இப்பாட்டுணர்த்தும். வெற்றியுடைய போருக்குரிய

கிள்ளிவளவனின் வெண் கொற்றக் குடை மந்திர மலையைக் குடைக்காம்பாகவும் ஆகாயமே குடையில் பொருந்திய ஓலையாகவும் முழுத்திங்கள் அதன் உச்சியில் அமைந்த திலகம் போலவும் கடல் சூழ்ந்த இந்த உலகம் முழுதும் நிழல் செய்வதாகத் திகழ்கின்றது

### 14.5.23. இரேவதித் திருநாள்

அந்தணர் ஆவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார்-எந்தை
இலங்கிலைவேற் கிள்ளி இரேவதிநாள் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு

சோழனின் பிறந்த நாள் பெரு மங்கல நிகழ்வு இரேவதி நாளில் நடைபெற்றது. அந்நாளில் அனைவருக்கும் அரசன் கொடை நல்கினான். அதனால் பாணரும் புலவ்ரும் வறுமை நீங்கினார். இதனால் சிலந்தி கூடு கட்டிப் பொலிவிழந்து நின்ற வீடுகள் புதிய பொலிவை அடைந்தன. இதனை எல்லோரும் பரிசில் பெற்ற இரேவதி நாளில் சிலந்தி மட்டும் கூட்டை இழந்தது என்று நயம்பட ஆசிரியர் மொழிகின்றார். 'எம் தந்தையை ஒத்த ஒளிரும் இலை வடிவ வேலேந்திய கிள்ளிக்குரிய நாள் இரேவதித் திருநாள். அந்நாளில் அந்தணர் வளவனிடமிருந்துபசுக்களையும் பொற்குவியலையும் பரிசிலாகப் பெற்றனர். புலவர்கள் மலை போன்ற சிறப்புடைய களிறுகளைப் பெற்றனர். ஆனால் அனைவரும் பரிசில் பெற்ற நாளில் சிலந்தி மட்டும் தன் கூட்டை இழந்துவிட்டது ஏனோ?' என்று இப்பாடலில் ஆசிரியர் கூறுகின்றார்.

### 14.5.24. மன்னர் மன்னன்

நின்றீமின் மன்னீர் நெருநல் திறைகொணர்ந்து
முன்தந்த மன்னர் முடிதாக்க - இன்றுந்
திருந்தடி புண்ணாகிச் செவ்வி இலனே
பெருந்தண் உறந்தையார் கோ!

உறையூர்த் தலைவனாகிய சோழனுக்குக் கப்பம் கட்டும்பொருட்டு அடிபணிந்த சிற்றரசர் பலர் திரண்டமையை இப்பாடல் கூறுகின்றது. 'பகைவராக இருந்துபின் அடிபணிந்த சிற்றரசர்கள் முந்தைய நாளில் சோழனுக்குக் கப்பம் கட்ட வந்தனர். வந்தவர்கள் பணிந்து வணங்கியபோது அவர்களின் மணிமுடி உரசித் தாக்கியதால் குளிர்ச்சியுடைய உறையூரின் அரசனாகிய சோழனின் திருந்திய சேவடி புண்ணாகிற்று. அது இன்றும் குணமாகவில்லை. ஆகவே மன்னர்களே! சற்றுத் தாமதமாகவும் உம் கப்பப்பொருளைச் செலுத்துங்கள்' என்பதன் மூலம் அவனுக்குச் சேரும் திறைப்பொருளும் அடி பணியும் மன்னர்ப்பெருக்கமும் உணர முடிகின்றது.



### 14.5.25. ஆற்றலும் அழகும்

கொடிமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்

முடியிடறித் தேய்ந்த நகமும்-பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு!

யானை போரில் காட்டிய வீரத்தை அதன் பிடியிடம் காட்டும் காதலில் குழைத்துக் கூறுவதாக இப்பாடல் அமைகின்றது. கல் போலும் வலிய தோளுடைய கிள்ளியின் யானை பகைவருடைய கொடி விளங்கும் மதிலை முட்டிப் பாய்ந்ததால் தந்தங்கள் முறிந்து விளங்கிற்று. பகையரசருடைய மணிமுடிகளை இடறியதால் கால் நகங்கள் தேய்ந்தன. தன் அழகு இழந்தமையால் தன் பெண் யானையைக் காண வெட்கிய யானைகள் தன் கொட்டாரத்தின் வெளியே நின்றுவிட்டது.

**14.5.26. உஞ்சைமுதல் ஈழம்வரை**

கச்சி ஒருகால் மிதியா ஒருகாலால்
தத்துநீர்த் தண்ணுஞ்சை தான்மிதியாப்-பிற்றையும்
ஈழம் ஒருகால் மிதியா வருமேநங்
கோழியர்கோக் கிள்ளி களிறு!

பெரிய தோற்றத்துடன் விளங்கும் யானையின் வீரத்தைப் பேசுவதாக அமைந்தது இப்பாடல். காஞ்சி நகரை ஒரு காலால் மிதித்தபடியும் நீர் நிறைந்த உச்சையினி நகரை ஒரு காலால் மிதித்தபடியும் பின்னங்காலில் ஒன்றால் ஈழத்தை மிதித்தபடியும் உறையூரை உடைய கிள்ளியரசனின் களிறு பாய்ந்து வரும். இதனால் கிள்ளிக்கு உச்சையினி முதல் காஞ்சி, ஈழம் வரையிலான நாடுகள் பலவும் அடிமைப்பட்டுக் கிடந்தன என்கிறார்.

**14.5.27. களிறு புறப்பட்டால்**

பற்றினம் ஆர்ப்பப் பருந்து வழிப்படர
நாற்றிசையும் ஓடி நரிகதிப்ப-ஆற்ற
அலங்கலம் பேய்மகளிர் ஆட வருமே
இலங்கிலைவேற் கிள்ளி களிறு!

யானையின் வீரத்தைக் கண்டு பறவைகளும் பேய்களும் மகிழ்ந்த திறத்தை இப்பாடல் உணர்த்தும். இலை உருவில் ஒளிறும் வேலேந்திய கிள்ளியின் களிறு போர்க்களத்தில் பெருமித நடை போட்டுக்கொண்டு வரும். அப்போது அதன்பின் புலால் உண்ணும் பறவைகள் ஆரவாரம் செய்து மகிழும். பருந்துகள் அந்த ஆண்யானையைப் பின்தொடர்ந்துவரும். நரிகள் நாலாப்பக்கமும் திரியும். அணிகலன்களைப் பெருமையாக அசைத்தபடி பேய்மகளிர் ஆடுவர். இவ்வாறு களிற்றைத் தொடர்ந்து வரக்காரணம் களிற்றால் எங்கும் பிணம்பெருகும் என்னும் மகிழ்ச்சியே ஆகும்

**14.5.28. செம்பியன் போர்க்களம்**

முடித்தலை வெள்ளோட்டு மூளைநெய் யாகத்
தடித்த குடர்திரியா மாட்டி- எடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம்!

இந்நூலாசிரியர் சோழ இளவரசன் போர்க்களத்துச் செய்த பேரழிவைப் பேயின் செயல்மேல் வைத்து இப்பாடல் பாடியுள்ளார். முடியுடைய தலையின் வெள்ளை மண்டையோட்டில் பொதிந்த மூளையை நெய்யாகவும் தடிமனான குடலைத் திரியாகவும் பொருத்திய பேய்கள் விளக்கேற்றி அவற்றைத் தம் கையில் ஏந்தின. இவ்வாறு செம்பியன் திருமகனாகிய இளவரசன் போரிட்ட களம் கொடுமையாகத் தோன்றியது.

**14.5.29. கூகையின் தாலாட்டு**

இரியல் மகளிர் இலைஞெமலுள் ஈன்ற
வரி இளம் செங்கால் குழவி-அரையிரவில்
ஊமன் பாராட்ட உறங்கிற்றே! செம்பியன் தன்
நாமம்பா ராட்டாதார் நாடு!

சோழனின் பகைநாட்டுப் பெண்டிரின் துயரத்தையும் அவர்கள் ஈன்ற குழந்தைகளின் நிலையையும் இப்பாடல் பேசுகின்றது. சோழனுடைய படைக்கஞ்சிய பகை நாட்டுக் கருவுற்ற பெண்கள் நாட்டை ஓடினர். ஓடும் வழியில் சருகுகள் செறிந்த புதரில் செவ்விய காலையுடைய குழந்தைகளை ஈன்றனர். அவை நடு இரவில் கோட்டான் குழறி ஓசையெழுப்ப அதனையே தாலாட்டாகக் கொண்டு உறங்கும். இவ்வாறு செம்பியனாகிய சோழனின் புகழைப் பேசாதவர் நாடுகள் திகழ்ந்தன.

14.6. தொகுத்துக் காண்போம்

முத்தொள்ளாயிரம் மூவேந்தருக்குரிய ஒருநூல். அகப்பொருளும் புறப்பொருளும் உத்தியாகக்கொண்டு பாட்டுடைத் தலைவர் சோழனைப் பாராட்டுகின்றது. வீதிஉலாக் காணும்மகளிர், அவர்தம் காதல் நோய், அலர் தோன்றல், அன்னை அலைத்தல், யானையைப் பழி கூறல் போன்ற அகப்பொருள் செய்திகள் இடம்பெற்றுள்ளன. புறப்பொருளில் சோழனின் வீரம், அவனால் நாடிழந்த மன்னர் நிலை, உழவர் சிறப்பு, வீரர் சிறப்பு, உறையூர் அழகு ஆகியன இடம்பெற்றுள்ளன.

## 14.7 தன்மதிப்பீட்டு வினாவிடைகள்

இரு மதிப்பெண் வினா விடைகள்

1. முத்தொள்ளாயிரத்தின் பாட்டுடைத் தலைவர் யாவர்?

சேர, சோழ, பாண்டியர்

2. எண்செய்யுளுக்கு உதாரணமாக கூறப்படும் இலக்கியம் எது?

முத்தொள்ளாயிரம்

3. சாலேக வாயில்தொறும் கண் எவ்வாறு பிறழ்ந்தது?

கயல்போல

4. புரவலர் கொள்ளும்பொருள் எவ்வளவு

ஆறில் ஒருபங்கு

5. அங்கோல் அணிவளை சொல்வது எது?

சோழன் செங்கோன்மை

6. பெண் தன்மை இல்லை எனத் தலைவி எதனைக்குறித்தாள்?

சோழன் ஏறிவந்த பிடியாகிய பெண் யானை

7. விற்பயில் வானகம் போன்றது எது?

உறையூர்

8. யானையின் கால்கள் மிதித்திருந்த ஊர்கள் எவை?

கச்சி, ஈழம் உஞ்சை

9. சிலம்பி ஏன் கூடிழந்தது?

இரேவதி நாளில் சோழன் கொடையால் வீடுகள் பொலிவு பெற்றதால்

குறுவினா

10. வாடைத்துயர் குறித்துத் தலைவி கூறுதலை விளக்குக.

14.5.17, 14.5.18 எண்ணிட்ட பாடல் கருத்து

11. யானைமறம் குறித்து முத்தொள்ளாயிரம்வழி விவரிக்க

14.5.26, 14.5.27 எண்ணிட்ட பாடல் கருத்து

பெருவினா

12. முத்தொள்ளாயிரத்தில் பெண்பாற் கைக்கிளை அமையுமாற்றைப் பாடப்பகுதி விளக்குக.

14.5.1 முதல் 14.5.19 வரையிலான பாடல்களின் கருத்து

13. முத்தொள்ளாயிரத்தில் சோழனின் வீரம், கொடை குறித்து ஆசிரியர் கூறுவனவற்றை எழுதுக.

14. 14.5.20 முதல் 14.5.29 வரையிலான பாடல்களின் கருத்து

## 14.8 மேலும் அறிந்து கொள்ள

வையாபுரிப்பிள்ளை - புறத்திரட்டு

ஆ.சந்திரன் - முத்தொள்ளாயிரம் அமைப்பு முறை

**அழகப்பா பல்கலைக்கழகம்**

**தொலைதூரக் கல்வி இயக்ககம்**

**சிற்றிலக்கியங்கள்- 31933**

**(மாதிரிவினாத்தாள்)**

காலம்: 3 மணி மதிப்பெண்: 75

பகுதி அ அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. (10X2=20)

1. பரணியின் இலக்கணம் சுட்டுக.
2. குலோத்துங்க சோழன் உலாவின் ஆசிரியர் யார்?
3. கலம்பகம் -பொருள் தருக.
4. தூது எந்த யாப்பில் பாடப்பெறும்?
5. தலைவி தமிழை யாரிடம் தூது போக்கினாள்?
6. குற்றாலக் குறவஞ்சியின் பாட்டுடைத்தலைவி யார்?
7. குறவஞ்சி தன் தமையன் மலை என்று எம்மலையைக் குறித்தாள்?
8. பெண்பாற் பிள்ளைத்தமிழின் இறுதி மூன்று பருவங்களைச் சுட்டுக.
9. பாங்கிமதியுடன்பாட்டில் மூன்று நிலைகள் யாவை?
10. விற்பயில் வானகம் போன்றது எது?

பகுதி ஆ பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடைதருக. (5ஓ5ஸ்ரீ25)

11. அ. கலிங்கத்துப் பரணியின் உறுப்புகள் குறித்தெழுதுக. (அல்லது)

    ஆ. கடவுளரைச் சோழனுடன் ஒப்பிட்டுச் செயங்கொண்டார் பாடியமையை விளக்குக.

12. அ. நந்திக் கலம்பகத்தில் கார் எனும் உறுப்பில் தலைவி கூறியன யாவை? (அல்லது)

    ஆ. தமிழ் குழந்தையாக வளர்ந்த விதத்தை விளக்குக.

13. அ. தன் நகருடைய வளமாகக் குறவஞ்சி கூறியன யாவை? (அல்லது)

    ஆ. வசந்தவல்லி பந்தாடிய பாங்கை விளக்குக.

14. அ. மீனாட்சியம்மையைக் காக்கத் திருமாலைக் குமரகுருபரர் வேண்டியமையை விளக்குக.

    (அல்லது)

ஆ. தொடுக்கும் கடவுள் என்ற வருகைப் பருவப் பாடற் கருத்தை விளக்குக.

15. அ. தஞ்சை வாணன் கோவை - குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ. யானை மறம் என்ற தலைப்பில் முத்தொள்ளாயிரப் பாடற் கருத்தை விளக்குக.

பகுதி - இ எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க. (3X10=20)

16. உலாவைக் கண்ட மங்கைப் பருவத்தாளின் நிலையை விளக்குக.
17. தமிழ் மொழியின் சிறப்பினைத் தமிழ்விடுதூது வழி விவரிக்க.
18. வசந்தவல்லிக்கும் குறத்திக்குமான உரையாடற் கருத்துக்களை விளக்குக.
19. குமரகுருபரர் நிலவை மீனாட்சியம்மையுடன் வேறுபடுத்திப் பாடியமையை விளக்குக.
20. பெண்பாற் கைக்கிளையாக அமைந்த முத்தொள்ளாயிரப் பாடற் கருத்தை விளக்குக

---